விபத்துகளில்
மதியம் வரை

## 7 பேர் சாவு 197 பேர் காயம்

கொழும்பு, ஏப். 15
நாடு முழுவதும் நேற்றுமதியம் வரை இடம்பெற்ற விபத்துகளில் 7 பேர் உயிரிழந்தனர். காயமடைந்தவர்களில் 197 பேர் மாத்திரம் கொழும்பு >> 52

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 56

சுடர் 33 கதிர் 140 சித்திரை 02 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 15 ஏப்ரல் 2018 வள்ளுவர் ஆண்டு 2049



## சிரியா மீது அமெரிக்கா தாக்குதல் பிரிட்டன், பிரான்ஸும் இணைந்தன

பதிலடி கொடுக்க ரஷ்யா, ஈரான் திட்டம்

வொஷிங்டன், ஏப். 15
கவுட்டா, டௌமா நகர்களில் அண்மையில் நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதலில் சுமார் 150 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலை சிரிய அரசே நடத்தியது என்று குற்றம் சுமத்தியிருந்தது அமெ >> 53

கனடாவில் வசித்த

## 8 பேர் கொலை ஒன்றரை வருடங்களின் பின் தெரியவந்தது

யாழ்ப்பாணம், ஏப். 15
கனடா சென்ற யாழ்ப்பாண இளைஞன் உட்பட 8 பேர் அங்கு வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளமை சுமார் ஒன்றரை வருடங்களின் பின்னர் தெரியவந்துள்ளது. இந்த >> 52

# இலங்கை – இந்தியா இடையே இராஜதந்திர உறவில் விரிசல்



இலங்கை - சீன அரசின் நட்பே காரணமென முதல்வர் விக்கி இந்தியாவில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 15
இலங்கைக்கும் — இந்தியாவுக்கும் இடையிலான இராஜதந்திரஉறவு விரிசலடைந்துள்ளது. இந்த உறவு முன்புபோல் இல்லை. இதற்குக் காரணம், சீன அரசுடனான நட்பே.
இவ்வாறு இந்தியாவில் வைத்துத் தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.
ஆன்மிகப் பயணம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள அவரிடம் >> 53

## பருத்தித்துறை, வவுனியாவில் மூவருக்கு வாள், கோடரி வெட்டு

யாழ்ப்பாணம், ஏப். 15
பருத்தித்துறை மற்றும் வவுனியாவில் நேற்று இடம்பெற்ற கோடரி வெட்டு மற்றும் வாள்வெட்டுகளில் 3 பேர் படுகாயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். >> 52

செயற்கை விவசாயம் என்ற

## பகட்டை நம்பியே நாம் அடிமையாகிவிட்டோம்

மருத்துவ நிபுணர் சிவன்சுதன் கூறுகிறார்

(விரிவு - பக். 7)

## புலிகள் மீதான தடையை நீக்குமாறு கனடா நாடாளுமன்றில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 15
விடுதலைப் புலிகளுக்கு எதிராக கனடா விதித்துள்ள தடைகளை நீக்குமாறு கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றாறியோ கோரிக்கை விடுத்துள்ளார்.
கனடிய நாடாளுமன்றில் இது குறித்துத் தனி நபர் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து, அதில் மேற்குறித்த கோரிக்கையை விடுத்துள்ளார்.
நாடாளுமன்றில் கேள்வி >> 52

பெற்றோலின் உதவியுடன்

## உயிரெடுத்தது சிகரெட்

பெற்றோல் போத்தலுடன் சிகரெட் புகைத்தவாறு பயணித் >> 53

## பூர்வீக நிலங்களை விடுவிக்கும்வரை புதுவருடக் கொண்டாட்டம் இருக்காது

கேப்பாபிலவு மக்கள் ஆதங்கம்

முல்லைத்தீவு, ஏப்.15
பூர்வீகக் காணிகள் எப்போது முழுமையாக விடுவிக்கப்படுகின்றனவோ அப்போதுதான் எமக்குப் புதுவருடம். அதுவரை புதுவருடக் கொண்டாட்டம் இருக்கப்போவதில்லை.
இவ்வாறு கேப்பாபில >> 53



## சுதாகரனின் பிள்ளைகளுக்கு புதுவருடத்திலும் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 15
அரச தலைவர் தனது இல்லத்தில் நேற்றுப் புதுவருட நிகழ்வைக் கொண்டாடினார். சிறு பிள்ளை >> 52

தவறான முடிவெடுத்து

## முன்பள்ளி ஆசிரியர் சாவு நிதி நிறுவனம் காரணமா?

யாழ்ப்பாணம், ஏப். 15
முன்பள்ளி ஆசிரியர் தவறான முடிவு எடுத்து தூக்கில் தொங்கியபோது மீட்கப்பட்டபோதும், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
முன்பள்ளிக்குச்சென்று அவரிடம் லீசிங் பணத்தைச் செலுத்து >> 52



கேப்பாபிலவில் படை வசமுள்ள

## காணிகளை விடுவிக்குமாறு கூறினால் சந்தோசமாக உடனேயே விடுவிப்போம்

முல்லைத்தீவில் போராடுவோருக்கு இனிப்புகள் வழங்கி படையினர் கூறின்ர்

முல்லைத்தீவு, ஏப்.15
"உயரதிகாரிகள் முடிவெடுத்துக் காணிகளை விடுவிக்குமாறுஎப்போதுகூறுகிறார்களோ அப்போது சந்தோசமாகக் காணிகளை விடுவிப்போம். அவர்கள் முடிவெடுக்காதவரை தாங்கள் ஒன்றும் செய்யமுடியாது" என்று இராணுவத்தினர் கூறினர் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.
புதுவருடமான நேற்று இராணுவத்தினர் இனிப்புப் >> 53

வலி.வடக்கு காணிகள்

## அன்பினால் விடுவிக்கப்படவில்லை அழுத்தங்களாலேயே விடப்பட்டது

சரா எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 15
எமது மக்கள் நடத்திய போராட்டங்களாலும், அரசியல் தலைமை கொடுக்கும் தொடர்ச்சியான அழுத்தத்தாலுமே ராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் காணிகளில் சில பகுதிகள் விடுவிக்கப்படுகின்றன. இந்த விடுவிப்புக்கள் தொடர் அழுத்தங்கள் காரணமாக பல்வேறு >> 53

## ஓ.எம்.பி. ஆணையாளர்களுக்கு வெளிநாட்டு நிபுணர்கள் பயிற்சி

கொழும்பில் நடக்கின்றது

யாழ்ப்பாணம், ஏப். 15
காணாமற்போனோர் பணியக ஆணையாளர், உறுப்பினர்களுக்கு வெளிநாட்டு நிபுணர்களால் கொழும்பில் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. முதல் கட்ட பயிற்சிகள் முடிவடைந்துள்ள நிலையில் இரண்டாம் கட்டப் பயிற்சி இந்த வாரம் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது. >> 52



சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விசேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று சிறப்புற இடம்பெற்றது. ஆயிரக்கணக்கான அடியார்கள் அதில் கலந்துகொண்டு விநாயகரின் அருளைப் பெற்றனர். (ந,ரி4)

# அதிகாரத்தை வென்றெடுக்க அனைவரும் அணிதிரள்வீர்

## அறைகூவல் விடுக்கின்றது மாக்சிச லெனினிச கட்சி

கொழும்பு, ஏப்.15

மூன்று வருடங்களைக் கடந்தும் மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசானது எவ்விததீர்வையோ,பரிகாரத்தையோ இதுவரை முன்வைக்கவில்லை. அதற்கான அடிப்படைக் காரணம் தாராள இறக்குமதியும், தனியார்மயமாக்கலும், நுகர்வுச் சந்தைக்காக நாட்டின் கதவுகள் அகலத் திறந்து விடப்பட்டமையுமே ஆகும். எமது கட்சி எதிர்வரும் உலகத் தொழிலாளர்களின் பன்னாட்டு போராட்ட தினமான மே தினத்தில் உழைக்கும் மக்களின் அதிகாரத்தை வென்றெடுக்க அனைவரையும் அணிதிரளுமாறு அறைகூவல் விடுக்கின்றது. இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.க.செந்திவேல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புக்களுடன் இடம்பெற்ற மேதின ஏற்பாடுகள் தொடர்பான சந்திப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

அத்தியாவசிய உணவுப் பொருட்களினதும் அன்றாட பாவனைப் பொருட்களினதும் தொடர் விலை அதிகரிப்புகளினாலும், உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவின் பாதிப்புகளாலும் நாட்டின் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் பல்வேறு துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அத்துடன் கடன் தொல்லைகளாலும், அரசின் வரி விதிப்புகளாலும் மக்களின் மீதான சுமை எல்லையற்று அதிகரித்துச் செல்கின்றது.

பௌத்த தினமான வெசாக் தினத்தையும், அதற்கான கொண்டாட்டங்களையும் சாட்டாக வைத்துப் பன்னாட்டுத் தொழிலாளர் தினத்தை ஏழாம் திகதிக்கு அரசு மாற்றியிருப்பதை எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. மே முதலாம் திகதி உலக அளவில் நிகழ்த்தப்படுகின்ற பன்னாட்டுத் தொழிலாளர் தினம் அதே நாளிலேயே இலங்கையிலும் இடம்பெற வேண்டும் என்பதை எமது கட்சி வலியுறுத்துகின்றது.

அரசதலைவர் மைத்திரியும், தலைமை அமைச்சர் ரணிலும், எதிர்த்தரப்பில் முன்னாள் அரசதலைவர் மகிந்தவும் கடுமையான அரசியல் மோதலில் களமிறங்கி நிற்கிறார்கள். இவர்களுடைய மோதல் நாட்டையும் மக்களையும் சூழ்ந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இடம்பெறவில்லை.

உழைக்கும் மக்கள் இந்த அரசியல் பிழைப்புவாதச் சக்திகளை நிராகரித்து, உழைக்கும் மக்களின் அதிகாரத்தை வென்றெடுக்க, எதிர்வரும் மே 01 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் புத்தூரிலும், வன்னியில் வவுனியா நகரத்திலும், மலையகத்தில் இராகலையிலும் இடம்பெறவுள்ள மேதின பேரணிகளிலும், பொதுக்கூட்டங்களிலும் அனைவரையும் அணிதிரளுமாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி அறைகூவல் விடுக்கின்றது - என்றார். (ந-ரி4)

# டெங்கு நுளம்பு பரவும் ஆபத்து: வாய்க்காலை மூடக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.15

சாவல்கட்டு கிராமத்தில் அமைக்கப்பட்ட வெள்ளவாய்க்காலில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதனால் குடம்பிகள் பெருகியுள்ளன. இதனால் நோய்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளன. இந்த வாய்க்காலை மூட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச செயலாளருக்குச் அந்தப் பிரதேச மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது தொடர்பில் கடந்த 3 வருடங்களுக்கு முன் சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டிய பொது அமைப்புகள் மழை வெள்ளம் வழிந்து ஓடுவதற்கு வசதியான நடவடிக்கையை எடுக்குமாறு கோரியிருந்தனர்.

அதையடுத்து வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் வீதியோரமாக வாய்க்கால் அமைக்கப்பட்ட போதும் நிதியின்மை காரணமாக வாய்க்கால் வேலை முழுமை பெறாமல் இடை நடுவில் நிறுத்தப்பட்டது.

மழைநீர் வழிந்தோடக் கூடிய வகையில் வாய்க்கால் அமைக்கப்பட்டமையாலும் வாய்க்கால் வேலை முழுமை பெறாமையாலும் மழை காலங்களில் வெள்ளம் வாய்க்காலில் தேங்கி நிற்கின்றது. அதனால் குடம்பிகள், நுளம்புகள் பெருகியுள்ளன. மக்களின் நலன் கருதி வாய்க்காலை மூட வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-ரி4,115)

# பட்டதாரிகள் நேர்முகத்தில் ஆவணங்கள் அவசியம்

## யாழ். மாவட்டச் செயலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.15

வேலை அற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வில் சமர்ப்பிக்கும் ஆவணங்களின் அடிப்படையில் புள்ளிகள் அமைவதனால் சகல பட்டதாரிகளும் தவறாது சான்றிதழ்களைச் சேகரித்து சமர்ப்பிப்பது அவசியம் என்று மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

வேலையற்ற பட்டதாரிகளில் 20 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக்காக 2 ஆண்டுகள் பயிற்சி அடிப்படையில் நியமனம் வழங்குவதற்கு எதிர் வரும் 18ஆம் திகதி தொடக்கம் நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளது.

இதற்காக ஏற்கனவே தமது பதிவுகளை மேற்கொண்டு நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. இருப்பினும் பல பட்டதாரிகள் அந்தப் பதிவுகளை மேற்கொள்ளத் தவறியமை சுட்டிக்காட்டப்பட்டது. இதன் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்பு பட்டப்படிப்புக்களை நிறைவு செய்தும் ஏற்கனவே தமது பதிவுகளை மேற்கொள்ளத் தவறிய அனைவரும் எதிர்வரும் 20ஆம் திகதிவரை தமது பதிவுகளை மாவட்டச் செயலகங்களில் பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேர்முகத் தேர்வில் பட்டதாரிகள் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பட்டதாரிகள் தமது பட்டச் சான்றிதழுடன் மேலதிக பட்டங்கள், இரண்டாம் மொழி, கணினி சான்றிதழ், சிறப்புத் தகமைகள் பட்டதாரிகள் முன்னுரிமைப் படுத்தும். அதனால் பட்டதாரிகள் இவற்றையும் முன்கூட்டியே சேகரித்து சமர்ப்பிப்பதன் மூலம் நேர்முகத் தேர்வில் சிறந்த புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (ந,ரி4,105)

# நாடளாவிய ரீதியில் களைகட்டிய புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.15

தமிழ், சிங்களப் புத்தாண்டு நேற்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. ஏவிளம்பி வருடத்துக்கு விடைகொடுத்து விளம்பி வருடத்தை மக்கள் மகிழ்வுடன் வரவேற்றனர். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பலபகுதிகளில் உள்ள இந்து, பௌத்த வழிபாட்டிடங்களில் சிறப்புப் பூசைகளும், நிகழ்வுகளும் நடைபெற்றன. மக்கள் புத்தாடை அணிந்து புத்தாண்டை மகிழ்வுடன் வரவேற்றனர்.



**வடக்கு**

யாழ்ப்பாணத்தில் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. வரலாற்றுச்ச சிறப்பு மிக்க நல்லூர் கந்தன் ஆலயத்தில் காலையில் சிறப்புப் பூசைகள் நடைபெற்றன. அதில் அதிகளவான மக்கள் கலந்து கொண்டனர். கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திலும் புத்தாண்டு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. வவுனியா வைரவப்புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்திலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

நெடுங்கேணி மாறாலிப்பை நாகதம்பிரான் ஆலயத்திலும் புத்தாண்டு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. அதில் அதிக எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். வடக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் உள்ள ஆலயங்களிலும் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

**கிழக்கு**

கிழக்கு மாகாணத்தில் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. வரலாற்று சிறப்பு மிக்க மட்டக்களப்பு அமிர்தகழி ஶ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்திலும் விசேட அபிசேக ஆராதனைகள் இடம்பெற்றன. நாட்டில் நிலையான சமாதானம் வேண்டியும், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஆசி வேண்டியும் சிறப்புப் பூசைகள் நடத்தப்பட்டுள்ளன. ஏனைய ஆல்யங்களிலும் புத்தாண்டை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**மலையகம்**

தமிழ், சிங்கள புத்தாண்டை மலையக மக்கள் சிறப்பாக கொண்டானர். புத்தாடை அணிந்து ஆலய வழிபாடுகளிலும், ஏனைய சமய வழிபாடுகளிலும் ஈடுபட்டதையும் காணக்கூடியதாக இருந்தது. புத்தாண்டை முன்னிட்டு ஹற்றன் சிறி சிவசுப்பிரமணிய ஆலயத்தில் நேற்றுச் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. அவற்றில் அதிகளவிலான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர். (ந)

# புத்தாண்டு தினமான நேற்றும் உறவுகளைத்தேடி போராட்டம்

கிளிநொச்சி,ஏப்.15

**காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் புது வருடப் பிறப்பான நேற்றும் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது. கிளிநொச்சியில் நேற்றுடன் 421 நாளாகவும், வவுனியாவில் நேற்றுடன் 415 நாள்களாகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தை மேற் கொண்டு வருகின்றனர்.**



அவர்கள் புத்தாண்டு தினமான வீதி யோரத்தில் சமைத்து உண்டு போரா டினர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடு தலையையும், வெளிப்படுத்தலையும் கோரி கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்றுவரை தொடர்ச்சி யாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பிள்ளைகளுக்காகக் காத்திருக்கும் எங்களது வலிகளை எங்களைத் தவிர யாரும் புரிந்து கொண்டதாகத் தெரிய வில்லை. எமது பிள்ளைகளைப் பறி கொடுத்து விட்டு வாழும் துன்பியல் நிலைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளோம். கூட்டரசு கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்றையேனும் இதுவரையில் நிறை வேற்றவில்லை

காணாமல் ஆக்கப்படடவர்களுக்கா கக் காத்திருக்கும் எங்களுக்கு உரிய தீர்வு கிடைக்கக்கூடிய பல சந்தர்ப்பங் களை எங்களுடைய மக்கள் பிரதிநிதி கள் தவற விட்டுள்ளனர்.

தமிழ் அரசியல் தலைமைகளும் எமது நிலை தொடர்பில் கரிசனை கொள்ளவில்லை. எத்தனை நாட்கள் ஆனாலும் எமக்குரிய சரியான தீர் வொன்று கிடைக்காமல் எமது போராட்டத்தை இடைநிறுத்திக் கொள் ளப்போவதில்லை என்று போராட்டத் தில் ஈடுபட்டுவரும் உறவுகள் தெரிவித் தனர்.

இதேவேளை யாழ்ப்பாணம்; வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோண மலையிலும் தொடர்ச்சியாகப் போராட் டம் இடம்பெற்று வருவது குறிப்பிடத் தக்கது. (ந,ரி2,110)



## அரச தலைவர் இல்லத்தில் புத்தாண்டுக் கொண்டாட்டம்

### இரா.சம்பந்தனும் கலந்துகொண்டார்

கொழும்பு.ஏப்.15

இலங்கை வாழ் மக்களுடன் இணைந்து சிங்கள, தமிழ் புத்தாண்டு பாரம்பரிய நிகழ்வுகளில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுக் கலந்து கொண்டார்.

இவ்வாறு ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதில் தெரி விக்கப்பட்டிருப்பதாவது:

சிங்களபாரம்பரியங்களுக்கு மதிப்பளித்து கொழும்பு மஹகமசேக்கர மாவத்தையில் உள்ள அரச தலை வரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் புத்தாண்டு பாரம்பரிய நிகழ்வு இடம் பெற்றது.

அரச தலைவரின் பாரியார் ஜயந்தி சிறிசேன உள் ளிட்ட குடும்ப உறுப்பினர்களுடன் இணைந்து சுப நேரத்தில் நெருப்பு மூட்டி புத்தாண்டு சம்பிரதாயங் களில் ஈடுபட்டார்.

பணிகளைத் தொடங்கும் பாரம்பரியங்களுக் கேற்ப அரச தலைவர் இல்ல வளாகத்தில் வில்வ மரக்கன்று ஒன்றை நாட்டிய அரச தலைவர் கைவி சேஷ சம்பிரதாய நிகழ்விலும் கலந்து கொண்டார்.

பிறந்திட்ட புத்தாண்டை முன்னிட்டு அரச தலைவ ருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்கு அமைச்சர்கள், கலைஞர்கள், மற்றும் பெருமளவான பொதுமக்க ளும் அங்கு வந்திருந்தனர்.

அனைவரையும் வரவேற்ற அரச தலைவர் அவர் களுக்கு சுபநேரத்தில் விருந்துபசாரமும் வழங்கி னார்.

சிங்கள. தமிழ் புத்தாண்டை முன்னிட்டு அனைத்து இலங்கை மக்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரி வித்துக்கொண்டார்.

நேர்மறையான எண்ணங்கள் மற்றும் சிறந்த சிந்தனைகளுடன் அனைத்து வகையான பேதங் களையும் மறந்து ஒரே நாட்டு மக்களாக தாய் நாட்டை கட்டியெழுப்புவதற்கு நம்பிக்கை மற்றும் தைரியத்துடனும் அனைவரும் அணிசேரவேண் டும். என்றும் கேட்டுக்கொண்டார். (ந,ரி2)

## அரசியல் கைதிகளை விடுவிக்க கூட்டு அரசு முன்வர வேண்டும்

*நவோதயா மக்கள் முன்னணி கோரிக்கை*

கொழும்பு,ஏப்.15

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைப் பிறந்தி ருக் கும் விளம்பி புதுவருடத்திலாவது விடு தலை செய்வதற்கு ரணில்-மைத்திரி தலைமையிலானகூட்டரசுமுன்வரவேண்டு மென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் நவோதயா மக்கள் முன்னணி இந்தக் கோரிக்கையை நேற்று முன்வைத் துள்ளது.

நவோதயா மக்கள் முன்னணி சார்பாக சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு நேற்று கொழும்பு செட்டியார் தெருவில் அமைந் துள்ள சிறி கதிர்வேலாயுத சுவாமி ஆலயத் தில் சிறப்பு பூசை நடைபெற்றது.

இதில், நவோதயா மக்கள் முன்னணியின் தலைவர் எஸ்.கே கிருஷ்ணா, அந்த அமைப்பின் மூத்த ஆலோசகர் கங்கை வேணியன், கட்சியின் பொதுச் செயலா ளர், ஊடக இணைப்பாளர் உள்ளிட்டவர்க ளும் கலந்து கொண்டனர்.



ஆலயத்துக்கு முன்பாக நவோதயா மக்கள் முன்னணி சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டி ருந்த அன்னதான நிகழ்வும் இடம்பெற் றது.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட நவோதயா மக்கள் முன்னணியின் ஆலோசகர் கங்கை வேணியன், அரசியல் கைதிகளின் விடுத லையை வலியுறுத்தினார். (ந,ரி2)

## வவுனியா விபத்தில் ஒருவர் படுகாயம்

வவுனியா,ஏப்.15

வவுனியா, குருமன்காட்டுப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒரு வர் படுகாயமடைந்தார். பாலேந்திரன் (வயது50) என்பவரே விபத்தில் காயம டைந்து, வவுனியாமருத்துவ மனையில் சேர்க்கப்பட் டார். வவுனியாகுருமன்காடு பகுதியில் இருந்து தாண்டிக் குளம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் திருநாவற்குளத்திலிருந்து குருமன்காடு நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் மோதி யதிலேயே விபத்து ஏற்பட்ட தாகப் பொலிஸார் தெரிவித் தனர்.

சம்பவம் தொடர்பில் மேல திக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந,ரி2,110)

## வல்லப்பட்டையுடன் நால்வர் கைது

கொழும்பு,ஏப்.15

ஒருதொகை வல்லப்பட்டையு டன் நால்வர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்தவர்களே கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட் டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து, 94 இலட்சம் ரூபா பெறுமதி யான 119 கிலோ கிராம் வல் லப்பட்டை கைப்பற்றப்பட்டதா கத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், தொடர்பில், ஆயப் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. (ந,ரி2)

## மின்சாரம் தாக்கி இளைஞர் சாவு

கொழும்பு.ஏப்.15

கல்கிஸ்ஸ பிரதேசத்தில் மின்சாரம் தாக் கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந் தார்.

படபொல இலுக்பிடிய பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே சாவடைந்தார்.

வர்த்தக நிலையம் ஒன்றிலேயே மின் சாரம் தாக்கி இளைஞர் உயிரிழந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியால யம் தெரிவித்தது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்து வருகின் றனர். (ந,ரி2)

## போலி நாணயத் தாள்களுடன் ஒருவர் கைது

கொழும்பு,ஏப்.16

போலி நாணயத் தாள்களு டன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

பட்டகோவ பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரே பொலிஸாரால் கைது செய்யப் பட்டார்

சந்தேக நபரிடமிருந்து, 12 போலி ஆயிரம் ரூபா நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித் தனர்.

சம்பவம் தொடர்பில் பொலி ஸார் விசாரணைகளை முன் னெடுத்துவருகின்றனர். (ந,ரி2)


**A1, B1 வகுப்புக்கள்**

**திருமணம் முடித்து வெளிநாடு செல்லவிருப்பவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.**

- எங்குமில்லாத மிகக் குறைந்த கட்டணங்கள் (பாடநெறிக் கட்டணம் - 10.000/- மட்டுமே)
- தனிப்பட்ட ரீதியிலான கவனிப்புக்கள்
- ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே
- பரீட்சையில் சித்தியடைய 100% உத்தரவாதம்
- ஏற்கனவே பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெறாதவர்களுக்கு 50% கட்டணக்கழிவு.
- முதலில் வரும் 10 பேருக்கு மட்டுமே இவ்வரியவாய்ப்பு
- பதிவுகளை இன்று முதல் எமது அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.

**WINSTAR CONSULTANTS (Pvt) Ltd**
45, Vembadi Street, Jaffna.
021 222 6979
www.winstarjaffna.com

(CS/13555)(11.17)

## வெண்சுருட்டுக்களுடன் சீன நாட்டவர்கள் கைது


கொழும்பு. ஏப்.15
சட்டவிரோதமான முறையில் ஒரு தொகை வெண்சுருட்டுக்களைக் கடத்த முற்பட்ட சீன நாட்டவர்கள் இருவர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.
இவர்கள் நேற்றுமுன்தினம் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இவர்களிடமிருந்து 22 லட்சத்து 30ஆயிரம் ரூபா பெறுமதியான வெண்சுருட்டுக்கள் கைப்பற்றப்பட்டன.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## வாகன விபத்தில் 8 மாதக் குழந்தை சாவு: 7 பேர் காயம்

கொழும்பு,ஏப். 15
நீர்கொழும்பில் இடம்பெற்ற விபத்தில் எட்டு மாதக் குழந்தை உயிரிழந்தது. 7 பேர் படுகாயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்தது. நீர்கொழும்பு-மீரமமப் பிரதான வீதியில் கொச்சிக்கடை மடபல்லப் பாலத்துக்கு அருகிலேயே நடந்தது. எனப் பொலிஸார் தெரிவித்தனர். வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையாலேயே இந்த விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
விபத்தில் காயமடைந்தவர்கள் நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச்சம்பவம் தொடர்பானமேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## மதுபானப் போத்தல்கள் வைத்திருந்தவர் கைது

ஹற்றன், ஏப்.15
பொகவந்தலாவ கெம்பியன் பகுதியில் உள்ள வர்த்தகநிலையத்தில் இருந்து 70 மதுபானப்போத்தல்களுடன் ஒருவர் கைது செய்யபட்டார். சந்தேக நபர் நேற்றுமுன்தினம் ஹற்றன் குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யபட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பொகவந்தலாவ கெம்பியன் பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த 70 மதுபான போத்தல்கள் மீட்கப்பட்டன. கைது செய்யபட்ட சந்தேக நபருடன் மீட்கப்பட்ட மதுபானப் போத்தல்கள் பொகவந்தலாவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. சந்தேக நபருக்குப் பொலிஸாரால் பிணை வழங்கப்பட்டு எதிர்வரும் 24ஆம் திகதி ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் முன்னிலை யாகுமாறு பொலிஸாரால் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹற்றன் குற்றத்தடுப்புப் பொலிஸாரும் பொகவந்தலாவ பொலிஸாரும் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)



## பாரம்பரியத்தை உரிய முறையில் மக்கள் நிறைவேற்ற வேண்டும்

கொழும்பு.ஏப்.15
புத்தாண்டு பாரம்பரியத்தை உரிய முறையில் தமிழ், சிங்கள மக்கள் நிறைவேற்ற வேண்டும். இது மக்களிடத்தில் நல்லுறவை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும்.
இவ்வாறு கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அனுஷா கோகுல பெர்னாண்டோ தெரிவித்தார். தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
புத்தாண்டு காலத்தில் புண்ணிய நேரத்தில் மத வழிபாடுகளில் ஈடுபடுவது முக்கியமானதாகும். புத்தாண்டு உதயமாகும் பொழுது உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் ஓய்வைப் பெற்றுக் கொள்வதே இதன் விஞ்ஞான ரீதியிலான அடிப்படையாகும். எமது நாட்டில் விவசாயம் மற்றும் பொருளாதாரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இதனால் புத்தாண்டு காலத்தில் சுபவேளையில் பணிகளை ஆரம்பிப்பது மிகவும் முக்கிய மான தாகும். என்றார். (ற.ரி4)

## வலி. மேற்கில் வீதியோர வியாபாரங்களுக்கு தடை

**வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட வீதியோரங்க ளில் பொருள்களைப் பரப்பிவைத்து வியாபாரம் செய்வதைத் தடைசெய்யத் தீர்மானிக்கப்பட்டது.**

வலி.மேற்கு பிரதேச சபையின் இரண்டாவது அமர்வு தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதன் போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. பொதுமக்கள் சார்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. சங்கானை நகரில் உள்ள புடவைக் கடைகளுக்கு முன்பாகவும் அங்குள்ள வீதி ஓரங்களிலும் ஆடைகள், இலத்திரனியல் பொருட்கள் மற்றும் பல பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.
இதனால் பெருந்தொகைப் பணத்தை முதலீடு செய்து பொருள்களைக் கொள்வனவு செய்துள்ள வர்த்தகர்கள் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் ரஜீவன் கருத்து முன்வைத்தார். இந்தச்செயற்பாட்டால் பொதுமக்களுக்கும் இடையூறுகள் ஏற்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார். இதனால் இந்த வியாபாரத்தை தடை செய்ய வேண்டும் என அவர் கோரினார். இந்தக் கருத்துக்கு ஏனைய உறுப்பினர்களும் ஆதரவாகக் குரல் கொடுத்ததை அடுத்து இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
நிதிக்குழு, வீடமைப்பு அபிவிருத்திக் குழு, சுகாதாரக் குழு, தொழில்நுட்பக் குழு போன்ற குழுக்களும் அமைக்கப்பட்டன. இந்தக் குழுக்களில் கட்சி பேதமின்றி உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். (ந.ரி4)

## போட்டியில் பெற்றோர் இலயித்திருக்க பிள்ளை விபத்தில் சிக்கியது

தென்மராட்சி, ஏப். 15
விளையாட்டுப் போட்டியை பெற்றோர் ரசித்துக் கொண்டிருக்க தண்ணீர் பருகச் சென்ற 4 வயதுப் பிள்ளையை மோட்டார் சைக்கிள் மோதிக் காயப்படுத்தியது.
இந்தச் சம்பவம் வரணி கரம்பையில் நேற்று இடம்பெற்றது. புதுவருடத்தையொட்டி அங்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. அதனைப் பார்க்க கிராமத்தில் உள்ள பெருமளவு மக்கள் கூடியிருந்தனர். அந்தவேளையில் அருகிலுள்ள தண்ணீத் தொட்டியில் தண்ணீர் பருகச் சென்றபோது விபத்து இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சிவரூபன் பிரியங்கா ( வயது 4 ) என்பவரே காயமடைந்தார். அவர் வரணி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அம்புலன்ஸில் சாவகச்சேரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (4- 9)

## புதுக்குடியிருப்பு காட்டில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 15
புதுக்குடியிருப்பில் காட்டுக்குள் இருந்து இளைஞனின் சடலம் ஒன்றை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
வீதியோரம் சில நாள்களாக மோட்டார் சைக்கிள் நின்றதாகவும் அதன் அடிப்படையில் பிரதேசத்தவர்கள் சென்று பார்த்தபோது சடலத்தைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்ததாகவும் பின்னர் சடலம் மீட்கப்பட்டதாகவும் ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. வட்டக்கச்சியைச் சேர்ந்த கிருஸ்ணகுமார் டிறோசன் (வயது - 27) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார் என்று ஆரம்ப விசாரணையில் கூறப்பட்டது. அவரது சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுப் பிற்பகல் சேர்க்கப்பட்டது. பரிசோதனை மற்றும் விசாரணைகளின் பின்னர் இரவு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. உயிரிழப்புத் தொடர்பான முழுமையான தகவல்கள் கிடைக்கவில்லை. (4)

## தந்தையை அடித்துக் கொன்ற மகன்

காலி, ஏப்.15
காலி, மஹமோதர பகுதியில் மகன் ஒருவன் தந்தையை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்தது. இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்தே இந்த தாக்குதல் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
தாக்குதலில் பலத்த காயமடைந்த தந்தையை கராபிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின் சிகிச்சைப் பயனின்றி உயிரிழந்தார்.
மஹமோதர பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான மகனைப் பிரதேசவாசிகள் தாக்கியுள்ளனர். தாக்கப்பட்ட மகன் கராபிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என காலிப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)



வவுனியா வைரவ புளியங்குளம் ஸ்ரீ ஆதி விநாயகர் திருக்கோவிலின் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. (ந.ரி4,110)

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு


கொழும்பு, ஏப்.15
தங்கல்லை, அகுனுகொலபெலஸவில் இடம் பெற்ற சிற்றூர்தி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்து நேற்று நடந்தது.
விபத்தில் கட்டகடுவப் பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நபரே உயிரிழந்தார்.
மோதி விட்டுத் தப்பிச் செல்ல முயன்ற சிற்றூர்தியை தடுத்து நிறுத்தி பிரதேச மக்கள் தீ வைத்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இதனால் இந்தப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பில் சிற்றூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## சிகரெட்டுக்களுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப்.15
சட்டவிரோதமான முறையில் சிகரெட் தொகைகளைக்கொண்டு வந்த சீன நாட்டுப்பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபர் பண்டாரநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்து நேற்று சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.
கைது செய்யப்பட்டவர் 45 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டது.
இவரிடமிருந்து 14 இலட்சம் பெறுமதியான சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சுங்கப் பிரிவு அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர். (ற-ரி5)

## மோ. சைக்கிளில் இருந்து வீழ்ந்த இளைஞர் காயம்

தென்மராட்சி ஏப்ரில் 15
சித்திரைப் புத்தாண்டு வழிபாட்டுக்காக ஆலயத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற 19 வயது இளைஞர் மோட்டார் சைக்கிளிலிருந்து வீழ்ந்து காயமடைந்தார். நாய் துரத்தியே அவர் வீழ்ந்தார் என்று கூறப்படுகிறது.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை கெற்பேலியில் நடந்தது.
காயங்களுக்கு உள்ளான இளைஞர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற.ரி5,9)



## உப அலுவலகங்களின் குறைபாடுகளை கேட்டறிந்த கரைதுறைப்பற்று தவிசாளர்

முல்லைத்தீவு, ஏப்.14
கரைத்துறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் பிரதேச சபையின் கீழ் உள்ள உப அலுவலகங்களின் குறைகளை கேட்டறிந்து கொள்ளும் நோக்குடன் கடந்த வியாழக்கிழமை முள்ளியளை அலுவலகத்துக்குச் சென்று நிலமைகளை ஆராய்ந்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான க.தவராசா முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளராகத் தெரிவானார். அவர் முதற் கட்டமாக பிரதேச சபையின் உப அலுவலகங்களில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிவது என்று முடிவு செய்திருந்தார். அதன் ஒரு கட்டமாக முள்ளியவளையில் உள்ள உப அலுவலகத்துக்கு கடந்த வியாழக்கிழமை சென்ற அவர் அங்குள்ள குறைப்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்தார்.
இதன் போது முள்ளிவளை பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்கள் பாரிய அளவில் காணப்படுவதால் உதவித் தொழிலாளர்கள் தேவையாக உள்ளது என்று பொறுப்பதிகாரியால் கூறப்பட்டது.
அலுவலகப் பயன்பாட்டுக்குக் கணணி தேவை உள்ளது என்றும் அலுவலகத்தில் ஆளணி பற்றாக்குறை நிலவுவதாகவும் அவரிடம் கூறப்பட்டது.
இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார். (21)

# இறுதிச் சடங்குகள் செய்வதற்கு இடுகாட்டுக்கு கிணறு தேவை

*சாந்தசோலை கிராம மக்கள் கோரிக்கை*

வவுனியா, ஏப்.15
**வவுனியா சாந்தசோலைக் கிராமத்தில் உள்ள இடுகாட்டுக்கு கிணறு ஒன்றை அமைத்து தரும் படி பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்**

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட குறித்த கிராமத்தில் உள்ள பொதுமயானம் அந்தப் பகுதியில் உள்ள சில கிராமங்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இருந்த போதும் இறப்புச் சடங்குகளை மேற்கொள்வதற்கும் ஏனைய தேவைகளுக்காகவும் தேவையான நீர் வசதியை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கிறோம். தூர இடத்தில் இருந்து வாளிகளிலேயே நீரைக் கொண்டு வந்து இறுதிச் சடங்குகளைச் செய்யும் நிலை உள்ளது.
இது தொடர்பாக அதிகாரிகள் மற்றும் அரசியல் வாதிகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். ஆனால் யாரும் இதனைக் கருத்தில் எடுக்கவில்லை எனவே நிலைமையைக் கருத்தில் கொண்டு மயானத்துக்கு கிணறு ஒன்றை அமைத்து தரும்படி சம்பந்தப்பட்ட அனைவரிடமும் வேண்டுகோள் முன்வைக்கின்றோம் என்றனர். (21,110)

## மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரிக்கு ஒரு வருடம் பதவி நீடிப்பு


மன்னார், ஏப்.15
மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி திருமதி யூட் நாளையுடன் ஓய்வு பெறும் நிலையில் மேலும் ஓர் ஆண்டு காலம் சேவை நீடிப்பு வழங்க கொழும்பு சுகாதார அமைச்சுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளராக இருந்து பின்னர் தற்போது மன்னார் மாவட்ட சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளராக கடமையாற்றும் திருமதி யூட்டின் பதவிக் காலம் 2018.04.16ஆம் திகதியுடன் நிறைவு பெறுவதனால் அவர் ஓய்வு பெற்றுச் செல்கின்றார்.
இருப்பினும் தற்போதைய மூத்த உத்தியோகத்தர்களின் தேவை கருதி திருமதி யூட்டினை சேவை நீடிப்புச் செய்யுபாறு கொழும்பு சுகாதார அமைச்சின் ஊடாகப் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்துள்ளோம்.
இவ்வாறு எம்மால் விண்ணப்பித்தமைக்கு அமைவாக சுகாதார அமைச்சு அதற்கான ஒப்புதலை வழங்கி பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கும் சிபார்சு செய்துள்ளது. இதன் அடிப்படையில் குறித்த உத்தியோகத்தர் மேலும் ஓர் ஆண்டுகாலம் பணியாற்றுவார் என்று செயலர் மேலும் தெரிவித்தார். .(21,105)

## மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.15
யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மகளிர் குழுவினரின் மகளிர்தின விழா யாழ்ப்பாணம்வண்ணைநாவலர் மகாவித்தியாலயத்தில் சமாச மகளிர் குழுவின் தலைவி பத்மலோஜினி சந்திரபாலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்குமாகாணகூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் நளாயினி இன்பராஜ் கலந்து கொண்டதாகத்தெரிவிக்கப்பட்டது. (17)

## ஓட்டோ-கார் விபத்து





முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் முதன்மை வீதியில் ஓட்டுத்தொழில்சாலை முன்னால் கார் ஒன்றும் முச்சக்கர வண்டி ஒன்றும் விபத்துக்குள்ளாகியதில் இரண்டு வாகனங்களும் சேதமடைந்துள்ளதுடன் அதில் பயணம் செய்தவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். (21,ரி3)

## குடும்பத் தலைவரின் சடலம் மீட்பு

குடியிருப்பின் மலகூடத்தினுள் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பத்தரின் சடலம் சாவகச்சேரிபொலிஸாரால் மீட்கப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனை சவச்சாலையில்ஒப்படைக்கப்பட்டுள்ளது.
இந்தச்சம்பவம்செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. கெருடாவில் வடக்கைச் சேர்ந்த தேவராசா பாலசேகரன் (வயது 34) என்பவரே சடலமாக மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.குடும்பத்தரின்சாவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில்நேற்றுமுன்தினம் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். (9)

## வறுமையில் உள்ள 11 குடும்பங்களுக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் உதவி

முல்லைத்தீவு, ஏப்.15
வடமாகாணசபை உறுப்பினர் து. ரவிகரனால் முன்னெடுக்கப்படும் வாழ்வோம் வளம்பெறுவோம் செயற்றிட்டத்தின் பதினாறாம் கட்டமானது அண்மையில் அவரது மக்கள் தொடர்பகத்தில் நடைபெற்றது.
புலம்பெயர் அன்பர்களின் பங்களிப்பில் முன்னெடுக்கப்படும் குறித்த செயற்றிட்டத்தின் பதினாறாம் கட்டத்தில் தாயகத்தைச் சேர்ந்த பதினொரு குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன என்று ரவிகரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது; .
குறுங்கால வாழ்வுடமை ஊக்குவிப்பினை நோக்காகக் கொண்டு நாளாந்த உணவுத்தேவைக்கு இடர்படும் குடும்பங்களுக்கான ஒத்துழைப்பாக வாழ்வோம் வளம் பெறுவோம் எனும் செயற்றிட்டமானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
புலம்பெயர்ந்து வாழும் அன்பரின் பணப்பங்களிப்பில் நடைபெற்று முடிந்த பதினாறாம் கட்டத்துடன். இதுவரையில் ஐந்நூற்று எழுபத்தெட்டு குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.
இந்தக் கட்டத்துக்காக புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் மாதவன் பொன்னம்பலம் 13ஆயிரத்து 400 ரூபாய் பெறுமதியில் உதவிகளை வழங்கியுள்ளார். இதில் பதினொரு குடும்பங்களுக்கு 200 கிலோ அரிசி வழங்கப்பட்டது என்றார். (21)



## குருதிக்கொடைநிகழ்வு

ஜே/101 கிராம அபிவிருத்திச்சங்கம் மற்றும் சிவில் பாதுகாப்பு குழுவின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.
நண்பர்கள் விளையாட்டுக்கழக உறுப்பினர்களின் அனுசரணையில் நடைபெற்ற இந்த குருதிக் கொடை நிகழ்வில் 30க்கும் மேற்பட்டோர்கலந்துகொண்டுகுருதி தானம்செய்ததாகதெரிவிக்கப்பட்டது. (112,113)



**வாகனங்கள் வாடகைக்கு தேவை.**

கார்கள், வான்கள் மாதாந்த
வாடகைக்கு தேவை.
**தொடர்பு - 0710404978**
(CS 15694/15)

**தேவை**

தேங்காய் மட்டை (பொச்சு மட்டை) தேவை. உங்கள் இடத்திற்கே வந்து கொள்முதல் செய்யப்படும். **- 077 654 4428**
(J 692/15)

# மாகாண எதிர்க்கட்சித் தலைவர் பதவியை முன்னணிக்கு வழங்குமாறு போர்க்கொடி

யாழ்ப்பாணம், ஏப். 15

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் சி.தவராசா இருந்துவரும் நிலையில், அந்தப் பதவியை அவரிடமிருந்து பிடுங்கித் தமக்கு வழங்குமாறு, மாகாண சபையில் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போர்க்கொடி தூக்கியுள்ளது. அதனால் அந்தப் பதவியைப் பிடுங்கிக் கொடுப்பதா அல்லது தொடர்ந்தும் தவராசாவையே இருக்க அனுமதிப்பதா என்பது தொடர்பில் இழுபறிநிலை காணப்படுகிறது என்று அறியமுடிகிறது. அந்தப் பதவி தமக்குத் தான் தரப்படவேண்டும் என்று ஐக்கிய சுதந்திர முன்னணி போர்க்கொடி தூக்கியுள்ளதாகவும் அறிய முடிகின்றது. மாகாணசபைத் தேர்தலின் பின்னர் சபையின் எதிர்க்கட்சித் தலைவராக ஈ.பி.டி.பி கட்சியை சேர்ந்த க.கமலேந்திரன் (கமல்) பதவி வகித்தார். அதே கட்சியைச் சேர்ந்த, பிரதேச சபைத் தவிசாளராக இருந்த றெக்ஷியன் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில் கமல் கைது செய்யப்பட்டார். அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டவுடன் கட்சி கமலைத் தூக்கி எறிந்தது. அவரது உறுப்பினர் பதவியும் பறிபோனது. இந்த நிலையில் எதிர்க் கட்சித் தலைவராக ஈ.பி.டி.பி கட்சியைச் சேர்ந்த சி.தவராசா பொறுப்பேற்றுக் கொண்டார். அதன் பின்னரும், அவரது கட்சிக்குள் ஏற்பட்ட உள் முரண்பாடுகள் காரணமாக சி. தவராசாவையும் அந்தப்பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று ஈ.பி.டி.பியினர் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். எனினும் சபையில் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தற்போதும் தவராசாவே எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்து வருகின்றார்.

வடக்கு மாகாண சபையின் ஆயுள்காலம் சில மாதங்களில் நிறைவுபெறவுள்ளது. இந்தநிலையில் சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து தவராசாவை நீக்கிவிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிசார்பாகப் போட்டியிட்டு வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினராக உள்ள பெரும்பான்மை இனத்தை சேர்ந்த ஜெயதிலகவை அந்தப் பதவிக்கு நியமிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாண உறுப்பினர்கள், மாகாண சபையின் அவைத்தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று அறிய முடிகின்றது.

இது தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்களிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் மாற்றம் கொண்டுவருவது தொடர்பில் நாம் முயற்சி எடுத்துள்ளமை உண்மைதான்.

இது தொடர்பாக நாம் கட்சி உயர்மட்டத்தினருடன் பேசி வருகின்றோம். அவைத்தலைவரிடமும் பேசியுள்ளோம். மேலதிக விவரங்கள் நாம் முடிவு எடுத்த பின்னரே தெரிவிக்க முடியும் - என்றார். (4,8)

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ். நகரில் சகல வசதிகளுடன் வீடு உடன் வாடகைக்குண்டு. குடும்பம் அல்லது நிறுவனங்கள் விரும்பத்தக்கது. முற்பணம் 300.000/= வாடகை 20.000/=. நேரில் தீர்மானிக்கமுடியும். கிழமை நாள்களில் மாலை 4.00pm - 6.00pm பார்வையிடலாம்.
**தொடர்பு - 076 918 4821**
(CS 15693/15)

**வேலை வாய்ப்பு**

**ஆங்கிலம், MS Office தெரிந்த**
**பெண் பணியாளர்கள் தேவை.**
Grudan (Pvt) Ltd.
3, 2nd Lane, Palaly Rd. 077 0303 834, 0212214142
(CS 15787/15/17)

## மரண அறிவித்தல்கள்

# பொன்னம்பலம் மகேஸ்வரன்



தெல்லிப்பழை, விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் மகேஸ்வரன் நேற்று (14.04.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சறோஜினிதேவியின் பாசமிகு கணவரும் பவித்திரா (மருந்தாளர் - நுவரெலியா பொது வைத்தியசாலை), சுமித்திரா (யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவபீடம் - 2ஆம் வருடம்), பிந்துஜன் (சாவ.இந்துக்கல்லூரி - 2017 வர்த்தகப் பிரிவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சலசாதேவி, மயில்வாகனம், இராஜேஸ்வரி மற்றும் இராசலிங்கம் ஆகியோரின் அருமைச்சகோதரனும் அரியபுத்திரன், தேவாம்பிகை, சிவசுப்பிரமணியம், கோணேஸ்வரி, நாகேஸ்வரி, புவனேஸ்வரி, விஜயலட்சுமி, காலஞ்சென்ற தனபாக்கியம் மற்றும் சுந்தரலிங்கம், பாலேந்திரா ஆகியோரின் மைத்துனரும் பீதாம்பரம், செல்வராசா, காலஞ்சென்ற செல்வரத்தினம் (RE) மற்றும் சூரியகுமாரன், சிவயோகி, சகிலா ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 072 4471**

## ஏழாம் ஆண்டு நினைவுநாள்

செல்வன்
# சிறீகாந்தன் நிமலன்



தாயின் மடியில் 02.03.1997 — இறைவன் அடியில் 15.04.2011

நிமலா!
பதினான்கு வயதினிலே உனைப்பிரிய
நாம் என்ன பாவம் செய்தோமோ
ஏங்கித் தவிக்கிறோம் ஏழு ஆண்டுகளாக
நிமலா நீ எப்போது வருவாய் என்று....

உன் அன்பான: அப்பா, அம்மா,
அண்ணா, அண்ணி,
அக்கா, அத்தான்
**கரந்தன், நீர்வேலி மேற்கு.**

## மரண அறிவித்தல்கள்

# திருமதி நாகேஸ்வரி பரமேஸ்வரன்

*(ஓய்வுபெற்ற கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்)*



சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரான திருமதி நாகேஸ்வரி பரமேஸ்வரன் நேற்று (14.04.2018) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் ஆறுமுகம் - பரமேஸ்வரனின் (அம்பாள் களஞ்சியம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னப்பு - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற காரைநகர், களபூமி, சத்திரத்தையைச் சேர்ந்த ஆறுமுகம் சரஸ்வதி தம்பதிகளின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.**
**தகவல்: ஆறுமுகம் பரமேஸ்வரன்**
**0777155324**

# கனகரட்ணம் கிருஸ்ணகுமார்

*(சென் ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவன்)*




நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் கிருஸ்ணகுமார் கனடாவில் அகால மரணம் அடைந்தார்.

அன்னார் கனகரட்ணம் (கச்சேரி அன்னக்கிளி உரிமையாளர்) சந்தானலெட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் கிருஸ்ணதாசன் (அன்னக்கிளி பான்சி ஹவுஸ்), கிருஸ்ணவதி, கிருஸ்ணவேணி (லண்டன்), காலஞ்சென்ற சுரேஸ்குமார் மற்றும் கிசோக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுதர்சினிதேவி, வசந்தரூபன் (அன்னக்கிளி ஹோட்டல்), யசோதரன் (லண்டன்), சஜித்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் பவித்திரா (லண்டன்), ஹரிசாந் (லண்டன்), ஜதுர்சன் (லண்டன்), வினோஜன் (யாழ். பரியோவான் கல்லூரி), சுரேகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனும் ரஜீவா (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஜதுர்ஷா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் ஆசைச் சித்தப்பாவும் ஷசிராவினது (பிரான்ஸ்) பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**36/3, கச்சேரி நல்லூர் வீதி,**
**(புகையிரதக் கடவை அருகாமை),**
**கச்சேரி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0765443490, 0768806359**



# வன்னித்தம்பி சோமசுந்தரம்

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், இணுவில், நீர்வேலி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வன்னித்தம்பி சோமசுந்தரம் 11.04.2018 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வன்னித்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சோதிப்பிள்ளையின் பாசமிகு கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2018) திங்கட்கிழமை நீர்வேலி மத்தி நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## வெடிக்காத நிலையில் எறிகணை மீட்பு



சாவகச்சேரி, ஏப்.15
சாவகச்சேரி கச்சாய் சாலையில் வெடிக்காத நிலையில் எறிகணையொன்று பொலிஸாரால் அண்மையில் மீட்கப்பட்டுள்ளது.
சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்துக்கு அருகில் உள்ள காணியொன்றில் துப்பரவுப் பணிகள் மேற்கொண்ட போது எறிகணை காணப்பட்டு சாவகச்சேரிச் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதுஎனவும் பொலிஸார் அந்தப் பகுதியில் பாதுகாப்பினை ஏற்படுத்தி விட்டு பின்னர் எறிகணையை மீட்டுச் சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
அல்லாரைத் தம்பு தோட்ட முகாமுக்கு முன்னிலைப் பாதுகாப்பு அரண் இந்தக் காணியில் நீண்டகாலம் இயங்கி பின்னர் அங்கிருந்துவெளியேற்றப்பட்டது எனவும் டெங்குப் பரிசோதனைகளின்போதுகாணியைத் துப்புரவு செய்யுமாறு அறிவிக்கப்பட்ட நிலையில் துப்புரவு செய்த போது எறிகணை கண்டு பிடிக்கப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை கடந்த வருடம் இந்தக் காணிக்கு அருகில் உள்ள காணியில் வீட்டுக்குஅத்திவாரம்வெட்டிய போது ஒரு தொகை கைக்குண்டுகள் மீட்கப்பட்டதாகவும்தெரிவிக்கப்பட்டது. (9)

### நோய் எதிர்ப்பு சக்தியற்ற செயற்கை விவசாயத்துக்கு

# பகட்டை நம்பிய நாம் அடிமையாகிவிட்டோம்

### கூறுகிறார் மருத்துவர் சி.சிவன்சுதன்



**யாழ்ப்பாணம், ஏப்.15**
**இயற்கைக் களைகள் என்று சொல்லியும், சாதாரண செடிகள் என்று சொல்லியும், வெறும் பனம் கூடல்கள் என்றும், ஆபத்தான மரம் என்றும், இராசி இல்லாத மரம் என்றும் பட்டம் சூட்டி இவற்றைப் புறக்கணிக் கின்றோம். நாம் பகட்டை நம்பி பிறரின் தயவை நம்பி செயற்கையான ஒரு விவசாய முறைக்கு தெரிந்தோ தெரியாமலோ அடிமைப்பட்டு வருகின்றோம் என்று மருத்துவர் சிவன்சுதன் தெரிவித்தார்.**

'மன்னின் தோழன் விவசாயி' எனும் சஞ்சிகை வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு மருத்துவர் பார்வையில் இயற்கை விவசாயமும் சுகநலனும் என்ற தொனிப்பொருளில் உரையாற்றம் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமது மண்ணிலே இயற்கை என்ற விவசாயின் கவனிப்பிலே ஊட்டச்சத்துள்ள சுவையான எத்தனையோ உணவுப் பொருள்கள் விளைந்து கொண்டு இருக்கின்றன. இயற்கை என்ற விவசாயின் நேரடிக் கவனிப்பிலே உணவுகளுக்கு செயற்கை உரம் தேவையில்லை. மருந்து தெளிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதிக பணச் செலவு தேவையில்லை. இருந்தும் இவ்வாறான உணவு வகைகளைப் புறக்கணித்துக் கவனிக்காமல் இருந்து வருகின்றோம்.
இதனைப் பெருமளவு கண்டு கொள்வதில்லை. இதற்கான அடிப்படைக் காரணங்கள் கண்டறியப்பட்டு நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
இயற்கைக் களைகள் என்று சொல்லியும், சாதாரண செடிகள் என்று சொல்லியும், வெறும் பனம் கூடல்கள் என்றும், ஆபத்தான மரம் என்றும், இராசி இல்லாத மரம் என்றும் பட்டம் சூட்டி இவற்றைப் புறக்கணிக்கின்றோம்.
நாம் பகட்டை நம்பி பிறரின் தயவை நம்பி செயற்கையான ஒரு விவசாய முறைக்கு தெரிந்தோ தெரியாமலோ அடிமைப்பட்டு வருகின்றோம்.
நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த விதைகள் எமக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறான சிக்கல் நிலையில் இருந்து மீள்ச்சி பெறுவதுக்கும் இவ்வாறான சிக்கல் நிலைக்கு எம்மை ஆள்ப்படுத்திக் கொண்டு இருப்பது யார் என்பதையும் அடையாளப்படுத்துவதற்கு நாம் சிந்திக்க வேண்டும். எமது விவசாய முயற்சியிலேநாம்எமதுசொந்தக் காலிலே நிற்பதற்குப் பல தரப்பட்ட பிரிவினருடைய ஒரு கூட்டு முயற்சி தேவைப் படுகின்றது. எமது மண்ணுக்குப் பொருந்தாத மரங்களை நட்டு அவற்றுக்கு செயற்கை உரங்களைப் போடுகின்றனர்.
அதிலிருந்து கிடைக்கும் விளைச்சலிலே நாம் நோய்வாய்ப்படுகின்றோம். அவ்வாறு பயிரிடக் கூறிவிட்டு செயற்கை உரம் பாவிக்க வேண்டாம் என்று சொன்னால் அது நடைமுறைக்குச் சாத்தியமாக இருக்கும் என்பது யோசிக்கத்தக்க விடயம் ஆகும்.
இது தொடர்பான விழிப்புணர்வுகள் சமூகத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும். புரதக்குறைபாடு எமது மக்களுக்குப் பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.
அதன் வீதம் உயர்வாக இருக்கின்றது. அதனால் பண்ணை வளர்ப்பு ஊக்குவிக்கப்பட வேண்டும். கோழி போன்றவற்றில் மட்டும் அல்லாமல் முயல் வளர்ப்பு போன்றவற்றையும் செய்ய வேண்டும். இதன் மூலம் சமுதாயத்தில் எமது ஊட்டச்சத்து நிலையை உயர்த்த முடியும். எவ்வளவோ பட்டி மாடுகள் பிரியோசனம் குறைந்தவையாகக் காணப்படுகின்றன.
இந்தப் பட்டி மாடுகளுடைய கருப்பையிலே கருக்கட்டப்பட்ட நல்ல நிலையில் உள்ள முட்டைகளை நாங்கள் மதிப்பீடு செய்வோமாக இருந்தால் ஒரு நல்ல இன மாட்டில் இருந்து ஒரு வருடத்திற்கு 12 நல்ல முட்டைகளைப்பெறக்கூடியதாக இருக்கும். அவை நல்ல இன காளைகளால் கருக்கட்டப்பட்டு அந்த கருக்கள் எமது பட்டி மாடுகளினுடைய கருப்பையிலே பதிக்கப்படுமாக இருந்தால் ஒரு நல்ல இன மாட்டில் இருந்து ஒரு வருடத்திலே 12 மாடுகளை குறைந்த விலையுடன் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்- என்றார். (21,113)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.ஏப்.14
யாழ்ப்பாண மாவட்ட தொண்டர் ஆசியர்களுக்கான நேர்முகத்தேர்வுகள் எதிர்வரும்19,20ஆம் திகதிகளில் கொழும்பு கல்வி அமைச்சில்நடைபெறவுள்ளதை முன்னிட்டு
தொண்டர் ஆசியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று ஆரியகுளம் புதிய உயர் கலைக் கல்லூரி மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
இதன்போது நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள்கிடைக்கப்பெற்றவர்களும்,கிடைக்கப்பெறாதவர்களும் கலந்துரையாடலுக்கு சமூகம் தருமாறு யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். (7)

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப் 15
சுண்டுக்குழி சனசமூக நிலையத்தில் இந்த ஆண்டுகான புதிய நிர்வாக சபைத் தெரிவு அன்மையில் இடம்பெற்றது.
இதில் தலைவர் சி.சிறிசுதாகரன்,உப தலைவர் றா.றதீஸ்கரன்,செயலாளர் செ.செல்வகரன்,உப செயலாளர் இ.கலேப் கிருபா,பொருளாளர் நா.இராஜன்,உபபொருளாளர் ஆ.டெச்சா,விளையாட்டுப் பொறுப்பாளர்- கி.பிரசாத்,நிலையப்பொறுப்பாளர் சூ.டினோஜன் ஆகியோருடன் உறுப்பினர்களாக 5 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (17)

## சென். பெனடிக் வித்தியாலயத்துக்கு நவீன நூலகமும் திறன் வகுப்பறையும்






யாழ்ப்பாணம், ஏப். 15
யாழ்ப்பாணம் சென். பெனடிக் வித்தியாலய புதிய கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. 9 வகுப்பறைகள், நவீன முறையில் அமைக்கப்பட்ட நூலகம், திறன் வகுப்பறை என்பவற்றுடன் கூடிய 3 மாடிக் கட்டடமே திறந்து வைக்கப்பட்டது.
யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அதில் ஆசி வழங்கினார். வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு அதனைத் திறந்து வைத்தார்.
கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் 2016 இல் அடிக்கல் நட்டார்.
நிகழ்வில் முன்னாள் அதிபர்களான அருட் சகோதரி தேவநேதும், ஞானதர்சினி ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர். நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. (4,113)

## வாழ்வாதார முயற்சிக்கு சிறப்பான கடன் திட்டம்

யாழ்ப்பாணம்.ஏப்.15
சமுர்த்தி பயனாளிகள் மேற்கொள்ளவுள்ள வாழ்வாதார முயற்சிக்கு சிறப்பான கடன் திட்டம்ஒன்றை அரசு வழங்கவுள்ளதுஎன்றுயாழ்ப்பாணம்மாவட்டச்செயலகசமுர்த்திப் பிரிவு தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:
சமுர்த்தி பயனாளிகளின் வாழவதாரத்தை உயர்த்துவதற்கு அரசு பல்வேறு கடன் திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. நடப்பு வருடத்தில் பயானிகளுக்கான சிறப்பான வாழ்வாதார உதவித்திட்டத்துக்கானகடன்திட்டம்ஒன்றை வழங்கவுள்ளது. பயனாளி ஒருவர் தனது வாழ்வாதாரத்தை உயர்த்தும் சிறு தொழில் முயற்சி ஒன்றுக்கு 75 ஆயிரம் வரையில் கடனைப் பெற்றுக்கொள்ள முடியும்.
இதற்கு சமுர்த்தி முத்திரை உள்ளவர்கள் மட்டு மின்றி சமுர்த்திக் குழுவில் அங்கத்துவம் வகிப்பவர்களும் இந்தக் கடனைப் பெற்றுக்கொள்ள முடியும்.
தொழில் முயற்சி மேற்கொள்ளும் பயனாளி ஒருவரின் மொத்தத் தொகையில் 60 வீதத்தினை அரசு வழங்கும், மிகுதி 40 வீதத்தினை பயனாளிகள் செலுத்த வேண்டும். இந்தக் கடனை பெற விருப்பும் பயனாளிகள் பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தரிடம் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

## விழிப்புணர்வு நிகழ்வும் உணவுப் பொதி வழங்கலும்

யாழ்ப்பாணம், ஏப். 15
புதியசோனகத் தெரு J/88 முதியோர் சங்க உறுப்பினர்களுக்கான முதியோர் உடல், உள ஆரோக்கியம் தொடர்பான விழிப்புணர்வும் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வும் ஆறு கால்மடம் கலையரங்க முன்றலில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணபிரதேசசெயலக உளவளத்துணையாளர்பெனட் கிறிசாந்தி தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த உணவுப் பொதிகள் யாழ்ப்பாண பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கத்தின் நிதியுதவியினூடாக வழங்கப்படவுள்ளது என்று சங்கத் தலைவர் சி.க. தம்பிராசா தெரிவித்துள்ளார்.

## விபத்தில் காயமடைந்த மூதாட்டி 4 நாள்களின் பின் உயிரிழந்தார்

தென்மராட்சி ஏப். 15

மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி வீழ்ந்து காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மூதாட்டி நான்கு நாள்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். கனகசிங்கம் சின்னாச்சி ப் பிள்ளை ( வயது 70 ) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தார். கடந்த ஒன்பதாம் திகதி காலை கொடிகாமத்தை அண்மித்த பகுதியில் சம்பவம் இடம் பெற்றது. தனது சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் பயனித்த போது மூதாட்டி வீழ்ந்துள்ளார். தலையில் காயம் ஏற்பட்டது. சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பெற்றுவந்தார். நான்கு நாள்களின் பின்னர் கடந்த வியாழக்கிழமை மூதாட்டி உயிரிழந்தார்.

மூதாட்டியின் சாவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட கொடிகாமம் பொலிஸார் நேற்றுமுன்தினம் பதில் நீதிவான் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். அறிக்கையினைப் பார்வையிட்ட பதில் நீதிவான் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இறப்பு விசாரணைகளை மேற்கொண்ட திடீர் இறப்பு விசாரணை அதிகாரி . போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸாரைப் பணித்தார் . உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது (21,9)

# தமிழின் தொன்மையை அறிய முஸ்லிம்கள் தமது வரலாறுகளைத் தமிழில் ஆய்வு செய்யவேண்டும்

### யாழ். பல்கலை விரிவுரையாளர் செல்வ மனோகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.15

**தமிழ் பேசும் முஸ்லிம்கள் தங்களுடைய வரலாறுகளை தமிழ் மொழி மூலம் ஆய்வு செய்தால் ஈழத்தில் தமிழின் தொன்மையை ஏற்படுத்த முடியும் அதுவே இன ஐக்கியத்தை ஏற்படுத்தவும் வாய்ப்பாக அமையும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து நாக ரிகத்துறை உதவி விரிவுரையாளர் செல்வ மனோகரன் தெரிவித்தார்.**

ந.குகபரனின் எழுதிய ஈழத்தில் "ஒல்லாந்தர் காலத்தமிழ் இலக்கியங்கள் சமூக அரசியல் நோக்கு" என்ற நூலின் அறிமுக விழாக டந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப்பிரிவு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; தமிழ் பேசும் முஸ்லிம்கள் தமிழ் மொழி மூலம் தமது வரலாற்றை ஆய்வு செய்வதன் மூலம் தமிழினுடைய தொன்மை பூர்த்தி அடையும்.

அவர்கள் தமது வரலாற்றை ஆய்வு செய்தால் ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தின் முழுமை ஆய்வு நிலையை எங்களிடையே ஏற்படுத்தி இனஐக்கியத்தை ஏற்படுத்த வாய்ப்பிருக்கும். காலம் எங்களுக்காகக் காத்திருக்காது.

ஆனால் வரலாறு எங்களுக்காக காத்திருக்கும். எமது இன,மத



வரலாறுகளைத் தொலைத்துவிட்டவர்களாக நாம் இருக்கின்றோம். பெருபான்மையான மனிதர்கள் வரலாறுகளைத் தேடுவதில்லை சிங்கள பௌத்தம் கி.மு 5ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றும் பயணித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் தங்களுடைய வரலாறுகளைப் பாதுகாத்துள்ளார்கள். இதனைப் புரிந்து நாங்கள் எங்களுடைய வரலாறுகளை ஆய்வு செய்ய வேண்டும். எங்கள் அடையாளத்தை அழித்து விட்டோம். முன்னர் சமஸ்கிருதமயமாகி தற்போது ஆங்கில மயமாகி விட்டோம். தற்போது தமிழ் பேசுவதே குறைந்து கொண்டு வருகின்றது. இதை கவனித்துக் கொள்ள வேண்டும் ஒல்லாந்தர் காலம் சிரங்கு நோய் போன்றது ஆங்கிலேயர்காலம் காசநோய் போன்றது.

எனவே எங்கள் அடையாளங்களை ஞாபகப்படுத்தும் நூலாக இந்த நூல் அமைந்து காணப்படுகிறது. ஈழத்தமிழர்களின் வரலாற்றை ஒன்று சேர்க்கும் நூலாக இது அமைந்துள்ளது என்றார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தமிழ்த்துறை மூத்த விரிவுரையாளர் ஈ.குமரன் தெரிவித்ததாவது;

இந்த நூலானது இலக்கிய வழி வரலாறுடன் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் பணப்பயிர்ச் செய்கை புகையிலை ஆகும் அதை கொண்டு வந்த காலம் ஒல்லாந்தர் காலம் ஆகும் மொறட்டுவவில் உள்ள தளபாட கைத் தொழிலையும் கொண்டு வந்தது ஒல்லாந்தர் காலம் இலங்கையில் 8 சதவீதமாக மக்கள் கல்வி அறிவினை பெற்று கொண்ட காலமாகும். இலங்கையின் சமூக வரவாறு போக்கு இலக்கிய வரலாற்றுப் போக்கின் முக்கிய புள்ளியாக அமையும் இந்த ஒல்லாந்தர் காலம் நூலின் முக்கியமாக அமைகிறது. இந்த நிகழ்வில் எழுத்தாளர்கள் . பேராசிரியர்கள் ,விரிவுரையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (21,111)

## மதிப்பளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப் 15

வியாபாரிமூலை கலைமணியின் கல்வி மதிப்பளிப்பு நிகழ்வு வியாபாரிமூலை நாச்சிமார் ஆலய முன்றலில் இன்று மாலை 3.30 மணிக்கு தலைவர் க.கதிரமலை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வை.நந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் த.ஐங்கரன், வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் .யாழ்.பல்கலைக்கழக கல்வியத்துறை சிறப்பு விரிவுரையாளர் ஜெ.இராசநாயகம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## மாலைகளைப் புறந்தள்ளி ஏழைகளுக்கு உணவு

### சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்கள் முன்னுதாரணம்

சாவகச்சேரி, ஏப்.15

விருந்தினராகஎம்மைஅழைத்து எமக்கு அணிவிக்கும் மாலைகளுக்குச் செலவிடும் பணத்தை வறுமையில் உள்ள குடும்பத்துக்கு ஒருநேர உணவு உண்பதற்கு கொடுப்போம் என்று சாவகச்சேரிப் பிரதேச சபையில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. தவிசாளருடைய முடிவை அடுத்து அதை ஆதரித்த உறுப்பினர்களும் அதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் க.வாமதேவன் தான் பங்குபற்றவுள்ள நிகழ்வுகளில் தனக்கு மாலை அணிவிப்பதைத் தவிர்த்துக் கொள்ளவுள்ளதாகவும் மாலை கொள்வனவு செய்ய செலவிடும் தொகையை அந்தப் பகுதியில் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள ஒரு குடும்பத்துக்காவது ஒருநேர உணவு வழங்குவதை விரும்புவதாக அறிவித்திருந்தார்.

போர் இடர்களால் பாதிக்கப்பட்டு 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ளனர். இந்தக் குடும்பங்கள் எத்தனையோ கஸ்டங்களின் மத்தியில் வாழ்வதையும் நாம் அறிவோம். இந்த நிலையில் சேவையில் ஈடுபட வந்துள்ள எமக்கு மதிப்பளிக்க மாலை மரியாதை செய்வதை எதிர்பாரக்கக் கூடாது என்று அவர் சபையின் கன்னியமர்வில் உரையாற்றினார்.

இதனை வரவேற்ற ஏனைய 30 உறுப்பினர்களும் அவ்வாறு தமது பிரதேசத்தில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு தம்மை விருந்தினராக அழைத்தால் மாலை மரியாதையை விட அதற்கு ஏற்படும் செலவினை அதே நிகழ்வில் வறிய குடும்பத்துக்கு உணவுப் பொருள்கள் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்வோம் என உறுதிகூறினர்.

இதேவேளை பிரதேச சபையின் தவிசாளர் என்ற வகையில் என்னை விருந்தினராக அழைப்பதாயின் அந்த வட்டாரத்தின் உறுப்பினரையும் விருந்தினர்களாக அழைக்க வேண்டுமென பொதுமக்களுக்கு தவிசாளர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஏனெனில் வட்டார உறுப்பினருக்கு மக்களால் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் அன்றைய தினம் உறுப்பினரால் எனக்குத் தெரிவிக்கப்படும்போது அதற்கான தீர்வு தொடர்பாக என்னால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்திருந்தார் (21,9)

## பலாலி ஆரோக்கிய மாதாவில் முதலாவது திருப்பலிப் பூசை

பலாலி ஆரோக்கியமாதா பங்கு முதல் குரு அல்வின் கிருபாகரனின் முதல்ாவது திருப்பலி பூசை இன்றுநடைபெறவுள்ளது.

குருத்துவப் பயிற்சியை நிறைவுசெய்து, நேற்று முன்தினம் யாழ்ப்பாண ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசத்தினால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அதனைத் தொடர்ந்து, இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பலாலி ஆரோக்கியமாதா தேவாலயத்தில் தனது முதலாவது திருப்பலியை ஒப்புக்கொடுக்கவுள்ளார். இந்தப் பங்குக்குரிய மக்கள் பலாலி அன்ரனிபுரம் தொடங்கி முல்லைத்தீவு வரையான கரையோரப்பகுதிகளில் உள்ள கிராமங்களில் நிரந்தரமாகவும், தற்காலிகமாகவும் வசித்துவரும் நிலையில், பலாலி மக்கள் மீண்டும் மீள்குடியேற்றம் செய்வதற்குரிய முன்னோடியாக அப்பங்கின் திருவாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார்.' புலாலி ஆரோக்கியமாதா தேவாலயத்தின் புது குருமுதல்வரின் திருப்பலி பூசையுடன், தமது பிரதேசம் மிக விரைவில் விடுவிக்கப்படலாம் என்றும் அப்பகுதி மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (21,106 )



## வாழ்வாதார உதவிகள்

வடமராட்சிக் கிழக்கில் கடற்றொழிலாளர் குடும்பங்க ளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு மருதங்கேணிபிரதேசசெயலகத்தில் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

மீள்குடியேற்ற அமைச்சின் நிதியொதுக்கீட்டில் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தைச்சேர்ந்த 30 குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்விற்கு விருந்தினர்களாக கலந்து கொண்டநாடாளுமன்றஉறுப்பினர்மாவைசோ சேனாதிராசா,வடமாகானசபை உறுப்பினர் எஸ்.சிவயோகன் அகியோரால் பயனாளிகளுக்கு மீன்பிடி வலைகள் வழங்கி வைக்கப்பட்டன. (70)



உண்மையில்
வட்டி இல்லை
அபான்ஸில் மட்டுமே
இம்முறை புதுவருடம் கோலாகலம்
வட்டி இல்லை ஜொலி அதிகம்
LG
Life's Good
வேகமான குளிரூட்டலுடன்
மின்சாரத்தை சேமித்து
அதீத வெப்பத்தை தணித்திடும்
வேறு சாதாரண இன்வெர்டர் வளிச்சீராக்கிகளை போலில்லாமல் LG டுவல்கூல் இன்வெர்டர் வளிச்சிராக்கி 40% வரையான வேகத்தில் குளிர்ச்சியூட்டி 60% வரை மின்சாரத்தை சேமிக்கிறது. வெப்பத்தினால் அவஸ்த்தைப் பட்டது போதும், நீங்களும் இன்றே LG டுவல்கூல் இன்வெர்டர் வளிச்சீராக்கியொன்றை வாங்கி அதீதி குளிர்ச்சியுடன் வாழ்க்கையை மகிழ்ச்சியாக அனுபவித்திடுங்கள்.
LG DUALCOOL
Inverter Air Conditioner
INVERTER COMPRESSOR 10 YEAR WARRANTY
Dual Inverter COMPRESSOR
TÜVRheinland
60% மின் சேமிப்பு
40% வரை விரைவான குளிர்ச்சி
40% வரை சத்தத்தை குறைக்கிறது
Capacity | 12000btu (Smart Inverter) | 18000btu (Dual Inverter) | 24000btu (Dual Inverter)
Model No. | JS-Q126ENP7 | JS-Q1865NP7 | JS-Q2465NP7
Price | Rs.109,990/- | Rs.136,990/- | Rs.154,990/-
Cash Discount | Rs.15,000/- | Rs.22,000/- | Rs.18,000/-
வளிச்சீராக்கியை கொள்வனவு செய்யும் போது 32" LED தொலைக்காட்சி அல்லது மினி குளிரூட்டி
இலவசம்!
HSBC NDB bank Nations TrustBank Standard Chartered HNB SEYLAN PAN ASIA BANK DFCC BANK SampathCards UNION BANK
பின்வரும் கடனட்டை உரிமையாளர்களுக்கு 20% தள்ளுபடி மற்றும் 60 மாதங்கள் வட்டியின்றிய கொடுப்பனவு
0115999000
Buy Abans.com
நாடு முழுவதிலுமுள்ள அபான்ஸ் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளமுடியும்.
Abans
சகல அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.




கையடக்கத் தொலைபேசி
மாற்றீடு சலுகை
LG
Life's Good
எந்தவொரு வகை மற்றும் எந்தவொரு நிலையிலுமுள்ள கையடக்கத் தொலைபேசிகளை மாற்றிடுங்கள்.
மாதாந்தம் ரூ.5,000/-யை மாத்திரம் செலுத்தி புத்தம் புதிய
LG K10
2017
கையடக்கத் தொலைபேசியை எடுத்துச் செல்லுங்கள்!
1.5GHz Octa-Core
2GB RAM/ 16GB ROM
வட்டி இல்லை ஜொலி அதிகம்
32,999/-
மாற்றீடு விலை
29,999/-
துரித அழைப்பு: 0115 999 000
Like us on f / LG mobile - Abans
நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.
Abans









வடக்கு மாகாண தொழில் முயற்சியாண்மையாளர்களுக்கான செயலமர்வு யாழ்ப்பா ணம் மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன், ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் சார்பில் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் திட்டப்பணிப்பாளர் ரோகண கமகே, அரச தலைவர் செயலகத்தின் சார்பில் நிபுணத்துவ ஆலோசகர் அசோக கருணாரட்ண ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-112)

2018ஆம் ஆண்டுக்கான சமுர்த்தி சௌபாக்கியா வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கடந்த 9ஆம், 10ஆம் திகதி என இரண்டு தினங்கள் நடை பெற்றது.
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள யாழ். மாவட்ட பணிப்பாளர் க.மகேஸ்வரன் தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார். (ம-112)





சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு மாநகர சபை மைதானத்தில் சியே பிறமோட்டார்ஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மணமகள் அலங்காரப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. (ம-113)





யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கம் பன்னாட்டு மகளிர்தின விழா வொன்றை அண்மையில் நடத்தியது.






யாழ்ப்பாணம் .சென். பெனடிக் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த 9ஆம் திகதி வெள்ளிக் கிழமை பாடசாலை அதிபர் எம். ஏஞ்சலிகா தலைமையில் இடம்பெற் றது. முதன்மை அதிதியாக க.சர்வேஸ்வரன் கலந்து கொண்டார். (ம-113)





2018ஆம் ஆண்டுக்கான மகளிர்தின விழா யாழ்ப்பாண மாவட்ட சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் அண்மையில் நல்லை ஆதீனத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்துறை தலைவர் ஜெயலட்சுமி இராசநாயகம், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பிராந்திய இணைப்பாளர் தனலட்சுமி வில்வநாதன் மற்றும் சட்டத்தரணியும், யாழ் பல்கலைக்கழக சட்டத்துறை இளம் விரிவுரையாளருமான கோசலை மதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-112)

RDB

அரச உத்தரவாதம் பெற்ற மிகப்பெரிய அபிவிருத்தி வங்கியாகிய
உங்கள் RDB யில் புது வருடத்தை முன்னிட்டு


தனிநபர் நிலையான வைப்பிற்கு
அதிகூடிய வட்டி

100% அரச உத்தரவாதத்துடன்



இலகுக் கடன் திட்டங்கள்

ரண் அஸ்வென்ன 6.75%
கொவி நவோதயா 3.38%
ஜய இசுர 6.75%
பசுமைக் கடன் 6.75%
சௌபாக்கியா 8%



03 மாதத்திற்கு 11% | 06 மாதத்திற்கு 11.5%
12 மாதத்திற்கு 12%
விரையுங்கள் ஏப்ரல் 30 வரை மட்டுமே
(50.000 க்கு மேற்பட்ட வைப்புகளிற்கு மட்டும்)

விவசாயிகள், விவசாய அமைப்புகள், பண்ணையாளர்கள்
மற்றும் தொழில் முயற்சியாளர்கள், நிறுவனங்களுக்கான
இலகு கடன்கள் ஆகக் குறைந்த வட்டி வீதங்களில்

| யாழ்ப்பாணம் | சுன்னாகம் | மன்னார் | வவுனியா | கிளிநொச்சி | கனகராயன்குளம் | மாவட்ட அலுவலகம் |
|---|---|---|---|---|---|---|
| 89/87 ஸ்டேன்லி வீதி | 27-29 KKS வீதி, மருதனார்மடம் | 2-54 பள்ளிமுனை வீதி | 48/50 2ம் குறுக்குத்தெரு | கரடி போக்கு சந்தி | 45, A9 வீதி கனகராயன்குளம் | கிளிநொச்சி |
| 021 221 9405 | 021 224 1989 | 023 222 3432 | 024 222 6389 | 021 228 0099 | 024 205 1316 | 024 208 0180 |



புதுக்கடை திறப்புவிழா அழைப்பு

அனுஷா
ஜூவல்லர்ஸ்

நிகழும் மங்கலகரமான விளம்பி வருடம் நாளை (16.04.2018)
திங்கட்கிழமை பிற்பகல் 12.04 தொடக்கம் 01.34 மணிவரையுள்ள
சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக திறக்கப்பட இருக்கின்ற



அனுஷா ஜூவல்லர்ஸ்
(இல.497/3 கண்டி வீதி, கிளிநொச்சி)

எனும் புதுக்கடையினை இறைவன் திருவருள் துணை
கொண்டு திறந்துவைக்க இருப்பதால் தாங்கள் தங்கள்
குடும்ப சகிதம் வருகை தந்து திறப்பு விழாவினைச்
சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்.

021 228 4144

UN VOLUNTEERS · WFP World Food Programme · International Labour Organization

# VACANCY ANNOUNCEMENT

We are looking for highly motivated and creative individuals to serve in Sri Lanka as a National UN Volunteers for World Food Programme and ILO in Mullaitivu.

## Communications Officer (1 position)

For information on the position and the job description please visit: http://www.lk.undp.org/content/srilanka/en/home/operations/jobs/

**Application Deatline:- Wednesday, 2nd May 2018**

Interested/qualified candidates may view the vacancy notice and apply online through:
https://jobs.partneragencies.net/erecruitjobs.html?JobOpeningId=8708&hrs_jo_pst_seq=1&hrs_site_id=2

or

Submit your CV with a cover letter (in English) and telephone/email contact information by email to info@unvlk.org clearly indicating the **post title "Communications Officer" in the subject line of the email**, or by post to the address below clearly indicating **the post title on the top left hand corner of the envelope** and ensure it reaches the address below:

**United Nations Volunteers, 202-204 Bauddhaloka Mawatha, Colombo 7.**

**Only short-listed candidates will be contacted and invited for an interview.**

### விற்பனைக்குண்டு

வல்வெட்டித்துறை கல்றோட் பகுதியில் 3 அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

**077 882 2542, 077 881 1539** (ACO/9864)(11,17)

### காணிவிற்பனைக்குண்டு

திருநெல்வேலி Northern Nursing Home இற்கு அருகில் 10/1, உடையார் லேனில் உள்ள 2½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை.)

**077 814 2593** (ACO/9063)(11.17)

### மணமகள் தேவை

1981ஆம் ஆண்டு சூரி - செவ்வாய் இந்து கௌரவ குடும்பத்தில் பிறந்த கொழும்பில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**077 193 4340, 077 718 3810**

### மணமகன் மணமகள் தேவை

A/L படித்த மணமகன்,மணமகளுக்கு கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த,மணமகன் மணமகள் தேவை.

**Viber- 076 725 0144, 076 963 7237** (CS/15672)(11,17)

### கணக்குப்பதிவு, கணக்காய்வு சேவை

சகல விதமான வாணிப நிறுவனக் கணக்குகள் எம்மால் எழுதியும் கணக்காய்வு செய்தும் வழங்கப்படும்.

**077 906 8605** (AKN/0438)(11,17)

### வீடு விற்பனைக்கு

நந்தாவில் லேனில் அமைந்துள்ள 4½ பரப்புக் காணியில் உள்ள மாடிவீடு விற்பனைக்குண்டு. (7 அறைகளுடன் பெரிய வீடு)

**077 187 7754** (CS/14770)(11,17)

### விற்பனைக்கு

ஒரு தொகை நல்ல நிலையிலுள்ள பழைய ஓடுகள் விற்பனைக்குண்டு.

**077 877 1752** (AJA/6460)(11.17)

### புதிய கடை வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி - கரடிப்போக்குச் சந்திக்கு அருகில் 1000 சதுர அடி கடை வாடகைக்கு உண்டு.

**077 844 9000, 077 358 1007** (CS/15663)(11,17)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

நுணாவில் எல்லை ஒழுங்கையில் கண்டி வீதிக்கு அண்மையில் 6 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

**076 379 0322** (CS/15660)(11.17)

### மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரி அரச உத்தியோகத்தருக்கு 7இல் செவ்வாய், 1984 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. **தொடர்பு - 077 950 5182** (CS 15651/15)

### மணமகள் தேவை

வயதான கிறிஸ்தவ கௌரவ குடும்பம் விவாகரத்தான நற்குணமும் நல்ல இலட்சியமும் கொண்ட கனடிய பிரஜை ஒழுக்கமும் நற்பண்பும் மகிழ்ச்சியும் கொண்ட 30 வயதிற்கு உட்பட்ட கிறிஸ்தவ பெண்ணுக்கு வளமான வாழ்வு அளிக்க விரும்புகின்றார். சீதனம் எதிர்பார்க்கவில்லை. ஒரே முறையில் சகல விவரங்களுடன் படங்கள் உட்பட விண்ணப்பிக்கவும். (CS 15568)(14.17)

விளம்பர இல.003
மே.பா.உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் யாழ்ப்பாணம்

**வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2018**

**22.04.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் வருடாந்த பொதுக்கூட்டமும் எதிர்வரும் 22.04.2018 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு கல்லூரியின் சபாலிங்கம் அரங்கத்தில் நடைபெறவுள்ளது. பழைய மாணவர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

"எவ்விட மேகினும் எத்துயர் நேரினும் எமது அன்னை நின்நிலம் மறவோம்"

13.04.2018 யாழ்ப்பாணம். — த. சிவரூபன் செயலாளர்

### LEADING AIRLINE IN JAFFNA HAVING THE FOLLOWING VACANCIES



**01. Cashier/ Account Assistant**

- 25 வயதிற்குக் குறைவான பெண்
- கணினி அறிவு அவசியமானது
- சிறந்த தொடர்பாடல் திறன்
- முன்னனுபவம் இருத்தல் கூடுதல் தகுதி
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 5 நாள்களுக்குள் உங்களது விண்ணப்பப்படிவங்களை உறவினர்கள் அல்லாத இருவரின் உறுதிப் படுத்தல் மற்றும் அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படங்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**METRO TRAVELS & TOURS (PVT)LTD**
272/1, Stanley Road, Jaffna
Email: bartheeban@metrotravels.lk
Phone: 077 379 8767



அ.ந.ஆனந்தராசா (அப்பா)



## வாடிக்கையாளர்களுக்கு ஓர் மகிழ்ச்சியான செய்தி

கடந்த 40 வருடகாலமாக யாழ் கஸ்தூரியார் வீதியில் புகழ்பெற்ற எமது ஸ்தாபனம் நாளை 16ஆம் திகதிமுதல் யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்பாக

**462, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்



# நியூ லலிதா நகை மாளிகை

யாழ்ப்பாணம் கிளிநொச்சி

அந்த நாள் ஞாபகத்திற்கு என்னவொரு வசீகரம்
பாரம்பரியத்தின் அழகுக்கும் தரத்திற்கும்
சின்னமாக விளங்கும் கைராசியான ஸ்தாபனம்

**462, Hospital Road, Jaffna.** (Opposite of Jaffna Hospital) **Tel: 021 222 4648 / 021 222 2552**

பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

ரெங்கசாமி காளியம்மா
மாத்தளை, கண்டி. அம்பத்தன்ன.
077 327 2302/ 076 466 4153


## மரண அறிவித்தல்



பிறப்பு 26 . 05 . 1940

இறப்பு 13 . 04 . 2018

### சுப்பிரமணியம் குலசேகரம்

*(Draughtsman - Survery Department)*
*(நில அளவைத் திணைக்களம்)*

புதுறோட், காரைநகரைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குலசேகரம் 13.04.2018 வெள்ளிக்கிழமை காலை 5.00 மணியளவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியர் சுப்பிரமணியம் - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சட்டத்தரணி கந்தையா - விசாலாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் தங்கம்மாவின் பாசமிகு கணவரும் ஜெயகாந்தன்(ஆஸ்திரேலியா), பவானி (ஆஸ்திரேலியா), ஜெயராஜ்(லண்டன்), சாந்தினி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவதேவி (ஆஸ்திரேலியா), ஜீவகன்(ஆஸ்திரேலியா), சிந்துஜா(லண்டன்), அருந்தவநாதன்(இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான வைத்தியர் இராஜசேகரம், தேவமங்கை மற்றும் இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், தியாகராசா, தியாகராசா(C.T.B) மற்றும் கணேசலிங்கம் காலஞ்சென்றவர்களான நடராசா, மனோன்மணி மற்றும் சதாசிவம்(ஆசிரியர்), திருமதி லீலாவதி ஆகியோரின் மைத்துனரும் வினோ, சுவேகா, சாங்கவி, ஆரணி, விசாகன், தாணியா, தன்வின், பவிசனா, பாவகி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.04.2018) ஞாயிற்றுக்கிழமை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்படும். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2018) திங்கட்கிழமை பி.ப ஒரு மணியளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பொரளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7 - 3/4, இராமகிருஸ்ண டேரஸ்,
வெள்ளவத்தை, கொழும்பு - 06 (CS 15661)(14,17)

தகவல்: மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.

011 236 2912/ 071 684 5717


**பணிப்பெண் தேவை**

நல்லூரிலும், திருநெல்வேலியிலும் உள்ள வீட்டிற்கு வேலை செய்வதற்கு சம்பளம் 18000 - 25000 வரை

077 361 1282

**பெண்களுக்கான விடுதி**

பல்கலைக் கழகத்துக்கு அருகில் வாடகைக்கு உண்டு.

தொடர்பு - 077 177 2359

## Wanted
## Web developer / Programmer

We are looking for talented PHP / MYSQL Programmers to work as Software Architects, Leader Developer, Senior or Junior Programmers

As an ideal candidate, you should have working Experience in web development and Internet based Application / Database management systems.

**Salary from 100,000 - 300,000**

Apply with your CV detailing qualification and work experience.

(CS/15670) (11,17)

job@irstha.com
021 221 7871
No.64, Kannathiddy Rd, Jaffna.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி வரதலட்சுமி கதிர்காமத்தம்பி

(பன்னாலை, தெல்லிப்பழை)

திதி: சித்திரை அமாவாசை (15.04.2018)

மலர்வு 26.04.1922

உதிர்வு 26.04.2017

ஆண்டு ஒன்று அல்ல - ஓராயிரம்
ஆண்டுகள் கடந்தாலும் - ஆச்சியின்
நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு என்றும் அகலாது

"அன்னையைப் போல் ஒரு தெய்வமுண்டோ"

A/1/6, வேலுவனராம
தொடர்மாடி, ஹம்டன் லேன்,
கொழும்பு - 06 (cs.15606) (13.17)

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
011 236 5394

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி நவரத்தினராஜா

**(வேம்படி மகளிர் கல்லூரி முன்னைநாள் ஆசிரியை - பகுதித்தலைவர்)**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஊரெழு மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி நவரத்தினராஜா (வேம்படி மகளிர் கல்லூரி முன்னைநாள் ஆசிரியை - பகுதித்தலைவர்) 12.04.2018 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், நவரத்தினராஜாவின் அன்பு மனைவியும், கஜமுகி (வேம்படி மகளிர் கல்லூரி) லம்போதரன் (யாழ்.பற்றிக்ஸ், யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான இராசையா - நாகம்மா, செல்வராஜா - முத்தம்மா தம்பதிகளின் பெறாமகளும், திருமதி ஆ.பொன்ராணி, திருமதி கி.இதயராணி, சிவனேஸ் வரன், குலேந்திரன், புலேந்திரன், பாலேந்திரன், திருமதி இ.செல்வ ராணி, கஜேந்திரன், செ.நகுலேஸ்வரி, செல்லா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், காலஞ்சென்ற தவராஜா மற்றும் நா.மனோகரன், திருமதி ஆர்.மாலதி, கணேசராஜா, றமேஸ், ஜெயமோகன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.04.2018 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒருமணியளவில் பொக்கணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: நா.நவரத்தினராஜா (கணவர் - முன்னாள் நாகரத்தினம் அன்கோ எலக்ரிகல் உரிமையாளர்)**
**ஊரெழு பிள்ளையார் கோயில் அருகில்.** (CS/15659)(11,17)

0778106673 - மகன், 0770409530 - கணவர்

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 • 12 • 1941



மறைவு 14 • 04 • 2008

### அமரர் திருமதி தில்லைஈஸ்வரி விக்னேஸ்வரன்

அன்புடனும் பாசத்துடனும் எங்களை சிறப்பாய் வாழவைத்த அன்புத்தெய்வமே நீங்கள் எங்களை விடடுப்பிரிந்து பத்தாண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றென்றும் எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தி பெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புமிகு குடும்பத்தினர்
கொள்ளுப்பிட்டி

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து அமிர்தலிங்கம்



பெரியவிளானைப்பிறப்பிடமாகவும்வசிப் பிடமாகவும் கொண்ட சரவணமுத்து அமிர்த லிங்கம் 12.04.2018 வியாழக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சமாவின் அன்புக்கணவரும், விக்கினேஸ்வரராசா (ராச கிளி - கனடா), லிங்கேஸ்வரராசா (ராச குமார்) ஆகியோரின் தந்தையும், புஸ்பலீலா (கனடா), கமலாவதி ஆகியோரின் மாமனாரும், கஜேந் திரன், செந்தூரன் (கனடா), திரு.திருமதி பரந்தாமன், டினேஸ்குமார், காலஞ்சென்ற அனுசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2018) திங்கட்கிழமை நண்பகல்12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தேத்தா கலட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

முருகன் கோயில் வீதி,
பெரியவிளான், இளவாலை.

தகவல்
மகன்.

077 046 5996

### திருமதி கனகேஸ்வரி கருணாகரஜயா



இணுவிலைப் பிறப்பிடமாகவும் கருணாகரப் பிள்ளையார் கோயி லடி உரும்பிராய் மேற்கை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி கனகேஸ்வரி கருணாகரஜயா 14.04.2018 சனிக்கிழமை அதி காலை 12.05 மணிக்கு காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான கணேசு - சரஸ்வதி தம்ப திகளின் மூத்த மகளும் காலஞ் சென்றவர்களான அப்பாத்துரை - இராசம்மா தம்பதிகளின் மூத்த மருமகளும் காலஞ்சென்ற கரு ணாகரஜயாவின் அன்பு மனைவி யும் கனகலிங்கம், காலஞ்சென்ற ஸ்ரீகாந்தா, காலஞ்சென்ற ஞானமலர் மற்றும் கமலேஸ்வரன், கமலேஸ்வரி, பூபதி, காலஞ்சென்ற தனபாலு மற்றும் பொன்னையா(குட்டி), சசிகலா, தயா ஆகியோரின் சகோதரியும் சுதாகரன், சுகந்தி, சியாமளா, சிவாகரன், சசிகரன், சர்மிளா, நிரோஜன், நிசாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயசங்கர்(வேலக்கை மானிப்பாய்), சுகாஜனன்(அபிவிருத்தி உத்தியோகத்தர் வடமாகாண சபை), சுகந்தி, மதுசாலினி ஆகியோரின் மாமியாரும் வைஷ்ணவி, ரேவதி, பானுஜன், காருண்யா, விசாகன் ஆகியோரின் அன்புப் பேர்த் தியும் அ.ஈஸ்வரநாதன் (ஓய்வு நிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்) இன் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2018) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று உரும்பிராய் வேம்பன் மயானத்தில் சமாதிக்கிரியைகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக் கொள்ளவும்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(CS 15680) (14)

தகவல்:
குடும்பத்தினர்.

021 223 0704


முற்றிலும் வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட
பயிற்சி நெறி !

மென்பொருள் கம்பனியில் இணைந்து
மென்பொருள் அபிவிருத்தியாளர் ஆக வேண்டுமா?
அல்லது
ஒரு தொழில்நுட்பம் சார்ந்த கம்பனியை
ஆரம்பிக்கவேண்டுமா ?

தகைமை - க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிப் பெறுபேறுகளைப் பெற்றிருத்தல்
(வயது எல்லை 23 வருடத்திற்கு கீழ்)
பயிற்சி நிலையம் - யாழ்ப்பாணம்
பயிற்சிக்காலம் - 6 மாதங்கள் (மே 2018 - நவம்பர் 2018)
விண்ணப்பிக்கும் முறை - www.uki.life/apply
விண்ணப்ப இறுதித்திகதி - 27 April 2018

Apply now For Batch - 3

உள்ளடக்கம்
★ Software Development ★ Business English
★ Business Management ★ Personal Coaching


## நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



### செல்வி பிரியங்கா சிவனேசன்

கடந்த 16.03.2018 சிவபதமடைந்த எமது புதல்வி செல்வி பிரியங்கா சிவனேசன் நோயுற்றிருந்த காலத்தில் சகல வழிகளி லும் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தும், தொலைபேசியூடாகவும், பதாகைகள், கண்ணீர் அஞ்சலிகள் மூலமும் அனுதாபம் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் குறிப்பாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிச் சமூகத்துக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.04.2018) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிரியைகள் அன்றையதினம் அவரது வீட்டிலும் நடை-பெறும். பின்னர் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன-மும் 17.04.2018 செவ்வாய்க்கிழமை பன்னாலை வரத்தலம் விநாயகர் ஆலய மண்டபத்தில் முற்பகல் 11 மணியளவில் நடை-பெறவுள்ளது. அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கருகம்பனை, கீரிமலை (CS/15665)(11,17) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தசாமி இராஜமோகன்

காரைநகர், வலந்தலையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தசாமி இராஜமோகன் கடந்த (13.04.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி உமாதேவி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் தவரெத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் பாமதி யின் பாசமிகு கணவரும் நிவிதரன் (யாழ். இந்துக் கல்லூரி), சோபிதன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரதிதேவி, சிவமலர், செல்வி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காண்டீபன் (கணக்காளர்), ஜெகன்மோகன், ராகினி, பிரபா, வேர்ச்செல்வன், கலையரசி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2018) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
12/3, கந்தபுராண வீதி, கந்தர்மடம். (CS 15688/15/17) குடும்பத்தினர்.


சூரியன் திருமண சேவை
டொக்டர், எஞ்ஜினியர், விரிவுரையாளர், எக்கவுண்டன், பட்டதாரிகள், அரச, தனியார்துறை, வெளிநாடு, உள்நாடு, ஆண், பெண் மணமக்கள் உண்டு.
சூரியன் திருமண சேவை (AJA/15567) (11,17)
561, K.K.S. வீதி, மனோகராசந்தி, யாழ்ப்பாணம்.

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com, 021 493 1111

கடை வாடகைக்குண்டு
யாழ். பல்கலைக்கழகத்திற்கு அண்மை யில் Photocopy, Fancy, Parmacy, Beauty palace க்கு ஏற்ற கடைகள் உடன் வாடகைக்கு உண்டு.
(CS 15692/15/17) தொடர்பு:- சீறி - 077 602 1794

வேலையாள்கள் தேவை
றொட்டி போடுபவர் (றைஸ், கொத்து) அப்பம் போடுபவர் ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
தொடர்பு - 077 175 7208

விற்பனைக்கு
வட்டக்கச்சியில் பயன்தருகின்ற தென்னை, வயல் என்பவற்றுடன் வீடு விற்பனைக்குண்டு. 077 381 5426
140, கட்சன் வீதிச் சந்தி வட்டக்கச்சி, கிளிநொச்சி.
(வட்டக்கச்சி மத்திய கல்லூரிக்கு அருகில்)


## 1st ANNIVERSARY



**Francis Adalbert Ragel**

In loving memory of Francis whose first anniversary occurs on the 13th of April 2018.

Deeply loved sadly missed and always remembered by his family and friends


ES Printers
மக் பிரிண்ட் (MUG) 450/=



# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472

# ஐ.தே.கவுடன் பேச சரத் அமுனுகம தலைமையில் குழுவை நியமித்தது சு.க.



கொழும்பு, ஏப். 15

ஐ.தே.கவுடன் இணைந்து தொடர்ந்தும் கூட்டு அரசை முன்னெடுப்பது பற்றிய பேச்சுக்களை நடத்துவதற்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி தமது பிரதிநிதியாகக் கலாநிதி சரத் அமுனுகம தலைமையிலான குழுவை நியமித்துள்ளது.

அரச தலைவரும், தலைமை அமைச்சரும் கூட்டு அரசைத் தொடர்ந்தும் முன்னெடுக்க முடிவு செய்துள்ளனர்.

இந்த நிலையிலேயே, சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐ.தே.கவும் இணைந்து புதிய கொள்கைத் திட்டம் ஒன்றின் அடிப்படையில் கூட்டு அரசின் புதிய அமைச்சரவையை அமைக்கத் திட்டமிட்டுள்ளன.

இது குறித்துப் பேசவே, கலாநிதி சரத் அமுனுகம தலைமையிலான குழுவை சிறிலங்கா சுதந்திரக் கட்சி நியமித்துள்ளது. (5)














சுதர்சன் ரட்ணம் இயக்கிய சாலைப்பூக்கள் திரைப்பட வெளியீட்டு விழா கடந்த புதன்கிழமை ராஜா திரையரங்கில் இடம்பெற்றது.சிறப்பு விருந்தினர்களாகத் தென்னிந்தியப் பாடலாசிரியரும் கவிஞருமான சிநேகன் மற்றும் நகைச்சுவை நடிகர் வையாபுரி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். பறைசேர் நடனத்துடன் வெடி கொழுத்தி மாலை அணிவித்து சிநேகன் மற்றும் வையாபுரி இருவரையும் வரவேற்றனர். (5,111)





உலக ஒட்டிசம் விழிப்புணர்வு தினம், யாழ் கல்வி வலயத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் கல்வி அபிவிருத்தியின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.பாலராஜ் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.
முதன்மை விருந்தினராக டெவ்விலிங் நிறுவனப் பணிப்பாளர் ஜி.கிருபைநாதன் கலந்து கொண்டார். சிறப்புத் தேவையுடைய பிள்ளைகளுக்கு அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டுக் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (5,111)



கல்வி, தொழில் வாய்ப்பு மற்றும் பொதுப் பரீட்சைக்கான வழிகாட்டியாக அமைகின்ற 'த கைட்' எனும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினராகக் கல்வி அமைச்சர் க. சர்வேஸ்வரனும் கலந்து கொண்டனர். எ.கொன்சன் சேவியர், ஆர்.பிரணவா ஆகியோரால் நூல் உருவாக்கப்பட்டது. (5,111)




பெயரிடப்படாத நட்சத்திரங்கள், பூவுலகைக் கற்றலும் கேட்டலும் என்ற இருநூல்களின் அறிமுக விழா திருமறைக்கலாமன்றம் கலைத்தூது அழகியற் கல்லூரி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுகிழமை இடம்பெற்றது.
இந்நிகழ்வு இயல்வாணன் சு.ஸ்ரீகுமரன் தலைமையில் இடம்பெற்றது.
இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் நூலினை வெளியிட்டு வைத்தார். (5,111)



# கொழும்பு துறைமுக நகருக்கான சுரங்க வீதி 800 மில்லியன் டொலரை முதலீடு செய்கிறது சீனா




269 ஏக்கர் பரப்பளவில் துறைமுக நகருக்காகக் கடலுக்குள் நிலத்தை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 60 வீதத்துக்கும் அதிகமானளவு நிலப் பகுதி ஏற்கனவே உருவாக்கப்பட்டு விட்டது.

இந்த ஆண்டுக்குள் நிலத்தை மீட்கும் பணிகள் முடிந்து விடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

கொழும்பு, ஏப். 15

1.4 பில்லியன் டொலர் செலவில் அமைக்கப்படும் கொழும்பு துறைமுக நகரை, கொழும்புடன் இணைக்கும் நிலத்தடி சுரங்க வீதி வலையமைப்பில் 800 மில்லியன் டொலரைச் சீன நிறுவனம் முதலீடு செய்யவுள்ளது.

கடலுக்குள் சீன நிறுவனத்தினால் அமைக்கப்படும் கொழும்பு துறைமுக நகரை, பிரதான நகருடன் இணைக்கும் சுரங்க வீதி வலையமைப்புக்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்த வீதி வலையமைப்பு திட்டத்தில் 800 மில்லியன் டொலரை முதலீடு செய்வதற்குச் சீனாவின் தொடர்பாடல் கட்டுமான நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்தத் திட்டத்துக்கான உடன்பாடு ஏற்கனவே கையெழுத்திடப்பட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நிலம் தொடர்பான சட்ட நெறிமுறைகள் வகுக்கப்பட்ட பின்னர், கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்று பெருநகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



## ஐ.தே.க. தனித்து ஆட்சியமைக்க விடமாட்டோம்!

வாசுதேவ சூளுரை

கொழும்பு, ஏப். 15

ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சி அமைப்பதற்கு இடமளிக்கமாட்டோம் என்று கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தலைமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில் ஐக்கிய தேசியக் கட்சி சிக்கியுள்ளது. இவ்வாறான ஓர் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தனித்து ஆட்சி அமைக்க சந்தர்ப்பம் வழங்குவது நகைப்பிற்குரியது.

ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட சிறுகட்சிகளுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு 102 ஆசனங்களே உண்டு. சுதந்திரக் கட்சியின் ஆதரவின்றி ஆட்சி அமைக்க வேண்டுமாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்தே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைக்க வேண்டும். சுதந்திரக் கட்சியின் ஆதரவின்றி ஐக்கிய தேசியக் கட்சியினால் ஆட்சி அமைக்க முடியாது - என்றார். (5)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மீண்டும் பனிப்போருக்குள் சிக்கிக்கொள்ளும் உலகு!

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் இணைந்து சிரியாமீது நேற்று தாக்குதல் நடத்தியுள்ளன. போர்க்கப்பல்களில் இருந்து இயக்கப்படும் தன்னியக்க வழிகாட்டு ஏவுகணைகள் மற்றும் போர் வானூர்திகள் தாக்குதல்களை நடத்தியுள்ளன. சிரியாவில் நடந்துவரும் உள்நாட்டுப் போரில் அந்த நாட்டு அரசு இரசாயன (வேதியல்) ஆயுதங்களைப் பயன்படுத்தி வருகின்றது என்று குற்றஞ்சாட்டி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சிரியாவில் பதவியில் உள்ள அதிபர் அல் அசாத்தின் ஆட்சிக்கு ரஷ்யா தொடர்ந்தும் உறுதியான ஆதரவு வழங்கிவருகின்றது. பதிலுக்கு சிரிய அரசை எதிர்த்துப் போராடும் கிளர்ச்சிக் குழுக்களுக்கு அமெரிக்கா ஆயுதங்கள் உள்ளிட்ட உதவிகளை வழங்கி வருகின்றது. கடந்த 4 வருடங்களாக சிரியாவில் உள்நாட்டுப் போர் தீவிரமாக நடந்து வந்தாலும் அதில் எந்தத் தரப்பும் உறுதியான வெற்றியைப் பெறுவதாக இல்லை. அப்பாவி மக்களின் உயிர்களே அநியாயமாகப் பறிக்கப்பட்டு வருகின்றன.

கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான தாக்குதல்களில் அப்பாவி மக்களின் உயிர்களைப் பற்றிக் கவலைப்படாமல் வேதியல் குண்டுகளையும் வீசி சிரிய அரசு அப்பாவி மக்களையும் கொன்று வருகின்றது என்கிற குற்றச்சாட்டு தொடர்ந்து கூறப்பட்டு வருகின்றது. ஆனால் சிரிய அரசு அதனைத் தொடர்ந்து மறுத்து வருகின்றது.

அலப்போவிலும் தொடர்ந்து கவுட்டா, டௌமா நகரங்களிலும் வேதியல் குண்டுகள் வீசப்பட்டதில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு மனித உரிமைகள் அமைப்புகளால் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இதனையடுத்தே சிரியாவின் வேதியல் ஆயுதக் கிடங்குகள் மற்றும் வேதியல் ஆயுதங்கள் தயாரிக்கப்படும் இடங்கள் என்று சந்தேகிக்கப்படும் பகுதிகளின் மீது அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் படைகள் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இந்தத் தாக்குதல் தொடர்ந்து நடத்தப்படமாட்டாது என்றும் சிரிய அரசு, எச்சரிக்கையையும் மீறி வேதியல் ஆயுதங்களைப் பயன்படுத்தியதன் விளைவாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் மீண்டும் இதுபோன்ற வேதியல் தாக்குதல்கள் நடத்தப்பட்டால் அப்போது மேற்கொண்டு எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து முடிவெடுக்கப்படும் என்றும் பிரான்ஸ் அதிபர் மக்ரோன் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலுக்கான விளைவு நிச்சயம் இருக்கும் என்றும் அதற்கு அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளே பொறுப்பு என்றும் ரஷ்யா எச்சரித்துள்ளது. அமெரிக்காவில் உள்ள ரஷ்யத் தூதர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

சிரியா விடயத்தில் மேற்கு நாடுகளும் ரஷ்யாவும் மிகத் தெளிவாக எதிர்எதிர்த்திசைகளில் நின்று போரிடுவது புலனாகின்றது. இது இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உருவான பனிப்போரை நினைவுபடுத்துகின்றது. 1991இல் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் பனிப்போர் முடிவுக்கு வந்ததாகக் கருதப்பட்டாலும் நீறு பூத்த நெருப்பாகக் கனன்று வந்த அது இப்போது அப்பட்டமாக வெளிப்பட ஆரம்பித்திருக்கின்றது.

''பழிவாங்கும் எண்ணத்தோடு பனிப்போர் மனப்பான்மை திரும்பிவந்துள்ளது'' என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரணியோ குத்தேர்ஸ்சும் எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

''ஆபத்து வளர்வதை மேலாண்மை செய்கின்ற பாரம்பரிய பொறிமுறைகள் இப்போது ஏதுமில்லை. வர்த்தகப்போர் பழிவாங்கும் எண்ணத்தோடு, வித்தியாசமான முறையில் வந்துள்ளது . இத்தகைய ஆபத்தான சூழ்நிலையில் நாடுகள் பொறுப்புணர்வோடு செயல்பட வேண்டும் என்று தோன்றுகின்றது'' எனவும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் பேசியபோது குத்தேரஸ் தெரிவித்திருக்கிறார்.

பலமுள்ள நாடுகளின் முன்னால் பலவீனமான அமைப்பாக நின்றிருக்கும் ஐ.நாவின் பொதுச் செயலர் சொல்வதைக் கேட்கும் நிலையில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் இல்லை. இந்த மூன்று நாடுகளுமே பாதுகாப்புச் சபையில் வெட்டு (வீட்டோ) அதிகாரத்தைக் கொண்டவை. எனவே தடியெடுத்த வன் தண்டல்காரன் என்ற வகையில் அவற்றின் செயற்பாடுகள் தொடரவே செய்யும். அதன் வழி புதிய உலக ஒழுங்கு ஒன்றும் உருவாக்கப்படும்.

இந்தப் புதிய உலக ஒழுங்கு, பனிப் போர் ஒழுங்கு புவிசார் அரசியலில் ஏற்படுத்தப்போகும் தாக்கம் அது இலங்கை அரசியலில் செலுத்தப்போகும் செல்வாக்கு என்பவற்றைக் கணித்து, அதனைத் தெளிவாகக் கையாண்டு எப்படித் தமிழர்கள் தமது நலன்களைப் பேணிக்கொள்ளப் போகிறார்கள் என்பதே நாம் இங்கு கூர்ந்து கவனிக்க வேண்டிய விடயம்.

# சிந்திக்கத் தக்கவை ராஜிதவின் கருத்துக்கள்

இந்துமதி

*அமைச்சரவை இணைப் பேச்சாளரான ராஜித சேனாரத்ன அண்மையில் தெரிவித்த சில கருத்துக்கள் கணக்கில் எடுக்கப் படத்தக்கவை.*



கடந்த 11ஆம் திகதியன்று இடம்பெற்ற ஊடக வியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இந்தக் கருத்துக்களைத் துணிவுடன் தெரிவித்திருக்கிறார். வடக்குப் போன்று தெற்கிலும் மக்களுக்குச் சொந்தமான காணிகளைப் படையினர் அடாத்தாகப் பிடித்து வைத்திருந்தால் என்ன நடந்திருக்குமெனக் கேள்வி எழுப்பிய அவர், வலிகாமம் வடக்கில் மக்களின் காணிகளை அடாத்தாகப் பிடித்து வைத்திருக்கும் படையினர் அங்கு வெதுப்பகத்தை நடத்துவது எந்த வகையில் நியாயமானது என்றும் கேள்வி எழுப்பினார். கொழும்பில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளமை முக்கியத்துவம் பெறுகின்றது.

### படையினர் வசமிருந்த 650 ஏக்கர் காணி மக்களிடம் கையளிக்கப்படுவது நல்லதோர் சமிக்ஞை

வடக்கில் படையினர் வசமிருந்த 650 ஏக்கர் காணிகள் அவற்றின் உரிமையாளர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்படுவது தொடர்பாக கேள்வி எழுப்பிய ஊடகவியலாளர்கள், தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின்போது கூட்டமைப்பு தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தமைக்குப் பிரதியுபகாரமாக இந்தக்காணிகள் மீள ஒப்படைக்கப்படுகின்றனவா? எனவும் கேள்வி எழுப்பியிருந்தனர். அதனை முற்றாக மறுத்த அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரி விப்பதற்கு கூட்டமைப்பு எந்தவொரு நிபந்தனையையும் விதிக்கவில்லையெனக் கூறினார்.

மக்களின் காணிகளைப் படையினர் அடாத்தாகப் பிடித்து வைத்திருப்பதை எந்த வகையிலும் நியாயப்படுத்திவிட முடியாது. போர் இடம்பெற்றபோது பாதுகாப்புக் காரணங்களுக்காக பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பொது மக்களுக்குச் சொந்தமான காணிகள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. போர் ஓய்ந்து பல ஆண்டுகள் கழிந்து விட்ட நிலையிலும் படையினரால் அந்தக் காணிகள் விடுவிக்கப்படாமையை எவராலும் நியாயப்படுத்திவிட முடியாது.

தென்பகுதியைச் சேர்ந்த இனவாதிகளுக்கு இந்தக் காணிகளை விடுவிப்பதில் உடன்பாடில்லாத காரணத்தால், தேவையில்லாத விமர்சனங்களைத் தெரிவித்து வருகின்றனர். வடபகுதியில் 650 ஏக்கர் காணிகளைப் படையினர் விடுவித்தமையையும் இனவாத நோக்கில் அவர்கள் பார்க்கின்றனர். மக்களிடமிருந்து அடாத்தாகப் பிடித்து வைக்கப்பட்ட பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பதில்கூட இனவாதச் சிந்தனையை வெளிக்காட்டுகின்ற இவர்களுக்கு அமைச்சர் ராஜித சேனாரத்ன நல்ல சாட்டையடி கொடுத்திருக்கிறார் என்றுதான் கூறவேண்டும்.

### எதிர்க்கட்சித் தலைவர் மீது வைராக்கியம் பாராட்டும் கூட்டு எதிரணித் தரப்பு

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுமானால், அது நிச்சயமாக முறியடிக்கப்படுமென ராஜித தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டதால் ஆத்திரமும், அவமானமும் அடைந்த மகிந்த அணியினர், சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து அகற்றிவிட்டால் தாம்பட்ட அவமானம் துடைத்தெறியப்பட்டுவிடுமென நம்புகின்றனர்.

இதனால் எப்பாடுபட்டேனும் சம்பந்தனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றி வைப்பதற்குத் துடியாய்த் துடிக்கின்றனர். ஆனால் இதை முறியடிக்க வேண்டுமென்பதில் ரணில் தரப்பினர் குறியாக இருப்பது தெளிவாகத் தெரிகின்றது.

முன்னாள் அரச தலைவர்களான ஜே.ஆர் ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச ஆகியோர் போரை நடத்தியதில் பிரதான பங்கை வகித்தனர். இவர்கள் தமிழர்களை மனிதர்களாகக்கூட மதிக்கவில்லை. மிருகங்களை நடத்துவது போன்று அவர்களை நடத்தியுள்ளனர். தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு இவர்களில் எவருமே ஒருபோதும் முயற்சி செய்ததில்லை. மாறாக தமிழர்களை ஒட்டுமொத்தமாக அழித்து விட்டால், எல்லாமே சரியாகிவிடுமென எண்ணிச் செயற்பட்டனர்.

இதன் விளைவுகளைத்தான் நாடு இன்று அனுபவித்து வருகின்றது. ஆனாலும் இந்த இனவாதிகள் இன்னமும் திருந்தியதாகத் தெரியவில்லை.

### பௌத்த மேலாதிக்கச் சிந்தனை உள்ளவரை இன ஒற்றுமைக்கு வாய்ப்பில்லை

பௌத்த மேலாண்மை இலங்கையில் இருக்கும் வரையில், இலங்கையில் வாழ்கின்ற இனங்களுக்கிடையில் ஒற்றுமை நிலவுமென எதிர்பார்க்க முடியாது. பௌத்த தேரர்களும், மகா நாயக்கர்களும் அரசியலில் நேரடியாகத் தலையிட்டு செல்வாக்குச் செலுத்தி வருகின்றனர். உலகத் தொழிலாளர் தினமான மே மாதம் முதலாம் திகதி தொடர்பான நிகர்வுகள்கூட பௌத்த சங்கத்தினரின் நெருக்குதல் காரணமாக மே மாதம் ஏழாம் திகதிக்கு மாற்றம் செய்யப்பட்டமை உலகில் நிகழாத அதிசயங்களில் ஒன்றாகும். ஆனால் அந்த அதிசயம் இங்கு நிகழ்ந்துள்ளது.

ராஜித போன்று துணிச்சலான அரசியல்வாதிகள் தெற்கில் உருவாகாதவரை நாட்டில் அமைதியையும், இன நல்லிணக்கத்தையும் எதிர்பார்க்க முடியாது. நாட்டின் தலைவிதியிலும் மாற்றம் ஏற்படாது.

ஒரு கட்டத்துக்கு அப்பாலும் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்வதை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளுமெனக் கூறமுடியாது. இம்முறை இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் இலங்கையின் உண்மையான முகம் வெளிப்பட்டு விட்டது. தொடர்ந்தும் பொய் முகத்தைக் காட்டிக் கொண்டிருப்பதற்கு அதனால் முடியாது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.



# வடபகுதியின் அபிவிருத்திக்கு உதவுமா மகாவலி அபிவிருத்தி வலயங்கள்?

சேரலாதன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அபிவிருத்தி என்ற போர்வையில் மகாவலி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பு மற்றும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தத் தாம் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அரச தலைவர் கருத்து வெளியிட்டிருந்தார். கூட்டமைப்பின் தலைவர் அரச தலைவருடன் நேரடியாகப் பேசியதன் பயனாகவே அரச தலைவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டதாகக் கொள்ள முடிகிறது.

நாட்டின் வடபகுதி வறண்ட நிலப்பரப்பைக் கொண்டது. இங்கு மலைகளோ ஆறுகளோ இல்லாததால் நீர் வளம் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. முழுக்க முழுக்க மழையை நம்பியிருக்கும் இந்த வறண்ட பிரதேசத்தில், மழை காலங்களில் கிடைக்கும் நீர் குளங்களில் தேக்கி வைக்கப்பட்டு பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. பருவமழை பொய்க்குமானால் விவசாய முயற்சிகள் உட்பட எல்லாமே பொய்த்துவிடும். நிலத்தடி நீர் மட்டுமே இப் பகுதியின் ஒரேயொரு நீர் ஆதாரமாக உள்ளது.

**மகாவலி அபிவிருத்தித் திட்டத்தால் பயன்பெற்றவர்கள் சிங்கள மக்களே**

மறைந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரச தலைவராக இருந்த போது மகாவலி அபிவிருத்திச் சபை அமைக்கப்பட்டு, அதனுடன் தொடர்புடைய அபிவிருத்தித்திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டன. மகாவலி ஆற்றுக்குக் குறுக்கே பெரிய அணைகள் கட்டப்பட்டு பெருமளவு நீர் தேக்கி வைக்கப்பட்டது. இதன் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற செயற்றிட்டங்கள் வகுக்கப்பட்டன. நாட்டுக்குத் தேவையான பெருமளவு மின்சாரம் இங்கிருந்தே உற்பத்தி செய்யப்படுகின்றது. இதைவிட மகாவலி வலயங்கள் என்ற பெயரிலான திட்டங்கள் மூலமாக தெற்கில் குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு விவசாய முயற்சிகளும் இடம் பெற்று வருகின்றன.

இவற்றினால் பெரும்பான்மையின மக்கள் அதிக பயன்களைப் பெற்று வருகின்றனர். இவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற விவசாய உற்பத்திப் பொருள்கள் நியாய விலையில் விற்பனை செய்யப்படுவதற்கான சகல ஏற்பாடுகளும் அந்தந்த இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் மகாவலி வலயங்களிலுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியுடன் இருப்பதைக் காண முடிகின்றது.

இந்த நாட்டில் மழையை மட்டுமே நம்பியிருக்கின்ற ஒரு வறண்ட பிரதேசம் இருப்பதை மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற ஆட்சியாளர்கள் எவரும் கவனத்தில் கொள்வதில்லை. மகாவலி ஆற்றை வட பகுதிக்கும் திசை திருப்பாவிட்டால் வடபகுதி வளம் பெற்று விடுமென இவர்கள் அஞ்சுவதாகக் கொள்ள முடிகின்றது.

> தமிழர்களின் தாயக பூமியில் மகாவலி அதிகாரசபை பெரும்பான்மையின மக்களைக் குடியேற்றி வைக்கின்ற கபடத்தனமான வேலைகளில் ஈடுபட்டுள்ளது. தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமித்து சுமார் இரண்டாயிரம் சிங்களக் குடும்பங்களை அங்கு குடியேற்றுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

**மகாவலி அபிவிருத்திச் சபை தமிழர் பகுதிகளில் சிங்கள மக்களை குடியேற்ற முயல்கிறது**

தற்போது தமிழர்களின் தாயக பூமியில், மகாவலி அதிகாரசபை பெரும்பான்மையின மக்களைக் குடியேற்றி வைக்கின்ற கபடத்தனமான வேலைகளில் ஈடுபட்டுள்ளது. தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமித்து சுமார் இரண்டாயிரம் சிங்களக் குடும்பங்களை அங்கு குடியேற்றுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இதனால் கொக்கிளாய் கொக்குத்தொடுவாய், குடாநாட்டுக்கேணி ஆகிய கிராமங்கள் சிங்கள மயமாகும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளன.

இது தொடர்பாக ஊடகங்களில் செய்திகள் வெளி வந்துள்ள நிலையில், வடக்கு மாகாண சபை உசாரடைந்து காணப்படுகின்றது. கடந்த 10ஆம்திகதி முல்லைத்தீவில் அரசின் திட்டமிட்ட இந்தக் குடியேற்ற முயற்சிக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்ட மொன்றும் மாகாணசபை உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அரச தலைவருக்கும், அரசுக்கும் தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறை இருக்குமானால், முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி வலயங்களை ஏற்படுத்தி அங்கு முழுக்க முழுக்கத் தமிழர்களைக் குடியமர்த்தி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்வடையச் செய்தல் வேண்டும். மகாவலி நீரின் மூலமாக முல்லைத்தீவு மாவட்டம் வறட்சியின் கோரப் பிடியிலிருந்து ஓரளவாவது தப்பித்துக் கொள்ளும் வாய்ப்புண்டு. விவசாய பூமியான இந்தப் பகுதியின் விவசாய முயற்சிகளையும் அந்த மாவட்டத்தில் அபிவிருத்தி செய்ய முடியும்.

அதேசமயம், இரணைமடுக் குளம் போன்று பெரிய குளங்களை சீரமைத்து ஆற்று நீரை அங்கு தேக்கி வைத்து விவசாயத்துக்கும் பயன்படுத்த முடியும். இதனால் கோடை காலத்தில் சிறுபோக வேளாண்மையை மேற்கொள்வதற்கான வாய்ப்பும் ஏற்படும்.

**மகாவலி வலயத்தால் சிறுபான்மை மக்களும் பயன்பெற உரிமை கொண்டவர்களே**

இந்த நாடு பல்லின மக்களைக் கொண்டது. இங்கு வாழும் அனைவரும் இந்த நாட்டின் குடிமக்களே, மகாவலி வலயம் என்பது சிறுபான்மையின மக்கள்அண்ட முடியாத ஓர் இடமல்ல. அவர்களுக்கும் அங்கு இடம் உள்ளது.

இனியாவது அரசு மனம் வைத்து வறண்ட நிலையில் காணப்படும் வடபகுதியைச் செழிப்பான பிரதேசமாக மாற்ற வேண்டும். மகாவலி வலயங்களை வடபகுதியில் ஏற்படுத்துவதன் மூலமாக தமிழ் மக்களின் வாழ்க்கையிலும் மாற்றத்தை எற்படுத்திவிட முடியும்.

இதை விடுத்து தமிழர்களின் காணிகளை அடாத்தாக அபகரிப்பதும், அங்கு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி, அங்கு காலம் காலமாக வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களை வெளியேற்றிவிட்டு அவற்றைச் சிங்களப் பிரதேசங்களாக மாற்றுவதும் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒன்றாகத் தெரியவில்லை. கொடிய போர் ஒன்று நீண்ட காலமாக இடம்பெற்றமைக்கு இதுவுமொரு பிரதான காரணமாகும்.

அரச தலைவர் இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்து நல்லதொரு முடிவை மேற்கொண்டு, தமிழ் மக்களது வாழ்வு சுபீட்சமடைய உதவுவாரென்பது தமிழர்களின் எதிர்ப்பார்ப்பாகும்.

ஆசிரியருக்கான கடிதம்

## பெறுமதிமிக்க யாழ். மாநகர சபையின் தீர்மானம்

யாழ். மாநகர சபைக்கு உறுப்பினர்கள் தெரிவாகிய கையோடு தியாகத்தின் இமயம் திலீபனின் நல்லூர்த் தூபியை புனரமைக்க முன்வந்த மாநகர முதல்வருக்கும், உறுப்பினர்களுக்கும், ஆணையாளருக்கும் பாராட்டுக்கள்.

மேலும் அந்தத் தூபியை இடித்து வீழ்த்திய ஈனர்களின் செயற்பாட்டை வெளிப்படுத்தும் வண்ணம் உடைந்து எஞ்சியிருக்கும் தூணின் எச்சம் அப்படியே இருக்கத்தக்கதாக அதன் அருகிலேயே புதிய தூபியை அமைப்பது சாலச்சிறந்தது.

தேச விடுதலைக்காக உணவு ஒறுப்பு போராட்டத்தில் ஈகச் சாவடைந்த ஐரிஸ் போராளி ஒருவரின் பெயர் உலக வரலாற்றில் இருக்கிறது. ஆயினும் ஒரு துளி நீர்கூட அருந்தாமல் தன்னுயிரை எமக்காக தியாகத் தீயில் உருக்கி உயிர்துறந்தவர் எங்கள் திலீபன் மட்டும்தான்.

இப்படியானதொரு தியாகத்தை இன்றைய சிறார்களும், வருங்கால சந்ததியினரும் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் அறிந்து கொள்ளும் வண்ணம் தியாகி திலீபனின் உருவப்படத்தையும் அதனுடன் சேர்த்து அவர் குறித்த விபரங்களையும் அவர் உணவு ஒறுப்பில் ஈடுபட்டமைக்கான காரணங்களையும் கருங்கல்லில் மும்மொழிகளிலும் பொறித்து வைத்தல் அவசியமாகும்.

அத்துடன் அந்த இடத்தில் அழகுத் தாவரங்கள், நீர் பாயும் ஊற்று (Fountain) மற்றும் சுற்றிவர இரும்புக் கம்பி வேலியமைத்து இரவில் மின் ஒளி பாய்ச்சிப் பேணி வருதல் சிறப்பாக இருக்கும்.

மேலும் தியாகி திலீபனின் நினைவு நாள்கள், மாவீரர் நாள்களில் மட்டுமல்லாது, தினமும் அவ்விடத்தை ஒரு வணக்கத்திற்குரிய தூய இடமாக பராமரித்து வர யாழ். மாநகர சபையினரும், அச்சுற்றாடலில் அமைந்துள்ள வணிக நிறுவனங்களது உரிமையாளர்களும், ஏனையோரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

*மா. பிறேமா*
*ஊரெழு*



# நித்திய சுகம் 361

உடலே கோயில்





# நீங்கள் நீரிழிவு நோயாளியா?

எஸ். ராஜேந்திரா.

**நீரிழிவு நோயாளிகளுக்கு கால்புண் ஏற்படுவதற்கான காரணிகள் எவை?**

கால் நரம்புகளின் செயற்பாடு குறைவடைந்து தொடுகை மற்றும் நோவு போன்ற உணர்ச்சிகளற்றுக் காலில் விறைப்புத்தன்மை ஏற்படல்.

கால்களுக்கான குருதி ஓட்டம் நலிவடைதல்.

நீரிழிவு கட்டுப்பாடு குறைவடைதலும் குருதியில் சீனியின் அளவு அதிகரித்தலும்.

கிருமித் தொற்றுக்கள் ஏற்படல்.

பாதம் மற்றும் உள்ளங்கால் பகுதிகளில் ஏற்படும் தோல் தடிப்புத் தன்மை, தொப்புளங்கள் மற்றும் கண்டல் காயங்கள்.

கால் விரல்களுக்கிடையில் ஏற்படும் கிருமித் தாக்கம்.

கால்விரல் நகக்கணுக்களில் ஏற்படும் கிருமித்தாக்கம்.

பாதம் மற்றும் கீழ்க் கால்களில் ஏற்படும் வெட்டுக் காயங்களும் கீறல் காயங்களும்.

பிராணிகள், பூச்சிகளால் காலில் ஏற்படும் கடி மற்றும் குத்துக் காயங்கள்.

**நீரிழிவு கால் புண்ணின் அபாயம் எத்தகையது?**

மேற்குறிப்பிட்ட காரணிகளால் பாதிக்கப்பட்ட காலின் பகுதியில் கிருமித்தாக்கம் ஏற்படுவதால் பாதம் சிவந்து வீக்கமடைந்து உஷ்ணமாக இருத்தல்.

குறிப்பிட்ட காலின் பகுதி கறுப்பு நிறமாகி சீழ்படிதல்.

பாதம் மற்றும் கால்களில் துர்நாற்றம் வீசுவதுடன் புண்கள் உருவாதல்.

பாதத்தின் என்புகள் கிருமித் தொற்றுக்குள்ளாகுதலும் விரல் மற்றும் பாதம் அழுகிப்போதலும்.

நீரிழிவு கால் புண் உங்களை அங்கவீனர்களாக்கலாம்

பாதிக்கப்பட்ட கால்விரல்கள் வெட்டி அகற்றப்பட வேண்டி வரலாம்.

முன்பாதங்கள் வெட்டியகற்றப்பட வேண்டி வரலாம்.

முழங்காலுக்குக் கீழாகக் கால் வெட்டியகற்றப்படலாம்.

முழங்காலுக்கு மேலாகக் கால் வெட்டியகற்றப்பட வேண்டி வரலாம்.

**நீரிழிவு கால் புண் காரணமாக ஏற்படும் அங்கவீனங்களைத் தடுக்கும் முறைகள் எவையெவை?**

கால் மற்றும் பாதங்களைத் தினமும் கழுவிச் சுத்தமாக வைத்திருத்தல்.

தினமும் கால்விரல்களுக்கு இடையில் ஈரலிப்பின்றிப் பேணுதல்.

தினமும் கால்விரல்கள், விரல் ஈறுகள், பாதம் மற்றும் கால்களின் கால் புண் ஏற்படக்கூடிய காரணிகள் பற்றி அவதானித்தல். இதற்குக் குடும்ப உறுப்பினர்கள் உதவுதல் அவசியம்.

தொழில்செய்யும் இடங்களிலும் வீதியிலும் நடக்கும்போது பாதணிகள் அணிதல்.

இறுக்கமான மற்றும் மிகவும் தொய்ந்து பழுதான காலணிகளைத் தவிர்த்தல்.

கால்விரல் நகங்கள் மட்டமாக வெட்டப்படுதல்.

பாதத்தில் ஏற்படும் தோல் தடிப்புகள் மருத்துவரால் சிகிச்சை அளிக்கப்பட்டு நீக்கப்பட வேண்டும். இவற்றை நோயாளி வெட்டியகற்ற முற்படக் கூடாது.

பாதம் மற்றும் காலில் ஏற்படும் காயங்களுக்கு (சிறிய காயங்கள் உட்பட) உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுதல் தாமதப்படுத்தலும் நாட்டு வைத்தியம் செய்தலும் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

நீரிழிவுக்குப் பாவிக்கும் மருந்துகளைத் தவறாது உபயோகித்து குருதியில் சீனியின் அளவைப் பேணுதல்.

புகைப்பிடித்தலைத் தவிர்த்தல்.

*அறுவைச் சிகிச்சை நிபுணர்,*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

# வாழ்க்கையை வசந்தமாக்குவோம்

சி.சிவன்சுதன்

> எமது சிறார்களுக்குச் சுகம் சம்பந்தமான அறிவைச் சிறு வயதிலேயே புகட்டுவோம். தினமும் உடற்பயிற்சி செய்யும் பழக்கத்தையும் உடல் நிறையைப் பேணும் பழக்கத்தையும் சிறுவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

வாழ்க்கையை சுகமாகவும் ஆரோக்கியமாகவும் பயனுள்ள முறையில் வாழ்ந்து முடிக்க வேண்டிய கடமை எம் அனைவருக்கும் உண்டு. எல்லோருக்கும் சாவு நிச்சயமான்து. ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன் வாழந்த யாரும் இன்று உயிருடன் இல்லை. இன்னும் ஒன்றரை நூற்றாண்டு காலத்தில் இன்று இருப்பவர்கள் யாரும் உயிருடன் இருக்கப் போவதுமில்லை. இந்தக் குறுகிய இடைவெளியில் மனிதனின் வாழ்க்கை முற்றுப் பெற்று விட்டதாகக் கருதமுடியாது. அதன் பின்பும் அவன் நினைவுகளாய், சரித்திரமாய், காற்றாய், மண்ணாய், செடி, கொடியாய் இங்குதான் இருக்கப் போகிறான். இந்த வகையிலே எமது இருப்பை உறுதியாக்க வாழும் காலத்தில் எமது உடலின் ஆரோக்கியம் பேணப்படவேண்டும் என்ற தேவை இருக்கிறது. சித்திரம் வரைவதற்கு சுவர் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். ஆரோக்கியமான சுவரில் வரைந்த சித்திரம்தான் காலம் கடந்தும் வாழும்.


நோயற்று வாழ்வது எப்படி? நோயுற்றும் சுகமாக வாழ்வது எப்படி? என்றெல்லாம் தெரிந்து வைத்திருப்பதும் ஒருகலைதான். கடுமையான நோய் நிலைகளிலே பெரும்பாலானவை மனிதனின் கவனக்குறைவினாலும் போதிய மருத்துவ அறிவு இல்லாததனாலுமே ஏற்படுகின்றன. எனவே, நாம் மருத்தவம் சம்பந்தமான தகவல்களை அறிவதில் அதிகம் ஆர்வம் காட்ட வேண்டும். அதற்கமைய எமது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ள முயலவேண்டும். எதனையும் வருமுன் காப்பதற்கு முயற்சிப்போம். அதனையும் மீறி வருபவை எமது கைகளில் இல்லை. அதை ஏற்றுக்கொள்ள முயலுவோம்.

எமது சிறார்களுக்குச் சுகம் சம்பந்தமான அறிவைச் சிறு வயதிலேயே புகட்டுவோம். தினமும் உடற்பயிற்சி செய்யும் பழக்கத்தையும் உடல் நிறையைப் பேணும் பழக்கத்தையும் சிறுவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும். அது அவர்களின் எதிர்கால வாழ்க்கை வசந்தமாவதற்கு உறுதுணையாக நிற்கும். எமது எதிர்காலத் தூண்கள் உறுதி பெறும். நல்ல சிந்தனைகளை வளர்ப்போம் தீய பழக்கங்களை ஒழிப்போம் வாழ்வை வசந்தமாக்குவோம்.

*யாழ். போதனா வைத்தியசாலை.*



சூரியகாந்தி
உதயன்



# கடவுளுக்கு காது கூர்மை →

கட்டுரை

வி. அருணாசலம்


யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓர் அம்மையார் தனது பிள்ளைகளுடன் ஆஸ்திரேலிய நாட்டில் வாழ்ந்து வருகிறார். அவர் தனது வருமானத்துக்காகவும் ஆரோக்கியமான உணவுக்காகவும், பொழுது போக்காகவும் அங்கு கொல்லைப்புறத்தில் கோழி வளர்க்கிறார். அவர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது தனது கோழி வளர்ப்புப் பற்றித் தனது ஊர்ப் பெண்களுக்குக் கூறியிருக்கிறார்.

“அங்கு கோழி வளர்ப்பது மிகவும் சிரமம். சட்ட இறுக்கம் அதிகம். அதிகாலையில் சேவல், கோழி கூவும் சத்தம் கேட்டால் அதற்கு தண்டப்பணம் செலுத்தவேண்டும். அதற்காகச் சேவல், கோழிகள் கூவ ஆரம்பிக்கும் காலத்தில் அதற்கு ஓர் ஊசி ஏற்றி, சேவலை நிரந்தரமாகக் கூவாது தடுக்கின்றனர்”. சத்தத்தால் ஏற்படுகின்ற சூழல் பாதிப்புக்காகவே இந்தக் கடப்பாடு அங்கு நிலவுகிறது.

ஆனால் இங்கு...?

2.4.2018 அன்று நாயன்மார்கட்டுக் கோவிலொன்றில் அதிக சத்தமாக ஒலிபெருக்கிகள் பாவிக்கப்படுகின்றன என யாழ். மேல் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதி மா.இளஞ்செழியன் “கடவுளுக்கு காது நல்ல கூர்மை. அதனால் சத்தமாக வழிபாடு செய்யவேண்டிய அவசியமில்லை” என்று குறிப்பிட்டு அந்த ஒலிபெருக்கிப் பாவனைகளைக் கட்டுப்படுத்தப்படுத்துமாறு குறிப்பிட்டார்.

இந்தத் தீர்ப்பு எல்லாக் கோயில்களுக்கும் பொதுவானது என்று கொள்வோமாக.



ஆஸ்திரேலியாவில் ஒலிக்கும் கட்டுப்பாடு இருக்கிறது. ஆனால், இங்கு நாம் (இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள்) கோயில்களின் எல்லை தாண்டி அளவுக்கு மிஞ்சிய சத்தத்தை ஏற்படுத்தி விடுகிறோம். அதிலும் நாலாபுறமும் ஒலிபெருக்கிகளைக் கட்டி நாதஸ்வரம் பக்திப் பாடல், பிராமணர்களின் மந்திரம் என உச்சமான சத்தத்தை எழுப்பி மகிழும் பழக்கம் எமக்கு மாத்திரமே இருக்கிறது.

365 நாள்களில் 10 - 20 நாள்கள் வரையில் திருவிழாவுக்காகக் கோயிலைப் பயன்படுத்துகின்றனர். அதைவிட சூழலை ரணகளமாக்கி வருகின்றனர். கோயில் எல்லையை விட்டு வெளியில் ஒலிபெருக்கியைக் கட்டுவது, சட்டத்துக்குப் புறம்பான வகையில் அதிக டெசிபல் உள்ள ஒலிபெருக்கிகளைக் கட்டி ஒலிக்கவிடுகிறார்கள். ஒரு வகையில் சமூக விரோத செயற்பாடு. ஓர் எல்லைதாண்டிய பயங்கரவாதமும் ஆகும் .

## பலர் சூழ்ந்து வாழும் சூழல்

ஒரு மதத்தவரின் ஆலயத்தைச் சுற்றி வாழ்பவர்கள் அந்த மதத்தவர்களாக மாத்திரம் இருப்பதில்லை. இந்தக் கோயில் திருவிழாக்களின் சத்தத்தால் பாதிக்கப்படுவது அனைவரும் தான். ஓர் இனம் தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் முயற்சியில் இறங்கியிருக்கும்போது எதிரிகளுக்கு அது மிகவும் மகிழ்வைக் கொடுக்கும். தமிழர் இனப்பெருக்கம் குறைந்த ஓர் இனமாக இருப்பதால், இருக்கின்ற இளைஞர்களையும் பிள்ளைகளையும் நல்லவர்களாக உருவாக்கி விடுவது அனைவரது கடப்பாடாகும். பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களில் இருக்கும் மதத் துறவிகள் மக்களுக்குப் போதனைகளை நடத்துகின்றனர். அவர்களின் சமூக விடயங்கள், பொருளாதாரம், கல்வி, பண்பாடாக வாழ்வது தொடர்பில் போதனைகள் மூலம் வழிப்படுத்துகின்றனர். மக்களும் அவற்றைப் பின்பற்றுகின்றனர். மற்றைய சமயத்தவருடன் ஒப்பிடுகையில் இந்து இளம் சந்ததி ஆலயத்தை நாடுவது குறைவு.

இந்துக்களிடமும், சைவர்களிடமும் துறவிகள் இல்லை. துறவிகளை உருவாக்க எந்த ஏற்பாடும் இல்லை. ஏனைய மதங்களில் தமது குடும்பங்களிலிருந்து துறவிகளைத் தத்தமது மதங்களுக்குச் சேவையாற்ற அனுப்பி வைக்கின்றனர்.

ஒரு கிறிஸ்தவ துறவி குருமடத்தில் பல வருடங்கள் படித்துப் பட்டம் பெறவேண்டும். மௌலவிகள் மதரசாக்களில் கற்றுத் தேறுகின்றனர். பௌத்த துறவிகள் பிரிவேனாக்க ளில் கற்கின்றனர். இந்தப்படிப்புப் பின்னணியிலேயே அவர்களின் போதனைகள் நடைபெறுகின்றன. இவ்வாறானதொரு சூழல் இந்துக்களுக்கும், சைவர்களுக்கும் இருப்பதில்லை.

திருவிழாவின்போது நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளில் பேசுகின்றவர்கள் சில சமயங்களில் மாணவர்களின் கல்வி வளர்ச்சி பற்றியும் பேசுகின்றனர். அதையும் ஒலிபெருக்கி ஊடாகவே பேசுகின்றனர். இவர்கள் படிப்பைப் பற்றி பேசுவதை விடுத்து, ஒலிபெருக்கிகளைக் கோவிலுக்கு வெளியில் யாரும் பாவிக்கக்கூடாது என கோயில் நிர்வாகத்துக்கும் திரு விழாக்காரர்களுக்கும் காதுக்குள் சொன்னால் அந்தச் சூழலில் உள்ள மாணவர்கள் நன்றாகப் படிப்பார்கள். அவர்களின் படிப்புக்கும் கோயில்கள் வேறு வகையில் உதவ முடியும்.

கடவுள்மீது பக்தியுள்ள மக்கள் 24 மணிநேரமும் கோயில்களில் தங்கி, இறைபுகழ் பாடி இன்புற்றிருப்பது தவறல்ல. தாங்கள் விழித்திருக்கிறோம் என்பதற்காக மற்றவர்களும் துன்பப்படவேண்டும் என்று நினைப்பது தான் கடவுளின் பெயரால் செய்யப்படுகின்ற அத்துமீறல் ஆகும்.

## ஒலி பரப்புவதில் பெருமை!

இந்துக் கடவுளர்களுக்குக் காது செவிடாக இருக்கவேண்டும் அல்லது இந்த ஒலிபெருக்கிச் சத்தத்துக்கு அவர்கள் எங்கோ ஓடியிருக்கவேண்டும். இந்து மதத்துடன் ஒலிபெருக்கி சேர்ந்து பிறந்த ஒன்றல்ல. இந்துமதம் மிகப் பழையது என்று கூறுவதன் அர்த்தம் இந்த ஒலிபெருக்கிச் சத்தத்தை வைத்துப் பார்க்கும்போது சரியென்றே ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஒரு வளர்ச்சியடையாத இனத்துக்குரிய தன்மை ஆஸ்திரேலியாவில் இப்படியிருக்கிறது. வளர்ச்சியடைந்த ஆஸ்ரேலிய சமூகம் சேவல் கூவுவது மற்றவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் என அது கூவுவதைக் கட்டுப்படுத்திச் சட்டமாக்கியுள்ளனர். ஆனால், இங்குள்ள கோயில்களின் ஒலிபெருக்கி விடயத்தில் இன்னொருபடி முன்னேற்றம் காணப்படுகிறது. கோயில் திருவிழாக்களின்போது ஒவ்வொரு திருவிழாவுக்கும் ஒவ்வொருவர் பொறுப்பாக இருப்பார். அவரே தெப்பை அணிந்து பூசையைச் செய்விப்பார். இவ்வாறான திருவிழாக் காரர்களுக்குத் தெரியாமல் அல்லது அவருக்கு ஆதரவாக வேறு சிலர் வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்பி ஒலிபெருக்கிக்காரர்களை ஒலிபெருக்கிகளை ஒலிக்கச் செய்கின்றனர்.

இதன்மூலம் ஒலிபெருக்கி வைத்திருப்பவருக்கு வருமானமும், வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புபவருக்கு பெருமையும் சேர்கிறது.

ஒரு திருவிழா சங்கையாக நடந்தது என்றால் "எத்தனை கூட்டம் மேளம் அடித்தது? எத்தனை ஒலிபெருக்கிகள் பாடின? எவ்வளவு தூரம் வர்ண பல்புகள் பூட்டினார்கள்? எவ்வளவு வான வெடிகள் போட்டார்கள்?" என்றே கேட்கின்றனர். இதுவே தமிழரின் பெருமையாக உள்ளது.

ஒரே இடத்தில் போட்டிக்கு 2 அல்லது 3 ஒலிபெருக்கிகள் கட்டப்படுவதால் அதிக சத்தமும் நாதஸ்வரம் போன்ற இனிய வாத்திய இசைகள் அலறும் சத்தமுமே கேட்கின்றன. இதை இனிமையான இசையாக எப்படி இரசிக்கமுடியும்? பரீட்சைக்குத் தயார்படுத்துகின்ற மாணவர்களுக்கு இது மிகவும் தொல்லையாக இருக்கும். இந்த விடயத்தில் யாரும் கவனிப்பதாக இல்லை. ஒரு சிலரின் பெருமைக்காக ஏழைப்பிள்ளைகள் அழிந்து போக வேண்டி உள்ளது.

"10 நாளும் சகித்துக்கொள்ளுங்கோ என்ன செய்வது? லவுட்ஸ்பீக்கரை கழற்றச் சொன்னால் திருவிழாக்காரர் கோவிப்பினம்" என்கிறார்கள்.

இதைவிட ஒலிபெருக்கியைக் கட்டுபவர்கள் அல்லது அதை ஒரு தொழிலாகச் செய்பவர்களுக்கு ஒலி அலைகள் எவ்வாறு பயணிக்கும் என்ற தொழில்நுட்ப அறிவு இருப்பதில்லை. இதனால் சூழல் அதிகம் மாசடைவதுடன், சந்திகளில் ஒலிபெருக்கிகளைக் கட்டுவதால் விபத்துக்களும் ஏற்படுகின்றன. எல்லா இடங்களிலும் ஒலி பெருக்கி கட்டப்பட்டபின் அவை இயக்கப்படும்போது பேரிரைச்சல் வெளிவருகிறதே தவிர, இரசிக்கக்கூடியதாக எதுவும் இருப்பதில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் வாங்கிய காசுக்குக் கூவினால் போதுமென்ற நிலையே காணப்படுகிறது. இவ்வாறான ஒலிபெருக்கிகளுக்கு எதிராக யாராவது கதைத்தால் அது தெய்வ குற்றமாகக் கொள்ளப்படுகிறது.

ஒரு பொலிஸ் அதிகாரியுடன் இது விடயமாகப் பேசியபோது "இந்த ஒலிபெருக்கியால் எங்களுக்கும் நிம்மதியில்லை. என்ன செய்வது என்று சகித்துக்கொண்டிருக்கிறோம். நாங்கள் போய் அகற்றினால் அரசியல்வாதிகளும் மதம் சார்ந்தவர்களும் அதனை ஒரு மதத்திற்கு எதிரான அல்லது இனத்துக்கு எதிரான நடவடிக்கையாக எடுத்துவிடுவார்கள். பொதுமக்கள் அதுபற்றிய முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தால் நாங்கள் நிச்சயம் அதற்கு நடவடிக்கை எடுப்போம்" என்றார்.

## முதலமைச்சரின் அணுகுமுறை!

அண்மையில் முதலமைச்சர் சி.வி.கே.விக்னேஸ்வரன் பொலிஸ் அதிகாரிகளை யாழ்ப்பாணத்தில் சந்தித்து "குற்றச் செயல்கள் குறைந்துள்ளன" என்று பொலிஸாரைப் பாராட்டியிருந்தார். ஒலிபெருக்கி விடயத்தில் மதில்மேல் பூனை என்ற அணுகுமுறையையே கடைப்பிடித்தார்.

அதாவது, கோயில் திருவிழாக்காரரையும் பகைத்துவிடக்கூடாது. அதேவேளை, ஒலிபெருக்கியால் அசௌகரியப்படுபவர்களின் மனம் குளிரும் வகையிலும் அறிக்கை விட்டிருந்தார். ஆனால் பொலிஸ் அதிகாரிகளிடம் 'ஒரு கோயிலின் எல்லை என்பதை வரையறுத்து அயலிலுள்ள மக்களுக்கு இடையூறாக பொருத்தப்படுகின்ற அனைத்து ஒலிபெருக்கிகளையும் பறிமுதல் செய்யுங்கள்' என்ற அறிக்கை விட்டிருந்தால் மறுநாளே இந்த விடயம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருக்கும்.

வடமாகாண சபை உறுப்பினர்களால் கோயில்களுக்கு வழங்கப்பட்ட ஒலிபெருக்கிகள் ஒரு சமூகவிரோதச் செயற்பாட்டுக்குப் பயன்படுகிறது என்பது பற்றி அவர் வாய் திறக்கவில்லை. 119 அமர்வுகளை வடமாகாண சபை கடந்துவிட்டது. ஓர் அமர்வை வடமாகாண சபை இந்த ஒலிபெருக்கி விடயத்துக்காகக் கூட்டினால் (வடமாகாண சபைக்குள் இருக்கும் ஒலிவாங்கிகள் பிடுங்கப்படாமல் பாதுகாக்கப்படல் வேண்டும்) ஆக்கபூர்வமான ஒரு விடயத்தையாவது வடமாகாண சபை செய்ததாக இருக்கும்.

நல்லூர்க் கோயில், நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில், மட்டக்களப்பு மயிலம்பாவெளி அம்மன் கோயில் போன்ற கோயில்களில் மிகச் சிறிய சத்தம் குறைந்த ஒலிபெருக்கிகளையே பாவிக்கின்றனர்.

இதைமீறும் கோயில் தலைவர்கள் மற்றும் நிர்வாகத்தினர் ஆகியோருக்கு நீதிமன்றம் தண்டனை வழங்கினால் மிக இலகுவாக இந்தத் தொல்லையிலிருந்து இந்துக்களும், சைவர்களும் விடுபட முடியும்.

இது விடயத்தில் இந்து கலாசார அமைச்சு, சுற்றுச்சூழல் அமைச்சு, மாகாண சபைகள், பிரதேச செயலகங்கள், பிரதேச அமைப்புக்கள், மனித உரிமைகள் அமைப்புகள், பாடசாலை அதிகாரிகள் சிவ்சேனா போன்ற சமய அமைப்புக்கள் இதில் தலையிடுவது அவசியமாகும்.

ஒரு பண்பாடடைந்த சமூகம் தனது பேச்சிலும், மற்றவர்களுடன் பழகுவதிலும், நடை, உடை பாவனை போன்றவற்றிலும், மெல்லிய சத்தத்துடனான இசை மற்றும் பாடல்களை இரசிப்பதிலும், வாசிப்புப் போன்றவற்றால் மனதை ஒரு நிலையில் வைத்திருப்பது என எல்லா விதத்திலும் மேன்மையானவர்களாக இருப்பார்கள். அவர்கள் ஏனையவர்களின் நிம்மதிக்குப் பாதகமாக எதையும் செய்யப்போவதில்லை.



திருவிழாவின்போது நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளில் பேசுகின்ற பிராமணர்களும், ஏனையவர்களும் சில சமயங்களில் மாணவர்களின் கல்வி வளர்ச்சி பற்றியும் பேசுகின்றனர். அதையும் ஒலிபெருக்கி ஊடாகவே பேசுகின்றனர். இவர்கள் படிப்பைப் பற்றி பேசுவதை விடுத்து, ஒலிபெருக்கிகளை கோவிலுக்கு வெளியில் யாரும் பாவிக்கக் கூடாது என கோயில் நிர்வாகத்துக்கும் திருவிழாக் காரர்களுக்கும் காதுக்குள் சொன்னால் அந்தச் சூழலில் உள்ள மாணவர்கள் நன்றாகப் படிப்பார்கள். அவர்களின் படிப்புக்கும் கோயில்கள் வேறு வகையில் உதவ முடியும்.

# யாழ்ப்பாணமும் யாழ்ப்பாணமும்

## யாழ்ப்பாணம் என்பது எது?
## குடாநாடு? மாவட்டம்? வலயம்? நகரம்?

கருத்து
சாந்தன்

இந்தவாரக் கருத்தாளர்



சாந்தன்
எழுத்தாளர்

கொழும்பில் புதிதாக அறி
முகமான இருவர் பேசிக்
கொண்டது:
“நீங்கள் எந்த இடம்?”
‘யாழ்ப்பாணம்’
“யாழ்ப்பாணத்திலை?”
“வட்டுக்கோட்டை... நீங்கள்?”
“யாழ்ப்பாணந்தான்”
“யாழ்ப்பாணத்திலை?”
“யாழ்ப்பாணம்.”
“அதுதான் எங்க?”
“பட்டணம்!”

□□□

எனக்குத் தபால் அனுப்பும் ஓரிரு
நண்பர்கள் அதீத கவனம்
மிக்கவர்கள்.
கடிதம் அனுப்பும் போது,
முகவரியின் முடிவில்,
‘மானிப்பாய், யாழ்ப்பாணம்’
என்றெழுதுவார்கள்.
விளைவு?
யாழ். நகர அஞ்சலக
ஊழியர்க்குச் சற்று வேலையைக்
கூட்டுவதுடன், கடிதமும் ஓரிரு
நாள்கள் பிந்தி வரும்.
அது பரவாயில்லை என்றும்
படும்; அடியில் யாழ்ப்பாணம்
என்று போடாத கடிதங்கள்
சிலவேளைகளில்
மினிப்பேக்குப் போயும்
வருவதுண்டு.
(இப்போது அந்த நண்பர்களிடம்
யாழ்ப்பாணத்துக்குப் பதில் வ.மா.
என்று போடச்
சொல்லியிருக்கிறேன்.)

□□□

தொடரி மருதானையைக் கடந்து
கோட்டை நிலையத்துள் நுழையும்
போது, கொழும்பு கோட்டை
என்றிருக்கிறது.
நாவற்குழியைத்தாண்டி அடுத்த
பெரிய நிலையத்துள் நுழைகையில்,
யாழ்ப்பாணம் என்றுதானிருக்கிறது.

□□□

*1981*ஆம் ஆண்டில் இனவெறி
யர்களால் எரியூட்டப்பட்டது எது?
யாழ். பொதுசன நூலகம்.
அந்த யாழ். எந்த யாழ்?
குடா நாடு? மாவட்டம்? வலயம்?
நகரம்?
உண்மையில் அது யாழ்.
மாநகரசபை நூலகம்!
முழு உலகுமே அதை முழு
யாழ்ப்பாணத்தின் நூலகம்
என்றுதான்
நம்பிக்கொண்டிருக்கிறது!
ஆனால், யாழ்.வைத்தியசாலை,
என்னும்போது சரியாயிருக்கிறது.
அது முழு மாவட்டத்துக்குமுரிய
வைத்தியசாலை.

□□□

யாழ்ப்பாண இராச்சியம்,
யாழ்ப்பாணத் தமிழ், யாழ்ப்பாண
நிலத்தடி நீர், யாழ்ப்பாண
மாம்பழம் என்கிற எல்லாமே
இந்தப் பட்டண எல்லைக்குள்ளே
மட்டுப்பட்டவையல்ல.

□□□

குவைத்தின் தலை நகர்? ‘குவைத்
சிற்றி’ மெக்சிகோவின் தலை நகர்?
‘மெக்சிகோ சிற்றி’
இப்படி இன்னும் பல.
யாழ்ப்பாணத்தின் தலை நகர்
யாழ்.மாநகர் ஆனாலென்ன?
தெளிவும் அழகும் ஆகுமே!

---

நேரடி அறிக்கை
கதிரேசன் காத்தவராயன்

# உடைஞ்ச அகப்பைக்குள்ள நுளம்புக்குஞ்சு...!

சும்மா எப்பவும் குறை சொல்லுறதுதான் வழக்கமாப் போச்செண்டு புறுபுறுக்கிறது கேக்குது. ஆனாலும் பாருங்கோ சொல்ல வேண்டியதுகளைச் சொல்லத்தானே வேணும்.

போன் பண்ணி, “என்ன கதிரேசண்ணை கைவிட்டிட்டியள்? பெரிய இடத்தான் பிரச்சனையெண்டா உங்களுக்கும் தெரியாமத்தான் போகுதோ? இல்லாட்டி சப்பிச் சாவடியோடதான் உங்கட வீரமோ?"

கடகடவெண்டு பொரிஞ்சு கொட்டிச்சுது ஒரு குரல்.

"அட ஆரப்பா அது உப்பிடி ஒண்டுக்கு மேல ஒண்டாக் கேட்டா என்னடாப்பா செய்யிறது? என்ன ஏதெண்டு வடிவாச் சொல்லாம ச்சீய்... வடிவாச்சொல்லு இப்ப உனக்கென்ன பிரச்சினை?" எண்டு நானும் கொஞ்சம் கட்டன்ரைட்டாக் கேட்டுவிட்டன்.







"ஆரப்பா நாங்கள் சொல்லுகிற எங்கட பிரச்சினையைக் கேக்கிறியள்? உடைஞ்ச அகப்பை வீட்டுக் கோடியாலை கிடந்ததுக்கு ஐநூறு ரூபா பைன் கட்டினவன் எண்ட முறையிலைதான் சொல்லுறன்... கறிகிள்ள ஒழுகுதெண்டு எறிஞ்ச அகப்பைக்குள்ளை தண்ணி தேங்கி, டெங்கு நுளம்பு தகவலறிஞ்சு... அட்றஸ்தேடி வந்து... முட்டைபோட்டு அது குஞ்சாகி... என்னவாச் சத்தம் போட்டாங்கள். உங்க வயல் முழுக்க உக்கவே உக்காத 'கப்'புகள் கிடக்கு அதைப்பற்றி ஒரு கதையும் இல்லை. என்ன நினைச்சுக் கொண்டாங்கள் உவங்கள்? போட்டோ எடுத்து செய்தியாப் போடவும் றிப்போட்டர் பொடியள் ஒருதரும் இல்லை.. எங்கயாலும் அப்பாவியள் மாட்டினா கிழி கிழி யெண்டு கிழிப்பினம்..."

"அட ஆரப்பா பிரச்சினை என்ன? இப்ப அகப்பை உடைஞ்சதோ இல்லாட்டி என்னப்பா பிரச்சினை? முதல்ல அதைச் சொன்னாத்தானே" எண்டு விடுத்துக் கேட்டபிறகுதானே முழுசாச் சொல்லிச்சுது மனிசன்.

ஆந்தாள் கொதிச்சதிலை ஞாயமிருக்கெண்டுதான் படுகுது. நானும் அந்தாளைமாதிரியே இழுக்காம விசயத்துக்கு வாறன்... அதென்னண்டாப் பாருங்கோ சங்கானை ரவுணுக்குள்ள இருக்கல்லே மண்டிகைக்குளம்.. அதைத் திறந்து வைக்கிறதுக்குக் கிட்டடியிலை சந்திரிகா அம்மையார் வந்நவவல்லே.. அதுக்கான நிகழ்ச்சியிலை குடிக்கக் குடுத்த உந்த 'வண்டேக்கப்'புகள்..(அதுதான் ஒழுங்கை மறைப்புக்களில தாராளமாக் கிடக்கிற பிளாஸ்ரிக் கப்புகள் தான்) நிகழ்ச்சி நடந்த வயல் முழுதும் கிடக்குது. வயலுக்கதானே மேடை போட்டுச் சனத்தைப் பிடிச்சு அமத்தி வச்சிருந்தவையள். அண்டைக்கு அந்த நிகழ்ச்சிக்கு வந்த ஆக்களை விடப் பாதுகாப்புக்கெண்டு நிண்டவைதானாம் கூட எண்டும் சொன்னவை. அந்த இடம் முழுக்க உந்த வண்டேக்கப்புகள் தான் சிதறிக்கிடக்கு. அவா வந்திட்டுப் போய் ஒரு கிழமை முடிஞ்சுது. கப்புகள் அப்பிடியேதான் கிடக்குது. பொறுக்கித் துப்பரவாக்கிறதுக்கு ஆளில்லை.

மண்டிகைக் குளத்துக்கும் திட்டங்கள் கனக்கவாம். குளக்கட்டில குடையள் நட்டுச் சோடியளாயிருந்து கதைக்கலாமெண்டும் இரவில தண்ணியடிக்கலாமெண்டும் கனவிதமாப் பயந்தமாதிரி ஒண்டும் நடக்கேல்லை. குளத்தை ஆளமாக்கினதும் சுத்தி மண்கொட்டினதும் சீமந்தாலை சில கட்டுகள் கட்டினதும் நல்லதுதான். குளத்திலை கிள்ளின மண்ணைக் காசுக்கு வித்தது... அது.. இதுவெண்டும் கண்டபடி கதையளும் அடிபட்டதாம்.

"ஒப்பந்தமெடுத்தவன், அதிகாரி, அதிகாரியின்ர எடுபிடி எண்டு அவ்வளவுபேருக்கும் பங்குபோட்டு, சுப்பொசியர் வெட்டினது எண்டு கணக்குப் போடத் தலை சுத்து றமாதிரியில்லையோ" எண்டு ஒராள் கேட்டது நினைவுக்கு வந்துது பாருங்கோ. அதாகப்பட்டது... இப்பிடியான சிறப்புகளுக்குள்ள குளத்துக்குள்ள நடந்த திறப்பு விழாதான் நான் சொல்லவந்தது. விழாவுமில்லை. விழாவுக்குப் பிந்தின 'வண்டேக் கப்' பிரச்சினை. உக்கிற பொலித்தீன் எண்டொரு சொல்லோட லஞ்சீற், சொப்பிங் பை எல்லாம் தாராளமாக் கிடைக்குது. இந்த வண்டேக்கப் என்னமாதிரியெண்டு ஒருவிதமான அறிவித்தலுமில்லை. குழந்தையின்ர துடக்குக்கழிப்பு தொடக்கம் திவசம் வரைக்கு ம் தண்ணிப்பாட்டியளுக்கும் எங்கட ஆக்கள் உந்தச் சில்வர்ப் பேணியள் கழுவுற அலுப்பில வாங்கிற சாமான்தான் வண்டேக்கப். உக்காது, எரியாது, தண்ணீல அமிழாது எண்டு நல்ல குணம் கனக்க இருக்கு அதுக்கு. சுற்றுச் சூழல் எண்டு மூலந்தள்ள முக்கிறவையும் கண்டு கொள்ளாத சீவன்.

அது சரி. கதைக் கேக்குள்ள விட்ட விசயம் குளம் திறக்கிறதுக்கு வயலுக்க போட்ட மேடை.. அதுக்கு முன்னால பரவி விட்டிருக்கிற வண்டேக்கப்... விழாவை ஒழுங்கமைச்ச ஆக்கள் ஒண்டையும் கவனிக்கேல்லை எண்டது மட்டும் வடிவாத் தெரிஞ்சுது. உந்தக்கோதாரியைப் பாவிக்காம விட்டிருக்க வேணும். பாவிச்சாலும் சரியான முறையில அப்புறப்படுத்தியிருக்க வேணும். வீடுகளில வந்து அப்பாவியளோட சண்டித்தனம் காட்டுகிறவை பொது நிகழ்ச்சியளில உப்பிடியான ஆபத்தான சாமானுகளைப் பாவிக்கத் தடை போடலாமல்லோ? சும்மா சனத்தோட சொறியாமல் உங்கட அரச திணைக்கள நிகழ்ச்சியளிலையாவது ஒரு மொடலா இதைச் செய்யேலாதோ?

கறி அள்ள உதவாதெண்டு எறிஞ்ச உடைஞ்ச அகப்பையில நுளம்பு பெருகுமெண்டு வலு உறுதியாச் சொல்லமுடிஞ்ச உங்களால கொஞ்சம் அகலமாய் யோசிக்க முடியேல்லையே? ஆரிட்டைச் சொல்லுறதெண்டு தெரியாட்டி என்னை ஏனப்பா வம்பில மாட்டுறியள்... வீட்டை துப்பரவாயி ருக்கோ எண்டு பாக்க வாறவையை வாசலிலையே நிக்கவைச்சு அவையவை செய்யாமவிட்டிருக்கிறதுளைப்பற்றிக் கேள்வி கேளுங்கோ பாப்பம். அதைச்செய்யாதங்கோ..... என்ர பேனைக்கும் எனக்கும் மட்டும் வேலையை வையுங்கோ... உண்மையா உருப்படாதகூட்டம் நீங்களும்தான்!

கடந்த நாள்களில் தமிழகம் கொந்தளித்துப்போய்க் கிடந்தது. 'இந்தியன் பிரீமியர் லீக்' என்கிற, பல நாட்டுக் கிரிக்கெட் வீரர்களையும் இணைத்து இந்தியாவுக்குள் நடக்கின்ற 'ஐ.பி.எல்' கிரிக்கெட் போட்டியைத் தமிழகத்தில் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் அனைவரும் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்குக் காரணம் அண்மையில் வெளியான காவிரி நீர்ப் பங்கீட்டுத் தீர்ப்பே. அந்தத் தீர்ப்பில் தமிழகத்துக்குப் பின்னடைவே ஏற்பட்டிருந்தாலும் அதை ஏற்றிருந்தது தமிழகம். ஆனால், அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டதுபேல 'வாரியம்' அமைப்பதற்கான கால எல்லை முடிந்தும் அந்த 'வாரியம்' இன்னமும் அமைக்கப்படவில்லை. இதைக் கண்டித்துப் போராட்டம் எழுந்தது, சாதாரண மக்கள் மாத்திரமன்றி சினிமாப் பிரபலங்களான அமீர்,வெற்றிமாறன், கௌதமன், பாரதிராஜா, ராம், வைரமுத்து என்று நீண்டதொரு குழாமும், அத்துடன் அரசியல் கட்சிகள் பலவும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டன. இந்தப் போராட்டத்தைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்காக ஆயிரக்கணக்கான பொலிஸார் களமிறக்கப்பட்டனர். பலர் கைதாகினர். இதனால் தமிழகம் ரணகளமாகியிருந்தது. போராட்ட வலிமை காரணமாகத் தமிழ நாட்டில் நடக்கவிருந்த 'ஐ.பி.எல்' ஆட்டங்கள் வேறு மாநிலங்களுக்கு மாற்றப்பட்டன. பெலிசார் தம்மால் பாதுகாப்புத்தர முடியாது என்று கைவிரித்ததன் விளைவே அது. இது குறித்து ஹிந்துவில் வெளியான கட்டுரை ஒன்று இங்கு தரப்படுகின்றது.

கட்டுரை

வெ.சந்திரமோகன்

# விவசாயிகளுக்காக ஐ.பி.எல். போட்டியை புறக்கணிக்கலாம் தானே?



உரோம் நகரம் பற்றி யெரியும்போது பிடில் வாசித்த நீரோ மன்னனை எம் பல உதாரணங்களுக்குப் பயன்படுத்தியிருக்கிறோம். ஆனால், எம் காலத்தில் சமூகத்தில் கொந்தளிப்பான நிகழ்வுகள் நடந்துகொண்டிருக்கும்போது, ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் அவை பரபரப்பாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கும்போது அவற்றின் தாக்கம் துளியும் இல்லாமல் தங்கள் உலகத்தில் இயங்கிக்கொண்டிருப்பவர்கள் தங்களை நீரோக்களோடு ஒப்பிட்டுக்கொள்வதே இல்லை. தங்கள் வாழ்வாதாரமே நிலைகுலைந்துவிட்டது என்று கதறியபடி சாலைக்கு வந்து மக்கள் மன்றாடும்போது. "என்ன தொந்தரவு இது?" என்று சலித்துக்கொள்பவர்களை வேறு எப்படி குறிப்பிடுவது?

கால் நூற்றாண்டு காலம் இழுக்கப்படிக்கப்பட்டுக் காவிரிப் பிரச்சினையில் உச்ச நீதி மன்றம் ஒரு தீர்ப்பைத் தருகிறது. எமக்கான பங்கீடாக உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டிருக்கும் தண்ணீரின் அளவே காலங்காலமாக நாம் பயன்படுத்திவந்த தண்ணீரின் அளவோடு ஒப்பிடுகையில் இழப்புத்தான். என்றாலும், இறுதித் தீர்ப்பு என்ற வகையில் உச்ச நீதிமன்றத்தின் வார்த்தைகளுக்கு மதிப்பளித்தோம். கர்நாடகத்தின் நீர்த் தேவையும் இடைப்பட்ட காலகட்டத்தில் வளர்ந்திருப்பதைப் புரிந்து இழப்பை எதிர்கொள்ள எம்மை நாமே தயாராக்கிக்கொண்டோம். தமிழகத்துக்கு உரிய தண்ணீரை முறையாகக் கொடுக்கும் மாநிலமாக கர்நாடகம் இருந்திருந்தால் பிரச்சினையே இல்லை. அப்படி இல்லாத தால்தான் வழக்கு! ஆக, உச்ச நீதிமன்றம் பங்கீடு செய்த தண்ணீர் தமிழகத்தை வந்தடைய வேண்டும் என்றால் பங்கீடு செய்ய மேலாண்மை வாரியம் அவசியம் வேண்டும். இது குழந்தைக்கும் தெரியும்.

**ஊர் எரிந்துகொண்டிருக்கத் திருவிழா எதற்கு?**

மத்திய அரசோ எல்லோருக்குமான மத்திய அரசாகச் செயல்படவில்லை. தன்னுடைய குறுகிய அரசியல் நோக்கங்களுக்கேற்ப செயல்படுகிறது. மத்திய அரசின் பிரதிநிதிகள் ஒவ்வொரு இடத்திலும் இதுகுறித்து ஆளுக்கொன்றாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பகிரங்கமாக வஞ்சிக்கப்படுகிறது தமிழகம். இந்த நிலையில்தான் மாநிலம் முழுக்கப் போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. கொடுங்கோடையையும் பொருட்படுத்தாமல் அரசியல் கட்சிகளும் பல்வேறு அமைப்புகளும் வெவ்வேறு வடிவங்களில் போராட்டங்களை முன்னெடுத்துவருகிறார்கள்.

"ஊர் பற்றியெரியும்போது யாரும் திருவிழா கொண்டாட மாட்டார்கள். அவ்வகையில், ஐ.பி.எல் தொடரை இங்கே தடை செய்யுங்கள்" என்று கேட்டது அநியாயமானது அல்ல. பாகிஸ்தான் அரசு மோசமாக நடந்துகொள்ளும்போது எத்தனையோ முறை பாகிஸ்தானுடனான கிரிக்கெட் தொடரை நீக்கும் முடிவுக்கு இந்திய அரசே அழுத்தம் கொடுத்திருக்கிறது. உள்ளூர் பிரச்சினைகளை முன்னிறுத்தி அறிவிக்கப்பட்ட போராட்டங்களுக்கும் மக்களின் உணர்வுக்கும் மதிப்பளித்து நடக்கவிருந்த எத்தனையோ போட்டிகள் கிரிக்கெட் வாரியத்தால் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இப்போதும்கூட கடைசியாக அந்த முடிவுக்கே வந்திருக்கிறது கிரிக்கெட் வாரியம்.

**போராட்ட உரிமை மறுக்கப்பட்டது அநீதி**

தங்களைப் புறக்கணிக்கும் மத்திய அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கவும் நாடு முழுக்க இந்தச் செய்தியும் தமிழக மக்களின் உணர்வும் சென்றடையவும் ஒரு உத்தியாகவே இப்படி ஒரு கோரிக்கையை வைத்தார்கள் போராட்டக்காரர்கள். போட்டி நிறுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றுதான் இல்லை; போட்டி நடத்தப்பட்டு அதனூடாகவே மக்கள் தங்கள் உணர்வை அறவழியில் தெரிவிக்கவும் அனுமதிக்கப்பட்டிருக்கலாம். ஓர் உதாரணம், கறுப்பு உடை அல்லது கறுப்புப் பட்டையோடு இரசிகர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கலாம். விளையாட்டுப் போட்டிகளின்போது, விளையாட்டு வீரர்களே தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் கறுப்புப் பட்டை அணிந்துகொள்வது பன்னாட்டு அளவில் வழக்கமாக இருக்கையில், பார்வையாளர்களிடமிருந்து அந்த உரிமை மறுக்கப்பட்டது எந்த வகையில் நியாயம்?

**அரசுக்கும் 'ஐ.பி.எல்'லுக்கும் சம்பந்தமில்லை**

கிரிக்கெட் என்பது விளையாட்டு. 'ஐ.பி.எல்' என்பது பி.சி.சி.ஐ எனும் தனி அமைப்பால் நடத்தப்படுவது; அதற்கும் அரசுக்கும் சம்பந்தமில்லை என்ற வியாக்கியானங்கள் எல்லாம் யாருக்குத் தெரியாதது? ஐ.பி.எல் ஒரு சாதாரண தனியார் அமைப்பு நடத்தும் விளையாட்டு போட்டி என்றால், அதை நடத்த ஏன் இவ்வளவு பொலிஸார்? தண்ணீரை எடுத்துவரக்கூட அனுமதி இல்லாத அளவுக்குப் பார்வையாளர்களிடம் ஏன் இவ்வளவு கட்டுப்பாடு? அறவழியில் போராடிய மக்கள் மீது ஏன் தடியடி?

நிச்சயமாகப் பொலிஸாரையோ, ஐ.பி.எல் ஆட்டத்தைக் காணச் சென்ற இரசிகர்களையோ தாக்கியவர்களை நான் நியாயப்படுத்தவில்லை. மைதானத்துக்குள் காலணியை வீசியவரையும் நியாயப்படுத்தவில்லை. ஒரு சிலர் என்றாலும் ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கும் அறவழிப் போராட்டக்காரர்களுக்கும் அவப்பெயரைச் சம்பாதித்துக் கொடுத்துவிட்டவர்கள் அவர்கள். கடுமையான கண்டனத்துக்குரிய வர்கள். ஆனால், மக்களுக்கான நியாயமான எல்லா எதிர்ப்பு வழிகளையும் இந்த அரசு மறுப்பது பெரிய அடக்குமுறை.

**போராட்டத்தைவிட மகத்தான விடயம் விளையாட்டைப் புறக்கணிப்பதே!**

"ஐ.பி.எல் தொடரை எதிர்ப்பதால் என்ன பயன்?" என்று கேட்பவர்கள் இந்த எதிர்ப்பின் தொடர்ச்சியாகத்தான் கடந்த இரண்டு நாள்களாக தேசிய தொலைக்காட்சிகள் தமிழகப் போராட்டங்கள் குறித்துப் பேச ஆரம்பித்திருக்கின்றன என்பதை எப்படிப் பார்க்கிறார்கள்? உண்மையில் இந்தப் போட்டியை நடத்துவதை கௌரவப் பிரச்சினையாகக் கருதியது மத்திய அரசு. தமிழ்நாட்டு அரசு டெல்லியின் கைப்பாவை ஆனது. அதனால்தான், காவல் துறையைக் கொண்டு இந்தப் பிரச்சினை அணுகப்பட்டது. போராட்ட அறிவிப்பை வெளியிட்டவர்களுடன் பேசுவது குறித்து எவருமே அக்கறை காட்டவில்லை. ஐ.பி.எல் அமைப்புகள் எப்போதும் நிதி, மூல தனத்தோடு பிணைக்கப்பட்டவை. அவற்றின் அறம், நியாயத்துக்கு எல்லாம் அறைகூவல் விடுத்து பெரிய அளவில் பிரயோசனம் இருக்காது.

எனக்கு அரசு, கிரிக்கெட் வாரியம் இவற்றின் மீதுள்ள அதிருப்தியைக் காட்டிலும் அதிகமான கோபம் வருவது நம்மவர்கள் மீதுதான். ரசிகர்களிடம் கேட்கிறேன். ஐ.பி.எல் டிக்கெட் விலை எவ்வளவு இருக்கும்? எத்தனை ஆயிரம் பெரிய இழப்பாகிவிடும்? விவசாயிகளுக்காகப் போட்டியைப் புறக்கணிப்பது என்ற முடிவை ரசிகர்கள் எடுத்திருந்தால் அது எவ்வளவு மகத்தான செய்தியாக இருந்திருக்கும்? சமூகம் என்பது நான்கு பேர் என்பதைப் பள்ளிக்கூடங்களிலிருந்து திரும்பத் திரும்பப் படிக்கிறோம். சமூகம் என்பது எந்த நான்கு பேர்?

## மோடிக்கு எதிரான கோஷம்!

இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதுபோல ஊர் எரிந்துகொண்டிருக்கையில் திருவிழா கொண்டாடுகிறார்கள் என்ற நிலைதான் மக்களின் போராட்டங்களைப் பல பரிமாணமடைய வைத்திருக்கிறது. காவிரித் தீர்ப்பின்படி 'வாரியம்' அமைக்கும் செயற்பாடு தாமதப்பட்டதாலேயே அங்கு போராட்டங்கள் துளிர்க்கத் தொடங்கின. 'ஐ.பி.எல்.' போட்டி அதற்குள் சிக்கிக்கொண்டது. போராட்டம் உத்வேகம் பெற்றுக் கொண்டிருக்கும் நிலத்தில் விளையாட்டை ஏற்பார்களா? எதிர்ப்பார்கள் என்று தெரிந்தும் அந்த நிர்வாகமும் அரசும் வலிந்து அதை நடத்த முனைந்தன. போராட்டத்தை நசுக்க முயன்றன. போராட்டம் உயர்கொதிநிலையை அடைந்தது அதனால்தான். ஆனாலும் அரசின் சில செய்கைகளும் மக்களின் உணர்வலைகளை மேலும் தூண்டின. இதே ஊர் எரியும் நேரம் பார்த்து சென்னை அருகே பிரமாண்டமான இராணுவக் கண்காட்சி ஒன்றை மோடி ஆரம்பித்து வைத்தார். அதேபோல அடையாறில் புற்றுநோய் மருத்துவமனை ஒன்றையும் திறந்து வைத்தார். இதனால் போராட்டமும் மோடி எதிர்ப்பும் பரந்து பட்டது. ஆனால் மோடியால் நிலத்தில் கால் வைக்க முடியவில்லை. வீதிவழிப் பயணங்களை இயன்ற வரைக் குறைத்து வான் வழியே வந்திறங்கியே திரும்பியிருக்கிறார். மாத்திரமல்லாமல், பத்திரிகையாளர் கௌரி லங்கேஷ் கொலையுண்டபோதே தலைமை அமைச்சர் மேடிக்கு எதிராக உச்சமான எதிர்ப்பு எழுந்ததாக வலைத்தளங்களில் பதிவாகின. தற்போதும் அத்தகையதொரு உச்ச எதிர்ப்பு இனங்காணப்பட்டிருக்கிறது.



கட்டுரை

ஏ.ஜே.ஞானேந்திரன்

# கர்ஜனையால் பீதியெழுப்பும் சிங்கங்கள்

## அறிந்த மிருகம் அறியாத கதை

கிட்டத்தட்ட 8 கிலோமீற்றர்கள் தூரத்துக்கு இதன் கர்ஜனை கேட்கும். தான்வேட்டையாடிய மிருகங்களின் தசைகளோடு கூடிய எலும்புப் பகுதியை இது அப்படியே விட்டுவிடுவதால், இதையே நம்பியிருக்கும் கழுதைப்புலிபோன்ற மிருகங்கள் பட்டினி கிடக்க வேண்டியதில்லை. வயிறுநிரம்பி விட்டால் சிலநாள்களுக்கு இது எந்த மிருகங்களையும் கொல்லாது. இவை சிங்கங்களின் சில சிறப்பியல்புகள்.

**இன்னொன்றையும் கவனியுங்கள்!**

சிலசமயங்களில், ஒருபெண் சிங்கம் தனது குட்டிகளையும், ஆணையும் இழந்தநிலையில், புதிதாக ஒருகூட்டத்துடன் இணைவதுண்டு. இப்படிநேர்ந்தால், கூட்டத்தின் தலைவனாக இருக்கும்ஆண்சிங்கம்என்னசெய்யும்தெரியுமா? இதைஅறிந்தால்'அடகொலைகாரப்பாவி' என்றுதான் திட்டித் தீர்ப்பீர்கள். தனது கூட்டத்திலுள்ள குட்டிகளை எல்லாம் ஆண்சிங்கம் கொன்றுவிடும். ஏன்தெரியுமா? புதிதாகவந்துள்ளமனைவிபெற்றுத்தரும்குட்டிகளைவளர்க்க வேண்டும் எனும் காரணமே தற்போதைக்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிங்கம் செய்யும் கொடுமை இது! மிருகங்களின் உலகில் நடக்கும் அட்டகாசங்களைப் பார்த்தீர்களா?

**பூனைக்குடும்பத்தின்அங்கத்தவர்**

சிங்கமும் பூனைக் குடும்பத்தைச் சேர்ந்ததுதான். வரிப்புலிகளுக்கு அடுத்ததாக இந்தப் பூனைக்குடும்பத்தில்இரண்டாவதுபெரியவர்.கிட்டத்தட்ட250கிலோஎடைகொண்டசிங்கம்தான். ஆனால் ஒருபெரிய வித்தியாசம் இருக்கின்றது. இந்தப் பூனைக் குடும்பத்து மிருகங்கள் எல்லாம் தனியானாகவே வாழுகின்ற சுபாவம் கொண்டவையாக இருக்க, சிங்கம் இதற்கு விதிவிலக்காக இருக்கின்றது. குடும்பத்தில் கூட்டமாக வாழுகின்ற தன்மையைக் கொண்ட ஒரே விலங்கு சிங்கம் தான். தமக்குரிய வேலைகளை அவரவருக்குப் பிரித்துக் கொடுத்து, இணைந்து செயற்படுகின்ற தனித்துவமான தன்மை கொண்டவை சிங்கங்கள். சராசரியாக 15 வரையில் காணப்படுகின்ற ஒவ்வொரு சிங்கக் கூட்டத்தினதும் செயற்பாடுகள், தனித்துவமானவை. மூன்று ஆண்கள், சிறுசுகளும் பெண்களுமாகச் சாதாரண ஒரு சிங்கக் கூட்டத்தில் நாம் காணக்கூடிய தொகை 12. பெண் சிங்கக்குட்டிகள் வளர்ந்தாலும், கூட்டத்தை விட்டுப் பிரிவதில்லை. ஆனால், ஆண் சிங்கக் குட்டிகள் வளர்ந்ததும்,தமதுகூட்டத்தைவிட்டுப்பிரிந்து,இன்னொருகூட்டத்தோடுஇணைந்துகொள்வதோடு, நாளடைவில் அந்தக் கூட்டத்தின் தலைமைப் பொறுப்பையும் எடுத்து விடுவதுண்டு. தினமும் தவறாமல் நீர் அருந்தும் பழக்கம் உடையவை சிங்கங்கள். என்றாலும் நான்கு நாள்களுக்கு நீரே அருந்தாமல்தாக்குப்பிடிக்கும்சக்தியும்சிங்கங்களுக்குஉண்டு. பிடித்துண்ணும்இரையின்உடலில் உள்ளஈரத்தன்மை, இவற்றின்உடலைவறண்டுவிடாமல்பாதுகாக்கஉதவுகின்றனஎன்கிறார்கள்.

**எவர் குட்டியாயினும் பாலூட்டும்**

பொதுவாக ஒரு பெண் சிங்கம் 3குட்டிகள் வரையில் ஈனுவதுண்டு. ஒரு குட்டியின் எடை சராசரி 3இறாத்தலாக இருக்கும். சில தாய்ச் சிங்கங்கள் மிகக் கவனமாகக் குட்டிகளுக்கு உணவளித்து, பராமரிப்பதுண்டு. வேறுசிலஉணவுப்பற்றாக்குறையால்,தமதுகுட்டிகளைஅனாதரவாகவிட்டுவிட்டுச் சென்றுவிடுவதும் உண்டு. பொதுவாகக் கூட்டத்தின் இரண்டு பெண் சிங்கங்கள், ஒரே நேரத்தில் குட்டிகளை ஈனும். எல்லாமே ஒன்றாக வளர்க்கப்படுவதுண்டு. தனது குட்டிகளை விட, மற்றைய குட்டிகளுக்கும்பாலூட்டும்சுபாவம்தாய்ச்சிங்களுக்குஉண்டு.அதேபோலவேறுஎங்காவதுஅனாதரவாக விடப்பட்ட குட்டிகளைக் கண்டாலும், அவற்றுக்குப்பாலூட்டுவது,தாய்ச்சிங்கத்தின் சிறப்பான குணாம்சம். மனிதர்கள் சிங்கங்களிடமிருந்து இதைப் படிக்கலாம் போலிருக் கின் றது. அனைத்துப்பிள்ளைகளுமே எங்கள் பிள்ளைகள் என்ற மனோபாவம் மனித சமுதாயத் தில், இருக்குமானால், உலகம் சொர்க்க மாகி விடும்.



**காட்டிலே ஆணழகர்கள் அதிகம்**

மனிதர்களிடையே ஆணழகனை விட, பெண்ணழகியைத் தான் அதிகம் காண முடிகிறது. பெண்ணையே அனைவரும் விரும்புகிறார்கள்.விளம்பரம்செய்பவர்களும், பெண்களைத்தான் எதற்கும் முன்நிறுத்துகிறார்கள். கவர்ச்சிக் கன்னியாகப் பெண் திகழ்கிறாள். ஆனால் காட்டிலோகதைவேறுநாலுகால்விலங்கினமாகட்டும்அல்லதுகாட்டுப்பறவைகளாட்டும்,ஆண்களுக்குத்தான் அழகு போய்ச் சேர்ந்திருக்கின்றது. தனது பிடரி மயிரை உலுப்பிக் கொண்டு வரும் சிங்கமாகட்டும், அல்லது வண்ணத் தோகையை விரித்தாடும் மயிலாகட்டும் அழகர்சாமிகள் ஆண்கள்தான்.!

**காடுகளில் தேடப்படும் காணிநிலம்**

காணிக்காகமனிதர்கள்அடிபடுவதுபோலகாட்டுமிருகங்களும்அடிபட்டுக்கொள்கின்றனஎன்பதுஆச்சரியம்தான். மதிலை எழுப்பி, வேலி அடைத்து, எல்லைகளை வகுத்துக் காணிகளுக்குச் சொந்தம் கொண்டாடி வருகிறான் மனிதன். ஆறடிமண்தான் இறுதியில்தனக்குஎன்றுதெரிந்திருந்தும், மண்ணாசைஅவனைவிடுவதாயில்லை. ஆண் சிங்கங்களும்காட்டில்ஓர் இடத்தைப்பிடித்து, தமது எல்லைகளை நிர்ணயித்துக் கொள்கின்றன. ஏறத்தாழ 259சதுரகிலோமீற்றர்விஸ்தீரணமானகாட்டுநிலத்தை,ஒருசிங்கம்தனதுகூட்டத்துக்காகஎடுத்துக்கொள்வதுண்டு. எந்த உறுதியும் எழுதப்படாமல், எந்தச் சட்டத்தரணியும் கையொப்பம் இடாமல், காட்டுச் சட்டத்தில் ஒரு மிருகம் உரிமைகொண்டாடும்காணியின்அளவுஇது. தனதுஎல்லையில்சிறுநீர்கழிக்கும்சிங்கம்,அச்சுறுத்தும்வகையில் ஒரு கர்ஜனையையும்எழுப்பி, 'இது எனது காணி எல்லை... அத்து மீறிப் பிரவேசிப்பவர்களை அறுத்து விடுவேன். ஜாக்கிரதை' என்ற எச்சரிப்பையும் காற்றில் மிதக்க விடுகின்றது.

(தொடரும்)

# அகதிகள்

கவிதை

இர.சந்திரசேகர சர்மா



காலையில் சென்ற காகங்கள் மாலையில் திரும்பின.
இவ்வளவு காலமும் கூடுகட்டி, முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து அவை
வாழ்ந்த அந்த வேப்பமரம் வீழ்ந்து கிடந்தது.
அது விசாலித்துக் கிளை பரப்பி நின்ற இடம் வளிமண்டலத்தில்
வெளியாய்க்கிடந்தது.
அவை அங்குமிங்கும் பறந்தன. கரைந்தன. கதறின. சோகத்தில் மூழ்கின.
அருகில் நின்ற தென்னை மரங்களின் ஓலையில் அமைதியின்றி அந்தரத்தில்
அமர்ந்துகொண்டு "கா கா" என்று கதறின.
பின்னர் எழுந்து வட்டமிட்டன.
அன்று யாரோ தறித்துவிட்ட அந்த வேப்பமரம் நிலத்தில் வீழ்ந்து கிடந்து
வாடியது. காகத்தின் கூடுகள் சிதறி முட்டைகள் உடைந்து வழிந்தன.
உணவை எதிர்பார்த்துக் காத்திருந்த காகக் குஞ்சுகள் "கீச்,கீச்" என்று கத்தி
ஓய்ந்தன.

⊛⊛⊛⊛⊛⊛

காகங்கள் அழிந்த கூடுகளைப் பார்த்து, சுற்றிச் சுழன்றன.
அவற்றின் ஓலம் அந்த மாலை வேளையைத் துன்பமாக்கியது.
குஞ்சுகளின் கீச்சுக்குரல் கேட்டபோது கீழே வரப் பயந்து கரைந்து கரைந்து
சுழன்றன.
அமைதியின்றிப் பறந்து பறந்து ஓய்ந்தன.
தென்னங்கீற்றில் இருப்பதும் எழுவதுமாக மாறி மாறிப் பறந்து திரிந்தன.
மாலை மயங்கி இருள் சூழத்தொடங்கியது.
காகங்களின் அவலக்குரல் மெல்ல ஓய்ந்தது.
இரவானபோது மயான அமைதி நிலவியது.
காகங்களின் இருப்புத் தெரியவில்லை.
அடுத்த நாள் காலை இருள் மெல்ல விலகத் தொடங்கியது.
விடியலை அறிவிக்கும் காகங்களின் "பூபாளம்" அன்று கேட்கவில்லை.
எனினும் விடிந்தது.
காகங்கள் அதிகாலையிலேயே எங்கோ பறந்துவிட்டன.

⊛⊛⊛⊛⊛⊛

மரம் வீழ்ந்து வாடிக்கிடந்தது.
கூடுகள் சிதறிக்கிடந்தன.
காகக் குஞ்சுகள் இறந்து கிடந்தன.
முட்டைகள் உடைந்து, சிதறிக் காய்ந்து கிடந்தன.
மரம், கூடுகளையும் காகங்களையும் குஞ்சுகளையும் முட்டைகளையும்
மகிழ்வோடு தாங்கி நின்றிருந்தது.
மரம் வெட்டப்பட்டபோது அதனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.
வீழத்தான் முடிந்தது.
விழும்போது மரம் நினைத்தது,
"காகங்களே நான் உங்களுக்குக் கூடுகட்ட இடம் தந்தேன்;.
முட்டைகள் இடுவதற்கும், குஞ்சுகள் பொரிப்பதற்கும் இடம்தந்து ம
கிழ்ந்தேன்.
பகலில் நீங்கள் உணவு தேடிச் சென்றுவிட, நான் எனது இலைகள் மூலம்
உங்கள் குஞ்சுகளுக்கு நிழல் கொடுத்ததோடு, அவற்றிலுள்ள எண்ணற்ற
இலைவாய்கள் மூலம் சுவாசத்துக்கு வேட்டிய ஒட்சிசன் வாயுவையும்
கொடுத்துச் சீராட்டினேன்.
என்னை மானிடர் வெட்டி வீழ்த்தியபோது என்னால் தொடர்ந்து இடம்
தந்து மகிழ முடியவில்லையே! ஆனால் என் சந்ததி உங்களுக்கு
இடம்தரும்; இது உறுதி. மரம் இப்படி நினைத்து முடிக்கையில், அதன்
உயிர் மெல்லப்பிரிந்தது.

⊛⊛⊛⊛⊛

அன்று மாலை அந்தக் காகங்கள் அங்கு வரவில்லை.
தென்னங்கீற்றுக்களில் இருக்கவில்லை.
அல்லற்பட்டு 'கா...கா...' என்று அலறவில்லை.
எல்லாம் அமைதியாகவே இருந்தது.
மரம் வியாபித்து நின்ற இடம்வெளியாகவே இருந்தது.
காகங்கள் எங்கோ சென்று விட்டன.
புலம்பெயர்ந்துவிட்டன.
மனிதர்கள் மட்டுமல்ல அகதிகள் காகங்களும்தான்!

கட்டுரை

இராஜினிதேவி சிவலிங்கம்

# அருகிச் செல்லும் புத்தாண்டுப் பாரம்பரியங்கள்



பிறவிகளில் சிறந்தது. உயர்ந்தது மானிடப் பிறவி. இத்தகைய உயர்ந்த பிறவி சிறப்புற வேண்டுமாயின் மன அழுத்தங்களில் இருந்து விடுபடும் மகிழ்ச்சியான வாழ்க்கை அவசியமாகிறது. இயந்திர மயமாகிப்போன உலக வாழ்க்கையில் மாற்றங்களின் தேவைப்பாடுகள் அத்தியவசியமாகின்றன. ஒரே மாதிரியான வாழ்க்கை மனிதர்களுக்குச் சலிப்பையும், விரக்தியையுமே ஏற்படுத்துகின்றது. மாற்றமில்லாத, மகிழ்ச்சியில்லாத வாழ்க்கை மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது. இந்த மன அழுத்தம் மனிதர்களை இறப்பின் வாசலுக்கு அழைத்துச் செல்கின்றது. இத்தகைய மன அழுத்தங்களில் இருந்து விடுபட்டு மக்கள் அனைவரும் புத்துணர்ச்சி பெறுவதற்காகவே எமது முன்னோர்கள் பண்டிகைகளைப் பேணினர்.

தமிழ் மக்களின் வாழ்வியலில் பண்டிகைகள் பின்னிப் பிணைந்து விட்டன. இவை மக்களின் வாழ்க்கையில் புத்துணர்வையும் புதிய நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றன. தைப்பொங்கல், சித்திரைப் புத்தாண்டு, ஐப்பசித் தீபாவளி ஆகிய பண்டிகைகள் தமிழ் மக்களின் மரபு வழி சார்ந்தவையாகப் பேணப்படுகின்றன.

**சித்திரையின் சிறப்பு!**

மாதத்தில் சிறந்ததாகவும் முதலாவதாகவும் சித்திரை மாதம் அமைந்துள்ளது. இந்த மாதத்தின் சிறப்புப் பற்றி அகத்தியர் பின்வருமாறு கூறியுள்ளார்.

*'முத்தமிழ்போல் முக்கடல்சூழ் குமரிமுனை வளரும்*
*உத்தமியே ஸ்ரீசக்கரந்தன்னில் உதித்தவளே*
*எத்தருணத்திலும் எனைப் பிரியாமல் எனக்கிரங்கி*
*சித்திரைத் திங்களில் வந்தருள் செய்வாய் சிவக்கொழுந்தே'*

பருவ காலங்களில் சிறந்தது இளவேனிற் காலம். இளவேனிற்காலத்தில் முதல் மாதம் சித்திரை. இந்தக் காலத்தில் பலா முதலிய கனி தரும் விருட்சங்களும் இன்சுவைக் கனிகளையும், மனதைக் கவர்ந்திழுக்கும் மணங்கமழும் மலர்களைத் தரும் மரம், செடி, கொடிகளும் பூத்துக் குலுங்கி மக்களை மகிழ்வடையச் செய்கின்றன. சித்திரைப் புதுவருட நிகழ்வுகளில் வழமைபோல கைவிசேஷம் வழங்கல், உறவினர்களின் வீடுகளுக்குச் செல்வது, ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது என்று மரபார்ந்த விடயங்களை நாம் கைக்கொண்டாலும் கை நழுவிப்போன பாரம்பரியங்கள் பல.

**அருகிச் செல்லும் புத்தாண்டுப் பாரம்பரியங்கள்**

சித்திரைப் புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் கிராமப்புறங்களில் ஊஞ்சல் கட்டி ஆடும் வழக்கமிருந்தது. சிறுவர்களும் இளம் பராயத்தவர்களும் மகிழ்வுடன் ஆடி மகிழும் இந்தப் பாரம்பரிய நிகழ்வு இன்று அருகிச்சென்றுவிட்டதெனலாம். இயந்திர மயமாகிப்போன உலகில் இத்தகைய பாராம்பரிய நிகழ்வுகளுக்கு மக்கள் முக்கியத்துவமளிப்பதில்லை. சிறுவர்களைக் குதூகலப்படுத்தும் இந்த ஊஞ்சல் ஆட்டத்தில் பங்கு கொள்வதற்கு அவர்களுக்குப் போதிய நேரம் கிடைப்பதில்லை. போட்டி நிறைந்த உலகில் தமது பிள்ளைகள் பரீட்சைகளில் சித்தியடைய வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்களை ஓயாமல் படிப்பதற்கு நிர்ப்பந்திக்கும் பெற்றோர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். இதனால் சிறுவர்களுக்கு ஊஞ்சல் ஆட்டம் போன்ற பொழுதுபோக்குகளில் ஆர்வம் காட்டமுடிவதில்லை.

கிராமங்களில் புத்தாண்டையொட்டி நடைபெறும் தேங்காய் அடிக்கும் நிகழ்வுப் போட்டியில் கலந்துகொள்ளும் ஆர்வமுடையவர்கள் வைரமான சிரட்டையை உடைய, இலகுவில் உடைய முடியாத தேங்காய்களைத் தெரிவு செய்வர். போர்த் தேங்காய்கள் அந்தக் காலத்தில் சந்தைகளில்கூட இதன்நிமித்தம் மும்முரமாக விற்பனையில் இருக்கும். கிராமங்களில் உள்ள சிறு கோவில்களிலும், விளையாட்டு மைதானங்களிலும் இந்த நிகழ்வு நடைபெறும்.

இன்றைய இளைஞர்களுக்கோ, சிறுவர்களுக்கோ இத்தகைய பாரம்பரிய விளையாட்டுக்கள் பற்றித் தெரிவதில்லை. அவை பற்றிய செய்திகளை அறியாமல் இருப்பதும் கவலைக்குரியது. தமிழ் மக்கள் பின்பற்றிய பாரம்பரிய விளையாட்டுக்கள் தொடர்பாக விவரங்களை இன்றைய இளைய தலைமுறையினருக்குத் தெளிவுபடுத்தவேண்டியது எமது கடமையாகும்.

> “கிராமங்களில் புத்தாண்டையொட்டி நடைபெறும் தேங்காய் அடிக்கும் நிகழ்வுப் போட்டியில் கலந்துகொள்ளும் ஆர்வமுடையவர்கள் வைரமான சிரட்டையை உடைய, இலகுவில் உடைய முடியாத தேங்காய்களைத் தெரிவு செய்வர். போர்த் தேங்காய்கள் அந்தக் காலத்தில் சந்தைகளில்கூட இதன்நிமித்தம் மும்முரமாக விற்பனையில் இருக்கும்.”

எமது கிராமங்களில் நடைபெற்ற சேவல் சண்டை, மாட்டு வண்டில் சவாரி, கிறீஸ் மரத்தில் ஏறுதல், முட்டி உடைத்தல் ஆகிய நிகழ்வுகள் அருகிப்போய்விட்டன. காலமாற்றத்தால் இவை பேணப்படாது வழக்கிழந்து போய்விட்டன. அன்று எமது மண்ணில் பண்டிகைகள், நிகழ்வுகளின்போது பின்பற்றப்பட்ட பாரம்பரியங்கள் தொடர்பான ஆய்வுகள் இடம்பெறவேண்டும். இந்த நிகழ்வுகள் பற்றிய தெளிவை இன்றைய தலைமுறையினர் தெரிந்துகொள்ளவேண்டும். இதன்மூலம் தமிழ் மக்களுக்கென்ற கலாசாரம், பாரம்பரியம் தனித்தன்மை வாய்ந்ததாக இருந்தது என்பதை எதிர்காலத்தினரும் தெரிந்து கொள்ள முடியும்.

# நூல் அறிமுகம்

தொகுப்பு

அயக்கிரீவன்


**நூல் சொற்களால் அமையும் உலகு (சில உரைகள் சில விமர்சனங்கள்)**
**ஆசிரியர் தி.செல்வமனோகரன்**
**வெளியீடு – தூண்டி இலக்கிய வட்டம்**
**விலை – 300ரூபா**

வீட்டுச்சூழல், பாடசாலைச்சூழல், நட்பு வட்டம் என என்னைச் சூழவிருந்த அனைத்தும் கலை இலக்கியத்தால் நிரம்பி வழிந்த வண்ணமிருந்தன. நானும் அவற்றோடு சங்கமமானேன். பாடசாலைச்சூழல், நாடகம், நடனம், ஆக்க இலக்கியம் சார்ந்த ஈடுபாடுகளை நிறையவே என்னுள் ஏற்படுத்திற்று. ஆயினும் எனது ஆசிரியர்களுள் முக்கியமானவரான திரு.ஐ.கமலநாதன் அவர்களுடனான தொடர்பும் ஊடாட்டமும் என்னை ஆக்கவிலக்கியத்தினின்றும் விமர்சனத்தை நோக்கி உந்தித் தள்ளிற்று. எனது விமர்சனம் என்பது இரசனைமரபு சார்ந்த விமர்சனமே.
(முன்னுரையில் தி.செல்வமனோகரன்)




**நூல்– காஷ்மீர சைவமும் சைவ சித்தாந்தமும்**
**ஆசிரியர்– தி.செல்வனோகரன்**
**வெளியீடு – சேமமடு பொத்தகசாலை**
**விலை – 600ரூபா**

இன்றும் நிலைத்திருக்கும் மூன்று சைவப்பிரிவுகளான சைவ சித்தாந்தம், வீர சைவம், காஷ்மீர சைவம் ஆகிய பிரிவுகளினுள் ஒன்றான காஷ்மீர சைவம் பற்றி எழுந்த ஆங்கில, தமிழ் மொழி மூலமான நூல்கள் மிக அரிதாகவே விளங்குகின்றன. அதிலும் குறிப்பாகத் தமிழ் மொழியில் எழுந்த நூல்களுள் காஷ்மீர சைவத்தைப் பற்றி ஓரளவு அறிந்துகொள்வதற்கும் அதன் சிறப்பம்சங்களைப் புரிந்து கொள்வதற்கும் இந்த நூல் பெரிதும் உதவ வல்லதாகும். இந்த நூல் சைவ சித்தாந்தமானது இன்றும் சிறப்பாகப் பேணப்படுகின்ற, இந்தப் பிரதேசத்தில் ஒப்பீட்டு ரீதியில் சைவ சித்தாந்தத்தையும் காஷ்மீர சைவத்தையும் அறிந்தும் புரிந்தும் கொள்வதற்கு அரியதொரு வாய்ப்பை அளிப்பதாகின்றது. (நா.ஞானகுமாரன் சிரேஷ்ட ரோசிரியர், மெய்யியல்துறை)







**நூல் – தமிழில் மெய்யியல்**
**ஆசிரியர் – தி.செல்வமனோகரன்**
**வெளியீடு – துண்டி இலக்கிய வட்டம்**
**விலை – 300ரூபா**

'குறித்த ஒரு மெய்யியலை மட்டும் தமிழர் மெய்யியலாக உரைப்பது அபத்தமாகவே படுகிறது. காலப் பொருநதியின் வழி தமிழ் பல்வேறு மெய்யியல், சமயம், கலை, கலாசாரப் பண்பாட்டம்சங்களைப் பெற்றும் இழந்தும் புதுக்கியும் வந்துள்ளது என்பதைச் சுட்டுவதாக இந்த நூல் அமைகிறது. இந்த நூலில் வைணவ மெய்யியல்களான விஷிட்டாத்வைதம், துவைதம் பற்றிய ஆய்வுகளும் இணைக்கப்பட்டிருக்கலாம் எனும் கருத்து முன்மொழியக்கூடும். அவை தெரிந்தே விடப்பட்டுள்ளன. அவை தமிழ் மூலங்களை ஏற்றுக்கொண்டாலும் சமஸ்கிருதத்திலேயே முன்வைக்கப்பட்டன. சமணம், ஆசீவகம், பௌத்தம் என்பன சமஸ்கிருத, பாளி மொழிகளை மூலமாகக் கொண்டமையினும் தமிழ்ச் சூழலுக்கேற்ப தமிழில் முன்வைக்கப்பட்டன என்பது கவனத்துக்குரியது.

கட்டுரை

ராஜேஸ்மணாளன்



# போதையின் பிடியில் இலங்கை

**அதிரடியாக ஒரு செய்தி..**
போதைப்பொருள் கடத்துபவர்களுக்கு சாவுத் தண்டனை வழங்க வேண்டும் என்று அதிரடியாகக் கூறியிருக்கிறார் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்! இதை வெறும் தீர்மானமாக இல்லாமல், சட்டமாக்கி விட்டால், கடத்தல் காரர்கள் அச்சுறுத்தப்படுவார்கள். குறைவார்கள்.
உடல் வேதனையைக் குறைக்க மருத்துவர்கள் எழுதிக் கொடுக்கும் ஒப்பியொட்ஸ் ஓர் ஆபத்தான மருந்து. அஸ்பிரினுக்கும் தணியாத உடல் வலியைக் குறைக்க இதை மருத்துவர்கள் எழுதிக் கொடுக்கிறார்கள். இதை ஒரு தடவை எடுப்பவர் அதன் அடிமைத் தனத்திலிருந்து மீளச் சிரமப்படுகிறார். இதன் பாவனையில் அமெரிக்கா, கனடா, ஜேர்மனி அகிய நாடுகள் முதல் 3 இடங்களைப் பிடிக்கின்றன. அண்மைய கணக்கெடுப்பில் 2.4மில்லியன் அமெரிக்கர்கள், இந்தப்போதைப்பொருளின் பிடியில் சிக்கியுள்ளார்களாம். 2016ஆம் ஆண்டில் மாத்திரம் 63ஆயிரத்து 600பேரின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. இது அமெரிக்காவின் கதை.

**இலங்கையில் என்ன நிலைமை?**
சென்றவருட இறுதியில், எடுத்த ஒரு கணக்கெடுப்பின்படி, 45ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள், ஹெரோயின் போதைப் பாவனையால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. ஆபத்தான போதைப் பொருள்களை நாடளாவிய ரீதியாகக் கட்டுப்படுத்தும் சபையே இந்தப் புள்ளி விவரத்தைத் வெளியிட்டுள்ளது. இந்தச் சபையின் உதவி இயக்குநரான பிரதீப் குமார இது பற்றித் தெரிவிக்கையில், மேற்கூறப்பட்ட தொகையில் ஆயிரம் பேர் பெண்கள் என்கிறார். இதைப் பயன்படுத்தும் பெண்கள், தாம் அறிந்தவர்களுக்கும் இதன் பாவனையைப் பரிந்துரைக்கிறார்கள் என்று பிரதீப் குமார மேலும் குறிப்பிடுகிறார்.
இங்குள்ள இளைஞர்களின் போதைப் பாவனை பற்றி ஆய்வு செய்தபோது, கிடைத்த தகவல் நம்மை அதிர வைக்கின்றது. கடந்த வருட நடுப்பகுதியில் மேற்கூறப்பட்ட அதே சபை அளித்துள்ள தகவலின்படி 2இலட்சத்து 50ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் போதைப் பாவனைக்கு அடிமைப்பட்டுள்ளார்களாம். இதில் அண்ணளவாக 50ஆயிரம் இளைஞர்கள் ஹெரோயினுக்கு மாத்திரம் அடிமைப்பட்டு இருப்பதாக இந்தச் சபையின் தலைவர், பேராசிரியர் ரவீந்திரா பெர்னான்டோ கூறியிருக்கின்றார். இந்தச் சின்னஞ்சிறிய நாட்டில், இந்தத் தொகை இவ்வளவு பெரிதாக இருப்பது கவலைக்குரியதே! அதிகாரிகளின் புள்ளி விவரங்களுக்குள் அடங்காதவர்கள் இன்னும் பலர் இருக்கலாம்! இந்த அமளி ஒருபுறம் இருக்க, பன்னாட்டு போதைவஸ்து கடத்தல்காரர்களுக்கு இலங்கை 'சகல வசதிகளும் நிறைந்த' ஒரு மையப் புள்ளியாகி இருக்கின்றது. போதைப் பொருள்களோடு பிடிபடுவது, அதிலும் வடக்கில் பிடிபடுவது, அடிக்கடி நிகழும் சம்பவமாகி விட்டிருக்கிறது.

**கடத்தல் தந்திரங்கள்**
மிகவும் சுத்தப்படுத்தப்பட்ட கொக்கெயினை இலங்கைச் சுங்கப்படையினர் 2016ஆம் ஆண்டு டிசம்பரில் பெருமளவாகக் கைப்பற்றி இருந்தார்கள். கடந்த 14 மாதங்களுக்குள் போதைப் பொருள்கள் கடத்தப்பட்ட 6கெப்பல்கள் சிக்கியிருக்கின்றன. தென் அமெரிக்காவிலிருந்தே இந்தப் பெருந்தொகையான கொக்கெயின் அனுப்பப்பட்டுள்ளது. அண்ணளவாக ஆயிரத்து 770கிலோ(இதன் பணப் பெறுமதி 140 மில்லியன் டொலர்) எடையுடைய கொக்கெயின் கைப்பற்றப்பட்டுள்ளது என்று கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் ஒரு பத்திரிகைச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்கள்.
அதாவது சீனியை அனுப்ப வேண்டிய பிரேசிலுக்குரிய ஐந்து கொள்கலன்களுக்குள் தான் இந்த 840 கிலோ கொக்கெயின் இருந்துள்ளது. இது ஆசியாவில் பிடிபட்ட அதிகூடிய அளவு போதைப்பொருள் என்ற சாதனையை நிலைநாட்டி இருக்கின்றது.
கொலம்பியாவிலிருந்து மரப் பலகைகள் அடைக்கப்பட்டு வந்த பெரிய கொள்கலனொன்றுக்குள், 928 கிலோ எடைகொண்ட கொக்கெயின்இருந்திருக்கின்றது. 2016ஆம் ஆண்டு டிசம்பரில் பிடிபட்ட இந்தத் தொகை புதுச் சரித்திரம் எழுதியது. இந்த வருடம் ஜனவரி மாதம், இந்தப் பெரிய தொகை கொக்கெயின், பகிரங்கமாக, இலங்கை விமான நிலையம் ஒன்றை அண்மித்த ஒரு கட்டடத்தில் எரியூட்டி அழிக்கப்பட்டுள்ளது.

**சட்ட, ஒழுங்கமைப்பு அமைச்சரின் கருத்து**
இலங்கையை மையமாக வைத்து, அதனூடாக இந்தியாவுக்குப் போதைப்பொருளைக் கடத்துவதே இவர்கள் நோக்கமென்று சட்ட, ஒழுங்கமைப்பு அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார வெளிநாட்டுச்செய்தியாளர்களுக்குக் கூறியுள்ளார். கொக்கெயினுக்கான சந்தை இலங்கையில் இல்லை. இது ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பப்பட இலங்கை வந்திருக்கலாம் என்று இன்னோர் அதிகாரி அபிப்பிராயப்பட்டுள்ளார். கடந்த வருடம் மே மாதம் சிலாப மாவட்டப் பொலிஸார் 198கிலோ எடை கொண்ட ஹெரோயினைக் கைப்பற்றி இருந்தார்கள். இதன் சந்தை மதிப்பு 2பில்லியன் ரூபாய் என்று கணிப்பிட்டுள்ளார்கள். புத்தளப் பிராந்தியப் புலனாய்வுப் பிரிவினரே இந்த வேட்டையை நடாத்தி இருக்கிறார்கள். ஒரு தனிப் பொலிஸ் பிரிவினரால் வேட்டையாடப்பட்ட, அதிகூடிய அளவு இதுவென்று சொல்லப்படுகின்றது. கொகுவல எனுமிடத்திலுள்ள சரணன்கார வீதியில் இந்த வருடம் ஜனவரி 20ஆம் திகதியன்று ஹெரோயின் வைத்திருந்தார்களென அறுவர் கைதாகி இருக்கிறார்கள்.. இவர்கள் களுபோவில, வெள்ளவத்தை ஆகிய இடங்களில் வசிப்பவர்களென அறியப்படுகின்றது. மார்ச் 20ஆம் திகதி அன்றைய கொழும்பு உயர் நீதிமன்றத் தீர்ப்பொன்றின்படி, 62 வயதுடைய போதைப்பொருள் வியாபாரியான மொகமட் பைஸர் என்பவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்ப ட்டுள்ளது.

**வடக்கில் கடத்தல்களும் கைப்பற்றுதல்களும்**
கடந்த வருடம் மே மாதம் காங்கேசன் துறைக் கடற்கரையோரப் பகுதியில் 9.3கிலோ ஹெரோயின் அகப்பட்டுள்ளது. இலங்கைக் கடற்படை தனது வழமையான ரோந்தில் ஈடுபட்டபோது, இந்தப் பொதிகளைக் கைப்பற்றி இருக்கிறது. 9 வேறுபட்ட பொதிகளில், தண்ணீர் புகாமல், இவை இருந்துள்ளன. கடந்த வருடம் நவம்பர் 10ஆம் திகதியன்று வவுனியாவில் 2 கிலோ 266கிராம் எடை கொண்ட ஹெரோயின் வவுனியா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. பேருந்து ஒன்றில் ஏறிக்கொழும்பு பயணமாக முயற்சித்தபோது சந்தேக நபர் கைதாகி இருக்கிறார். சென்ற வருடம் டிசம்பர் 22இல் எட்டுப் பேரை போதைப் பொருள் வியாபாரி 'மக்கண்டூர் சுடேஷ்' என்பருடன்
தொடர்பு உள்ளவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்துள்ளார்கள்.. இவர்கள் நீர்கொழும்பில் கைதாகி இருக்கின்றார்கள். பாதாள உலகத்துடன் தொடர்புடைய பெரிய போதைவஸ்து வியாபாரியே. இந்த சுடேஷ் என்று சொல்லப்படுகின்றது. கைது செய்யப்பட்டவர்கள் வசம் வெடிமருந்துகள், 10 கிராம் ஹெரோயின், 940கிலோ கேரளா கனாபிஸ் என்ற போதைப் பொருள்கள் இருந்துள்ளன. இந்த வருடம் பெப்ரவரி மாதம் இரு இந்தியர்கள், ஹெரோயின் வைத்திருந்த குற்றத்துக்காகத் தலைமன்னாரில் வைத்துப்பிடிபட்டுள்ளார்கள். 423 கிராம் ஹெரோயினும், 157 கிலோஎடைகொண்ட பீடியும் இலங்கைக் கடற்படையினரால்பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இந்தியாவின் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 19, 21வயது இளைஞர்கள் இந்தக் கடத்தலில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்!



**'உதயனின்' செய்திப்பாய்ச்சல்...**
'உதயன்' பத்திரிகையின் பிந்திய செய்தியொன்றின்படி(மார்ச்27) வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டு சட்டவிரோத போதைப் பாவனைக்கான தண்டப் பணமாக 16இலட்சத்து 16 ஆயிரத்து500ரூபா பெறப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்டத்தின் மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி அசோக திலகரத்தின கூறியுள்ளமை தெரியவருகிறது. வவுனியா மாவட்டத்தில் கடந்த வருடத்தில் மாத்திரம் சட்ட விரேதமான கள்ளு, கசிப்பு உற்பத்திகள் மற்றும் சாராய விற்பனைகளில் ஈடுபட்டவர்கள், கஞ்சா கடத்தல் மற்றும் விற்பனைகளில் ஈடுபட்டவர்கள் மீது 507 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றிவளைப்புகளின்போது மாத்திரம் 21கிலோ கஞ்சா கைப்பபற்றப்பட்டிருப்பதாகவும், இந்த அதிகாரி கூறியிருக்கின்றார்.

**போதையின் பிடியில் வவுனியா...**
வவுனியாவும் நன்றாகவே தள்ளாடுகின்றது. பள்ளிப் பிள்ளைகளிடத்தேயும் போதைப் பாவனை அதிகரித்து வருவதாகக் கூறும் செய்திகள் எம்மை மிரட்டுகின்றன. பிந்திய இணையச் செய்தியொன்றின்படி, இலங்கையின் தெற்கிலுள்ள நொச்சியாகம என்னுமிடத்தில், இருவரை, பள்ளிப் பிள்ளைகளுக்கு போதை வஸ்து மாத்திரைகள் விற்பனை செய்தார்கள் என்ற சந்தேகத்தில் பொலிஸார் கைது செய்துள்ளார்கள். பிடிபட்ட இருவரில் ஒருவரான 21வயது இளைஞன் கைவசம் 100எக்ஸ்ராஸி மாத்திரைகள் இருந்துள்ளன. இன்னொரு உலகத்துக்குக் கொண்டுசெல்லும் பரவச மாத்திரை இது. மேலை நாடுகளில் இளசுகள் இந்த மாத்திரைகளை விழுங்கி விட்டு இரவு விடுதிகளில் இரவிராக ஆடுவதுண்டு. பெப்ரவரி மாத இறுதியில் கொழும்பில் 16ஆயிரத்து 256 பொலிஸார் கொண்ட ஒரு படை, அதிரடியாக பரவலாகச்சோதனைகளை மேற்கொண்டதில், 2ஆயிரத்து 564பேர் பல்வேறு குற்றங்களுக்காக அதிகாரிகளிடம் சிக்கினார்கள். குடிபோதை யில் வாகனம் செலுத்திய குற்றம் தொடக்கம் போதைப் பொருள்கள் வைத்திருந்தமை வரையிலான பல்வேறு குற்றச் சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப் பட்டன.

**பக்க விளைவுகள் பயங்கரமானவை!**
இலங்கை போதைப் பொருள் பாவனையால் நன்றாகவே சீரழிகின்றது என்பதை, அடுக்கடுக்காக, தொடராக, நாடெங்கிலும் பரவலாக இடம்பெறும் நிகழ்வுகள் நமக்கு நன்றாகவே எடுத்தியம்புகின்றன. இந்தச் சின்னஞ்சிறிய நாடு எப்படித் தாக்குப் பிடிக்கப் போகின்றது? தள்ளாட்டம் பெரிதாக இருக்கும்போது, எங்கே சாய்ந்து நின்று தன்னைச் சுதாகரித்துக் கொள்ளப் போகின்றது? குருவியின் தலையில் பனங்காயை வைத்ததுபோல, இந்தச் சிறு நாட்டைப் போதை என்ற முதலை நன்றாகவே பற்றிப் பிடித்திருக்கின்றது. இதன் சுமை பெரிய அழுத்தத்தைக் கொடுக்கின்றது. இந்தப் பாவனை பஞ்சமாபாதகங்களையும் எந்தவித தயக்கமுமின்றி செய்ய வழி சமைக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இதன் பாவனை யால் மிருகமாக மாறும்மனிதன்கொலை, கொள்ளை, வன்புணர்ச்சி என்று எதையுமே தயங்காமல் செய்வதற்குப் பின்வாங்க மாட்டான் என்பது திண்ணம். தள்ளாட்டம் காணும் இந்த நாட்டின் போக்கு என்று மாறும்? எப்படி மாறும்? புரியாத புதிர்தான்!

# ஏது செய்யப் போகிறாய்

கந்தபுராண கலாச்சாரம்
களையப் படுகிறதாம்!
காளையர், கன்னியர்
கட்டின்றித் திரிகின்றனராம்!

மேல் நாட்டு மோகத்தால்
தன்மானங்கள் மலிகிறதாம்!
பாவையர், மங்கையர்
பண்பாட்டைத்
திரிக்கின்றனராம்!

மூத்த வயதோர்கூட
மோசம் போகின்றனராம்!

மாற்று இனத்தோரும் வந்து
மகிழ்ந்து செல்கின்றனராம்!

நாகரீகத் தோரணையில்
நம் மண்
நாசமாகிப்போகிறதாம்!
எச்.ஐ.வி. தொற்றானோர்
எண்ணிக்கை
அதிகரிக்கிறதாம்!

யாழிசைக்கும் குடாநாடே
ஏது செய்யப்போகிறாய்?

கவிதை
விவேகானந்தனூர் சதீஸ்





கப்ரன் மலரவன்

# போர் உலா





**23**

ஆம் திகதி மாலைப்பொழுது ஏக்கமாகச் சரியத் தொடங்கியது. இன்னும் வேள்விகள் நடைபெறுகின்றன. சூரியன் சிவப்பாகக் கொப்பளித்தான். இனிமையான, பறவைகள் ஒலிகளைக் கேட்க முடியவில்லை. இன்னும் அவை எங்கோ ஒதுங்கியிருப்பினும் நாளை அவை பூபாளத்தை அமைதிப் பொழுதில் மீட்டும். அது புனித ஆன்மாக்களின் சமாதிகளைத் தழுவிச் செல்வது நிச்சயம். இன்று அது மேலை வானத்தில் தூரத்தே தெரியும் காடுகளின் உச்சிகளைக் கடந்து உள்ளே புகுந்து மறைந்து கொண்டது. இருட்போர்வை வலையாக விரிந்து கிடந்தது.

நேற்றைய சண்டையைவிடக் குறைவான பீரங்கிகளுடன் தாக்குதலைத் தொடங்குவதற்காகக் கனகராஜன் குளத்திலிருந்து மாலை 6மணிக்குப் புறப்பட்டோம். சந்தியில் திரண்டு நின்ற மக்கள் எம்மை வழிமறித்து உணவுப் பொருள்களை, சிற்றுண்டிகளைத் தந்து வாழ்த்தி அனுப்பினர். எமது வாகனம் ஊரத் தொடங்க, பின்னால் இருந்தவன் சத்தமிட நிறுத்திப் பார்தோம். வெண் துகிலுடன் ஏறத்தாழ 75வயதுடைய மூதாட்டி 'குடுகுடு' வென வேகமாக வந்தாள். கையில் உரப்பையில் செய்யப்பட்ட ஒருபையுடன்... இறங்கிமூதாட்டியிடம்ஓடினோம்.

"என்ன ஆச்சி ?"

"நடந்துதான் வந்தனான். நீங்கள் வெளிக்கிட்டியள், எல்லோரும் இஞ்ச கிட்ட வாருங்கோ."

பைக்குள் ஒரு பூவரசமிலையில் சுற்றியிருந்த திருநீற்றை எடுத்துப் பூசிவிட்டு, கன்னத்தில் முத்தமொன்றைப் பொக்கை வாயால் வைத்து அணைத்தாள். சண்டையின்போது ஏற்பட்ட களைப்புகள், உடல் நலக்குறைவு, சகபோராளிகளை இழந்த சோகம் யாவும் நொடிப் பொழுதில் மறைந்து, மனம் காற்றில் தவழ்தல் போன்ற உணர்வு. முத்த ஸ்பரிசம் மனதைக் கரைந்தோடச் செய்தது. "கெட்டித்தனமாய்ச் சண்டை பிடிச்சு, வெற்றியோட வரவேணும். நான் அந்தக் குடிலில இருப்பவள்." தழுதழுத்த குரலில் அந்த ஈழத்தாய் கூறினாள். இதைவிட வேறு என்ன பேறு பெற்றோம் என்பதைப் போலிருந்தது.

"இன்றைக்கு எப்படியும் அவங்களைக் கொன்று இடத்தைப் பிடிக்காம வரமாட்டம் அம்மா."

உணர்ச்சியோடு ஏகமாக எல்லோரும் சொன்னோம். ஒவ்வொருவருக்கும் பைக்குள்ளிருந்த பொங்கலை எடுத்து வாய்க்குள் தீத்தி விட்டாள். அந்த அன்பான தாய். எமக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அந்த வெண்பொங்கல் சர்க்கரைப்பாகுவாய் இனித்தது. உடலில் இழந்து போன பலம் அனைத்தும் புத்துணர்வு பெற்றதாய் இருந்தது. சோர்ந்து கிடந்த நாடிகள் வேகமாகத் துடித்தன.

எந்த உணவாலும் வெற்றியாலும் பெறமுடியாத சந்தோசத்தை இந்தத் தேசப்பற்று மிகுந்த தாய் என்ன வாய் ஊட்டி விட்டாள்! நாம் மறையும் வரை பார்த்தபடியே நின்றாள். அன்னையின் வடிவிலே இருட்டினுள் வெள்ளைச் சேலையுடன் அம்மா தூரத்தே தெரிந்தாள். என்னையறியாது இருதுளி கண்ணீர் உகுத்தேன். இப்படியான தாய்கள் இருக்கும்வரை நாம் என்றுமே ஓயப்போவதில்லை. அருகிலிருந்த கராட்டி மாஸ்ரர் அம்மாவின் திக்கையே வெறித்துப் பார்த்த வண்ணம் இருந்தார். முகத்தில் ஒருவித சந்தோசத்தை அனுமானிக்கக் கூடியதாக இருந்தது. "எதிரிகளின் பாசறையைத் தேடிப்போகிறோம்" மிருதுவாகப் பாடுவது கேட்டது. எம்மைக் கடந்து சிவப்புப் புள்ளிகள் வரிசையாகப் போவது தெரிந்தது.

"மச்சான் நிற்பாட்டடா... கெலி அடிக்கிறான்" என்று உரத்த குரலில் சத்தமிட, வெளிச்சத்தை அணைத்து ஒரு முதிரை மரத்தடியில் நிறுத்தினான். அந்த வானூர்தியோ இலகுவில் விட்டுவிடவில்லை. சுற்றிச் சுற்றி வந்து தாக்கினான். சிவப்பு நிற ரேசர் ரவைகள் தார் வீதியில் பட்டுத் தெறித்து, பின் மெலெழுந்து மீண்டும் கீழ்விழுவது சிவப்பாகத் தெரிந்தது. சில ரவைகள் வீதியில் பட்டு வெடித்தன. நாம் வீதியருகில் உள்ள நீர்பாயும் கால்வாய்க்குள் இறங்கி நின்றோம். "றோட்டைத்தான் உழுகிறான்!" ஆரோ சொல்வது கேட்டது. மீண்டும் ஒரு தடவை வீதி நீட்டுக்கு ரவைகளைப் பாய்ச்சி வர, இரு ரவைகள் ரைக்ரரிலும் பீரங்கியிலும் புடுவதைச் சத்தத்தை வைத்து அனுமானிக்கக் கூடியதாக இருந்தது. ஸ்....ஸ்... இரைந்துவர "5 இஞ்சி போட்டுட்டான். எல்லோரும் கவர் எடுங்கடா" என்ற சத்தத்தில் இரு செல்கள் வீழ்ந்து சிதறின.

நேரம் 7.35 காட்டியது.

"இனிப் பார்க்கேலாது! அடிச்சா அடிக்கட்டும்! இதயன். ரைக்ரரை எடடா!" என்றவுடன் இதயன் துணிவாக வேகமாக ஓட்டிச் செல்ல, வீதியின் இரு புறமாகவும் ஓடத் தொடங்கினோம். உலங்கு வானூர்தி கலைத்துக் கலைத்துச் சுட்டபடி வந்தான். தலைக்கு மேல போறான். கழட்டிப் போட்டுடுவான் கவனம் என்று சொல்ல, கும் கும் எனச் செல்கள் 100 யார் பின்புறமாக வீதியில் வீழ்ந்து வெடிக்கச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஓடினோம். அது நேர்கோட்டில் சென்றது. திரும்ப உசாரானோம். நன்றாக கரைகளில் பதுங்கிக் கொள்ள 50 கலிபர் ரவைகள் வீதியைத் துளைத்துச் சென்றன. இதயன் ரைக்ரருடன் காவலரண் புறமாகத் திரும்புவது தெரிந்தது. வயல்வெளிகளூடாக, பற்றைகளூடாக, தண்டவாளத்தைக் கடந்து ஓடினோம். உலங்குவானூர்தி துரத்தியபடி வந்தது. திடீரென விரைவுபெற்று உறுமியது. அடுத்து 'ஸ்...ஸ்...' என இரு ரொக்கட் மோட்டார்கள்! தலைக்கு மேலாகச் சென்றுமரமொன்றில் மோதிச் சிதறின. "ஆ...."என மாஸ்ரர் முனகியபடி ஓட, என்ன நடந்தது? வினவுவதற்குள் ரவைகள் உஸ்...ஸ்...எனத் துரத்தின. மிகுந்த கவனத்துடன் வந்தடைந்தோம். மாஸ்ரரின் கையில் சின்ன உருக்குத்துண்டு ஏறிக் கிடந்தது. இழுத்தெடுத்த பின் பீல்ட் கொம்பிரசால் இறுக்கிக் கட்டினேன்.

சரியாக 8.2இக்கு முதலாவது பீரங்கி வேட்டைத் தீர்க்க ஆரம்பித்தோம். எதிரி உடனடியாக ரவைகளைப் பாய்ச்சி எதிர்ப்பைக் காட்டினான். நேற்றைய உக்கிரம் இன்று இருக்கவில்லை. ரவைகளை எண்ணியே பாய்ச்சினான். செல்களையும் ஆர்.பி.ஜி.களையும் ஓரள வாக இலக்கு நோக்கி ஏவினான். நாம் இன்றைய இலக்காகப் பிரதான முகாமையும் நெல் சந்தைப்படுத்தும் சபையையும் தேர்ந்து தாக்கினோம். நேற்றைய சண்டையை விட இன்று உலங்கு வானூர்திகளும், குண்டு வீச்சு விமானங்களும் பெரும் பிரச்சினையைத் தந்தன. உண்மையில் நாம் மயிரிழையில்தான் தப்பினோம். ஏனெனில் வீசப்பட்ட குண்டு ஒன்று நாம் பதுங்கிய நிலையில் எமக்கு 10மீற்றர்களுக்கு அப்பால் வீழ்ந்து சும்மா கிடந்தது! அது எதிரிக்கொரு துரதிர்ஷ்டமே எனலாம். அடுத்து நாம் பீரங்கியை இயக்க வேண்டி இருந்ததால் அதிர்வில் அந்தக் குண்டு வெடித்திடலாமென்பதால் அதை அகற்றி, ஒரு காப்பரண் இட்டோம். இத்தனைக்கும் உலங்கு வானூர்த்திகள் இரண்டு, 50 கலிபரையும் செல்களையும் பயன்படுத்தி எம்மைத் தீர்க்க முயன்றன. இன்றைய தினம் எமது தரப்பில் இரண்டு போராளிகள் எதிரியின் ஆர்.பி.ஜி எறிகணை யினால் காயமடைந்தனர். இருவரையும் மருத்துவக் குழு விடம் ஒப்படைத்த பின் தாக்குதலை விரைவு படுத்தினோம்.

**20**

12.54 மணி.

இறுதிச் செல்லை பிரதான முகாம் நோக்கி ஏவினோம். மேலே பச்சையும் சிவப்புமாகக் குண்டுவீச்சு விமானங்கள் இரண்டு சுற்றியபடி இருந்தன.

12.59மணி.

பீரங்கிகளை ஓய்வடையச் செய்தபின் உடனடியாகக் காப்பு எடுக்கும்படி தளபதி கட்டளையிட "ட்ருங்" என்ற சத்தத்துடன் வீதியில் எதிரி இட்டு வைத்திருந்த அரண்களை இடித்துத் தள்ளியபடி பெரிய வெளிச்சத்துடன் வாகனம் உறுமியது.

(தொடரும்)



# வெள்ளம்

சிறுகதை

இராஜ அரியரத்தினம்



ஈழகேசரி, ஈழநாடு, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராக விளங்கியவர் இராஜ அரியரத்தினம். எழுதிய சிறுகதைகள் குறைவு. ஆனால் தரமானவை. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஓர் இலக்கியப் பாலமாக இராஜ அரியரத்தினம் விளங்கியுள்ளார். 'கல்கி பிறந்தார்' இவர் எழுதிய நூல்.

மின்னல் மின்னி இடியிடித்தது. தொடர்ந்து நிகழ்ந்த ஊழிக்கூத்தைப் படம்பிடிக்கவேண்டியதில்லை. இப்படித்தான் வானம் பார்த்து நிற்கும் யாழ்ப்பாணத்தில் இருந்தாற்போல் இருந்துவிட்டு வெள்ளம் வரும். ஒரு கலக்குக் கலக்கும். மக்களை அல்லோல கல்லோலப்படுத்திவிட்டு அகப்படுகின்ற எல்லாவற்றையும் அள்ளிக் கொண்டு போய்விடும்.

சிங்கப்பூர் பணத்தில் முளைத்த கல்வீடுகள் நிமிர்ந்து நிற்கும். ஏழை மக்களின் குடிசைகளைச் சின்னா பின்னமாக்கித் தலை சாய்க்க இடம் இல்லாமல் தவிக்கச் செய்துவிடும். கல்வீடுகளில் இருந்த பணக்காரர்களையும் அந்த முறை வெள்ளம் பீதி கொள்ளச் செய்துவிட்டது.

இத்தனைக்கும் கந்தப்பருடைய குடிசை அசையவில்லை! திடற்பூமி. வெள்ளம் வந்தாலும் எங்கேயோ ஓடி மறைந்துவிடும்.

காலையில் எழுந்ததும் கந்தப்பருக்குக் கண்ணில் பட்டது வெள்ளத்தில் நீச்சுப்பழகும் ஒரு நுகம். சுருட்டுப் பிடிப்பதையும் மறந்து கொட்டிற் பக்கம் போனார். நுகம் அங்கில்லை. சரி, என்று சொல்லித் தவித்துத் திரிந்த நுகத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டுவந்து பத்திரமாக வைத்து விட்டார்.

ஒரு பசுவும் இரண்டு நாம்பன்களும் சிலிர்த்துக் கொண்டு வெள்ளத்தில் நின்றன. அவிழ்த்து அக்கம் பக்கத்தில் கட்டுவது முடியாத காரியம்.

கந்தப்பர் 'லொக் லொக்' என்று இருமிக்கொண்டு, மாடுகளைப் பார்த்தபடி நின்றார்.

கந்தப்பர் இப்போதெல்லாம் எலும்பும் தோலுந்தான். ஆளில் ஒரு பிடி இரத்தமில்லை. நரம்புகளெல்லாம் உடம்பிலே பச்சப் பசெலென்று நெளிந்து மிதந்து கிடந்தன. போதாக்குறைக்குக் கொடிய இருமலும் அவரை ஆட்டும் வரை ஆட்டி வைத்தது.

சிவகாமி அப்போதுதான் பாயைச் சுருட்டி அசைவில் வைத்துவிட்டுப் புகைச் சட்டியைத் தூக்கிக் கொண்டு அடுக்களைப் பக்கம்போனாள். வாயில் சுருட்டில்லாமல் கந்தப்பர் அன்று சோர்ந்து நின்றது சிவகாமிக்குப் புதுமையாகவிருந்தது.

"வெள்ளத்துக்கை நில்லாதே அப்பு - அது கொஞ்ச நேரத்தால் வத்திப்போம். நீ வந்து புகைச் சட்டியிலை காலைக் காச்சு" என்றாள் மகள்.

கிழவனுக்கு அப்போதுதான் சுருட்டின் ஞாபகம் தட்டியது. "தலை மாட்டுக்கை பொயிலை கிடக்கிது. பாதி கிள்ளிக் கொண்டு வா பிள்ளை" என்று சொல்லித் திண்ணையில் போய் கையை ஊன்றிக் குந்தினாரோ இல்லையோ, வெள்ளத்தை விழுங்கிக் கிடந்த திண்ணை, அழுகிய பழம்போல் நெகிழ்ந்துவிட்டது.

அடுக்களைக்குள் இருந்த சிவகாமி "அப்பு" என்று சொல்லிச் சிரித்தும் விட்டாள்.

அப்பு எரிந்து புகையவில்லை. அடிச் சுருட்டைச் சப்பிச் சப்பிப் புகை விட்டுக்கொண்டிருந்தார். "மோனே, காவோலை விழக் குருத்தோலை சிரிக்குமாம்" என்று சொல்லி ஒரு மாதிரிச் சமாளித்து ஒல்லித் தேகத்தைத் தூக்கிக் கொண்டு, எழும்பி விட்டார்.

மகள் அடுக்களையிலே தேநீர் ஆயத்தம் செய்து கொண்டு இருந்தாள்.

இப்படித்தான் பெருமழை பெய்து 'விர்' என்று குளிராக இருந்தால் கந்தப்பருடையகுடிசையிலும் தேயிலை வாசனை - கமகமக்கும்.

"இந்தா அப்பு, இருமலுக்குமிது நல்லது. சுடச் சுடக் குடித்தாற் சுகமாகவிருக்கும்" என்று சொல்லிச் சிரட்டையைக் கையில் கொடுத்து முட்டிக்குள்ளே கிடந்த தேநீரைப் பக்குவமாக ஊற்றினாள், மகள். கிழவர் சீனியை உள்ளங்கையில் கொட்டி, நாக்காற் தடவி பொச்சடித்துக் குடிப்பதை மகள் பார்த்துக்கொண்டிருந்தாள்.

தாயார் இறந்து இவ்வளவு காலமாகியும் அவள் தகப்பனாருக்குச் செய்யவேண்டிய தொண்டுகளை மறந்துவிடமாட்டாள்.

000

சிவகாமியின் முகத்திலே அழகு பொங்கி வழிந்துகொண்டிருந்தது. ஒளி தட்டும் விழிகள். மாந்துளிர் மேனி. சூரியனின் கூரிய அம்புகள் அவளுடைய மார்பைக் கிழித்துக் கொண்டு போகும் வேளைகளில் எல்லாம், அவளுடைய உடல் அப்படியே பள பளக்கும். பொன் தோடுகள் காதுகளில் ஒட்டிக்கொண்டு கிடந்தன. ஒரு சின்னப் பொன்மூக்குத்தி அவளுடைய முகப்பொலி வுடன் போட்டியிட்டது. கூந்தலை அள்ளி வாரி ஒரு பெரிய கொண்டை கட்டியிருந்தாள். கொத்துக் கொத்தாக மலர்கள் அவளுடைய கொண்டையை அலங்கரிக்கவில்லை. சேலையைக் கட்டி இடுப்பிலே இறுக்கமாகச் செருகிக் குடமும் கையமாகக் கிணற்றடிக்குச் செல்லும்போதும், தண்ணீருடன் திரும்பும் வேளைகளிலும், சிவகாமி ஒரு கைவீசி ஒய்யாரமாக அடி எடுத்து வைப்பதே ஒரு தனி அழகு.

இதையெல்லாம் கண்டு அவஸ்தைப்பட்டு, உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தவியாய்த் தவிக்க, அக்கம் பக்கத்தில் ஒரு வாலிபன் இருந்தானோ, இல்லையோ, கடவுளுக்குத்தான் தெரியும். அப்படி யில்லா விடில், அந்தக் கடவுள் அவளிடம் ஏன் அவ்வளவு அழகையும் வாரியிறைத்திருக்க வேண்டும்?

## பத்தாயம்

மாதத்தின் மூன்றாவது வாரத்தில் ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர் ஒருவருடைய கதை மீள் பதிப்பாவது வழமை. அந்தவகையில் அமரர் இராஜ அரியரத்தினத்தின் 'வெள்ளம்' இம்முறை பிரசுரமாகிறது.

0000

கிழட்டுக் கட்டை, சிரட்டையை இறப்பிற் செருகிவிட்டு, சுருட்டைப் பிடித்துக்கொண்டு அடுக்களைக்குள் நுழைந்தது நெருப்புக்காக.

"மேனே, ஒரு நாளுமில்லாத பெருமழை. வயல் என்னபாடோ தெரியாது. போன கிழமை அங்கினை ஒரு மாதிரி எல்லாம் பச்சையாய்க் கிடந்தது. இந்தமுறை கடவுள் கண் பார்த்துவிட்டார்; குறையில்லை என்று கிடக்க வெள்ளம் அடிச்சுக்கொண்டு வந்திட்டுது. ஒருக் காப்போய்ப் பாத்துக்கொண்டு வாறேன். ஆடுகாற் சுப்பர் வந்தால் இருக்கச் சொல்லு" என்று சொல்லிக் கிழவர் தலைப்பட்டையை எடுத்துத் தட்டித் தலையிற் போட்டுக்கொண்டு வயற்பக்கம் திரும்பினார்.

"அப்பு நல்ல வெள்ளம், இப்ப என்ன அவசரம் நீயும் போகவேணுமெண்டு நிற்கிறாய். வாய்க்காற் பக்கம் போகும்போது கவனமாகப் போ. இந்தா இந்தத் தடியையும் கொண்டுபோ" என்று மகள் சொல்லிக் கிழவனுக்கு ஒரு சிறு துண்டு பனாட்டும் தேங்காய்ச் சொட்டுகளும் கொடுத்து அனுப்பினாள்.

000

கந்தப்பர் வீட்டுப் பக்கம் ஒரு குருவியும் தலை காட்டுவதில்லை. இத்தனைக்கும் அந்த மனுசன் ஒரு பொல்லாத ஆள் அல்ல. தானும் தன் பாடும். ஆனால், ஆடுகாற் சுப்பர், கந்தப்பரைக் கண்டு அரட்டைக் கச்சேரி வைக்காமல் விடுவதில்லை.

ஏன் அம்மாக்குட்டியும் சிவகாமியிடம் அன்பு வைத்திருந்தாள். "அப்படிச் செய் மேனே" என்று அம்மாக்குட்டிதான் சிவகாமிக்குப் பாடம் சொர்லிக் கொடுப்பது. அப்பெண் ஓர் ஏழை. என்றாலும் நல்ல மனுஷி.

000

அந்த வெள்ளத்தைத் தாண்டி ஒரு மாதிரி வயற்பக்கம் சேர்ந்து விட்டார் கந்தப்பர். கிழடு தட்டிய காலத்தில் இப்படியெல்லாம் வெள்ளத்திலே நீந்த வேண்டியிருந்தது. அந்த உயிருக்கு! வயல் இருந்ததாகத் தெரியவில்லை. வெள்ளம் எல்லாவற்றையும் விழுங்கிக் கக்கிக் கொண்டு பாய்ந்தது. செத்த பசுக்கன்றும் ஒரு கறுத்த நாயும் மரக் கிளைகளுடன் சிக்குண்டபடி கிழவனை நோக்கி வந்துகொண்டிருந்தன. சொற்ப தூரத்திலே ஒரு குடில் மிதந்து திரிந்தது. குடிலின் உச்சியில் ஒரு சேவலும் பெட்டைக் கோழியும் கூனிக் குறுகிக் கொண்டிருந்தன.

கந்தப்பர் நாவல் மரத்தைக் கண்டுவிட்டார். மரத்தருகேதான் வாய்க்கால் என்பது அவருக்குத் தெரியும். வாய்க்காலைக் கடந்து விட்டால் முதலில் கால் படுவது கந்தப்பருடைய நிலத்தில். ஆனால், அங்கே எதற்காகப் போகவேண்டும்? நீச்சுப் பழகவா? கிழவனுக்குக் குளிர் 'வெடு வெடு' என்று நடுக்கங் கொடுத்தது.

வாய்க்காற் பக்கம்போய்க் கால் வைத்தாரோ, இல்லையோ, 'குபுக்'கென்று சறுக்கி விழுந்தார்! வாய்க்கால் வரம்பு இருந்த இடமும் தெரியாமல் வெள்ளத்தோடு அள்ளுப்பட்டு விட்டது. அந்த இடத்தைப் பார்த்துத்தான் கந்தப்பரும் கலை வைத்தார். "வாய்க்காற் பக்கம்போகும்போது கவனமாய்ப்போ" என்று சிவகாமி ஏற்கனவே சொல்லியிருந்தாள்.

சிவகாமியும் அடுக்களையும் கந்தப்பரின் மனக்கண் முன் மின்னி மின்னி மறைந்தன.

திக்குமுக்குப்பட்டு எழுந்துவிடலாமென்றால், அது அவரால் முடியவில்லை. அந்தப் பக்கம் ஒரு குருவி கூடப் பறக்கவில்லை. தூரத்தில் எங்கோ ஒரு ஆந்தை அலறியது. மகள் கொடுத்த தடியைப் பிடித்தபடி கந்தப்பர் செத்துக்கொண்டிருந்தார்.

000

சிவகாமி 'அப்பு'வைப் பார்த்த வண்ணம், கொதித்துப் பறக்கும் உலைக்கு அரிசி போடுவதற்காக, அரிக்கன் சட்டியில் அரிசியை அலசிக் கொண்டிருக்கிறாள். பக்கத்திலே ஒரு சட்டியில் பிட்டுக்காக, ஒடியல் மா தண்ணீரில் ஊறுகிறது.

அப்புவைக் காணவில்லை. ஆடுகாற் சுப்பர் வருவார், அவரிடம் சொல்லி வயலுக்கு அனுப்பலாம் என்றால் அவரும் வந்தபாடில்லை.

அதிக தூரத்தில் இருக்கும் பள்ளன் ஒருவன் ஒருநாளுமில்லாத திருநாளாக அன்று வந்தான்.

"நாச்சியார் கமக்காரன் எங்கே?" என்றான் பள்ளன்.

'வயலுக்குப்போட்டார், இன்னும் வரயில்லை' என்றாள் சிவகாமி. பள்ளன் நில்லாமல் போய்விட்டான் அம்மாக்குட்டிகூட அன்று வர அவ்வளவு நேரமாகி விட்டது. "அப்பு எங்கே?" என்றாள்.

"வயலுக்குப் போட்டார். ஆடுகாற் சுப்பர் வந்தால் அப்புவைப் பாத்து வரச்சொல்லவேணும்"

"ஓம் பிள்ளை ஒருக்கா அனுப்பிவிடு" என்று சொல்லிவிட்டு அம்மாக்குட்டி பறந்து சென்றுவிட்டாள்.

000

ஆடுகாற் சுப்பர் கந்தப்பரின் வீட்டுக்குப் போகவில்லைத்தான். ஆனால், வெள்ளத்தின் வேடிக்கையைப் பார்க்கலமென்று வாய்க்காற் பக்கம் போனவர், கந்தப்பரை அங்கு கண்டு கண்ணீர் வடித்தார். சுப்பரின் கண்ணீர்த் துளிகள் வெள்ளத்துடன் கலந்து கொண்டன. அவர் அங்கும் இங்கும் பார்த்தர். ஒருவருமில்லை. கந்தப்பருடைய தலைப்பட்டை மாத்திரம் தண்ணீரிலே தவித்துக்கொண்டு வருவதும் போவதுமாக இருந்தது.

நண்பனின் உடலைத் தூக்கிக் கவர்விட்ட மரமொன்றில் வைத்துவிட்டு கந்தப்பரின் குடிசையை நோக்கி, ஆடுகாற் சுப்பர் 'விறு விறு' என்று நடந்தார்.

000

வெள்ளம் வந்தது. இத்தனைக்கும் கந்தப்பருடைய குடிசை அசையவில்லை.

இப்போது ஆடுகாற் சுப்பர் கந்தப்பருடைய குடிசையை அசைக்கப் போகின்றார். அவ்வளவு வேகமாகப் போகின்றார்.

சுப்பர் போகின்ற போக்கில் குடிசை 'பொலு பொலு' என்று இடிந்து மண்ணோடு மல.. ணாகி விடுமா?

தொடர்கதை

கே.எஸ்.ஆனந்தன்

# நின்னைச் சரணடைந்தேன்

அத்தியாயம் 9

மாலை ஐந்து மணியிருக்கும். வாசலில் கார் வந்து நின்றதும் முதலில் ரவி சங்கரே இறங்கினான். அவனுடைய தங்கையும் கணவனும் இறங்கியதும் சுந்தரமூர்த்தி வாசலுக்கு வந்து அவர்களை அழைத்துச் சென்றார். வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் போலில்லாமல் ஆடம்பரமின்றிச் சாதாரணமாக வந்தவர்களைப் பார்த்து சுவேதா ஆச்சரியப்பட்டாள். வாய்திறந்து எதுவும் கேட்கவில்லை. ஆனால் சொர்ணலதா ஓடிச் சென்று சுவேதாவின் கரங்களைப் பற்றிக் கொண்டு "அண்ணி வாழ்த்துக்கள். போட்டோவில் உங்களைப் பார்தேன். நேரில படத்திலிருந்தைவிட வடிவாயிருக்கிறீங்கள். சந்தோசம். என்ர அண்ணனைப் பற்றிப் புகழக்கூடாது. அதுசரி ஒன்று கேட்டால் கோவிக்கமாட்டீர்களே?"

"என்னவேண்டுமானாலும் கேளுங்கள். உங்களுடன் நான் கோபிக்கமாட்டன்"என்று சுவதோ சிரித்துக்கொண்டு கூறினாள்.

"அது சரி இந்த முட்டாளைக் கல்யாணம் செய்ய எப்பிடிச் சம்மதித்தீர்கள்?"என்று சிரித்தாள்.

"ஆரம்பிச்சிட்டியா? வந்த இடத்திலும் உன் குறும்புத்தனத்தைக் காட்ட வேணுமா?"என்று அவள் கணவன் கூறினான்.

"இது என் அண்ணி. இவங்களிடம் கேட்காமல் வேறு யாரிடம் கேட்பது?"என்று கேட்டுவிட்டு "ஏன் மிஸ்ரர் ரவி சங்கர் நான் ஏதும் தப்பாகக் கேட்டுவிட்டேனோ?"என்றாள்.

"நீ தப்பாக எதுவும் கேட்கவில்லை. நான் ஏதாவது கூறினாலும் நீ...."என்று சிரித்துக்கொண்டு கூறினான் ரவி. அவர்கள் பேச்சைத் தடைசெய்வதற்கு என்று வந்தவர்கள்போல இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து வாசலில் நின்றனர். அவர்களைச் சுந்தரமூர்த்திக்குத் தெரியாததால் உள்ளே சென்றார்.

000

எதிர்பாராத வேளையில் எதிர்பார்க்காத ஒருவரை. அதுவும் தெரிந்த ஒரு நபரைச் சந்திக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சியிருக்கே அதை எப்படிச் சொல்ல முடியும்? சுரேஸ், ரவியைச் சந்தித்தபோது அப்படி ஒரு நிலை ஏற்பட்டது. இருவரும் சில நிமிட நேரம் எதுவும் பேசமுடியாது ஆச்சரியப்பட்டு நின்றிருந்தன ராயினும் சுரேஸ்தான் முதலில் "ரவி சேர் நீங்கள் இங்கே எப்படி?"என்றான்.

"உங்களைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன். நான் கேட்க வேண்டிய கேள்வியை நீங்கள் கேட்கிறீர்கள்?"என்றான் ரவி.

"சுரேஸ்! இவர்தான் எனக்கு நிச்சயம்செய்யப்பட்டவர். இவரை உங்களுக்கு முன்பே தெரியுமா?" என்று கேட்டாள் சுவேதா.



"சேர் எனது வாழ்த்துக்கள். நான் மன்னாரிலை வேலை பார்த்து ஒரு வாரத்துக்கு முன்பு மாற்றலாகி இஞ்சை வந்தேன். இவர்களுடைய ஒபீஸில்தான் வேலை பார்க்கிறன். மிஸ் சுவேதாவும் நானும் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்தோம். ஞாயிற்றுக்கிழமைதான் இஞ்சை வாறதாக இருந்தம். வவுனியாவிலை மிஸிஸின்ர றிலேஸன் ஒருவருக்குத் திருமணம். அதனால் இண்டைக்கு இஞ்சை வந்திட்டுப் போகலாம் எண்டு வந்தம். எதிர்பாராத சந்திப்பு. உங்களைப் பார்த்த பின்பு இரட்டிப்பு மகிழ்ச்சி. ரவி சார் உங்கள் வாழ்க்கைத் துணையாய் கிடைத்தி ருப்பது நீங்கள் இதுவரைநாள் செய்த தவத்துக்கு கிடைத்த வரம் .மேடம்" என்று கூறினான் சுரேஸ்.

"சுரேஸ்! என்னைப் புகழ்வது இருக்கட்டும். நீங்கள் எப்படியிருக்கிறீர்கள். திருமணத்துக்குக் கூட அறிவிக்கவில்லை. ஆனால், மாமா எல்லாம் கூறினார்"

"நாங்கள் சந்தோசமாக இருக்கிறம். மேடத்தின் திருமணத்துக்கு நாங்கள் தான் உதவப் போகிறம். ஆனால் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி"

அதன் பின்பு விடைபெற்றுப் புறப்பட்டனர் சுரேஸ் தம்பதிகள். அதுவரை அவர்களின் உரையாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்த சொர்ணலதா."அண்ணா வவுனியா கடையில் வேலை பார்த்தவர் பற்றிக் கூறுவீர்களே அவர் தானா இவர்?" என்றாள்.

"ஓ... நல்லவன். அப்பா, அம்மா இல்லாததால் மாமாதான் இவனைப் படிக்க வைத்து தனது மகளுக்கே கல்யாணம் செய்து வைக்க விரும்பியிருந்தார். அவள் எல்லோர் கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு யாரோ ஒருவனுடன் ஓடி விட்டாள். திருமண நாள் குறித்த அதே திகதியில் உறவுக்காரப் பெண்ணை சுரேஷுக்குத் திருமணம் செய்து வைத்துள்ளார். நல்ல மனிதர். ரோசக்காரர்கள், நேர்மையானவர்கள். இவனும் நன்றியுள்ளவன். மாமன்தான் அவனுக்குத் தெய்வம் என்று அடிக்கடி கூறுவான்" என்று அவனைப் பற்றிக் கூறிய பின்பு சுவேதா குடும்பத்தவரிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட ஆயத்தமாகினாள் சொர்ணலதா.

"அண்ணா. இவருடைய நண்பர் ஒருவருடைய வீட்டுக்குப் போக வேணுமாம். நீங்கள் அண்ணியுடன் கதைத்துக்கொண்டிருங்கள். நாங்கள் வந்து 'பிக்அப்' பண்ணிக்கொண்டு போறம்"என்றாள் சொர்ணலதா.

"எனக்கு எல்லாம் தெரியும். மச்சான் எனக்கு முன் எச்சரிக்கையாக எல்லாத்தையும் கூறிவிட்டார். நான் கடைக்குப்போக வேண்டும். சுவேதா இவள் உங்களுக்கும், எனக்கும் சிண்டு முடியப் பாக்கிறாள். இவள் சொல்வது எதையும் நம்ப வேண்டாம்" என்று கூறிவிட்டு விடைபெற்றுப் புறப்பட்டான் ரவி சங்கர்.

சுந்தரமூர்த்தியும் சிவகாமி அம்பாளும் அவர்களுடைய உரையாடல்களைக் கேட்டுச் சிரித்துக் கொண்டிருந்தனரே தவிர எதுவும் பேசவில்லை. அவர்கள் சென்ற பின் "அம்மா நீங்கள் எதுவும் சொல்லவில்லையே?" என்றாள் சுவேதா.

"சுவேதா உன்னுடைய தாத்தனார் புத்திசாலி மட்டுமில்லை. குறும்புக்காரியுமாயிருக்கிறாள். அவள் படித்த பெண். மாப்பிள்ளை எப்படித்தான் அவளுடைய குறும்புத்தனங்களைப் பொறுத்துக்கொண்டிருக்கிறாரோ தெரியாது" என்று சிரித்தாள் சிவகாமி. "ஏன் சிவகாமி, உன்னுடைய மருமகன் மட்டும் என்னவாம்? அவர் எதையும் பொறுமையாயிருந்து சமாளிக்கக்கூடியவர் என்பதை எல்லாவிடயத்திலும் காட்டிவிட்டார்" என்றார் சுந்தரமூர்த்தி.

"சுவேதா எதிலும் அவசர முடிவு செய்பவள். எப்படித்தான் மாப்பிள்ளை சமாளிக்கப் போறாரோ தெரியவில்லை" அம்மா நீங்களுமா என்னை....." என்று கண்ணைக் கசக்கினாள் சுவேதா.

"நான் தமாசாச் சொன்னதுக்கு பேசுகிறியே சுவேதா"

"போங்கம்மா" என்று சிணுங்கிக்கொண்டே தனது அறைக்குச் சென்றாள்.

000

மறுநாள் காலை.

பதினொரு மணியளவில் அவசரமாக வந்த இருவர் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டுக் காரியாலயத்துக்குள் சென்றனர். காரியாலய ஊழியர்கள் தங்கள் வேலைகளில் மூழ்கியிருந்தனர். வந்தவர்கள் இருவரும் நேராகப் பிரதம லிகிதரிடம் சென்று நின்றனர். ஏதோ கோப்பிலுள்ள கடிதங்களைப் படித்துக்கொண்டிருந்த விஸ்வலிங்கம் நிமிர்ந்து பார்த்துவிட்டு "உட்காருங்கள்" என்றார்.

"நீங்கள் எங்களிடம் கூறியதற்கும். இப்படிக் கடிதம் எழுதியிருப்பதற்குமிடையில் என்ன சேர் நடந்தது? நாங்கள் சொன்னபடி எதுவும் செய்யவில்லையா? அல்லது உங்களுக்குப் போதவில்லையா?" என்றார் வந்தவர்களில் ஒருவர்.

"இங்கே பாருங்கள் இது நான் அனுப்பவில்லை. புதிதாக வந்துள்ள அதிகாரி ஒருத்தர் தான் அனுப்பியுள்ளார். உங்கள் விசயத்தை அவர்தான் பாக்கிறார். அவரிடம்தான் கதைக்க வேண்டும்"

"யார் அந்தாள். நான் அவரிடமே கேட்கிறன்"என்றார்.

"அதோ அந்த மேசையில் இருக்கிறாரே அவரேதான்" எனக் கையைக் காட்டி விட்டுக் கோப்பில் மூழ்கினார் விஸ்வலிங்கம்.

வந்தவர்களில் ஒருவர் சுரேஸின் மேசை முன் வந்து நின்று கடிதத்தை நீட்டி "இது விடயமாய் கதைக்கத்தான் வந்திருக்கிறம். திடீரென்று இப்படி ஒரு கடிதம் அனுப்பினால் எப்படி சார்?"

"உட்காருங்கள்" என்று கூறிய சுரேஸ் அவர்களுடைய கேஸ் சம்பந்தப்பட்ட கோப்பை எடுத்து வைத்துக் கொண்டு. "இஞ்சை பாருங்கள் ஐயா! இது திடீரென எடுத்த முடிவல்ல. நீங்கள் இங்கிருந்து அனுப்பும் கடிதங்களுக்குப் புத்திசாலித்தனமாக பதில் எழுதி இழுத்தடித்துக் கொண்டிருந்தால் நீதிமன்றம் போய்த்தான் முடிக்கவேண்டி வரும். இதுவரை நீங்கள் அந்தக் காணிக்குள் போட்ட பொருள்களை அப்புறப்படுத்திக் காணியைச் சமாதான முறையில் கையளித்து விடுவது நல்லது. இனி உங்கள் முடிவைப் பொறுத்துத்தான் அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்" என்று ஆறுதலாகவும் விவரமாகவும் கூறினான் சுரேஸ்.

"சேர்! நீங்கள் கொடுத்துள்ள கால அவகாசம் போதாது. ஒரு மாசமாவது அவகாசம் தந்தால் நாங்கள் எல்லாவற்றையும் கிளியர் பண்ணிக் காணியை ஒப்படைக்கின்றோம்"என்றார்.

"அதைத் தீர்மானிக்க வேண்டியது மேடம் தான். வாருங்கள் அவாவிடம் கதைப்பம்" என்று கூறிக்கொண்டு அவர்களையும் அழைத்துக்கொண்டு சுவேதாவின் அறைக்குச் சென்றான்.

"வாருங்கள் என்ன விடயம் சுரேஸ்?" என்றாள் சுவேதா.

"இவர்கள் தான் அந்தக் கோவில் காணி சம்பந்தமானவர்கள். ஒரு மாத கால அவகாசம் தந்தால் தாங்கள் காணியை ஒப்படைப்பதாகக் கூறுகிறா ர்கள். அதுதான் கூட்டிக்கொண்டு வந்தன்!!"

"உட்காருங்கள். ஏன் சேர் அது கோவில் காணி. நிர்வாகத்தின் அனுமதியின்றி நீங்கள் ஆக்கிரமித்து உங்கள் பொருள்களைப் போட்டு வைத்துவிட்டுச் சட்டம் பேசி வந்துள்ளீர்கள். இந்த முடிவை நீங்கள் முன்பே கூறியிருந்தால் குறைந்தது மூன்று மாத காலம் அவகாசம் தந்திருக்கலாம். ஆறு மாதத்துக்கு மேலாக இழுத்தடித்து எங்களையும் சிரமப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். இனியும் அவகாசம் கேட்பது நியாயமில்லை." என்றாள்.

"கேட்பார் புத்தி கேட்டு நடந்து விட்டம் மன்னித்து விடுங்கள். வேறு இட வசதியுமில்லை. எப்படியும் ஒரு மாதத்துக்குள் மாற்று ஏற்பாடு செய்து இடத்தை விட்டு விடுகிறம். தயவு செய்து உதவுங்கள் மேடம்"

"மிஸ்ரர் சுரேஸ்!"

"ஜெஸ் மேடம்"

"இவர்களின் வேண்டுகோளின்படி எழுத்து மூலமாக ஒரு மாத கால அவகாசம் கொடுத்துக் கடிதம் வாங்கி 'விற்நெஸ்ஸாக' மற்றவரிடம் ஒப்பம் வாங்கி அனுப்புங்கள். ஐயா! உங்களுக்கு நீங்கள் கேட்டபடி அவகாசம் தந்துள்ளோம். அதற்கு மேல் ஒரு நிமிடமேனும் அங்கே ஏதாவது பொருள்களிருந்தால் பொலிஸ் மூலம் அப்புறப்படுத்தப்படும். சுரேஸ் இதில் ஒரு கொப்பி இவர்களுக்கும், இன்னொரு கொப்பி கோவில் நிர்வாகத்துக்கும் அனுப்பி விடுங்கள்"என்றாள். அவர்கள் அவள் அறையை விட்டு வெளியே வந்ததும். "அப்பாடா இந்த அனுவான்களுக்கு அழுததுதான் மிச்சம். முதலே வந்து கதைத்திருந்தால் குறைந்தது ஆறு மாத கால அவகாசமாவது வாங்கியிருக்கலாம்" என்று கூட வந்தவருக்குச் சொல்லிக்கொண்டு வந்தார் சம்பந்தப்பட்ட நபர். சுரேஸ் தனக்குள் சிரித்துக்கொண்டே வந்து மேசையில் உட்கார்ந்து கொண்டான்.

மதிய இடைவேளை முடிந்து ஊழியர்கள் வந்ததும் பியோன் குருசாமி வந்து சுரேஸை அழைத்துச் சென்றான். கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்ற சுரேஸை.

"வாருங்கள் சுரேஸ். எப்படி ஒரு கடிதத்துடன் இறங்கி வரச் செய்தீர்கள்?"என்றாள் சுவேதா.

"வெறி சிம்பிள் மேடம். நீதிமன்றம் என்றதும் யாரும் கொஞ்சம் பயப்படத்தான் செய்வார்கள். அதுமட்டுமில்லை ஆரம்பத்தில் கோயில் நிர்வாகமும் தாமதமாகவே செயற்பட்டிருக்கிறது. அத்துமீறல் என்ற சட்டத்துக்கமைய உடனடியாகவே பொலிஸ் உதவியுடன் இவர்களை வெளியே அனுப்பியிருக்க முடியும்" என்று கூறிக்கொண்டி ருக்கும் போது விஸ்வலிங்கம் உள்ளே வந்தார்.

"பிரச்சினை ஒருவாறு ஒரு கடிதத்துடன் முடிந்துவிட்டது. மிஸ்ரர் விஸ்வா உங்களை இவர்கள் நன்றாக ஏமாற்றி விட்டான்கள் இல்லையா?" என்றாள் சுவேதா.

"அவங்கள் நாலு மூன்று உறுதிகளைக் கொண்டு வந்து காட்டி என்னைக் குழப்பி விட்டாங்கள். முன்பு இருந்தவர். அவங்களுக்கு உறவு. அவர்தான் புத்தி சொல்லி வழிகாட்டிவிட்டார். அதை நம்பி நானும் ஏமாந்து போனன்" என்று தலையைச் சொறிந்து கொண்டு சிரித்தார் விஸ்வலிங்கம்.

(தொடரும்)



# இலட்சியம் கேலியாய்...

வாய்ப்புக் கிட்டும் போதெல்லாம்
மறக்காமல்...
மறைக்காமல்...
மாந்தர் முரசறையும் முழக்கம்
"வாழ்வே ஒரு இலட்சியம்"

இது என்ன....?
இறக்குமதியான
அயல்நாட்டுச் சரக்கா...?

இல்லை
கண்ணாடிப் பீரோவில்
அழகுகாட்டும்
கரடிக்குட்டிப்பொம்மையா..?

ஞானத்தை எல்லைக்
கோடாக்கியவர்
ஞானத்தில் எல்லையைத்
தாண்டியவர்

மனிதருள்
மாணிக்கங்கள்
ஒப்புவித்தவை.....
இன்று,
இலட்சியத் தரகர்களின்
மனத்திரையில்
அரங்கேறுகின்றன.
கேலியாய் மட்டுமல்ல
கேள்விக் குறியாயுமே....




கவிதை
வேலணையூர் மயிலைக்கிளி

தொகுப்பு
செ.மகேஷ்

# ஆசிரியவாண்மைக்கு உரமூட்டிய 'விளக்குகள்' 4

## மாற்றம் வேண்டும்



1993ஆம் ஆண்டில் கல்விக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டு வெளியிட்டு வைகைப்பட்ட 'விளக்கு' சஞ்சிகைகள் குறித்த ஒரு மீள் பார்வை.

"எல்லாத்துறை களிலும் நமது நாடு முன்னேறவேண்டுமானால் அதற்கேற்ற முறையில் கல்வி திட்டமிப்படல் வேண்டும். தேசப்பற்று அற்ற வர்கள் உருவாக்கிய கல்வித் திட்டங்கள் தோல்வியைத் தழுவி விட்டன" எனக் குறிப்பிடும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் அந்நாள் அதிபர் திரு ஆர்.எஸ்.நடராசா அவர்கள், நமது நாட்டுச் சூழலுக்கும் காலத்துக்கும் ஏற்ற கல்வியை வழங்குவதற்கு ஆசிரிய சமூகம் முன்வர வேண்டும் என அறைகூவல் விடுக்கிறார். அந்தவகையில் 'மாற்றம் வேண்டும்' என அவர் அன்று விளக்கில் பதிப்பித்த கட்டுரையைத் தருகின்றோம்.

வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல் தொடக்கம் அறிவொளியால் மெய்ப்பொருள் கண்டு இன்புறும் நிலை எய்துதல் வரையும் கல்வியே மனிதனுக்குத் துணையாகிறது. எனினும் கல்விப்பயன் தாக்கமானதாக அமையவேண்டும் எனில் அது காலத்துக்கேற்றதாக இருத்தல் வேண்டும். இதை உணர்ந்தே முன்னேற்ற முனைப்புள்ள நாடுகள் கல்வியை மிக இலாபம் தரும் நீண்டகால முதலீடாகக் கருதி அதைக் காலத்துக்கேற்பத் திட்டமிட்டுத் துரித முன்னேற்றங்களைக் கண்டுள்ளன. முன்னேற்ற மடைந்த நாடுகளின் கல்விக் கொள்கைகளை வளர்முக நாடுகள் பலவும் மேற்கொள்ள விரும்புகின்றன. ஆனால் இந்த வளர்முக நாடுகள் தமது சொந்தப் பொருளாதார வளம், பண்பாட்டுப் பாரம்பரியம் போன்றவற்றைக் கவனத்திலெடுத்து மனித சக்தியின் உச்சப்பயன்பாட்டைப் பெறத்தக்க வகையில் ஒருவரின் அறிவு, திறமை, மனப்பாங்கு ஆகியவற்றை விருத்தி செய்யக்கூடிய திட்டங்களை வகுத்துத் தேசிய முன்னேற்ற அர்ப்பணிப்போடு அவற்றை நடைமுறைப்படுத்தாத காரணத்தால் இங்கு நடைமுறைக்கு வரும் கல்வித் திட்டங்கள் 'குளிக்கப்போய்ச்சேறு பூசுகின்ற' நிலையில் காணப்படுவது வேதனை தருவதாகும்.

### முன்மாதிரியாகச் செயற்பட்ட தன்சானியா

இலங்கையில் கடந்த அரை நூற்றாண்டு காலமாக மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்த முயற்சிகள் பெரும் ஏமாற்றத்தையே தந்தன. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கல்வியே அடிப்படை எனும் கோட்பாட்டைச் செயற்படுத்தாது வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுப் போலியான வாழ்வு தருவதில் ஆட்சியாளர் அக்கறை செலுத்தினர். வெளிநாட்டு உதவிகள் பெறுபவரிலும் பார்க்க வழங்குவோருக்கே அதிக நன்மை தருகின்றன, என்பதை உணர்ந்து செயற்படும் நாட்டுப்பற்று, உயர் வகுப்பாரிடம் காணப்படாதது பெருங்குறையே. தன்சானிய நாட்டின் தலைவர் யூலியஸ் நியரேரே தன்னில் தானே தங்கியிருத்தல் எனும் இலக்குடன் 20ஆண்டுகள் கல்வியை வழங்கி வெற்றி கண்டமை பாராட்டுக்குரியது. 1964ஆம் ஆண்டில் அந்த நாட்டின் மக்கள் தொகையில் 20சதவிகித தொகையினர் எழுத்தறிவு பெற்றிருந்தனர். தன்சானியாவில் வெளிநாட்டு உதவி எதையும் வேண்டிநிற்காது. தேசிய அடிப்படையில் வேலை அனுபவம், கிராம எழுச்சி, சமூகப்பணி என்னும் தேசிய உணர்வூட்டும் அம்சங்களைக் கல்வியில் புகுத்திக் கூட்டுறவு, சமூகமனப்பாங்கு, தொழில் மகத்துவம், நாட்டுப்பற்று என்பவை இடம்பெறச் செய்தமை குறிப்பிடத்தக்கது. குடியேற்ற நாட்டுச் சமூகப் பொருளாதாரப் போக்கிலிருந்து தேசிய
எழுச்சி குறித்த புரட்சிப் போக்கை உருவாக்கக் கல்வி பயன்படுத்தப் பட்டது. தன்சானியாவின் துணிகரக் கல்வி முயற்சிகள் வளர்முக நாடுகளுக்கு முன்னோடியாகக் கருதப்பட்டிருக்க வேண்டும். ஆனால் யூலியஸ் நியரேரே போன்ற துணிவுமிக்க தேசியத் தலைவர்கள் பெரும்பாலான வளர்முக நாடுகளில் இல்லாத காரணத்தால் தன்சானியாவின் வரலாறு பல நாடுகளால் முன்மாதிரியாகக் கொள்ளப்படவில்லை.

### பொருத்தமற்ற கல்வியே அமைதியின்மைக்குக் காரணம்

இன்று பல்வேறு பிரச்சினைகளால் இலங்கை திணறுவது போன்றே பல ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளும் திக்குத் தெரியாத காட்டில் தட்டுத் தடுமாறி அவலமுறக் காண்கின்றோம். பொருந்தாத கல்வியால் விரக்தியுற்ற பெரும்பான்மையினரான இளைஞர்களின் புரட்சிகர எழுச்சியை உரிய முறையில் எதிர்கொள்ள முடியாத நிலையில் ஆட்சியாளர்கள் திகைப்படைந்து காணப்படுகின்றனர். இலங்கையில் 1990 ஆம் ஆண்டு வெளியான அரச தலைவர் ஆணைக்குழுவின் அறிக்கை 'பொருத்தமற்ற கல்விதான் இளைஞரின் அமைதியின்மைக்கு முக்கிய காரணம்' எனத் தெளிவாகச் சுட்டிக் காட்டியது. கல்விக்கும் வேலைவாய்ப்புக்கும் இடையே காணப்படும் பொருத்தமற்ற நிலைமையே நாட்டின் பெரிய பிரச்சினைகளுக்கு அடிப்படை என்பதை ஆணைக்குழுவின் அறிக்கை தெளிவுறுத்திய பின்னும் கல்வியின் நோக்கையும் போக்கையும் ஏற்றவகையில் மாற்றி அமைக்கும் முயற்சியில் ஆர்வம் காட்டப்படாதது வருந்தத்தக்கது.

### வாழ்வதற்கான கல்வி முறையை உருவாக்கவேண்டும்

கல்வியில் மாற்றம் வேண்டும் எனும் கருத்துத் தேர்தல் விஞ்ஞாபனங்களில் முன்வைக்கப்படுகின்றது. வெள்ளை அறிக்கைகளும் சட்டங்களும் விதிகளும் காலத்துக்குக் காலம் முன்னேற்ற இலக்குடன் ஆக்கப்படுவதும் உண்டு. ஆனால், எதுவும் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாது பழைய ஏட்டுக்கல்வி நிலையே தொடர்வதால் நிலைமை மேலும் சீர்கேடு அடைகின்றது. எனவே காலத்துக்கேற்ற கல்வி மாற்றம் அவசியம் என்பது வெகுசனப் போராட்டமாகக் கொள்ளப்பட வேண்டியது இன்று அவசியமாகிவிட்டது. தராதரப் 'பத்திரம் பெறக் கல்வி என்ற நிலையை மாற்றி, வாழக் கல்வி என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும். கல்வி ஆரம்ப நிலையிலாவது எல்லோருக்கும் கிடைக்கச் செய்யப்பட வேண்டும். ஆரம்ப நிலையிலிருந்தே மனித சக்தியைத் திறனுள்ளதாக ஆக்கும் வகையில் புத்தகக் கல்வியுடன் அனுபவ அடிப்படையுடன் கூடிய தொழிற் கல்வியும் விவசாய தொழில்நுட்பக் கல்வியும் வழங்கப்பட வேண்டும் அத்துடன் நமது சொந்தப் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணிக் காப்பதோடு காலத்துக்கு அவசியமான புதிய பண்பாட்டு விழுமியங்களை உருவாக்குவதாகவும் கல்வி அமைதல் வேண்டும். நகரம், கிராமம் என்ற பேதமின்றி எல்லோருக்கும் சம வாய்ப்புத் தரும் வகையில் கல்வி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மண்ணையும் மக்களையும் நேசிக்கும் மனப்பாங்கை உருவாக்குவதாகவும் சமூக பொருளாதாரச் சூழலோடு பொருந்தி அதை மேலும் சிறப்புறுத்துவதாயும் கல்வி செயற்படுத்தப்பட வேண்டும். கல்வி பெறும் காலம் கட்டுப்படுத்தப்பட்டதாக இருக்காது வாழ்நாள் முழுவதும் கற்கும் வசதி தருவதாய் அமைய வேண்டும். கல்வி ஒரு சமூக சேவை என்பதை உறுதி செய்வதற்கு இடை உயர்நிலைக் கல்விப் பருவத்தில் கற்போர் ஓராண்டு காலமாவது சமூக, பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டங்களில் ஈடுபடுத்தப்பட வேண்டும். இந்தச் செய்திட்டங்களை வெற்றிகரமாக முடித்தவர்களே பின்னர் தத்தம் நாட்டத்துக்கு ஏற்ற கல்வியைத் தொடர்ந்து பெற அனுமதிக்கப்பட வேண்டும்.

### எம்மில் நாம் தங்கியிருக்கவேண்டும்!

வளர்ந்த நாடுகள் எனப்படுபவை எல்லாம் தமது நாட்டுக் கல்வியில் மேற்கூறிய அம்சங்களில் பெரும்பாலானவற்றை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டவையே. குறிப்பாகத் துரித பொருளாதார விருத்தி கண்ட பொதுவுடைமை நாடுகள் உற்பத்தித் தொழில் நுட்பம் சார்ந்த கல்விக்கு முன்னுரிமை தந்து வெற்றி கண்டன. நம்மில் நாம் தங்கியிருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை நடைமுறைப்படுத்துவதில் நாம் அக்கறை கொள்ள வேண்டும். எமது சமூக புனர்வாழ்வுப் பணியிற் கல்வி எந்த அளவுக்கு இன்றியமையாதது என்பதை உணர்ந்து, எமது பிரதேசக் கல்வியில் மாற்றம் ஏற்படுத்த ஆசிரிய சமூகமே முன்னோடியாகச் செயற்படவேண்டும். பாலைவனத்தையும் பசுஞ்சோலையாக்கும் மனித சக்தி, ஒரு நாட்டில் இருக்குமானால் அந்த நாடு பொன்னாடாகும். மனித சக்தி நம்மிடம் நிறைய உண்டு. அதை நல்லதாகவும் வல்லதாகவும் மாற்றும் கல்வியை வழங்கினால் நிறைவான வாழ்வு கிட்டும். கல்வி வாழ்வதற்கே! அதை வழங்குவது முக்கிய சமூகப்பணி. அந்தப் பணியின் முக்கிய நிறைவேற்று முகவர் ஆசிரியரே. கல்வித் தொழில் நுட்பத் திறனும், துரித சமூக பொருளாதார முன்னேற்ற ஆர்வமும் ஆசிரியரைக் காலத்துக்கேற்ற கல்விவளப் பணியாளராகச் செயற்பட வைக்கும்.

மேற்படி கட்டுரை 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெளிவந்த 'விளக்கு' சஞ்சிகையில் வெளியாகியது. அது வெளியாகிய கால எல்லைக்கும் வெளியே நீண்டு இன்றுவரை இந்த நாட்டுக் கல்விச் செயற்பாடுகளுக்குப் பொருந்தும் வகையிலான நல்ல கருத்துக்களைத் தன்னுள் கொண்டிருப்பது கவனிக்கத்தக்க விடயம்.

(தொடரும்...)

ஹொலிவூட் சினிமா

கோமளவண்ணன்

# 'றெடி பிளேயர் வன்'



'ஸ்ரீபன் ஸ்பில்பேர்க்' கின் தயாரிப்பில் வெளியாகியிருக்கிறது 'றெடி பிளேயர் வன்'. இந்தக் கதையை எப்படித் திரையில் திறம்படக் காட்சியமைக்க முடியும் என்ற ஐயப்பாட்டை இதன் முன்னோட்டக் காட்சி ஏற்படுத்தியிருந்தது. 'ஏர்னெஸ்ற் க்ளைன்' என்பவர் இதே பெயரில் எழுதிய நாவலின் தழுவல் இது. பல மில்லியன்கள் செலவில் மூன்று வருடப் படப்பிடிப்பின் பின் வெளிவந்திருக்கும் இந்தப் படம் ஹொலிவூட் இரசிகர்களைக் கவர்ந்திழுக்கத் தவறவில்லை.



**கதை!**

2045ஆம் ஆண்டில் கதை பயணிக்கிறது. புதுவிதமாகப் படைக்கப்பட்ட ஒரு உலகமே எல்லோருடைய விருப்பாகவும் இருக்கிறது. தங்களுடைய வாழ்க்கையில் இருக்கிற கஸ்ரங்களையும் துயரங்களையும் மறப்பதற்கு அனைவரும், தோற்றுவிக்கப்பட்ட இந்தப் புதிய உலகத்தை நாடுகின்றனர். இதை இவர்கள் நாடுவதற்கும் பிரியப்படுவதற்கும் மற்றொரு காரணமும் இருக்கிறது. அதுதான் சுவாரஸியமான கதையாகின்றது. இந்தப் புதிய உலகத்தில் மூன்று சாவிகள் மறைக்கப்பட்டிருக்கின்றன.

அந்த உலகைத் தோற்றுவித்த 'ஹாலிடே' என்பவர் தனது உறுதிக் குறிப்பில்(உயில்)அதைக் குறிப்பிட்டி ருப்பதும் தெரிகிறது. அத்துடன் அந்தச் சாவிகளைக் கண்டுபிடிப்பவருக்குப் பல மில்லியன் பணம் கிடைப்பதோடு அந்த உலகத்தின் கட்டுப்பாடும் கைக்குள் வந்துவிடும் என்றும் குறிப்பிட்டிருப்பார். இதனால் அந்த மூன்று சாவிகளைத் தேடிப் பலரும் புறப்படுகின்றார்கள். இதில் நாயகனும் அவனுடைய நண்பர்கள் குழுவினரும் அடங்குகின்றனர். இவர்களால் இந்தச் சாவிகளைத் தேடிக் கண்டுபிடிக்க முடிந்ததா? இல்லையா? இதன்போது என்ன மாதிரியான இடர்பாடுகளைச் சந்திக்கிறார்கள்? வெற்றி பெற்று மீண்டார்களா? இல்லையா? என்பதுதான் மீதிக் கதை.


**பாத்திரங்கள்**

தயாரிப்பாளர் ஸ்பீல்பேர்க்'குக்கு வயதாகிவிட்டாலும் திரைக் கதையில் சற்றும் தளர்வு தெரியாமல் 'தெறிக்க விட்டிருக்கிறார்' அவர். இவ்வளவு நுட்பங்களும், கிரியேட்டி விட்டிகளுமா? என்று நாம் ஆச்சரியப் படும் அளவுக்கு அவருடைய திறன் ஜொலிக்கிறது. கதைக்குள் ஈர்ப்பது, அந்த உலகைப் பற்றி விளங்கச் செய்வது, எனக் கதை சொல்லிக் கொண்டே நம்மையும் பின்னால் அழைத்துச் சென்று திரைக்குள் புகுத்தி விடுகிறார். அனைத்துப் பாத்திரங்களினுடைய நடிப்பும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவாறு, இரசிக்க வைத்தாலும் அந்த உலகைத் தோற்றுவித்த கதாபாத்திரத்தில் நடித்த 'மார்க் றெய்லென்ஸ்'சின் பாத்திரம் மனதில் தங்கி விடுகிறது. பல நோய்கள் உள்ள ஒரு பாத்திரமாகவும், புதுவித விஞ்ஞானக் கண்டுபிடிப்பாளராகவும் அந்தப் பாத்திரம் அமைகின்றது.

கிராபிக்ஸ் நுட்பங்கள் கலக்குகின்றன. கிங்கொங், அயன் ஜெயன், ஜுராசிக் பார்க், சைனிங், அக்கீரா, ரெர்மினெட்டர், மைக்கல் ஜாக்சன், ஸ்ரார்வோர்ஸ் போன்ற படங்களில் வரும் காட்சிகள்போன்ற கிராபிக்ஸ் புனைவுகள் படத்தில் குறைவில்லாமல் இருக்கிறது.

முதல் சாவியைக் கண்டுபிடிப்பதற்கான பந்தயம், அந்தக் காட்சி உருவாக்கப்பட்ட விதம், அந்தப் பந்தயத்தில் வெல்வதற்கு நாயகன் கண்டுபிடிக்கின்ற வழி, இரண்டாவது சாவியைப் படத்துக்குள்ளேயே போய்த் தேடுவது, என மலைக்க வைத்து இரசிக்க வைக்கின்றன காட்சிகள். திரையில் சுவாரஸியத்துக்கும் குறைவில்லை. ஆனால் ஆழமற்ற பாத்திரங்களும், திரைக்கதையும் பலவீனமே. மறுபுரம், ரசிகர்களின் மூளைக்குச் சற்றே வேலை கொடுத்துச் சுவாரஸியமாக, விறு விறுப்பாகக் கதையை நகர்த்திய விதத்தில் ஸ்பில்போர்க்கின் திறமையைப் பாராட்டியே ஆகவேண்டும்.

# 'த ஹரிக் கேன் ஹெஸ்ட்'




த மம்மி , ரொம்ப் ஒவ் த டிராகன் எம்பரர், ட்றிபிள் எக்ஸ், த பாஸ்ட் அன்ட் த பியூரியஸ் ஆகிய படங்களை இயக்கிய றொப் கோஹென் இயக்கியிருக்கும் படம். ஒரு பயங்கரமான சூறாவளி சுழற்றியடித்துக் கொண்டிருக்கிறது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பெருந்தொகையான பணத்தைக் கொள்ளையடிப்பதற்கு முயற்சிக்கிறார்கள்.

**கதை**

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தை ஒரு பயங்கரமான சூறாவளி தாக்க வருகிறது. அங்குள்ள கோல்ப் போர்ட் என்ற இடத்தில் அந்த நாட்டு அரசுக்குச் சொந்தமான ஒரு பெருந்தொகைப் பதுக்கிடம் ஒன்று அமைந்திருக்கிறது. அந்தப் பதுக்குமிடத்திலுள்ள 600 மில்லியன் டொலர்கள் பணத்தை, இந்தச் சூறாவளிக்கு மத்தியில் கொள்ளையடிக்க முயல்கிறது ஒரு கூட்டம்.

அந்தப் பணம் இருக்கும் பெட்டகத்தைத் திறக்கும் இரகசிய எண் தெரிந்த பெண் அதிகாரி, அந்தப் புயலுக்கு மத்தியில் பணி நிமித்தமாக வெளியேறிவிட, பணத்தைத் திருடுவதில் பிரச்சினை ஏற்படுகிறது.

அந்தப் பெண் அதிகாரிக்கு ஒரு வானிலை ஆய்வாளரும் அவரது சகோதரரும் உதவ, இந்தக் கொள்ளை முயற்சி எப்படி முறியடிக்கப் படுகிறது என்பதுதான் மீதிப் படம்.

**பாத்திரங்கள்**

இதில் டோபி கெப்பெல், மேகி க்ரேஸ், ரையான் வான்டன், மெலிஸா பெலோனா போன்றோர் நடித்துள்ளார்கள். வழக்கமான ஆங்கிலப் படங்கள்போல அமெரிக்காவை ஒரு பயங்கரப் புயல் தாக்க, நாயகன் வந்து நாட்டைக் காப்பாற்றப்போகிறார் என்பதுதான் கதை என்று ஆரம்பத்தில் தோன்றுகிறது.

ஆனால், மெல்ல மெல்ல கதை ஒரு கொள்ளைச் சாகஸமாக மாறுவது சுவாரஸ்யம்தான். அதேபோல, ஒரு பயங்கரமான புயல் அந்தக் கடற்கரைப் பிரதேசத்தைத் தாக்குவதை மிகப் பிரம்மாண்டமாக காட்சிப்படுத்தியிருப்பது அசர வைக்கிறது.

**பலவினங்கள் பல**

ஆனால், மெல்ல மெல்ல படம் ஒரு மூன்றாம் தரத் திரைப்படமாக மாறுகிறது. பல சண்டைகள் மற்றும் புயல் காட்சிகளில் என்ன நடக்கிறது என்பதே புரியவில்லை. வில்லன்களும் அவனது அடியாட்கள் மட்டுமே இந்தப் புயலில் சிக்கி சின்னாபின்ன மாவதும் புயலிலும் துப்பாக்கிச் சண்டையிலும் சிராய்ப்புக்கூட படாமல் நாயகனும் அவனது குழுவும் தப்புவதும், ஆரம்பத்தில் படம் ஏற்படுத்திய சின்ன ஆச்சரியத்தையும் போக்கிவிடுகிறது.

ஒரு காட்சியில் நாயகனும் நாயகியும் கம்பி ஒன்றைப் பிடித்துக்கொண்டு பட்டத்தைப்போல பறக்கின்றனர். புயல் சூறையாடும் கட்டடம் ஒன்றில் சிக்கிக் கொள்ளும் எல்லோரும் இறந்துவிட, நாயகனின் சகோதரன் எப்படியோ வீடு வந்து சேர்கிறான். இப்படி ஏராளம்.

தரமற்ற திரைக்கதை, அதே பின்னணி இசை, நடிகர்களின் ஏனோ தானோ நடிப்பு எல்லாம் சேர்ந்து இந்தப் படத்தை, ஹொலிவூட்டில் வெளிவந்த சூறாவளிச் சாகஸங்களிலேயே மிகப் பின்தள்ளி விடுகின்றன.






# மின்னலில் ஒரு பரிசோதனை

கட்டுரை

வினோஜா நாதரூபன்

“தக்கத் தைய தைய தையாத் தையா... தக்கத் தைய தைய தையாத் தையா...” எம் அனைவருக்குமே பிடித்த பாடலல்லவா? மனிஷா கொய்ராலாவைப் பார்த்துவிட்டுக் காதல் வசப்பட்ட ஷாருக்கான் ரயிலில் ஆடிக்கொண்டே இந்தப் பாடலைப் பாடிக்கொண்டு வருவார். சென்றவாரம் 'நேரமேனும் காதலி' என்ற கட்டுரையில், நேரத்தின் நீட்டிப்புப் பற்றிப் பார்த்திருந்தோம். அதில் ஒளியின் வேகம்தான் பிரபஞ்சத்தின் உச்ச பட்ச வேகம் என்ற எடுகோளை ஐன்ஸ்டீன் எடுத்தார் என்றும் பார்த்தோம்.

இன்று 'ஒருங்கு நேர்தலின் சார்பியல்' பற்றிப் பார்க்கப்போகின்றோம். அந்த ரயில் ஒரு பாம்பைப் போல் ஊர்கின்ற காட்சிகளை ரயிலுக்கு வெளியில் எங்காவது நின்றுதான், இயக்குநர் மணிரத்னமும் சந்தோஷ் சிவனும் படமாக எடுத்திருப்பார்கள். அந்த ரயில், ஒளியின் கணிசமானளவு பங்கு மாறாத வேகத்தில் நேராகப் பயணிக்கின்றது என்று வைத்துக்கொள்வோம். அந்த ரயிலின் நடுவில் ஆடிக்கொண்டிருக்கும் ஷாருக்கான், வெளியில் நிற்கும் மணிரத்தினத்தைக் கடக்கும் பொழுது, அந்த ரயிலின் இயந்திரத்திலும் கடைசிப்பெட்டியிலும் இரண்டு மின்னல்கள் விழுவதாகக் கற்பனை பண்ணிக்கொள்ளுங்கள். ரயிலுக்கு வெளியே நிற்கின்ற மணிரத்தினத்துக்கு அந்த இரண்டு மின்னல்களும் ஒரே நேரத்தில விழுந்ததாகத் தெரிந்தால், ரயிலில் உள்ள ஷாருக்கானுக்கு அந்த மின்னல்கள் ஒரே நேரத்தில் விழுந்ததாகத் தெரியுமா? இல்லை வெவ்வேறு நேரத்தில் விழுந்ததாகத் தெரியுமா? (புரிகிறது... அந்தப் பாடலில் இடையைக் காட்டி ஆடிக்கொண்டிருக்கிற அந்த அழகான பெண்ண விட்டிட்டு, எவன்டா இந்த மின்னலையெல்லாம் போய்க் கவனித்துக்கொண்டு இருப்பான் என்று கேக்கிறீர்கள்...! ம்...) சரி கேள்விக்கு வருவோம், அப்பிடி வெவ்வேறு நேரத்தில விழுந்ததாகத் தெரியும் என்றால், எந்த மின்னல் அவருக்கு முதலில் விழுந்ததாகத் தெரியும்? முன்னால் இயந்திரத்தில் விழுந்த மின்னலா? இல்லை பின்னால் கடைசிப்பெட்டியில் விழுந்த மின்னலா? வாசிப்புப் பழக்கம் நல்லதுதான், ஆனால் யோசிப்புப் பழக்கம் அதைவிட நல்லது. கொஞ்சம் யோசியுங்கள். 'தக்கத் தைய தைய தையாத்
தையா தக்கத் தைய தைய தையாத் தையா'.









0000

இரண்டு நிகழ்வுகள் ஒன்றாக நிகழ்கின்றனவா(ஒருங்கு நேர்தல்) இல்லையா என்பதைப் பொறுத்தே நாம் நேரத்தையும் நேர இடைவெளியையும் அளக்கிறோம். ஒரு குறித்த சட்டத்தில் ஒரு நிகழ்வு என்பது தீர்க்கமான இடத்தையும் நேரத்தையும் கொண்டது. அதாவது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பேருந்தில் வரும் பொழுது, தூங்கிக்கொண்டிருந்த நீங்கள் (கவனிக்கவும் பேருந்து அப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறது) விடியற் காலை நான்கு மணிக்கு கண்முழித்தேன் என்று சொல்கிறீர்கள். அப்படிச் சொல்லும் பொழுது இங்கு இரண்டு நிகழ்வுகள் ஒன்றாக நடந்தன என நீங்கள் சொல்கிறீர்கள்.

1) கண்முழித்தல் என்ற ஒரு நிகழ்வும்

2) பேரூந்தின் கடிகாரம் விடியற்காலை நான்கு மணியைக் காட்டியது என்ற இரண்டாவது நிகழ்வும்

ஆனால் என்ன பிரச்சினை என்றால், ஒரு சட்டத்தில் ஒன்றாக நிகழ்ந்ததாகத் தோன்றும் நிகழ்வுகள் இன்னொரு சட்டத்தில் ஒன்றாக நிகழ்ந்திருக்காது.

**அது என்ன சட்டம்?**

அப்பிடிச் சட்டங்கள் சமனாக இல்லாவிட்டால் அது நீதித்துறையின் பிரச்சினைதானே, இயற்பியல் ஏன் அதைப்பற்றிப் பேசவேண்டும். இது அந்தச் சட்டம் இல்லை. சட்டம் என்றால் இயற்பியல் அவதானிப்புக்களை நீங்கள் எந்த இடத்திலிருந்து மேற்கொள்கிறீர்களோ அந்த இடம்தான் சட்டம். நீங்கள் பேருந்தில் இருந்து அவதானிப்புக்களை மேற்கொண்டபோது, அந்தப் பேருந்துதான் உங்கள் சட்டம். இதேவேளை ஓடுகின்ற அந்தப் பேருந்துக்கு வெளியில் நின்று அந்தப் பேருந்துக்குள் நடப்பவற்றை [illegible]தானிப்பவனுக்கு அவன் நிற்கும் தரைதான் அவனது சட்டம். ஏன் இவ்வாறு சட்டம் பேசவேண்டும் என்றால், சட்டத்துக்குச் சட்டம் அவதானிப்புக்கள் வேறுபடும். இதொன்றும் பெரியவிடயமில்லை. நீங்கள் சிறுவயதில் வாகனங்களில் போகும்போது அப்பாவிடம் “ஏன் அப்பா மரங்கள் ஓடுது?” என்று கேட்டிருப்பீர்கள். நீங்கள் தரை என்ற சட்டத்தை விட்டு வாகனம் என்ற சட்டத்தில் பயணிக்கும் பொழுது, தரையில் நிற்கும்போது நிலையாகத் தோன்றிய மரங்கள், வாகனத்தில் பயணிக்கும் பொழுது நகர்வதுபோல் தோன்றும். இன்னொரு உதாரணம் சொன்னால், நீங்கள் வீதியில் பயணிக்கும் பொழுது, எதிரில் வரும் வாகனம் மிகவும் வேகமாக உங்களை அணுகுவதுபோல் தோன்றும். நீங்கள் மணிக்கு நாற்பது கிலோ மீற்றர்கள் வேகத்தில் போகிறீர்கள், எதிரே ஒருவர் ஐம்பது கிலோ மீற்றர்கள் வேகத்தில் வருகிறார் என்றால், உங்களுக்கு அவர் தொன்னூறு கிலோ மீற்றர்கள் வேகத்தில் வருவதுபோல தோன்றும். இதே அவர் உங்களுக்கு எதிராக வராமல், நீங்கள்போற திசையிலேயே போகிறார் என்றால், அவர் வெறும் பத்துக் கிலோமீற்றர்கள் வேகத்தில் போறமாதிரித் தோன்றும். சரி இப்பொழுது சட்டம் என்றால் என்னவென்று விளங்கியிருக்கும். நான் முதலில் சொன்னது போன்று, நேரத்தையோ நேர இடைவெளியையோ அளப்பதில் என்ன பிரச்சினை என்றால், ஒரு சட்டத்தில் ஒன்றாக நிகழ்ந்ததாகத் தோன்றும் நிகழ்வுகள் ,ன்னொரு சட்டத்தில் ஒன்றாக
நிகழ்ந்திருக்காது. நம் பேருந்தைப் பொறுத்தவரை இவ்வாறான சிக்கல்களை அவதானிக்க முடியாது. ஏனென்றால் பேருந்தின் வேகம் போன்ற சிறிய வேகங்களுக்கு இவை அவதானிக்கக்கூடியளவு பெரியவித்தியாசத்தைக் காட்டாது. பெரியவித்தியாசம் உருவாக நாம் ஒளியின் வேகத்தின் கணிசமானளவு வேகத்தில் பயணிக்க வேண்டும். (ஒரு விதத்தில் பார்த்தால் இந்தப் பேருந்து ஓட்டுநர்கள் ஓடுற வேகம் ஒளியின் கணிசமானளவு வேகம் தான், ஏனென்றால் எங்களுடைய சூரியக் குடும்பத்துக்கு மிகவும் நெருக்கமான பக்கத்து வீட்டுக் குடும்பமான 'புரோக்சிமா சென்டோரி'க்குப் போக ஒளிக்கே 4ஆயிரத்து 243 ஆண்டுகள் எடுக்கும், ஆனால் இந்த ஓட்டுநர்கள் கொஞ்ச நேரத்தில எங்கையோ இருக்கிற கைலாசத்துக்குக் கூட்டிட்டுப் போய்விடுகிறார்கள், அதுவும் நீங்கள் முருகண்டியில கும்பிடாமல் வந்திருந்தால், கதை முடிஞ்சுது)

000

இப்பொழுது கட்டுரையின் ஆரம்பத்தில் கேட்கப்பட்ட கேள்விக்குச் செல்வோம். இரண்டு மின்னல்களும் ஒன்றாக விழுந்தாகத் தோன்றுமா? இல்லை வெவ்வேறு நேரத்தில் விழுந்ததாகத் தோன்றுமா? நம் பொதுஅறிவு அவை ஒன்றாக விழுந்ததாகத்தான் தோன்றும் எனச் சொல்லும். ஆனால் அந்த ரயில் ஒளியின் வேகத்தின் கணிசமானளவு வேகத்தில் செல்வதால் ஷாருகானுக்கு அவை வெவ்வேறு நேரத்தில் விழுந்ததாகவே தோன்றும். ஆனால், ரயிலுக்கு வெளியில் நின்று பார்க்கும் மணிரத்தினத்துக்கு, அந்த மின்னல்கள் ஒரே நேரத்தில் நிகழ்ந்தவையாகத் தோன்றும், அத்தோடு ரயில் முன்னோக்கிப் பயணிப்பதால், ஷாருகானுக்கு இயந்திரத்தில் விழுந்த மின்னல் முதலாவதாக விழுந்ததாகத் தோன்றும். இதை 'ஒருங்குநேர்தலின் சார்பியல்' என்பர். அதாவது இரண்டு நிகழ்வுகள் ஒன்றாக நிகழ்வது. இது அவர் அவர் இருக்கும் சட்டத்தைச் சார்ந்தது.

நாம் இப்பொழுது செய்த இவ்வாறான பரிசோதனைகளை இயற்பியலில் 'எண்ணப் பரிசோதனைகள்' என்பர். சாதரணமாக நிஜப்பொருட்களோடு பரிசோதனைகள் செய்வோம்.

ஆனால் நிஜத்தில் தற்காலத்தில் உருவாக்கமுடியாத பொருட்களையொ சூழ்நிலைகளையோ கற்பனை செய்து தர்க்கத்தின் வழி புது விதிகளைக் கண்டறிவது எண்ணப் பரிசோதனைகளின் நோக்கம். (ஒரு விதத்தில் பார்த்தால் வெறும் வாயில் வடை சுடுகிற வேலைதான்). இந்தக் குறித்த எண்ணப் பரிசோதனையை 'ஐன்ஸ்டீனின் ரயில்' என்பார்கள்.

ஐன்ஸ்டீன் மிகவும் வித்தியாசமான ஒரு விஞ்ஞானி. என்னைப் பொறுத்தவரை கவிஞனாகப் பிறந்திருக்க வேண்டியவர். தவறுதலாக விஞ்ஞானியாகப் பிறந்துவிட்டார் என்றே சொல்வேன். ஏனென்றால் ஒரு சிறிய சம்பவம் சொல்கிறேன். ஒரு முறை ஒரு புதிய கண்டுபிடிப்பு யோசனை பற்றி அவர் நண்பரோடு பேசிக்கொண்டிருந்தார். அதாவது ஒளிக்கதிர்கள் வழமையாக நேர்கோட்டில் பயணிக்கும், ஆனால் மிகவும் பெரிய பொருட்கள், அதாவது சூரியன் போன்ற மிகப்பெரிய திணிவுடைய பொருட்கள், அவற்றின் அருகில் மட்டும் அவை வளைந்து செல்லும்.

இது எவ்வாறு உண்மையாக இருக்கும் என்று நீ யோசிக்கின்றாய்?' என்று அவர் நண்பர் கேட்டார். அதற்கு அவர் 'இந்தக் கண்டுபிடிப்பு மிகவும் அழகாக உள்ளது அதனால் இது நிச்சயம் உண்மையாக இருக்கவேண்டும்' என்று பதிலளித்தார். அத்தகைய அழகுணர்ச்சி மிக்கவர். சகவிஞ்ஞானிகளில் அவரை வெறும் 'கனவு காண்பவன்' என்றும் கடின விஞ்ஞானி இல்லை என்றும் வசை பாடியவர்களும் உண்டு. அவர் கூறிய ஒரு கூற்றோடு இந்தக் கட்டுரையை நிறைவுசெய்யலாம்.

“புத்திசாலித்தனத்தின் உண்மையான அறிகுறி அறிவு அல்ல, கற்பனையே!”



# பற்றியெரிகிறது தமிழகம்

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்ற உயர்நீதிமன்றத்தின் உத்தரவைச் செயற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திப் பற்றியெரிகிறது தமிழகம். காவிரி தமிழகத்துக்கு வழக்கப்படாது என்பதில் விடாப்பிடியாக நிற்கிறது கர்நாடகா. அடுத்தடுத்து ஏகப்பட்ட வழக்குகள் இது விடயத்தில் நடை பெற்று வந்தன. இந்த நிலையில் தமிழகத்துக்குக் காவிரி நதிநீரை வழங்க மேலாண்மை வாரியத்தை இந்திய மத்திய அரசு அமைக்க வேண்டும் என்று இந்திய உச்சநீதிமன்றம் இந்த வருடம் உத்தரவிட்டது. எனினும் வரையறுத்து வழங்கப்பட்ட காலப் பகுதி கடந்த பின்னரும் இன்னும் மேலாண்மை வாரியத்தை அமைக்கவில்லை இந்திய மத்திய அரசு. விரைவில் மேலாண்மை வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும், மத்திய அரசின் அசமந்தப் போக்கைக் கண்டித்தும் தமிழகத்தில் தற்போது பரவலாகப் போராட்டம் இடம்பெற்று வருகிறது.

தமிழகத்தில் நடைபெறவிருந்த ஐ.பி.எல். ஆட்டங்கள், மிகப்பெரும் எதிர்ப்பை அடுத்து கைவிடப்பட்டுள்ளன. அ.தி.மு.க., காங்கிரஸ், நாம் தமிழர் உள்ளிட்ட பல கட்சிகள் ஒரணியில் திரண்டுள்ளன. ஒரே கோரிக்கை ஒரே குரல் என்றவாறாகக் காவிரிப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. எங்கும் கடையடைப்பு, ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் என்றவாறாகச் சென்றுகொண்டிருக்கிறது தமிழகத்தின் அன்றாட நிலை.

**‘போராடுவதற்காக வாழவில்லை வாழ்வதற்காகவே போராடுகிறோம்...’**



## 500 கொலைகளும் ஓவியமும்

சீனாவைச் சேர்ந்த லி ஸெங், க்வான்ஸொவ் பல்கலைக் கழகத்தில் நான்காம் ஆண்டு ஓவியக்கலை பயின்று வருகிறார். சமீபத்தில் வண்ணத்துப்பூச்சிகளின் இறக்கைகளை வைத்து இவர் உருவாக்கிய ஓவியம் அதிக வரவேற்பையும் அதிக எதிர்ப்பையும் பெற்று வருகிறது. இந்த ஆண்டு தனது பட்டப்படிப்புக்காக ஓவியமொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதற்காக 500 வண்ணத்துப் பூச்சிகளைக் கொலைசெய்து அவற்றின் இறக்கைகளைக் கொண்டு இந்த ஓவியத்தை உருவாக்கியிருக்கிறார் ஸெங். புகழ்பெற்ற ஓவியர் வின்சற் வான்கோவின் உருவப்படத்தையே அவர் உருவாக்கியுள்ளார்.

**“வான்கோ மன்னிக்கார்...”**



# ரவுண்ட் த வேள்ட்

● லயனல்



## முட்டாள் வர்த்தகம்

சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே சமீப காலமாக வரி விதிப்புப் பிரச்சினைகள் நீடித்துவருகின்றன. இந்த நிலையில், சீனாவின் வர்த்தகம் முட்டாள் தனமானது என்று குறிப்பிடடுள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு அமெரிக்கா 2.5 வீத வரி மட்டுமே விதித்தது. ஆனால் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குச் சீனா 25 சதவீத வரியை விதித்திருக்கிறது. இதையடுத்தே இந்த வர்த்தகப் போர் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

**‘முட்டாள் எவரோ...’**



## மத்திய கிழக்கில் ஓர் அத்துமீறல்!

மத்திய கிழக்கில் உள்ள யூத நாடான இஸ்ரேல், சிரியாவை அதன் எல்லைக்குள்ளேயே புகுந்து சரமாரியாகத் தாக்கியுள்ளது. இஸ்ரேல் ஏன் சிரியாவைத் தாக்கியது என்ற கேள்விக்குப் பதிலாக அமைகிறது இடியப்பச் சிக்கல். சிரிய அரசுக்கு எதிரான கிளர்சிக் குழுவின் பிடியில் உள்ள நகர்களில் ஒன்றுதான் கவுட்டா. அந்த நகர் சிரிய அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்து கொண்டிருக்கிறது. எனினும் ஆயுதக் குழுவும் விடுவதாயில்லை. தோல்வியின் பிடியிலும் அந்த அமைப்பு சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தவே செய்கிறது.

கவுட்டாவில் கிளர்ச்சிக்குழு இருக்கும் இடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலை சிரிய அரசே நடத்தியது என்று பன்னாட்டுச் சமூகம் கருதுகிறது. குறிப்பாக அமெரிக்கா சிரியாவே இரசாயனத் தாக்குதலை நடத்தியது என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டது. பதிலடி கொடுக்கப்படும் என்றும் அமெரிக்கா எச்சரித்தது இந்தப் பின்னணியிலேயே இஸ்ரேல் போர் வானூர்திகள் சிரியாவைப் பதம் பார்த்துள்ளன.

மத்திய கிழக்கில் சிரியாவைத் தனது பகையாளியாகப் பார்க்கின்ற நாடுகளில் முதன்மையானது இஸ்ரேல். இஸ்ரேல் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாகவும் உள்ளது. ஆக, அமெரிக்கா மத்திய கிழக்கில் என்ன செய்ய நினைக்கிறதோ அதை இஸ்ரேலின் மூலமாகச் செயற்படுத்தும். அதற்குரிய பலமும் தொழில்நுட்பமும் துணிச்சலும் தந்திரமும் இஸ்ரேலிடம் உள்ளது. தேவைக்கு அதிகமாகவே உள்ளது. மத்திய கிழக்கில் உள்ள எண்ணெய் வளத்தை இஸ்ரேலை மையமாக வைத்தே அமெரிக்கா இலக்கு வைத்துள்ளது என்பதும் பரவலாக அபிப்பிராயம். அமெரிக்கா சொல்வதை ஏன் இஸ்ரேல் கேட்க வேண்டும்? என்ற கேள்வி எழுவது இங்கே தவிர்க்க முடியாததாகிறது. தமக்கென நாடெதையும் கொண்டிராத யூதர்கள் இஸ்ரேல் என்ற நாட்டை அடைவதற்கும் அதைத் தக்க வைப்பதற்கும் பரவலாக்குவதற்கும் அமெரிக்கா இமாலய அளவில் உதவுகிறது. பலஸ்தீனத்திடம் உள்ள ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அண்மையில் அமெரிக்கா அறிவித்தமை இதற்கு ஆகச் சிறந்த எடுத்துக்காட்டு.

அமெரிக்கா சிரியாவைத் தாக்கினால் பதிலடி கொடுக்க ரஷ்யாவும் சீனாவும் தயார் நிலையில் உள்ளன. சீனா ரஷ்யாவுடன் இணைந்தால் அமெரிக்காவுடன் ஜப்பானும் பிரான்ஸும் ஜேர்மனியும் இணையும்.

**ஆக, செபியுங்கள் சிரியாவுக்காக.**



தொகுப்பு
அனார்கலி




# தென் கிழக்கு திசையில் இருந்து

## பெறுபேறுகள் உயர்வு!

அண்மையில் ஜீ.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கான (2017) பெறுபேறுகள் வெளியாகியிருந்தன. கல்முனைக் கல்வி வலயத்தைச் சேர்ந்த 103 மாணவ, மாணவியர்கள் 9ஏ தரச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

2016ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற ஜீ.சீ.ஈ சாதாரணப் பரீட்சையில் இத்தகைய 9ஏ சித்திகளை இந்த வலயத்தில் 54 மாணவ மாணவியர்களே பெற்றிருந்தனர்.

இந்த முறை ஏற்பட்டுள்ள அடைவு முன்னேற்றங்கள் குறித்து பெற்றோர்கள் பெரு மகிழ்ச்சி தெரிவித்துள்ளதுடன் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. ஜலீல் மற்றும் வலய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை வெகுவாகப் பாராட்டியுமுள்ளனர்.

***"சாதனைகள் படைத்துவரும் வலயமல்லவா? கல்முனைக் கல்வி வலயம்!"***

## சிறுபோக நெற்செய்கை

அம்பாறை மாவட்டத்தில் இந்தமுறை சிறுபோக நெற்செய்கையைக் குறைந்த அளவு காணிகளில் மேற்கொள்வதற்கே அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்ட விவசாயச் செய்கைக்கு நீர் வழங்கும் சேனநாயக்க சமுத்திரன் நீர்மட்டம் குறைவு, அந்தத் தேக்கத்தில் ஏற்பட்டுள்ள நீர்ப்பற்றாக்குறை காரணமாகச் சிறுபோக நெற்செய்கைக்கான நீரை விநியோகிப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் அம்பாறை மாவட்டத்தில் 26ஆயிரம் ஏக்கர்களிலுள்ள விவசாயக் காணியில் மட்டுமே சிறு போக நெற்செய்கையை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பெரும் கவலையும், அதிர்ச்சியும் விவசாயிகளைச் சூழ்ந்துள்ளது.

***'பாவம்... பரிதாபம்'***

## 100 ரூபாவால் விலை குறைப்பு

ஒரு கிலோ மாட்டிறைச்சியை 100ரூபா குறைத்து விற்பனை செய்வதற்கு கல்முனை மாநகரசபை மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் அதிரடியாக ஆவன செய்துள்ளார். கல்முனை, சாய்ந்த மருது பிரதேசங்களில் இந்த விலைக் குறைப்புடன் மாட்டிறைச்சியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேயரின் இந்த நடவடிக்கை பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

"நான் தெரிவு செய்யப்பட்டால், ஒரு கிலோ மாட்டிறைச்சியை 600 ரூபாவுக்கு விற்பனை செய்ய ஆவன செய்வேன்" எனத் தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலே உறுதியளித்திருந்த மற்றொரு உள்ளூராட்சி சபையின் பிரதித் தவிசாளர் இது விடயத்தில் மௌனம் காப்பது ஏன்? (நிந்த...) ஊர் மக்கள் கேள்விக்கணைகளைத் தொடுக்கத் தொடங்கியுள்ளனராம்!

***தன் வாயால் கெட்டதாம் தவளை!***

## ரிஷாத் சத்தியம் செய்வாரா?



"கல்முனை மாநகர சபையின் பிரதி மேயர் பதவியை நற்பிட்டி முனையைச் சேர்ந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் சீ.எம். முபீத்துக்கு வழங்காமை குறித்துஎன் மீது அபத்தமான குற்றச்சாட்டை அமைச்சர் ரிஷாத்தும் அவரது அடியாட்களும் பரப்பியுள்ளனர்"

இவ்வாறு பிரதி அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எச்.எம்.எம்.ஹரீஸ் கவலை வெளியிட்டார்.

கல்முனை மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற நற்பிட்டி முனை முஸ்லிம் பிரமுகர்களுக்கான கூட்டத்தில் கொழும்பிலிருந்து தொலைபேசியூடாகப் பேசிய பிரதி அமைச்சர் ஹரீஸ்.

கல்முனை மாநாகர சபையில் முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அமைக்கக்கூடாது என்பதிலேயே அமைச்சர் ரிஷாட் குறியாக விருந்தார் எனவும் நடந்த உண்மையான சம்பவம் தொடர்பில் நான் சத்தியம் செய்யத்தயாராக உள்ளேன். அமைச்சர் ரிஷாத் சத்தியம் செய்வாரா? எனவும் சவால் விடுத்தார்.

***நான் ரெடி, நீங்க ரெடியா?***

## காலம் கடந்த ஞானம்

எதிர்க் கட்சித் தலைவருக்கும், முஸ்லிம் காங்கிரஸின் தலைவருக்கும் இடையில் திருமலையில் இடம்பெற்ற சந்திப்பொன்றில் விட்டுக்கொடுப்புடன் உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி அமைப்பில் செயற்பட முடிவு செய்யப்பட்டதாக வெளியாகியுள்ள தகவல் தென்கிழக்குத் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் விவாதித்துப் பேசப்பட்டு வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரசும் இணைந்த ஆட்சியொன்று கல்முனை மாநகர சபையில் அமைய வேண்டுமென்ற மக்களின் எதிர்பார்ப்பு தவிடு பொடியான நிலையில், இப்போதுதான் தலைவர்கள் இணக்கம் கண்டுள்ளனரே என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

***கிழக்கின் முக வெற்றிலை அல்லவா கல்முனை மாநகரம்?***

## கறுப்பு வெள்ளி

கல்முனை மாநகரசபையின் பிரிவுக்குட்பட்ட நற்பிட்டி முனையில் 'கறுப்பு வெள்ளி' என்று அர்த்தப்பட எதிர்ப்பு தினமொன்று கடைப்பிடிக்கப்பட்டது.

நற்பிட்டி முனைக்குக் கிடைக்கவிருந்த கல்முனை மாநகர சபையின் பிரதி மேயர் பதவியை, பிரதேச முக்கிய அரசியல்வாதி ஒருவர் தடுத்து நிறுத்தினார் என அதிருப்தி வெளியிட்டே இந்த எதிர்ப்பு மேற்கொள்ளப்பட்டது.

உண்மை நிலையைப் புரியாத அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் காரர்களின் திசை திருப்பல் கைங்கரியமே இது என குறித்த அரசியல்வாதி உறுதிபடக் கூறினார்.

## அடை மழை

கிழக்கிலங்கையின் பல பிரதேசங்களிலும் கடந்த சில தினங்களாக அடை மழை பெய்து வருகின்றது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக இடி மின்னலுடன் நாட்டின் கிழக்குப் பகுதிகளில் பெருமழை பெய்வதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், மக்களின் அன்றாடத் தொழில்களான கடல் மீன் பிடி உட்பட மற்றைய தொழில்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

நாளை 16ஆம் திகதி வரை இந்த மழை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதுவரை நிலவிய வறட்சி காரணமாக நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ள நீர்ப்பாசனக் குளங்களின் நீர்மட்டம் இந்தத் தாழமுக்கத்துடன் உயர்ந்து விடாதா? என விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.





## மறைந்த மாயமென்ன?

முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தரும், பிரதி அமைச்சருமான எச்.எம்.எம்.ஹரீஸ் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கல்முனை மாநகரசபை மேயர் மண்டபத்தில் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தார். நற்பிட்டிமுனை ஜும் ஆ பள்ளிவாசல் முக்கியஸ்தர்கள், உலமாக்கள், முக்கிய முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் ஆகிய பலர் அந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டனர். நற்பிட்டி முனைப் பிரதேசத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் சார்பில் போட்டியிட்ட சீ.எம்.முபீத்துக்குக் கல்முனை மாநகர சபை பிரதி மேயர் பதவி வழங்கப்படாமைக்கான காரணம் குறித்த விளக்கம் இந்தக் கூட்டத்தில் பிரதி அமைச்சராலும், மேயராலும் கூறப்பட்டது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முதலே அங்கு வந்தமர்ந்திருந்த மாநகர சபையின் பிரதிமேயர் காத்த முத்து கணேஷ், கூட்டம் ஆரம்பமானதுமே, அங்கிருந்து எழுந்து சென்றார். கூட்டம் நிறைவு பெறும் வரை அவர் திரும்பி வரவில்லை.

இதனால், காத்த முத்துக் கணேஷ் சுயமாக வெளியே நின்றாரா? வேறு அறிவுறுத்தல்லால் வெளியேற்றப்பட்டாரா? என்ற கேள்விகள் கிளம்பின.!

***மறைந்த மாயம்தான் என்னவோ?***

# தகவல் அறியும் சட்டம்




கட்டுரை

முருகேசு சச்சிதானந்தம்

நல்லாட்சி அரசு பதவிக்கு வந்தபின் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டபூர்வமான ஏற்பாடே இந்தத் தகவல் அறியும் சட்டமூலமாகும். இந்தச் சட்ட மூலம் கொண்டு வரப்படுவதற்கு முன்பு யாராவது ஒரு பொதுமகன் ஒரு விடயத்தை அரச அதிகாரி ஒருவரிடமோ, அல்லது அரச திணைக்களமொன்றிடமிருந்தோ அறிய விரும்பினால் "அதேன் உனக்கு அது எங்கட வேலை" எனப் பதிலளிப்பதுதான் வழக்கமாகவிருந்தது. ஒரு கிராம சேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் கூட ஒரு பொதுமகன் தனது சந்தேகத்தைத் தெளிவுபடுத்த முடியாது.

1978ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களின் பின்னர் 2015ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கூட்டாட்சியில் ரணில் விக்கிரமசிங்க வால் இவ்வாறன மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. இது பொதுமக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளதைப் பொதுமக்கள் தெரிந்து கொள்வது அவசியம். அதிலும் தமிழ் மக்கள் அதில் அதிகம் அக்கறை செலுத்தவேண்டியது அவசியமாகும். இந்தத் தகவல் அறியும் சட்டம் 2016ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதி சட்ட அங்கீகாரம் பெற்றது. பொதுமக்களுக்குப் பணியாற்றுவதற்கே அரச பொறிமுறை உள்ளது. ஆனால் பொதுமக்கள் பல விடயங்களில் தமது உரிமைகளைக் கேட்டுப்பெறுவதற்குப் பின்வாங்குகின்றனர். அரச ஊரியர்கள் என்போருக்குச் சம்பளம் வழங்கப்படுவது, அவர்களிடம் சேவையை நாடிப்போகும் பொதுமக்களுக்கு 'இல்லை' என்று பதில் கூறாது, பொதுமக்கள் வேண்டி நிற்கிற பணியைச் செய்து கொடுப்பதற்கே.

## அரச அதிகாரிகளுக்குக் கிடுக்கிப்பிடி!

பொறுப்புவாய்ந்த அதிகாரியாக இருப்பவர் தம்மை நாடிச் செல்லும் ஒரு பொதுமகனுக்கு "இல்லை" என்று பதிலளிப்பவராக இருந்தால் அதற்கு ஒருபதவிநிலை, உரிய சம்பளம், பயணிப்பதற்குச் சொகுசு வாகனங்கள் என எதுவும் வழங்க வேண்டிய அவசியமில்லை. அந்த அலுவலகத்தின் சிற்றூழியர் போதும் அங்கு வருவோருக்கு "இல்லை" என்று கூறுவதற்கு. பல உயர் அதிகாரிகளுக்குக் கீழுள்ள உத்தியோகத்தர்கள் பல விடயங்களைத் தமது உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துவதில்லை. அங்கு வருகின்ற பொதுமக்கள் "ஐயாவைச் சந்திக்கப் போகிறேன்" என்று கேட்டால் "அவர் கூட்டத்தில் இருக்கிறார்", "பிசியாக இருக்கிறார்" என்று கூறி அவர்களைச் சந்திக்க விடாது திருப்பி அனுப்பி விடுகின்றனர். இத்தகைய பல சாக்குப்போக்குகளில் இருந்து விடுபடவும், மக்களுக்குச் சேவையாற்றுவதே தமது முதன்மையான பணி என்பதை அந்த அதிகாரிகளுக்கு உணர்த்தவும் மக்கள் அனைவரும் இந்தத் தகவலறியும் சட்டமூலத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தகவலறியும் சட்டத்தின்படி பல தகவல்களையும் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டாலும் அந்தச் சட்டமூலம் பற்றிய விளக்கங்களை முழுவதுமாகப் பெற்று அரச அதிகாரிகளைத் தமக்கான பணிகளை நிறைவேற்றிக் கொடுப்பவர்களாகத் தூண்டும் வகையில் அதைப் பயன்படுத்தும் நுட்பத்தைக் கண்டடைய வேண்டும். அவ்வாறு அமையும் பட்சத்தில் மக்களுக்குச் சேவையாற்றுவதற்குப் பின்னடிக்கும் அரச அதிகாரிகளுக்கு உரிய அழுத்தத்தைக் கொடுக்க முடியும்.

## சமுர்த்தியில் நிகழும் தில்லுமுல்லுகளைக் கண்டறிவதற்கும் கைகொடுக்கும்

ஒரு அலுவலகத்தில், பணிகள் பூர்த்தி செய்யாது குறையாக இருக்கின்ற கோவைகளை எடுத்து அந்த ஊழியரின் மேசையின் மீது அடுக்கினால் அந்த ஊழியரை மறைக்கும் அளவுக்குக் கோவைகள் நிறைந்திருக்கும்.

பல அரச ஊழியர்கள் தாம் கிராம மட்டத்தில் விட்ட தவறை மூடி மறைப்பதற்காகவும், தாங்கள் பிடிபடாது இருப்பதற்காகவும் மக்களைப் பேசி அல்லது வெருட்டிக் கட்டுப்படுத்த முனைகின்றனர். இந்த முறைப்பாடுகள் அதிகம் இருப்பது சமுர்த்தியைப் பெற உரித்துடையவர்கள் அதைக் கேட்டுச் சண்டைபிடிக்கும் விடயத்திலேயே. அதற்கு "வேறு யாராவது வெட்டுப்பட்டால் உங்களுக்குப் போட்டுத் தருகிறேன்" என்று பதிலளிக்கும் சமுர்த்தி ஊழியர்கள் மக்களைத் திருப்பி அனுப்பி விடுகின்றனர். வறுமையின் கொடுமை தாங்கமுடியாமலும், தமது பிள்ளைகளின் படிப்பு மற்றும் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யமுடியாதும் இருப்வர்கள் தம்மை விடப் பண வசதியுள்ளவர்களுக்குச் சமுர்த்தி கொடுக்கிறீர்கள் ஏன் எங்களுக்கு இல்லை? என்று கேட்டுச் சண்டைபிடிப்பது அதிகம். "நீ நாசமாய்ப் போவாய்" என்று இயலாத பட்சத்தில் மண் அள்ளித் திட்டிவிட்டுச் செல்கின்றனர். அதுமட்டுமே சாதாரண மக்களால் அரச ஊழியர்களுக்கு எதிராக இதுவரை செய்யக்கூடியதாக இருந்தது. ஆனால் இந்தத் தகவலறியும் சட்டமூலத்தைப் பயன்படுத்திச் சமுர்த்தி வழங்கப்படுவது பற்றிய அனைத்து விவரங்களையும் பெற்றுக்கொண்டு குறிப்பிடப்பட்ட நியதிகளுக்குட்பட்டிருந்தும் தாம் அந்த உதவி வழங்கலில் இருந்து ஒதுக்கப்பட்டிருந்தால், அல்லது தகுதியில்லாதவர் அதில் இணைக்கப்பட்டிருந்தால் இதில் எதையாவது உறுதிப்படுத்தி வாதிடுவதற்கும் இந்தத் தகவலறியும் சட்டமூலத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## சமுர்த்தியில் பல சிக்கல்கள்...

இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில் இந்திய இராணுவத்தால் சுடப்பட்டுக் கணவனை இழந்தவர்கள் கூடச் சமுர்த்தி எடுப்பதற்கு முயன்றார்கள். ஆனால் அதைப் பெறமுடியாது போனவர்கள் அதிகம். 2010ஆம் ஆண்டில் கணவனை இழந்தவர்களுக்குக்கூட இத்தகைய கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. இவ்வாறானவர்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளால் கூறப்படுகின்ற பதில் "யாராவது வெட்டப்பட்டால் அதை உங்களுக்குத் தருகிறோம்" என்பதாகும். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் அவர்களின் பகுதிப் பிரதேச செயலாளர்களுக்கு தகவல் அறியும் சட்டமூலத்தின் மூலம் "தமக்கு ஏன் சமுர்த்தி வழங்கப்படவில்லை? " எனக் கேட்டு எழுதமுடியும். அதேவேளை அதன் பிரதியொன்றைச் சமுர்த்தி ஆணையாளருக்கும் மற்றோர் பிரதியைத் தகவல் அறியும் சட்ட ஆணையாளருக்கும் அனுப்புதல் வேண்டும். இவ்வாறு எழுதப்படும் கடிதங்கள் கட்டாயமாக ஆங்கிலத்தில் எழுதுவது நல்லது. ஆங்கிலத்தில் எழுதினால் கொழும்பில் உள்ள உயர் மட்டத்தினர் குறிப்பிட்ட நபரின் பிரச்சினை என்ன என்பதை இலகுவில் புரிந்துகொண்டு அதற்கு விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். தகவல் அறியும் உரிமை ஆணையகத்தின் முகவரி, Right to information commission, Rooms No.203204 Block 2, BMICH, Bauddhaloka Mw, Colombo07 என்பதாகும். அதேவேளை சமுர்த்தி ஆணையாளரின் முகவரி, The commissioner, Samurdhi, No 17, Barnes Place, Colombo 07 என்பதாகும். சமுர்த்தி ஆதாரம் பெறத் தகுதி உள்ளவர்கள் தமது கிராமத்தில் இத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை மத்திய அரசுக்கு அறிவிக்க வேண்டிய ஊழியர்கள் அந்த விடயத்தை தமது கைகளில் எடுத்து செயற்படுகின்றனர். இது தகுதியானவர்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக்கும் வழிமுறையல்ல. அரசால் பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டிய வரப்பிரசாதங்களை அதிகாரிகள் மறுப்பதன்மூலம் மக்கள் சிங்கள ஆட்சியாளர்கள் மீது அதிருப்தி அடையவே வாய்ப்பு ஏற்படும்.

## தண்டனைகள் வழங்குதலும் தண்டப்பணம் அறவிடுதலும்

மக்களுடைய விடயங்கள் அல்லது அவர்களின் பிரச்சினைகள் உரிய அதிகாரிகள் அரசுக்குத் தெரியப் படுத்துவதில்லை அல்லது அதற்காக அரசுக்கு அழுத்தம் கொடுப்பதில்லை. இது மக்களுக்குத் தெரிந்திருப்பதில்லை. தகவல் அறியும் சட்டமூலத்தின் மூலம் நீண்டகாலமாக காணிப்பிரச்சினை, இடமாற்றங்கள், சம்பள உயர்வுகள், ஓய்வூதியம் பெறுவதில் காணப்படும் பிரச்சினைகள், தேவையற்ற அத்துமீறல்கள் என அசமந்தப்போக்கில் கிடக்கின்ற ஏனைய பல விடயங்களுக்கும் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். மக்கள் தமது பிரச்சினைகளை வாயால் கூறாது எழுத்து வடிவில் சமர்ப்பிக்கும் வாய்ப்பே இது. அதே வேளை, குறிப்பிட்ட விடயம் தொடர்பான தீர்வும் விரைவுபடுத்தப்படும். தகவல் அறியும் சட்டமூலத்தின் மூலம் உரிய அதிகாரிகள் சாதாரண மக்களுக்கு பதில் அனுப்ப வேண்டி இருக்கும் என்பதுடன், குறிப்பிட்ட விடயத்தைப் பாதிக்கப்பட்டவருக்குச் செய்யாதுபோனதற்குக் காரணமாக இருந்த அரச ஊழியர்களைப் பணிநீக்கம் செய்வதற்கும், பாதிக்கப்பட்ட நபருக்கு வழங்கப்படவேண்டிய கொடுப்பனவைத் தடுத்ததற்காக அந்தப் பணத்தைக் குறிப்பிட்ட அதிகாரி தண்டப்பணமாகக் கட்டுவதற்கும் வழிவகைகளைத் தேடிக்கொள்ளலாம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை வைத்திய அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படும்போது அதற்கான நஸ்டஈட்டுப் பணத்தின் மூன்றில் ஒரு பங்கைக் சித்திரவதைக்குப் பொறுப்பான அதிகாரி தனது சொந்தப்பணத்தில் செலுத்தவேண்டும் என நீதிமன்றத் தீர்ப்புக்கள் வலியுறுத்தின. இதனால் சித்திரவதை புரியும் வீதம் திடீரெனக் குறைந்தது.

## சட்டத்தின் தளத்தில் மக்களால் பயணிக்க முடியும்

பொதுவாக அரச அலுவலகங்களில் ஒரு பிழையைத் தாம் ஏற்றுக்கொள்ளாது மற்றவர்களைச் சாட்டுவதே நடைமுறையாக இருக்கிறது. தகவல் அறியும் சட்டமூலத்தின் கீழ் இணங்காணப்பட்ட குற்றங்களை மக்கள் அறிவிக்கும் பட்சத்தில் அதற்குப் பொறுப்பான அரச ஊழியரை அந்தப் பிழை போய்ச்சேரும். குற்றத்துக்குரியவர் மாத்திரம் தண்டிக்கப்பட வாய்ப்புண்டு. தகவல் அறியும் சட்டமூலம் இலங்கைக் குடிமக்கள் அனைவருக்கும் உரித்துடையது. தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்று பாகுபடுத்தி இந்தச் சட்டமூலம் வகுக்கப்படவில்லை. ஐரோப்பிய நாடுகளில் எப்போதோ நடைமுறைக்கு வந்த இந்த விடயங்கள் 2016ஆம் ஆண்டில் தான் இலங்கை மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. இதன்மூலம் பொதுமக்கள் ஓர் எழுத்துமூல ஆவணமொன்றைப் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அந்த எழுத்துமூல பதில் என்பது சட்டபூர்வமான ஆவணமாகும். அந்தப் பதிலை வைத்துத் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சட்டபூர்வ ஏற்பாடுகளைச் செய்ய வாய்ப்பு ஏற்படும். அரச பொறிமுறைக்கும் சாதாரண பொதுமக்களுக்குமான இடைவெளி இதன்மூலம் குறைக்கப்பட்டுள்ளது.

## தயவால் கிடைப்பதாகப் பூசப்படும் முலாம் இல்லாதுபோகும்

பொதுமக்கள் சட்டபூர்வமாக அணுகக்கூடிய ஒரு தளம் உருவாக்கப்பட்டுள்ளது. பல விடயங்களில் மக்கள் தமக்கிருக்குக் கிடைக்கவேண்டிய அரச சலுகைகள் என்னவென்றே தெரியாது உத்தியோகத்தர்களின் தயவில் அவற்றைப் பெறுவதாக நினைக்கின்றனர். இனி அவை பற்றிய முழு அறிவையும் மக்களால் பெற்றுக்கொள்ள முடியும். தகவல் அறியும் சட்டமூலம் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை அது பத்திரிகையாளர்களின் பணி. இப்படி நினைத்து ஒதுங்கியிருக்கின்றனர். இந்தச் சட்டமூலம் ஆனது ஒவ்வொரு தனிமனிதனும் தனது உரிமையைப் பெறுவதற்குக் கிடைத்த நல்லதொரு சந்தர்ப்பமாகும். இதைப் பயன்படுத்திக் கொள்வதில் எவரும் தவறிழைக்கக்கூடாது.



குறும்படப் பார்வை

சி.ப.வேந்தன்

> ஈழத்தின் வரலாற்றில் அடையாளமான முல்லைத்தீவின் வட்டுவாகல் பாலத்தினூடாக சைக்கிளில் வந்துகொண்டிருக்கிறான் சுரேஸ். அவன் மனத்திரையில் அவனது பழைய ஞாபகங்கள் வந்து போகின்றன. பார்வையாளனுக்கு கதை சொல்வதுபோல அவனது மனத்திரை வாசகங்கள் பேசிக்கொண்டிருக்கின்றன.



# வலியையும் வாழ்வையும் பேசும் 'பாதுகை'

“திரைப்படம் அவசரத்தில் இயங்கும் ஒரு கலை அது எப்போதும் இயங்கிக்கொண்டே இருக்கிறது. அது ஒருவகை கருத்துவெளிப்பாட்டு வடிவம். அது இடையறாது முரட்டுத்தனமாகக் கையாளப்படுகிறது. பழுதுபடுத்தப்படுகிறது. இது சில சமயங்களில் நெடியான சொற்றொடர் மாற்றங்களை அல்லது நடைமுறை கலைச்சாதனங்களை அல்லது செயற்கைக்கோள் ஒலிபரப்புக்களை அல்லது புதிய உருக்காட்சிகளை, புரட்சிகளை, புரட்சிகரமான மாறுதல்கள் என திரைப்படத் தயாரிப்பாளர்கள் கருதுவதற்கு இடமளிக்கிறது". இது ஜீன் கிளாட் கேரியரின் கருத்து (பிரெஞ்சு எழுத்தாளர், திரைக்கதாசிரியர், நாடகாசிரியர்)

2017ஆம் ஆண்டுக்கான சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த திரைக்கதைக்கான விம்பம்(லண்டன்) விருதைபெற்ற "பாதுகை" குறும்படம் கடந்துபோன மழையின் காயாத பக்கங்களையும் எதிர்கால வெளிச்சம் நோக்கிய பறத்தல் குறித்தும் பேசுகிறது.




**பாதுகை ஒரு பார்வை**


ஈழ வரலாற்றில் அடையாளமான முல்லைத்தீவின் வட்டுவாகல் பாலத்தினூடாகச் சைக்கிளில் வந்துகொண்டிருக்கிறான் சுரேஸ். அவன் மனத்திரையில் அவனது பழைய ஞாபகங்கள் வந்து போகின்றன. பார்வையாளனுக்குக் கதை சொல்வதுபோல அவனது மனத்திரை வாசகங்கள் பேசிக்கொண்டிருக்கின்றன. இறுதிப் போர் நடந்து கொண்டிருந்தபோது மக்கள் தமது உயிரைக் காப்பாற்றத் தண்ணீரில் தத்தளித்துக் கரையேறியதையும், தண்ணீரில் மிதந்து வந்த பிணங்களை விலத்திவிட்டுக் கைகளால் தண்ணீரை அள்ளிக் குடித்த நினைவுகளும் போர்க்களத்தில் தன்னைப் படுக்கச்சொல்லிவிட்டு காவலுக்கு (சென்ரி) நின்று அவனுடைய உயிரைக்கொடுத்துத் தன்னுயிரைக் காப்பாற்றிய நண்பன் சாந்தனின் நினைவுகள் அவன் மனதை அலைக்களிக்கின்றன.

இப்போதும் சாந்தனின் தாயாரான சீனியம்மாவை பார்ப்பதற்காகத்தான் போய்கொண்டிருக்கிறான். இடையில் சைக்கிள் காற்றுப்போக அதை ஒட்டுவதற்கு கடையில் நிறுத்திவிட்டு, கீரைக்கட்டும் வாங்கிக்கொண்டு சீனியம்மாவை வற்றாப்பளைக் கோவிலில் சந்தித்து அவளுடைய வீட்டுக்குப் போகிறான்.

நண்பன் சாந்தனின் நினைவாகச் சீனியம்மாவின் வீட்டில் இருந்து எதையாவது எடுத்துப்போகும் எண்ணத்துடன் வந்த சுரேஸ் கொடியில் காயும் உடைகள், மற்றும் கண்ணில் காணும் பொருட்களையெல்லாம் “அது சாந்தன்ரையா" என்று திரும்த் திரும்ப விசாரிக்கிறான். “அது சின்னவன்ர(தம்பி)" என்று சீனியம்மா சொல்ல ஏமாற்றத்துடன். ஏதாவது தென்படாதா எனத் தேடுகிறான். ஆசையாக சீனியம்மான்ர கையால கீரைப்புட்டு அவிக்கச்சொல்லிவிட்டுத் தேங்காய் துருவிக்கொடுக்கிறான். இருவரும் தங்களைப் பற்றி மாறிமாறிக் கதைத்துக் கொண்டு புட்டு அவித்து சாப்பிடுகிறார்கள். மாலை மங்கிவிட்டதால் அன்றிரவு அங்கேயே தங்கிவிடச்சொல்லும் சீனியம்மாவின் பேச்சைத் தட்டாது அன்றிரவு அங்கேயே தங்குகின்றான்.

நுளம்புக்குப் புகைபோட்டபடி இருக்கும் சுரேஸ் வீட்டுக்குள் சுவரில் சாத்தி வைக்கப்பட்டிருக்கும் ஒரு சோடி பழைய செருப்புக்களை(பாதுகை) பார்க்கிறான். அப்போது அவனுக்குச் சாந்தனும் தானும் செருப்பை மாறி மாறிப் போடும் நினைவு வருகிறது. இந்த செருப்பைக்கேட்டாலும் சீனியம்மா சின்னவன்ரயெண்டுதான் சொல்லுவா பேசாம விடிய இதை எடுத்துக்கொண்டுபோகவேணும் என்று நினைத்தவாறு சுரேஸ் இருக்கிறான். அப்போது சீனியம்மா படுப்பதற்கு முன்பாக அந்தச் செருப்புக்களை எடுத்து தனது சேலை முந்தானையில் கட்டி மடியில் செருகுகின்றாள். “இதுதான் சாந்தன் கடைசியா விட்டுட்டுப் போனது இதை மடியில வைச்சுக் கொண்டு கிடந்தா அவன் வயித்துக்குள்ள கிடக்கிற மாதிரி இருக்கும்" எனச் சொல்கிறாள்.

ஏதோ சொல்ல வாயெடுத்த சுரேசை இடைமறித்த சீனியம்மா “என்னடா அவன் இல்லையெண்டு சொல்லப் போறியா எனக்கும் தெரியுமடா" என்றுவிட்டு படுக்கிறாள். யோசித்துக்கொண்டு இருந்த சுரேஸ் “எங்களுக்கும் ஆருமில்லை உனக்கும் ஒருத்தருமில்லை செல்வியை(மனைவி) கூட்டிக்கொண்டு வந்து உன்னோட இருகக்கப்போறன்" எனக் கூற சீனியம்மாவும் அதையே எதிர்பார்த்தாகக் கூறுகிறாள். விளக்கின் ஒளியைக் குறைத்துவிட்டு இருவரும் தூங்குவதோடு படம் நிறைவடைகின்றது.



**படமும் பங்காளர்களும்**

இன்றைய தமிழர்களின் வாழிடங்கலெல்லாம் கொட்டிக்கிடக்கும் அவலம் நிரம்பிய ஏராளம் கதைகளில் ஒன்றுதான் பாதுகைக் குறும்படம்.

குந்தவையின் கதையைத் திரைக்கதையாக்கி இயக்கியிருக்கிறார் மதிசுதா. ஜெஸ்மின், மதிசுதா மற்றும் தர்சன் ஆகியோர் நடித்திருக்கிறார்கள்.

ஒளிப்பதிவு மதுரன் ரவீந்திரன். படத்தொகுப்பு ஸ்ரிபன் சஞ்சிகன். இசை வழங்கியிருக்கிறார் சமீல்.

**கவனிக்க வைப்பவை**

“என் தேசத்தில் பிள்ளைகளைத்தேடி கண்ணீர்வடிக்கும் தாய்த்தெய்வங்களுக்கும் அந்தத் தாய்களுக்கு தற்காலிக பிள்ளைகளாக வாழும் குழந்தைகளுக்கும்" எனும் வாசகங்களோடு ஆரம்பமாகும் படம் கதையின் அழுத்தத்துக்கேற்ப மிகவும் அமைதியாகவே நகர்கிறது.

ஆயிரக்கணக்கான உறவுகளை தொலைத்துவிட்டும் இழந்துவிட்டும் அநாதரவாக தவித்துக் கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான தாய்களுக்கும், தந்தையர்க்கும், சகோதரர் உறவுகள் என நீண்டுசெல்லும் மனித உணர்வுகளுக்கு ஏதாவதொருவகையில் தோள்கொடுக்கவும், தலைசாய்க்கவும், பங்கெடுக்கவுமான ஒரு பிடிமானத்தை தோற்றுவிக்கவேண்டும் எனும் பாடத்தை, பண்பை சொல்லிச்செல்கிறது பாதுகை. உயிர்ப்பால் உறவாக முடியாது போனாலும் உணர்வால்உறவாகமுடியும்எனும்தோற்றுவிப்பை எடுத்துச்செல்லும் கதையின் நாதம் எங்கேயும் சந்தேகத்தை ஏற்படுத்தாதவாறு ஏற்கச்செய்கிறது. “ஒவ்வொரு மனுசனைப் படைச்சதும் அப்பா அம்மா எண்டு சொல்லிக்கொண்டிருந்தாலும் ஈழத்தமிழனில தப்பியொட்டி இருக்கிற ஒவ்வொருதனுக்குப் பின்னாலயும் ஆரோ ஒருத்தன் உயிரைக் குடுத்திருப்பான்", “கடவுள்கள்தான புதுவீட்டில இருக்குது மனுசரெல்லாம் பழம்வீட்டிலதான் இருக்கினம்", போன்ற வசனங்கள், சாதியத்துக்கெதிரான நியாயம் என்பன அழகாயும் ஆழமாயும் இருக்கின்றன.

ஒளிப்பதிவு அழகியலில் விளக்கு(லாம்பு) காட்டப்படும் காட்சியைத் தவிர குறிப்பிட்டு ச்சொல்லக் கூடியதாக எதுவுமில்லை. பின்னணி இசையிலும் பல இடங்களில் போதாமைகள் வெளிப்படுகிறது.

பொதுவாக எழுச்சி, புதுமுயற்சி அல்லது புதிய திட்டம், நல்ல முடிவு என்பவற்றைக் காட்சிவடிவில் கூறுவதற்கு ஒளி பரவுவதுபோன்ற குறியீடே காட்டப்படும். இங்கே விளக்கின் ஒளியைக் குறைத்துவிட்டே எல்லோரும் சேர்ந்திருப்பதான நல்ல முடிவை எடுப்பது காட்டப்படுகிறது.

தலைகீழ் விதியாக இருளின் அடர்த்தியில் நிலவொளியை பரவச்செய்தலான ஒரு வடிவில் காட்சியை அமைத்திருப்பது புதிய கோணம் எனலாம். பாதணியைப் பாசத்தின் அடையாளமாக இதிகாசங்களிலேயே சொல்லப்பட்டிருந்தாலும் பல இடங்களில் அதற்கான மதிப்பு என்பது இழிவான அடையாளமாகக் கொள்ளப்படுகிறது. ஆனால், மீண்டும் அதை ஒரு பாசத்தின் அடையாளமாகக் காட்டியிருப்பது அருமை.

கலைமுயற்சிகள் என்பவை வெறுமனே இறந்த கால,நிகழ்கால பிரதிபலிப்புக்களாக மாத்திரம் தேங்கிவிடாமல் எதிர்காலம் பற்றிய முன் அவதானிப்புக்களையும் அவற்றை எதிர்கொள்ளவும் அவற்றோடு இயைந்திருப்பதற்கான முயற்சிகளையும் பேசவேண்டும். அதை நோக்கிய பரந்துவிரிந்ததான பார்வைகளை விசாலப்படுத்த வேண்டும். மாற்றுச்சிந்தனையாக எதிர்கால உலகம் கற்பனை உலகம் என இலக்கத்தொடரிலான உலகங்களை(மாஜாயால கற்பனைகள் கொண்ட) பேசுவதைக் குறைத்து மனித வாழ்வியல் பற்றியதான எதிர்காலம் பற்றி பேச வேண்டும். அத்தகைய படைப்புக்கள் காலப்பரப்பில் ஏதேனுமோர் அடையாளத்ே [illegible]டு அன்ன



# அடுத்த மாகாண முதல்வர் தொடர்பில் எழுந்திருக்கும் பரபரப்பு!

கட்டுரை
ஸ்ரீடோ ஸ்வாமி

மத்தியில் தலைமை அமைச்சரின் தலை உருண்டு தப்பியிருக்கும் வேளையில் எதிர்க்கட்சித் தலைவரின் தலையை உருட்டுவதற்கு ஒன்றிணைந்த எதிரணியினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மத்தியில் இந்த வகையான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் வகைகள் வரிசைப்படுத்தப்பட்டு வருகின்ற வேளையில் வட மாகாண சபையின் அடுத்த தேர்தலுக்கான மோதல்கள் ஆரம்பித்திருக்கின்றன. அந்த மோதல்கள் அல்லது கருத்து வெளிப்பாடுகள் எல்லாம் அடுத்த முதலமைச்சர் யார்? அல்லது அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் யார்? என்பதைச் சுற்றிய வலைப்பின்னலாக வெளிப்பட ஆரம்பித்திருக்கின்றன. நடைமுறையிலிருக்கும் சபையின் ஆயுட்காலம் எதிர்வரும் ஒக்ரோபரில் காலாவதியாவதால் அடுத்த தேர்தலுக்கான பரபரப்புக்கள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. கடந்த வாரத்தில் இடம்பெற்ற இருவேறு சம்பவங்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப் போகும் தெரிவு தொடர்பில் சுவாரஷ்யமான எதிர்பார்ப்பை எகிறச் செய்திருக்கிறது.

**சுமந்திரனிடமிருந்து வந்த வெளிப்பாடு**

முதலில், கடந்த ஏழாம் திகதி, சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் உள்ள சுமந்திரனின் அலுவலகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில், பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலே சுமந்திரனால் முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் கருத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக விக்னேஷ்வ ரனைப் பிரேரிக்கும் எண்ணம் கிடையாதென அவர் அறிவித்திருந்தார். அவ்வாறு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவது விக்னேஷ்வரனைக் கஷ்டப்படுத்தும் செயற்பாடு எனக் கருதக்கூடிய வகையில் அவருடைய பதிலளிப்பு இருந்தது. அதேவேளை கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் யார்? என்பதையும் அவர் விவரமாகப் போட்டுடைத்திருக்கவில்லை.

**விக்னேஷ்வரனிடமிருந்து வந்த பதில்**

மற்றைய சம்பவம், முதலமைச்சர் விக்னேஷ்வரனின் வாராந்த கேள்வி-பதில் விவகாரத்தில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. சுமந்திரனின் கூற்றுக்கு வழங்கிய பதிலடியாகவே அந்தப் பதிலின் உள்ளடக்கம் அமைந்திருந்தது. விக்னேஷ்வரன் இந்தியாவுக்குப் பயணிப்பதற்கு முன்னதாக அந்தப் பதிலை வழங்கியிருந்தார்.

தற்போது முதலமைச்சர் பதவியை வகிக்கும் சி.வி.விக்னேஷ்வரனுக்கும் தமிழரசுக் கட்சித் தரப்புக்களுக்குமிடையில் நிலவி, நீடித்துவரும் முறுகல் நிலை, எதிர்பார்ப்புக்கு உப்பு, புளியைச் சேர்த்திருக்கும் நிலையில், அடுத்த தேர்தலில் அன்னாரின் வகிபாகம் கவனத்துக்குரிய ஒன்றாக மாறவிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் தமிழ் அரசுக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஷ்வரன் மீளவும் பிரேரிக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை என்பதை அவரே அண்மையில் ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஆனால், தமது முதலமைச்சர் தெரிவுக்கான வேட்பாளர் தொடர்பில் அறிவிப்பதற்குத் தமிழ் அரசுக் கட்சி தரப்பிலிருந்து தயக்கம் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அது விக்னேஷ்வரன் தொடர்பிலான தற்போதைய தீர்மான நிலைவரத்தை மீள் பரிசீலனை செய்யும் நிலைவரமா? என்னும் கேள்வியையும் எழுப்பி விட்டிருக்கிறது. கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனின் கருத்தை உத்தியோகபூர்வமான கட்சியின் நிலைப்பாடாக ஏற்றுக்கொண்டு விட முடியுமா? என்றும் நோக்கப்பட்டிருக்கிறது. "கட்சியின் அனுமதி பெறாத கரவான கருத்துக்களைக் கொண்டோரின் கருத்துக்கள்" என்று விக்னேஷ்வரன் தனது பதிலில் எள்ளி நகையாடியிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது. மறுபுறத்தில், இந்த மாகாணசபை ஆட்சிக்காலத்தின் பின் தான் அரசியலிலிருந்து விலகிக் கொள்வதான எந்தவொரு அறிவிப்பை, சாத்தியப்பாட்டையோ முன்னாள் நீதியரசர் இதுவரை வெளிப்படுத்தியிருக்கவில்லை. இதை எதிர்வரும் தேர்தலில் அவர் போட்டியிடுவதற்கான கட்டியமாகவே கருதமுடியும். அதையே அவர் கேள்வி பதிலில் தெரியப்படுத்தியிருக்கிறார்.

**கூட்டமைப்பின் தேர்வு சேனாதிராஜாவா? அல்லது சிவஞானமா?**

மாகாணசபையின் கலைவுக்கு இன்னமும் ஆறு மாதங்கள் இருக்கின்ற நிலையில், விக்னேஷ்வரன் கூட்டமைப்பின் தெரிவாக அமையாத பட்சத்தில், பிரேரிக்கப்படக்கூடிய ஏனைய தெரிவுகள் தொடர்பிலும் கவனம் எழுந்திருக்கிறது. அவ்வாறெனில், தமிழ் அரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜாவையே வடக்கின் அடுத்த முதல்வராகக் கூட்டமைப்புநிறுத்தும்எனவும்பலமாகஎதிர்வுகூறப்பட்டிருக்கிறது. கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளருக்கான மற்றொரு தெரிவாகத் தற்போது வடமாகாண சபையின் அவைத் தலைவராக விளங்கும் சி.வி.கே. சிவஞானம்







அமைவதற்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. கடந்த ஆண்டு வடமாகாண சபையில் கலவரம் நிலவி விக்னேஷ்வரன் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது, மாகாண முதல்வராக சிவஞானமே அடுத்துப் பதவியேற்பதற்குச் சந்தர்ப்பம் இருப்பதாகச் சொல்லப்பட்டிருந்தது. இதைவிட கடந்த டிசம்பரில் நடந்த 112ஆவது மாகாணசபை அமர்வின் போது, விக்கி னேஸ்வரன், தவறுதலாக அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானத்தைக் கௌரவ முதலமைச்சர் என விளித்துவிட்டு, பின்பு அதைத் திருத்தும்போது "ஒருவேளை வருங்காலத்தைப் பற்றிச் சொல்லுகிறேனோ தெரியவில்லை" எனச் சிலேடையாகக் குறிப்பிட்டிருந்தார். கடந்த உள்ளூராட்சி தேர்தலிலும் சி.வி.கே. சிவஞானத்தை யாழ். மாநகரசபையின் மேயர் வேட்பாளராக நிறுத்துவதற்குச் சாத்தியம் இருப்பதாகச் செய்திகள் அடிபட்டிருந்தன.

கூட்டமைப்பால் ஒருவர் முதலமைச்சர் வேட்பாளராக பிரேரிக்கப்பட்டு, விக்னேஷ்வரன் வேறொரு தரப்பின் முதலமைச்சர் வேட்பாளராக களமிறக்கப்படுவாரேயானால், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல், வாக்குகள் எண்ணப்பட்டு முடிவு அறிவிக்கப்படும்வரை பரபரப்புக்குப் பஞ்சமில்லாத களமாகவே முதலமைச்சர் தேர்தல் களம் அமையும். அதுவே பின்னாளில் தமிழ்த் தேசியப் பரப்பில் விசாலமான பிளவுக ளுக்கான அத்திபாரமாகவும் அமையும். அந்த வேறொரு தரப்பு, கூட்டமைப்பின் பிளவை வரவேற்பதான கொள்கைகளைக் கொண்டிருக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல.

**உள்ளூராட்சித் தேர்தலில் கற்றுத் தேறிய பாடங்கள்**

அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது தமிழ் அரசுக் கட்சி தலைமையிலான அணி பொதுவில் அதிக ஆசனங்களுடன் வெற்றியைப் பெற்றிருந்தாலும், முன்னைய தேர்தல் வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பின்னடை வையே சந்தித்திருக்கிறது. மறுபுறத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தரப்பினருக்கான எழுச்சியாக அண்மைய தேர்தல் முடிவுகள் அமைந்திருந்தன. எனினும் பெரும்பாலான ஆசனங்களை வென்ற சபைகளிலேயே ஆட்சியமைக்க முடியாத கையறு நிலைவரத்தை அவர்கள் தற்போதுதான் கடந்திருக்கிறார்கள்.

விக்னேஷ்வரனை இணைத்தலைவராகக் கொண்டு உருவாக்கி வைக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்கள் பேரவை, கட்சி அரசியல் சாராதது எனச் சொல்லப்பட்டாலும், அதில் அங்கம் வகிக்கும் கட்சிகளால் விக்னேஷ்வரன் கையாளப்படுவதற்கான சாத்தியம் நிறையவே இருக்கிறது.

**ஈ.பி.டி.பி வெளிப்படுத்தியிருக்கும் ஜாடை**

எதிர்வரும் வடமாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவித்திருக்கும் டக்ளஸ் தேவானந்தா, தமது கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராகத் தாம் களமிறங்குவது தொடர்பில் ஜாடை காட்டியிருக்கிறார். மாகாண சபை ஊடாக மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தக்கூடிய தன்மை காணப்படுகிறது. இந்த நிலையில், ஏன் தாம் தமது கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட முடியாதெனக் கேள்வி எழுப்பியிருக்கிறார். ஆக, மாகாணசபை தேர்தல்களுக்கான காலப்பகுதி நிச்சயப்படுத்தப்படாத பின்னணியில் அதுவும் மாகாணசபையே கலைக்கப்படாத சூழ்நிலையில், தற்போது எழுந்திருக்கும் பரபரப்பு, பருவத்துக்கு முந்திய வகைக்குரியது ஆகும். ஆனால் இதுவே காய்களைக் கவனமாக நகர்த்துவதற்கான கவனத்தைச் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குப் பெற்றுக்கொடுத்திருக்கிறது.

# சின்னதா ஓர் அரட்டை

## வெட்கப்படுவதும் அருவருக்கத் தக்கதுமான செயல்





இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் 8வயதுச் சிறுமி ஒருத்தியை வன்புணர்ந்துவிட்டுக் கொலை செய்திருக்கிறார்கள். ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் கதுவா மாவட்டம், ரசானா என்ற கிராமத்தில் பக்கர்வால் என்ற நாடோடி முஸ்லிம் சமூகத்தை சேர்ந்த அந்த 8வயது சிறுமி கடந்த ஜனவரி 10ஆம் திகதி காணாமல்போனார். ஒரு வாரத்துக்கு பிறகு அவரது சடலம் அதே பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. பிரேத பரிசோதனையில் அந்தச் சிறுமியைப் பலமுறை வன்புணர்ந்துவிட்டுக் கொன்றமை தெரியவந்தது. இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சிறப்புப் பொலிஸ் அதிகாரிகள் இருவர், தலைமைக் காவலர் ஒருவர் உள்ளிட்ட 8 பேரைச் சிறப்பு புலனாய்வுக் குழு கைது செய்திருக்கிறது.

ஒரு சிறுவன் உட்பட 8 பேர் சேர்ந்து சிறுமியை வழிபாட்டுத்தலம் ஒன்றுக்குள் மறைத்து வைத்துப் பலமுறை வன்புணர்வுக்கு உள்ளாக்கியது தெரியவந்துள்ளது.

சிறுமிக்கு உணவளிக்காமல் மயக்கத்திலேயே வைத்திருந்தே இந்த மிருகங்கள் குறித்த மிருகத்தனத்தை அரங்கேற்றியுள்ளன. சிறுமியை மயக்கத்தில் வைத்திருக்கப் பயன்படுத்திய மருந்தால், அவளுடைய இதயம் மற்றும் நுரையீரல் செயலிழந்ததும் தெரியவந்துள்ளது. அந்தப் பிள்ளையின் பெயர். ஆசிபா. சிறு பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவள் ஆசிபா என்பதால், இப்போது இந்தியாவின் வழமையான பாணியில் இந்த விடயத்துக்கும் சாதிச் சாயம் பூசப்பட்டுவிட்டது. இது வெட்கப்படத்தக்க செயல் என்றிருக்கின்றனர் சில இந்தியப் பிரபலங்கள்.

## ஐயா...! தங்களுக்கு இமயமலைதான் சரியான இடம்

திருச்சியில் பொலிசார் ஒரு கர்ப்பிணிப் பெண்ணை உதைத்துக் கொன்றபோது மௌனமாக இருந்தவர், சென்னையில் தாயுடன் வந்த மகனை மின்சாரக் கம்பத்தில் கட்டி வைத்துப் பொலிசார் கையை முறித்தபோது மௌனமாக இருந்தவர், அன்றைக்குத் தமிழ்நாட்டில் நடந்த காவிரித் தீர்ப்புக்கான கலகத்தில் பொலிசாரைத் தாக்கியது வன்முறையின் உச்சக்கட்டம் என்றும் இதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்



றும் கேட்டுள்ளார். இதேவேளை அதே பொலிசாரால் தாக்கப்பட்டவர்கள் குறித்து...? இயக்குநர் பாரதிராஜா, சீமான் முதலானவர்கள் 'தாக்கப்பட்டது குறித்துக்கூட இவர் எதுவும் கூறவில்லை.

இயக்குநர் களஞ்சியம் பொலிசாரினால் தாக்கப்பட்டு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதுகுறித்தும்கூட அவர் ஒரு வார்த்தை கூறவில்லை.

வாழ்க்கை நடத்துவது தமிழ் நாட்டில். ஆனால் இவரின் அரசியல்பேச்சு...? இன்னும் எத்தனை நாளைக்கு இந்தக் கேவலத்தை அனுமதிப்பது? ஐயாவைப் பேசாமல் இமயமலைக்கே அனுப்பினால் எம்மவர்களுக்கு நிம்மதி சேரும்.

## அமித்ஷா புலம்புகிறார்....





தமிழ்நாட்டில என்ன நடக்குது? நாளைக்குத் தமிழ்நாட்டுக்குப் போறதை நினைச்சால் அடி வயிற்றைக் கலக்குதே! எந்த நாட்டுக்கும் போக நான் இப்படி அஞ்சியதில்லையே! செருப்பெறிந்து கிரிக்கட்டை நிறுத்துகிறார்கள். ரயிலை நிறுத்துவதற்காக மின்சாரக் கம்பியைக் கையால் பிடிக்கிறார்கள். எனக்கு என்னத்தை எறியப் போகிறார்களோ தெரியல்லை!

தமிழிசைக்கு வாயை வைச்சுக்கொண்டு சும்மா இருக்கத் தெரியவில்லை. "தைரியம் இருந்தா மோடி வீதியால் வரட்டும் பார்க்கலாம்" என்று வைகோ வேற சவால் விடுகிறார். ஜயகோ நாளைக்கு என்ன நடக்கப் போகுதோ தெரியல்லையே? பேசாமல் டில்லியில் உண்ணாவிரதம் இருப்பதாகச் சொல்லி தமிழ்நாட்டுப் பயணத்தைக் 'கான்சல்' பண்ணினால் என்ன?

என்னைப் புலம்ப வைச்சிட்டாங்களே இந்தத் தமிழ்நாட்டுக்காரங்க!

## முக்கிய அறிவித்தல்

### IPL 2018

சென்னையில் நடக்கும் 'ஐ.பி.எல்' போட்டியைக் காண வருபவர்கள்

- குடிநீரப் போத்தில்; கொண்டு வரக்கூடாது
- 'கூலிங்கிளாஸ்' அணிந்து வரக்கூடாது
- பதாகைகள் கொண்டு வரக்கூடாது
- கொடிகள் பிடிக்கக்கூடாது
- செல்போன் வைத்திருக்கக்கூடாது
- மடிக்கணினி கொண்டு வரக்கூடாது
- வானொலி வைத்திருக்கக்கூடாது
- டிஜிட்டல் டையரி வைத்திருக்கக்கூடாது
- கைப்பை, சூட்கேஸ் அனுமதிக்கப்படாது
- தின் பண்டங்கள் எடுத்து வரக்கூடாது
- தொலைநோக்கி, இசைக் கருவிகள் கொண்டு வரக்கூடாது
- தீப்பெட்டி வைத்திருக்கக்கூடாது
- நாளிதழ்கள் அனுமதிக்கப்படாது
- வெள்ளைப் பேப்பர், பேனா வைத்திருக்கக்கூடாது

இதைவிட 'நிர்வாணமாக வரவும்' என்று ஒற்றைவரியில் அறிவித்திருக்கலாமே! ஈழத்தில் போர் நடந்த காலத்தில் சிங்கள ராணுவம் கூட இந்தளவு கெடுபிடிகள் விதித்ததில்லை. ஒரு ஜனநாயக நாட்டில் நடக்கும் கிரிக்கெட் போட்டிக்கு இந்தளவு கெடுபிடிகளா? சீ.. வெட்கம்!



## 'இது இந்தியா'

நடிகர் சல்மான்கான் பெருமிதம்

மனிதனைக் கொன்றால்
தண்டனை இல்லை
ஆயுதம் வைத்திருந்தால்
தண்டனை இல்லை
மானைக் கொன்றால்
6வருடம் தண்டனை!

'நான் என்ன தமிழனா?
கேட்பாரற்றுச் சிறையில்
கிடப்பதற்கு
நான் நடிகன் மட்டுமல்ல
2ஆயிரம் கோடி சொத்துக்கும்
சொந்தக்காரன்
விரைவில் வெளியில் வருவேன்
ஏனெனில் இது இந்தியா!'



## இந்தியாவில் ஈழ அகதிகள்..

கடந்த 35 வருடங்களாகத் தமிழ்நாட்டில் ஈழத் தமிழர் அகதிகளாக இருந்து வருகின்றனர்.

ஜரோப்பிய, அமெரிக்க நாடுகளில் வாழும் ஈழத் தமிழ் அகதிகளுக்கு 7 வருடங்களில் குடியுரிமை வழங்கப்படுகிறது.

ஆனால் தொப்புள்கொடி உறவு என்று கருதப்படும் இந்தியாவில் 35 வருடமாகியும் குடியுரிமை வழங்கப்படவில்லை.

குடியுரிமை மட்டுமன்றி ஈழ அகதி மாணவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புக்கூட மறுக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி சிறப்புமுகாம் எனும் சித்திரவதை முகாமிலும் தமிழ் அகதிகள் அடைக்கப்பட்டு வருகின்றனர்.

அதேவேளை பாகிஸ்தானில் இருந்து வந்த அகதிகளுக்கு இந்திய குடியுரிமை வழங்குகிறது. இந்தியாவில் இருக்கும் தீபெத் அகதிகள் வங்கதேச அகதிகள் என அனைத்து அகதிகளும் சுதந்திரமாக நடமாடவும் உயர் கல்வி பெறவும் வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. ஆனால் ஈழத் தமிழ் அகதிகளுக்கு மட்டுமே இவையாவும் மறுக்கப்படுகின்றது.

கவிதை

கை.சரவணன்

## சாவு-10

### ஓர் அப்பாவியின் கதை

ஆந்தைகளும்
கூகைகளும்
போன இடந்தெரியாது
போயிருந்த நாள்களை
நாய்களும்
முதற்சாம ஒற்றைச் சேவலுடன்
பேடுகளும் கூடத்
தொலைத்திருந்தன.

சாவுக்குப் பயந்து
பதுங்கிய உயிர்களாலும்
ஓடியொதுங்கிய உயிர்களாலும்
சாவு
தன் பையை நிறைத்து
கைகளிலும் கொத்தாக
இழுத்துப் போயிருக்கிறது.

பாட்டியின் கதை
அர்த்தமற்றுப் போயிற்று.

கடவுள்தான்
சாவிலிருந்து விடுதலை தரும்
ஒரே நபர்
என்பது கூட
கேள்விகளில் தொங்கிய
நாள்களாயிருந்தன
அவை.

முழு ஊரையும்
சாவு
ஆட்சிசெய்திருந்த
புனித நாள்களாய்
இருந்தன
அவை.

கண்ணுக்குப் புலப்படாதது சாவு
என்பது மறுதலிபட்டு
எல்லோர் முகங்களின் முன்னும்
மூக்கை உரசியபடி
உலவியது சாவு.

(தொடரும்)

facebook

## ஈழத்து எழுத்தாளர் வரிசை...

# வ. அ. இராசரத்தினம்



இவர் கிழக்கிலங்கை தந்த தமிழ்ப் படைப்பாளி. 1925ஆம் ஆண்டுஜூன்மாதம்5ஆம்திகதி மூதூர் - திருக்கோணமலையில் பிறந்தவர். புகழ் பெற்ற ஈழத்துச் சிறுகதை, நாவல் எழுத்தாளர். சுருக்கமாக வ. அ. என அறியப்படுகிறார். ஈழநாகன், கீழக்கரை தேவநேயப் பாவாணர், வியாகேச தேசிகர் என்னும் பல புனை பெயர்களிலும் எழுதியுள்ளார். கொழுகொம்பு, துறைக்காரன் என்பன இவரது நாவல்கள். இவரது நாவல்களிலும், சிறுகதைகளிலும் மகாவலி ஆற்றின் சல சலப்பு எழுந்து கொண்டே இருக்கும் என்பர். கிரௌஞ்சவதம் இவருடைய சரித்திர நாவல். ஈழத்தின் உன்னதமான சிறுகதையாக இவருடைய 'தோணி' விளங்குகின்றது.


**கல்வியும் இலக்கியப் பயணமும்**

திருகோணமலை தாமரைவில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையிலும் பின்னர் மூதூர் புனித அந்தோனியார் பாடசாலையிலும் கல்வி கற்றார்.

1946ஆம் ஆண்டில் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து ஆசிரியப் பயிற்சியைப் பெற்றார். அங்குதான் அவர் 'மழையால் இழந்த காதல்' என்ற சிறுகதையை எழுதினார். இது 1948ஆம் ஆண்டு செப்ரெம்பரில் 'தினகரன்' பத்திரிகையில் வெளிவந்தது. இவரது முதற் கவிதை திருகோணமலையில் இருந்து அ. செ. முருகானந்தனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'எரிமலை' என்ற பத்திரிகையில் 1948ஆம் ஆண்டில் வெளிவந்தது. இவர் தனது இலக்கியப் பயணத்தை சுய வரலாற்று நூலாக இலக்கிய நினைவுகள் என்ற பெயரில் எழுதியுள்ளார்.

**இவரது நூல்கள்**

துறைக்காரன், கொழுகொம்பு, கிரௌஞ்சப் பறவைகள், ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கின்றது ஆகியன இவருடைய நாவல்கள், ஒரு காவியம் நிறைவு பெறுகிறது, தோணி ஆகியன சிறுகதைத் தொகுதிகள். 'பூவரசம் பூ' மொழிபெயர்ப்புக் கவிதை. 'மூதூர் புனித அந்தோனியார் கோயிலின் பூர்வீக வரலாறு' சரித்திர நூல், 'இலக்கிய நினைவுகள்' எனும் நினைவுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். 2000ஆம் ஆண்டு இவர் இறைபதம் அடைந்தார்.




# ஏழைகளைப் புண்படுத்தாது புத்தாடை அணிவோம்!



■ மலர்விழி மகேசன்

புதுவருடம் பிறந்தது. அபிநயாவுக்கு அவளுடைய அப்பா புதியதொரு வண்ணச் சட்டையை வாங்கிக் கொடுத்திருந்தார். இந்துக்களின் நடமுறைகளில் அன்றைக்கு ஆலயம் தொழுவது சிறப்பானது. அந்தவகையில் தோய்த்து உலர்ந்த ஆடை அணிவதும் மரபு. அதன் வழி வந்த பாரம்பரியமே இன்று நாம் புதுவருடத்தன்று புதிய ஆடை வாங்கி அணிவதற்குக் காரணம். இது அபிநயாவுக்குத் தெரியாத சங்கதியல்ல. அன்று அபிநயா ஆலயத்துக்குத் தயாரானாள். ஆனால் தந்தை வாங்கிக் கொடுத்த புதிய ஆடையை அணியவில்லை. தோய்த்து உலர்த்த 'புத்தாடை'யை அவள் அணிந்திருந்தாள்.



அம்மம்மாவோடுதான் அபிநயா ஆலயத்துக்குப்போவது வழக்கம். அன்றும் அதுவே நிகழ்ந்தது. அம்மம்மா, அன்னபூரணியுடன் ஆலயம் சென்று திரும்பிய அபிநயா, வீட்டுக்கு வந்ததும் தந்தை தனக்கு வாங்கிக் கொடுத்த புதிய ஆடையை எடுத்து உடுத்தித் தந்தைக்கு அழகு காட்டினாள். தாயும், அன்னபூரணியும்கூட அவளை இரசிக்கத் தவறவில்லை. ஆடையைக் காட்டிலும் அவளுடைய உள்ளம் வெகுவாக ஜொலித்ததே அதற்குக் காரணம்.

அபிநயாவின் நற்பழக்கங்கள் அவள் அப்பாவுக்கு மாத்திரமல்ல அவள் வீட்டிலுள்ளவர்களுக்கும் அவளுடைய வீட்டைச் சுற்றியிருக்கிற அனைவருக்கும் நன்றாகவே தெரியும். அதிக செல்வம் நிறைந்தவர்களாகவும் அடிமட்ட ஏழையாகவும் இல்லாமல் நடுத்தரமானது அபிநயாவின் குடும்பம். அவள் ஒரே பிள்ளை. ஆனாலும் ஆடம்பரத்தில் அதிக நாட்டமில்லாதவள். அவளுடைய கிராமத்துப் பள்ளியில் கற்கும் அனைத்து நண்பிகளும் மிகவும் ஏழ்மையுடையவர்கள். அன்றாட உணவுக்கு அவர்கள் அல்லல்படுவதைத் தினமும் கேட்டறிந்து துயரம் பகிர்பவள் அபிநயா. தன்னைச் சுற்றியுள்ள ஏழை நண்பிகளுடன் ஒப்பிடுகையில் தனக்குக் கிடைத்துள்ள வாழ்க்கை எவ்வளவோ உயர்வானது என்று என்று எண்ணுவது அவளது இயல்பு. அன்றிக் கிராமத்தைவிட்டு நகரத்துக்குச் செல்லும் வேளைகளில் தான் காணும் நகர்ப்புறப் பிள்ளைகளைக் காட்டிலும் தான் அழகான, பல வண்ண ஆடை உடுத்த வேண்டும் என்ற ஆசை அவளுக்கில்லை.

வருடப்பிறப்பன்று மாலை ஆனது. மலர்மதி ரீச்சர் வீட்டில் கணித பாடம் படித்துக் கொண்டிருந்தாள் அபிநயா. அங்கு வந்த அவளுடைய அயல்வீட்டு நண்பி மாலதி, பல வண்ணக் குண்டுமணிகள் பதிக்கப்பட்ட புதிய வண்ண ஆடை ஒன்றை உடுத்தி அழகு காட்டிக்கொண்டிருந்தாள். அபிநயா புதிய ஆடையுடன் வீட்டில் நின்றிருந்ததைக் கண்ட மாலதி, "ஏன் நீ புது உடுப்புப் போடாமல் ரியூசனுக்கு வந்தனீ?" என்று வினவினாள். ஆலயத்துக்குச் சென்ற ஆடையையே அணிந்திருந்த அபிநயா கூறிய பதில் அங்கு வந்திருந்த ஏழைப் பிள்ளைகளைக் கவர்ந்திழுத்தது. "எல்லோரும் புது உடுப்பு அணிந்திருக்கிற இடத்திலேயே நாமும் புது உடுப்புடன் இருக்க வேண்டும். சூழலுக்கு ஏற்றால்போல் வாழ்வது நல்லது. எனது மகிழ்ச்சி மற்றவர்களைப் புண்படு த்தக்கூடாது" என்றாள். அபிநயாவுக்கு இப்போதும் நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள்.

*சிறுவர்களே!* **இந்த உலகத்தில் நிறைய இருப்பது ஏழைகளே. இந்த உலகுக்கு ஏற்றால்போல் வாழப்பழகிக்கொள்வோமாக.**



## தாத்தா

தாத்தா தாத்தா தாத்தா
தங்கமான தாத்தா
தாத்தா முகம் பார்த்தா
கட்டிக் கொஞ்சும் தாத்தா

நறுக்கு மீசைத் தாத்தா
நரை விழுந்த தாத்தா
குறும்பு நாங்கள் செய்தால்
முறைத்துப் பார்க்கும் தாத்தா


விரும்பும் இனிப்பெல்லாம்
வேண்டித் தரும் தாத்தா
வருத்தம் என்று கண்டால்
வாடி நிற்கும் தாத்தா

தாத்தா போல யாரு
யாரும் இல்லைப் பாரு
தாத்தா நீடு வாழ
ஆண்டவனைக் கேளு

■ *வேலணையூர் சுரேஷ்*



சி.சுரேஸ்குமார்,
முள்ளியவளை.



சு.அன்றியா,
தரம் - 2,
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்




# விரைவில் பிக்பாஸ் 2

பிரபல தொலைக்காட்சியில் கடந்த வருடம் ஒளிபரப்பான பிக்பாஸ் நிகழ்ச்சி ஒட்டுமொத்த தமிழ் மக்களின் கவனத்தையும் ஈர்த்தது.
ஆரம்பத்தில் பல எதிர்ப்புக்கள் இருந்தாலும், பிறகு ரசிகர்களின் அமோக வரவேற்பை பெற்றது. பிக்பாஸ்-1 சீசனை தொகுத்து வழங்கிய நடிகர் கமலஹாசனுக்காகவே நிகழ்ச்சி அதிகம் பிரபலம் ஆனது.
பிக்பாஸ் சீசன் 1 நிகழ்ச்சி பல சர்ச்சைகளைச் சந்தித்து ஒரு வழியாக 100 நாள்களில் நிறைவடைந்தது. அதில் ஆரவ் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து இரண்டாவது சீசன் எதிர்வரும் ஜூன் மாதம் தொடங்கவிருக்கிறது.
பிக்பாஸ் சீசன் 2 இனை சூர்யா தொகுத்து வழங்கவுள்ளதாகவும் செய்திகள் வெளிவந்தன. ஆனால் சூர்யா தரப்பினர் இந்தச் செய்தியை மறுத்தனர். கமலஹாசன் தற்போது அரசியலில் இறங்கியுள்ளார்.
இந்த நிலையில் நடிகர் அரவிந்த் சாமி பிக்பாஸ் சீசன் 2 நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவார் எனவும் கூறப்படுகிறது.










## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 4 | | 5 | 7 | | | |
| | | | 8 | | | | 4 | |
| | | | 1 | | 4 | | 7 | 8 |
| 9 | | | 6 | | | | 5 | |
| 4 | | 5 | | | | 6 | | 3 |
| | 8 | | | | 5 | | | 9 |
| 5 | 2 | | 4 | | 1 | | | |
| | 4 | | 5 | | 8 | | | |
| | | | 3 | 9 | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 4 | 9 | 5 | 7 | 2 | 6 | 1 |
| 1 | 9 | 7 | 8 | 2 | 6 | 3 | 4 | 5 |
| 2 | 5 | 6 | 1 | 3 | 4 | 9 | 7 | 8 |
| 9 | 1 | 2 | 6 | 8 | 3 | 4 | 5 | 7 |
| 4 | 7 | 5 | 2 | 1 | 9 | 6 | 8 | 3 |
| 6 | 8 | 3 | 7 | 4 | 5 | 1 | 2 | 9 |
| 5 | 2 | 9 | 4 | 7 | 1 | 8 | 3 | 6 |
| 3 | 4 | 1 | 5 | 6 | 8 | 7 | 9 | 2 |
| 7 | 6 | 8 | 3 | 9 | 2 | 5 | 1 | 4 |

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

**கடவுள்:** பக்தா என்ன வரம் வேண்டும் கேள்?

**குப்புசாமி:** கடவுளே எனக்கு சாவே வரக்கூடாது.

**கடவுள்:** சரி பக்தா அப்படியே ஆகட்டும்.

குப்புசாமி ரொம்ப சந்தோசமாகி வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார். அப்போது வழியில் ஒருவர் குப்புசாமியிடம் பேச வந்தார்.

**வழிப்போக்கர்:** உங்க பேரு என்ன?


குப்புசாமி: குப்புமி... குப்புமி..

பாவம், எவ்வளவோ முயற்சித்தும் கடைசிவரை குப்புசாமிக்கு "சா" வே வரலையாம்...

**நீதி:** கடவுள் எம்மை விட புத்திசாலி



ஒரு கணவனும் மனைவியும் துணி கடையின் லிப்டில் மாடிக்குச் சென்றார்கள் . ஒரு அழகிய பெண்ணும் லிப்டில் சென்றாள்.
கணவன் அழகிய பெண்ணை ஒட்டியவாறு நிற்க, திடீரென அழகி அவனை அறைந்தாள்.
கணவன் அதிர்ச்சியடைந்து "ஏன் இப்ப அறைஞ்சே.?" என்று கேட்க
"எதுக்கு என் இடுப்பை கிள்ளினே..?"என்றாள்.
கணவனுக்கோ ஒன்றும் புரியல . மனைவிக்கு முன் இப்படி நடந்து விட்டதே என்று அவமானம் . அதோட பயங்கர குழப்பம் வேற . லிப்ட் நின்று எல்லோரும் வெளியேற,மனைவி சொன்னாள், "அதையே யோசிச்சுட்டு இருக்காதீங்க. உங்க ஜொள்ளைப் பார்த்து எரிச்சல்ல நான் தான் அவளைக் கிள்ளினேன்.."



## இன்றைய நாள்

**மேடம்:** செயலில் உற்சாகம் அதிகரிக்கும். அதிக உழைப்பினால் தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி பெறுவீர்கள். உபரி வருமானம் கிடைக்கும். குடும்பத்தேவை குறையின்றி நிறைவேறும். பெண்கள் எதிர்பார்த்த

**இடபம்:** பணியில் கூடுதல் கவனம் தெவை. தொழில் வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சராசரி பணவரவு இருக்கும். உறவினர் வழியில் செலவு ஏற்படலாம். பிள்ளைகளின் நற்செயல் ஆறுதல் அளிக்கும்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் செயல்படுவது அவசியம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். கடன் விஷயத்தில் கூடுதல் கவனம் தேவை.

**கடகம்:** சமயோசிதமாக செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். இலாபம் அதிகரிக்கும். உறவினர்களிடம் நெருக்கம் அதிகரிக்கும். பெண்களுக்கு பொன் பொருள் சேரும்.

**சிங்கம்:** நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிக்க முயல்வர்.

**கன்னி:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழிலில் உற்பத்தி விற்பனை செழிக்கும். உபரிவருமானம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும். பெண்கள் தாய்வீட்டாரின் அன்பை பெற்று மகிழ்வர்.

**துலாம்:** குடும்பத்தில் இருந்த குழப்பம் தீரும். தொடர்பில்லாத பணியை ஏற்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பயண திட்டத்தில் திடீர் மாற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்:** பெற்றோரின் வழிகாட்டுதலை மதித்துச் செயற்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி உண்டாகும். பணவரவு திருப்திகரமாகும்.

**தனுசு:** சமூகத்தில் அந்தஸ்து அதிகரிக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்கு கூடுதல் உழைப்பு அவசியம். சீரான வருமானம் கிடைக்கும். நண்பரால் உதவி கிடைக்கும்.

**மகரம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில் வியாபாரம் சார்ந்த குறையை சரி செய்வது நல்லது.

**கும்பம்:** திட்டமிட்ட பணியில் திடீர் மாற்றம் செய்வீர்கள். தொழில் வியாபாரம் சார்ந்த குறையை பிறரிடம் சொல்ல வேண்டாம்.

**மீனம்:** அனைவரிடமும் அன்பு காட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இலக்கு பூர்த்தியாகும். பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

"தம்பி ஒரு பீர்!
"என்ன அண்ணே! இன்னைக்கி ரொம்ப சோகமா இருக்கீங்க?? மூஞ்சி டல்லா இருக்கு?
"அதை விடுப்பா! பீரை எடுத்திட்டு வா!
"பரவா இல்லை, சொல்லுங்கண்ணே!!
"அது வந்து, ஒண்ணுமில்லை, எனக்கும் என் மனைவிக்கும் சண்டை வந்துடுச்சு, ஒரு மாசம் என்னோட பேசமட்டேன்னு சொல்லிட்டா
"போங்கண்ணே! சந்தோசமான விசயத்திற்கு போய் இம்புட்டு கவலைப்படுறீங்களே?
"அடேய்! இன்டைக்குத்தான் அந்த மாசத்தோட கடைசி நாள்!

# வெண்டிக்காய் காரக் குழம்பு

**தேவையான பொருள்கள்**
வெண்டிக்காய் - 150 கிராம்
பெரிய வெங்காயம் - ஒன்று
தக்காளி -2
மஞ்சள் தூள் - கால் தேக்கரண்டி
மிளகாய் தூள் -2 தேக்கரண்டி
மல்லித் தூள் - ஒரு தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
புளி தண்ணீர் - கால் கோப்பை

**தாளிக்க**
எண்ணெய் - 4 மேசைக்கரண்டி
கடுகு, சீரகம், உளுந்து, கடலை பருப்பு
கறிவேப்பிலை, கொத்தமல்லி

**செய்முறை**
வெங்காயம், தக்காளியை சிறு துண்டுகளாக நறுக்கிகொள்ளவும்.
வெண்டிக்காயை சமமான துண்டுகளாக வெட்டி வைக்கவும்.



வெண்டிக்காயை வெறும் சட்டியில் போட்டு 5 நிமிடம் வதக்கி வைக்கவும்.
சட்டியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் தாளிக்க கொடுக்கப்பட்டுள்ள பொருள்களை போட்டு தாளித்த பின்னர் வெங்காயத்தை போட்டு வதக்கவும்.
வெங்காயத்தின் நிறம் மாறிய வுடன் தக்காளியைச் சேர்த்து குழைய வதக்கவும். (விரும்பினால் தக்காளியை அரைத்தும் சேர்க்கலாம்)
அடுத்து அதில் வதக்கிய வெண்டிக்காயை சேர்த்து வதக்கவும்.
தக்காளி வெந்து எண்ணெய் பிரியும் போது, மஞ்சள் தூள், மிளகாய் தூள், மல்லித் தூள் சேர்த்து தேவையான அளவு தண்ணீர் ஊற்றி கொதிக்க விடவும்.
தூளின் வாசம் குறைந்து வெண்டிக்காய் வெந்ததும், புளி தண்ணீர் சேர்த்து கொதிக்க விட்டு இறக்கவும்.
வெண்டிக்காய் காரக் குழம்பு தயார்.

# உடல் பலத்தைக் கூட்டும் பாதாம்



நார்ச்சத்து, விற்றமின்கள் மற்றும் தாது உப்புக்கள் நிறைந்தது பாதாம். அதனால்தான் இதை உணவாகவும் மருந்தாகவும் பயன்படுத்துகின்றனர். எந்த அளவுக்கு விற்றமின்கள் மற்றும் தாது உப்புக்களைத் தருகிறதோ அதேபோன்று ஆற்றலையும் அளிக்கிறது.

**சத்துக்கள் பயன்கள்**
இதில் மோனோ அன்சாச்சுரேட்டட் கொழுப்பு அமிலம் உள்ளது. இது கெட்ட கொழுப்பு எனப்படும் எல்.டி.எல் அளவைக் குறைத்து நல்ல கொழுப்பான ஹெச்.டி.எல் அளவை அதிகரிக்க உதவுகிறது. இதனால் இதய நோய்கள் மற்றும் குருதிக் குழாய் அடைப்பால் ஏற்படக்கூடிய பக்கவாதம் வருவதற்கான வாய்ப்புகள் குறைகிறது.
விற்றமின் 'இ' இதில் நிறைவாக உள்ளது. 100 கிராம் பாதாம் பருப்பில் 25 கிராம் விற்றமின் 'இ' சத்து உள்ளது. இது நம் ஒரு நாளையத் தேவையில் 170 சதவிகிதம். இதுதவிர, பி காம்ப்ளெக்ஸ் விற்றமின் இதில் அதிக அளவில் உள்ளன. அதாவது, தயாமின், நியாசின், ரிபோப்ளேவின், போலிக் அமிலம் போன்ற சத்துக்கள் இதில் அதிகம்.
இதில் உள்ள விற்றமின் 'இ', பைட்டோ கெமிக்கல்ஸ் மற்றும் ஃபிளவனாய்டுகள் மார்பகப் புற்றுநோய் செல்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டது. மேலும் அதிக அளவில் இதில் உள்ள நார்ச்சத்து செரிமான மண்டலத்தைச் சுத்தப்படுத்தி குடல் புற்றுநோய்க்கான வாய்ப்பைக் குறைக்கிறது.
இது மிகவும் குறைவான கிளைசிமிக் இண்டெக்ஸ் கொண்டதால், குருதியில் சர்க்கரை அளவை உடனடியாக அதிகரிக்காது. இதனால் குருதியில் சர்க்கரையின் அளவு கட்டுக்குள் இருக்கும். சர்க்கரை நோய் வருவதற்கான வாய்ப்பைக் குறைக்கிறது.
பாதாம் எண்ணெயை தொடர்ந்து சருமத்தில் பூசி வந்தால் சருமம் உலர்தல் பிரச்சினை நீங்கி, பளபளப்பைக் கூட்டும்.

**தேவை**
நாள் ஒன்றுக்கு ஒரு கை அளவு பாதாம் மட்டுமே சாப்பிடுவது அன்றைக்குத் தேவையான அளவு தாது உப்புக்கள், விற்றமின்கள், புரதம் உள்ளிட்டச் சத்துக்கள் கிடைக்கச் செய்கிறது. பொதுவாக, தினமும் 4 பாதாம் எடுத்துக் கொள்ளலாம். உடலில் அதிக கொழுப்பு உள்ளவர்களும், குண்டானவர்களும் ஒன்றிரண்டு எடுத்துக் கொண்டாலே போதும்.


## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| கத்தரி | 40 | 60 | 60 | 50 | 60 |
| முள்ளங்கி | 60 | 50 | 60 | 60 | 30 |
| மரவள்ளி | 50 | 40 | 55 | 40 | 40 |
| பயிற்றை | 80 | 120 | 120 | 120 | 80 |
| பாகல் | 80 | 200 | 100 | 100 | 100 |
| க.கிழங்கு | 60 | 60 | 60 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 60 | 140 | 70 | 70 | 70 |
| சி.வெங்காயம் | 160 | 150 | 140 | 160 | 160 |
| பூசணி | 30 | 50 | 40 | 40 | 30 |
| தக்காளி | 40 | 50 | 20 | 40 | 30 |
| வாழைக்காய் | 50 | 70 | 60 | 50 | 60 |
| கீரை | 40 | 30 | 50 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 50 | 30 | 30 | 35 | 30 |
| ப.மிளகாய் | 60 | 60 | 35 | 50 | 60 |
| புடோல் | 50 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 40 | 60 | 30 | 60 | 30 |
| வெண்டி | 60 | 100 | 80 | 80 | 80 |
| போஞ்சி | 100 | 140 | 80 | 120 | 80 |
| லீக்ஸ் | 200 | 200 | 240 | 160 | 120 |
| தேங்காய் | 60 | 80 | 90 | 100 | 70 |
| உ.கிழங்கு | 70 | 70 | 80 | 90 | 80 |
| தேசிக்காய் | 250 | 200 | 200 | 200 | 300 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 20 | 15 |
| கறிமிளகாய் | 60 | 120 | 70 | 80 | 80 |
| கரட் | 100 | 100 | 90 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 200 | - | 350 | 200 | 300 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| இறால் | 900 | 1000 | 700 | 900 |
| நண்டு | 400 | 500 | 500 | 400 |
| கணவாய் | 700 | 800 | 700 | 1000 |
| பாரை | 500 | 650 | 700 | 700 |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 450 | 500 | 450 |
| விளை | 450 | 450 | 350 | 500 |
| முரல் | 300 | 400 | 350 | 300 |
| கும்பிளா | 300 | 350 | 350 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 450 | – |
| ஓரா | 300 | 300 | 450 | – |
| திரளி | 200 | 200 | 150 | 200 |
| நகரை | 200 | 250 | 350 | – |
| சூடை | 150 | 180 | 150 | 200 |
| ஒட்டி | 200 | 200 | 250 | – |
| திருக்கை | 300 | 300 | 350 | – |
| மதனம் | 300 | 250 | 250 | 200 |
| கொய் | 120 | 100 | 80 | 100 |
| பாலை | 200 | 300 | 450 | 300 |
| வாளை | 150 | 350 | 350 | 200 |



## இது புதுசு

ஆண்களுக்கான ரீசேட் வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## சர்க்கரை நோயாளிகள் வெந்தயம் சாப்பிடுவது எதற்காக?

வெந்தயம் உடலுக்கு குளிர்ச்சியைத் தருவதோடு மட்டுமல்லாமல் சர்க்கரை நோய் மற்றும் கொழுப்புப் பிரச்சினைகளுக்கும் மருந்தாகப் பயன்படுகிறது.
குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருக்கும் ஏற்றது வெந்தயம். வெந்தயம் உடலுக்கு குளிர்ச்சியைத் தருவதோடு மட்டுமல்லாமல் சர்க்கரை நோய் மற்றும் கொழுப்புப் பிரச்சினைகளுக்கும் மருந்தாகப் பயன்படுகிறது.

**வெந்தயத்தில் உள்ள சத்துக்கள்**
புரதச்சத்து, சுண்ணாம்புச் சத்து, பொஸ்பரஸ், பொற்றாசியம், சோடியம், இரும்புச் சத்து விற்றமின் 'ஏ', தையாமின், நிக்கோடினிக் அமிலம், ஆகிய சத்துப் பொருள்கள் கணிசமாக அடங்கியுள்ளன.



சர்க்கரை நோயாளிகளுக்கு எதற்காக நல்லது?
சாதாரணமாக எமது குருதியில் சர்க்கரையின் அளவு 80 - 110 மி.லி வரை இருக்கலாம். நாம் எடுத்துக் கொள்கிற உணவு, அதன் கலோரி போன்றவற்றைப் பொறுத்து இந்த சர்க்கரையின் அளவு வேறுபடும்.
அதிக கலோரி உணவு உட்கொள்கிற போது, சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்துவதுதான் இன்சுலினின் வேலை. நீரிழிவுக்காரர்களுக்கு இந்த இன்சுலின் சுரப்பு சரியாக இருக்காது. அந்த இன்சுலின் சுரப்பை ஊக்கப்படுத்தி, கிரியா ஊக்கியாக செயல்படுகிற வேலையைத் தான் வெந்தயம் செய்கிறது.
தினமும் இரவில் ஒரு கரண்டி வெந்தயத்தை தண்ணீரில் ஊற வைத்துவிட்டு, மறுநாள் காலையில் அந்தத் தண்ணீரோடு, வெந்தயத்தையும் சேர்த்து எடுத்துக் கொண்டால், குருதியில் சர்க்கரையின் அளவு கட்டுக்குள் வரும். கொலஸ்ட்ராலை கட்டுப்படுத்துவதிலும் வெந்தயத்துக்கு மிகப்பெரிய பங்குண்டு.

# தொடுபேசிச் சுகம்

கவிதை

காரை - யோகா



உலகமாற்றம்
என் மகன்
உணரத் தேவை
என்றே எண்ணியவனாய்
ஈரெட்டாயிரம்
விலையுடைய
தொடுபேசி
ஒன்றைப் பெற்றே
கொடுத்தேன்
அவன் கையில்

அதிகாலை விழிப்பு,
சுய கற்றல்,
அம்மாவுக்கு
ஒத்தாசை,
நாளாந்த
உடற்பயிற்சி,
உற்சாகமான
அன்றாடச்
செயற்பாடு,
மைதான
விளையாட்டுக்கள்,
நூலக நூல்
வாசிப்பு,
உலக அறிவோடு
பொது அறிவு
அத்தனையும்
நெருப்பினில்
நின்று நீங்கும்
புகைபோல்
பறிபோனதே
அவனை விட்டு

ஆங்காங்கு
சாய்வுக்கதிரையில்
படுக்கைத் தலையணையில்
சாய்ந்த
தலை குனிந்து
கழுத்து முடங்கி
நாரி வளைந்து
கண் ஒளி மங்கி
காதில் எதுவும்
கேளாமல், பல்
விளக்காமல்
முகம் கழுவாமல்
பகல் உணவு கூடத்
தேடாமல், பக்கத்து
வீட்டுப் பாட்டி
செத்தது கூடத்
தெரியாமல்
தானே தனியே
சிரித்தும் பேசியும்
சித்தப் பிரமை
பிடித்தவன் போல்
நாளில் முக்கால்
பொழுதும் தேடித்
தேடி தட்டித் தட்டி
தேடுகிறான்
தொடுபேசியில்
உலகத்துக்
குப்பைகளை

கவிதை

ஓஷோ சிறிரதி

# ஆனந்த மங்கை



சின்னஞ்சிறுசின்னஞ்சிறுசிறகே
சிதறி விழுவாய் மார் மீதே

வண்ண விரல்
இரண்டும் பட்டுக்
கன்னக்குழி சிவக்க
கண்ட விழி
கனவில் வந்து
வண்டைப்போல மிதக்க

ஓடும் நதியின் ஓசை
ஆழ்ந்த செவியில் வேறு
தலை வணங்கிய பின்னே
ஞாலம் மௌனம் ஆகும்

பாதம் எடுத்தடி
என் தலையில் வையடி
உன் பச்சை விரல் ரெண்டால்
என் மார்பைக் கீறடி

உன் பார்வை போதுமே
பழி பாவம் தீருமே
உன் மோகத்தீயிலே
ஒரு யாகம் மூழுமே

பாதி ஈரப் பாதத்தை
என் தலையில் வையடி

நான் மூழ்கும் கங்கையே
என் ஆனந்த மங்கையே!
நான் மூழ்கும் கங்கையே
என் ஆனந்த மங்கையே!

## சொற்சிலம்பம் போட்டி இல: 518

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | ■ | 11 | | | |
| | ■ | 12 | 13 | | ■ | 14 | |
| ■ | 15 | | | ■ | 16 | ■ | |
| 17 | | ■ | 18 | | | 19 | |
| 20 | | 21 | | ■ | 22 | | ■ |
| 23 | | | ■ | 24 | | | |

அனுப்புபவர் பெயர்:.................................................
முழுமையான தபால் விலாசம்: ...............................
...................................................................................
கையொப்பம்:..........................................................

**இடமிருந்து வலம்**

1. அளவுக்கு அதிகம்
6. சேர்
7. இது கெட்ட பழக்கம்
8. பலவல்ல
9. இவள் ஆடல் அழகி
11. ஓர் இராசி
12. கூற்றுவன்
14. மங்களகரமான
15. திருமணம் ஆகாத பெண்
17. ஒரு கிழமை
18. வாதிடுதல்
20. கிருஷ்ண பரமாத்மா
22. மண்ணுக்கு முந்தியது / படி
23. சிதம்பரம்
24. மனைவி

**மேலிருந்து கீழ்**

1. தமிழ் எழுத்தின் தொடக்கம்
2. வலு
3. அதிக
4. அடிக்கடி தொற்றும் நோய்
5. ஒரு பிரபந்த வகை
8. தலை
10. சிறுவன்
13. ஆறறிவுடையவன்
15. பழுத்தல்
16. பிரச்சினை
17. மீளாத் துயிலுக்குரிய இடம்
19. வியாபார நிலையங்களில் பணக்கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் இடம்
21. மீனவனுக்கு இது அவசியம்

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 516 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) பாசாங்கு (4)தமது (7) துரு (8)ருசிகரம் (9)தாம்போதி (11)வம்பு (12)ஆல் (13)தர்க்கம் (15) வித (16)கரு (17)கரடி (18)குளம்பு (19)அரும்பு (20)கடுகு
**மேலிருந்து கீழ்**
(1)பாதுகாத்தல் (2)சாரும் (3)குருதி (4)தகவல் (5)மரம் (6)தும்புத்தடி (10) போர்க்களம் (12)ஆம் (14)கரும்பு (15)விரட்டு (18)குரு
சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 516 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
ம.வதனி,
இல.140, சிறிய குருமடவீதி,
மன்னார்.

**2 ஆம் பரிசு**
ம.க.ஶ்ரீதரன்,
ஶ்ரீபரமானந்த முதியோர் இல்லம்,
வதிரி, கரவெட்டி.

**3 ஆம் பரிசு**
செல்வி.ப.தீபா,
மு/உடையார்கட்டு
அ.த.க.பாடசாலை. உடையார்கட்டு.

**4 ஆம் பரிசு**
பி.மேரிஅனஸ்ரினா,
கிளாலி,
எழுதுமட்டுவாள்.

**5 ஆம் பரிசு**
ந.சசிகலா,
I.D58,புகையிரத நிலையவீதி,
வவுனியா.

**பாராட்டுப் பெறுவோர்**

B.மேரிலூட்ஸ் ஏஞ்சல்,
புனித வேளங்கண்ணி வீதி,
பள்ளிமுனை மேற்கு, மன்னார்.

சி.சிவராங்கன்,
பயிரிக்கூடல்,
காரைநகர்.

M.ரூபா,
மூத்தி விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**சொற்சிலம்பம் போட்டி இல.518**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (25.04.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.518 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 29.04.2018 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 516 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**



# இந்த வாரம்

**15.04.2018 முதல் 21.04.2018 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

சுக்கிரன், சந்திரனால் நன்மை ஏற்படும். நல்லெண்ணம் மனதில் மிகுந்திருக்கும். உடன் பிறந்தவருக்கு உதவுவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பூர்வீகச் சொத்தால் இலாபம் ஏற்படும். பிள்ளைகள் பிடிவாத குணத்துடன் செயல்படுவர். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் வேண்டும். மனைவியின் நற்செயல்களை பாராட்டுவீர்கள். வெளியூர் பயணத்தால் ஓரளவு நன்மை உண்டாகும். தொழில் இடையூறுகளை உடனடியாக சரி செய்யவும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் மதித்து பணிபுரியவும். பெண்கள் குடும்பத்தில் மங்கள நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் அக்கறையுடன் படிக்க வேண்டும்.

## இடபம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். புதிய உத்தியுடன் திட்டமிட்ட பணிகளை விரைந்து முடிப்பீர்கள். அன்றாட வாழ்வில் இனிய அனுபவம் கிடைக்கும். வாகன பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் வழிகாட்டுதல்களை ஏற்றுக் கொள்வர். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி செய்வீர்கள். சேமிப்புக் கூடும். பணியாளர் சிறப்பாக பணிபுரிந்து நற்பெயர் பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் அதிக தேர்ச்சி பெறுவர்.

## மிதுனம்

சூரியன், புதன், சுக்கிரன் தாராள நற்பயன் தருவர். பேச்சு, செயலில் சமயோசிதம் நிறைந்திருக்கும். உடன்பிறந்தவரின் பணி நிறைவேற உதவுவீர்கள். குடும்பத் தேவைகளை தாராள பணச்செலவில் பூர்த்தி செய்வீர்கள். பிள்ளைகள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். சுமுக வாழ்வு அமையும். விரும்பிய உணவுவகைகளை உண்டு மகிழ்வீர்கள். மனைவியின் ஆர்வமிகு செயல்கள் நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். நிலுவைப்பணம் வசூலாகும். பணியாளர் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்வர். பெண்கள் தாராள பணவரவில் விரும்பிய பொருள்கள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.

## கடகம்

குரு, செவ்வாய், சனீஸ்வரர் வியத்தகு அளவில் நன்மைகளை வழங்குவர். பணிகளில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். சமூக நிகழ்வுகள் மனதில் நல்ல மாற்றம் தரும். வீடு, வாகனத்தில் அறிமுகம் இல்லாதவர்க்கு இடம் தர வேண்டாம். பிள்ளைகளின் மனதில் உருவான குழப்பம் தீர உதவுவீர்கள். சத்தான உணவுகளை விரும்பி சாப்பிடுவீர்கள். குடும்ப தேவை பெருமளவில் பூர்த்தியாகும். மனைவி வழி சார்ந்த உறவினர்களை குறை சொல்ல வேண்டாம். வெளியூர் பயணத்தில் உரிய பாதுகாப்பு அவசியம். புதிய அணுகுமுறையால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிஏற்படும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பை பெறுவர். பெண்கள் நகை, பணம் இரவல் வாங்க வேண்டாம்.

## சிங்கம்

புதன், சுக்கிரன், கேது அளப்பரிய நற்பயன் தருவர். எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் அதிக அன்பு கொள்வர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் பெற்றோரின் வழிகாட்டுதலை தயக்கத்துடன் ஏற்றுக்கொள்வர். ஆடம்பர செலவுகளை தவிர்ப்பதால் கடன்சுமை குறையும். மனைவி குடும்பத்தினரின் அன்பை பெறுவார். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி இலக்கை விரைந்து நிறைவேற்றுவர். வெளியூர் பயணத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். பெண்கள் தாய் வீட்டாரின் அன்பை பெறுவர். மாணவர்கள் படிப்பில் கூடுதல் பயிற்சி பெறுவர்.

## கன்னி

சுக்கிரன், ராகு, சந்திரனால் நற்பயன் கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். நீண்டகால குழப்பம் நீங்கும். வாகனத்தில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். பிள்ளைகள் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். உடல் ஆரோக்கியத்தில் உரிய கவனம் வேண்டும். நிலுவைக்கடன் வசூலாகும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க நவீன மாற்றம் செய்வீர்கள். பணியாளர்கள் சூழல் உணர்ந்து செயல்படுவது நல்லது. பெண்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் செலவு செய்யவும். மாணவர்கள் சாகச விளையாட்டில் ஈடுபடக் கூடாது.

## துலாம்

பெரும்பான்மை கிரகங்கள் இராஜ யோக பயன் தர காத்திருக்கின்றனர். அன்றாட பணிகளில் உத்வேகமுடன் செயல்படுவீர்கள். சேமிக்கும் விதத்தில் வருமானம் அதிகரிக்கும். வாகன பராமரிப்புச் செலவால் பயணம் சுமூகமாகும். பிள்ளைகள் பெருமை தேடித் தருவர். சீரான ஓய்வால் உடல் ஆரோக்கியம் பாதுகாத்திடுவீர்கள். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுங்கள். அரசாங்க உதவி கிடைக்க வாய்ப்புண்டு. தொழிலில் உற்பத்தி, விற்பனை முன்னேற்றமடையும். பணியாளர்கள் பணி இலக்கை குறித்த காலத்தில் நிறைவேற்றுவர். பெண்கள் தாராள பண வசதியால் மகிழ்ச்சிகர வாழ்வு நடத்துவர். மாணவர்கள் கல்வியில்

## தனுசு

பெரும்பான்மை கிரகங்கள் இராஜ யோகபயன் தர காத்திருக்கின்றனர். அன்றாட பணிகளில் உத்வேகமுடன் செயல்படுவீர்கள். சேமிக்கும் விதத்தில் வருமானம் அதிகரிக்கும். வாகன பராமரிப்புச் செலவால் பயணம் சுமூகமாகும். பிள்ளைகள் பெருமை தேடித் தருவர். சீரான ஓய்வால் உடல் ஆரோக்கியம் பாதுகாத்திடுவீர்கள். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுங்கள். அரசாங்க உதவி கிடைக்க வாய்ப்புண்டு. தொழிலில் உற்பத்தி, விற்பனை முன்னேற்றமடையும். பணியாளர்கள் பணி இலக்கை குறித்த காலத்தில் நிறை வேற்றுவர். பெண்கள் தாராள பண வசதியால் மகிழ்ச்சிகர வாழ்வு நடத்துவர். மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி பெறுவர்.

## விருச்சிகம்

கேது, சந்திரனால் நற்பயன் கிடைக்கும். பேச்சில் ஆன்மிக கருத்து மிகுந்திருக்கும். உறவினர்களுடன் மகிழ்ச்சிகரமான சந்திப்பு ஏற்படும். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். பிள்ளைகள் அறிவார்ந்த செயல்களில் ஈடுபடுவர். வழக்கு விவகாரங்களில் சமயோசிதமாக செயல்படவும். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுவீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்வு ஏற்படும். தொழில், வியாபாரம் கூடுதல் உழைப்பால் வளர்ச்சி பெறும். பணியாளர்கள் பணியிடத்தின் சூழல் உணர்ந்து பணிபுரியவும். பெண்கள் குடும்பநலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் இலட்சிய மனதுடன் படிப்பில் ஈடுபடுவர்.

## மகரம்

சூரியன், சுக்கிரன், குரு நற்பயன் தருவர். உங்கள் மனதில் கருணை நிறைந்திருக்கும். வெகுநாள் திட்டமிட்ட பணி இஷ்ட தெய்வ அருளால் நிறைவேறும். வாழ்வியல் நடைமுறை சிறப்பாக அமையும். உறவினர்களால் அன்பும், ஆதரவும் உண்டாகும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் செயல்பாடு வளர்ச்சிக்கு துணைநிற்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து சேமிப்பு கூடும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதாக நிறைவேற்றுவர். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் பயிற்சி தேவைப்படும்.

## மீனம்

குரு, சுக்கிரன், கேது அனுகூல அமர்வில் உள்ளனர். நண்பர், உறவினரின் அன்பும், பாராட்டும் கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி பற்றி பேச்சு நடந்தேறும். பொது விவகாரங்களில் அமைதி காக்கவும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்ற முயல்வீர்கள். எதிரியால் இருந்த தொல்லை விலகும். நோய் தொந்தரவு குறைந்து ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் வளர்ச்சி உருவாகும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு, விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.

## கும்பம்

செவ்வாய், சுக்கிரன், ராகு, சனீஸ்வரரால் தாராள நன்மை உண்டாகும். அன்றாடப் பணிகளை அக்கறையுடன் நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. பிள்ளைகள் அறிவில் மேம்படுவர். நம்பகமானவர்களிடம் பூர்வீக சொத்துக்களை ஒப்படைப்பது நல்லது. பகைவர் உங்களின் வளர்ச்சி கண்டு விலகுவர். மனைவி வழி உறவினர்களால் நன்மை உண்டாகும். விருந்து. விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியிடத்தின் தன்மை உணர்ந்து செயல்படுவர். பெண்கள் விரும்பிய பொருள்கள் வாங்கி மகிழ்வர். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சியும், பாராட்டும் பெறுவர்.

கட்டுரை


# முந்திவந்த செவியும் பிந்திவந்த கொம்பும்


சந்திரசேகர ஆசாத்

‘முந்தி வந்த செவியைப் பிந்தி வந்த கொம்பு மறைத்ததாம்!’ என ஒரு முதுமொழி தமிழில் உண்டு. இது மிருகங்களில் மட்டுமின்றி தமிழ்அரசியலிலும்கூடயதார்த்த மாகும் நிலை தோன்றியுள்ளது.

அதிலும்கூட ஆபத்தான வித்தியாசமும் உண்டு. மிருகங்களின் ஓர் கொம்பு காதுகளை மறைத் தாலும்கூடஅவற்றின்வளர்ச்சியால்செவிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்பட்டு விடுவதில்லை. ஆனால், அரசியலில் அப்படியில்லை. காதுகளை மறைத்து வளர்ந்த அதே கொம்பு வளைந்து அதன் கூரிய முனையால் காதுகளை உரசிக் காயப்படுத் திக் கொண்டிருக்கிறது. காதுகள் சில சமயம் இது இதமான வருடல் எனக் கருதி இதில் சுகம் காண லாம். ஆனால், இந்தக் காயத்தினூடாகக் கிருமிகள் புகுந்து கிருமித் தொற்றை ஏற்படுத்தி உடலுக்கே ஆபத்துஏற்படுத்திக்கொண்டிருப்பதுசெவிகளுக்குப் புரியாதி ருக்கிறது. அல்லது புரிந்தும் அதை வேறு நோக்கங்களுக்காக அனுமதிக்கின்றனவா என்ப தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

எப்படியிருப்பினும்உடல்நிலைஆபத்தைநோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதில் மட்டும் சந்தேகமில்லை.





### இருவேறு இழுபறி நிலைகள்

அண்மையில் தலைமை அமைச் சர் ரணில் விக்கிரமசிங்க மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில் லாத் தீர்மானத்தைத் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு ஆதரிப்பதா? எதிர்ப் பதா?என்பதைத்தீர்மானிப்பதற்காக அதன் தலைவர் சம்பந்தன் தலை மையில் ஒரு சந்திப்பு இடம்பெற்றது. அப்போது தலைவர் சம்பந்தன் ஓர் ஆவணத்தைக் கையில் வைத்துக் கொண்டுதாம்தலைமைஅமைச்சரி டம்10நிபந்தனைகளைமுன்வைத்த தாகவும் தலைமை அமைச்சர் அவற்றை நிறைவேற்ற எழுத்து மூலம் சம்மதம் தெரிவித்ததாகவும் கூறி னார்.அதன்அடிப்படையில் தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில் லாத் தீர்மானத்தை எதிர்ப் பதாக முடி வெடுக்கப்பட் டது. நம்பிக்கையில்லாத் தீர்மானம்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வாக்குக ளையும் சேர்த்து 42மேல திக வாக்குகளால் தோற்க டிக்கப்பட்டது.

அதன் பிறகுதான் நாடாளு மன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பேச்சாளருமா கிய சுமந்திரன் புதிய கட் சியை அரங்கேற்றினார். அவர் ஊடகவியலாளர் சந் திப்பில் தலைமை அமைச் சருக்குஎதிரானநம்பிக்கை யில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களிப்பதற்கா கத் தலைமை அமைச்சரு டன் எந்தவித ஒப்பந்தமும் செய்யப்படவில்லையெனவும் எழுத்து மூலம் எந்த வித வாக்குறுதியும் தரப்படவில்லை எனவும் தெரி வித்திருந்தார்.

அப்படியானால் தலைவர் சம்பந்தன், தனக்கும் ஐக் கிய தேசியக் கட்சிக்குமிடையிலான உறவின் அடிப்ப டையில் ஓர் அப்பட்டமான பொய்யைச் சொல்லி நாடா ளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றாரா? அல்லது சம்பந்தன் சொன்ன உண்மையைச் சுமந்தி ரன் தனது குடும்ப நண்பரான மகிந்த ராஜபக்சவைத் திருப்திப்படுத்துவதற்காக மறைக்க முயல்கிறாரா? என்றகேள்வி எழுகிறது.

உண்மை, பொய் எப்படி இருப்பினும் நீண்டகாலத் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புஉருவாக்கப்பட்டகாலத்திலிருந்துஅதன் தலைவராகச்செயற்பட்டுவந்த, வருபவருமான இரா. சம்பந்தனை 2010ஆம் ஆண்டில் நியமனப் பட்டியல் மூலம் அரசியலுக்குள் புகுந்து கொண்ட சுமந்திரன் பொதுவெளியில் பொய்யராக்க முயல்வது. முந்தி வந்த செவியைப் பிந்தி வந்த கொம்பு மறைப்பது மட்டு மின்றி வளைந்து காதையே குத்தும் முறையையும் மீறிய நடவடிக்கையாகும்.

### செல்வம் அடைக்கலநாதனின் நிலைப்பாடு?

இவர்களைத் தங்களின் மீட்பார்களாகக் கருதி வாக்களித்த தமிழ் மக்களுக்கு இதில் எது பொய், இது உண்மை என்ற விட்யம் இரு வரில் எவராலுமோ அல்லது இருவரும் இணைந்தோகூட இதுவ ரைக்கும் தெளிவுபடுத்தப்படவில்லை. அதேவேளையில், நாடா ளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரான செல்வம் அடைக்கல நாதனோ, "தலைமை அமைச்சர்" தமக்கு வழங்கிய வாக்குறுதி களை நிறைவேற்றாவிடில் எதிர் விளைவுகளைச் சந்திக்க வேண் டிவரும் என எச்சரித்துள்ளார். அவர் தலைவர், சம்பந்தனுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கிறாரா? அல்லது உண்மையிலேயே தலைமைஅமைச்சர்எழுத்துமூலவாக்குறுதியைவழங்கினாரா? என்ற குழப்பம் எழுகிறது.

### கூட்டமைப்பும் பின்னடைவுகளும்

ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் கிருமித் தொற்று ஆரம்பமாகிவிட்டது. அதன் காரணமாகவே கடந்த தேர்தல்களில் 77 வீதத்துக்கு மேலாக வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு இறுதியாக நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் 35வீத வாக்குகளைப் பெற்றிருந்தது. வரவு-செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்க 2கோடி ரூபா அபிவிருத்தி நிதியாகப் பெற் றமை. காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விடுதலை போன்ற மக்கள் பிரச்சினைகளில் உண்மையான அக்கறை காட்டாமை, தமிழ் மக்களின் நலன்க ளைவிடஅரசின்நலன்களைமுதன்மைப்படுத்.ஊடகங்கள்உண் மைகளை வெளியிடும்போது அவற்றின் மேல் வசைபாடியவை போன்ற கைங்கரியங்களில் ஈடுபட்டமையே இத்தகைய பின்ன டைவுக்குக் காரணமாகும். தேர்தல் மேடைகளில் பழைய சுலோ கங்களை மீண்டும் மீண்டும் ஒலித்தும் மக்களை ஏமாற்ற முடிய வில்லை.

வடக்கில் ஒரேயொரு சபையில் மட்டுமே தனியாக ஆட்சியமைக் கும் அளவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நலிவிடந்துபோன மைக்கு அதன் தலைமை, மக்களின் அபிலாசைக ளையும் உணர்வுகளையும் மதிக்காத போக்கே காரணம் என்பதும் மறுப்பதற்கில்லை.

### ஈ.பி.டி.பி இணைவு இன்னும் பலவீனமடையச் செய்யும்

தமிழ் மக்கள் தேர்தல் மூலம் தமிழ்த் தேசியக் கூட் டமைப்புக்குக்கடுமையானஎச்சரிக்கையைவிடுத் திருந்தபோதிலும்அதைஉணர்ந்துதமதுபோக்கை மாற்றுவதாகக் கூட்டமைப்பு இல்லை. தேர்தலின் பின்பும் கொம்புக்கு மண்ணெடுக்கும் நிலையும் ஆரம்பமாகிவிட்டது. தேர்தல் முடிந்த கையோடு யாழ்ப்பாணம்வந்தசுமந்திரன்யாழ். மாநகரசபை யில் வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களைக்கூட்டி, ஆனோல்ட்தான்அதன் மேயர் எனத் தெரிவித்துவிட்டுப் போய்விட்டார். உண்மையாகவேதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனோ அல்லது தமிழ் அரசுக்கட்சி யின் தலைவர் மாவை சேனாதிராசாவோ, தெரிவு செய்யப்பட்டஉறுப்பினர்களைக்கூட்டிஅவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் முடிவை மேற் கொண்டிருக்க வேண்டும். ஆனால், சுமந்திரன் தான்தோன்றித்தனமான முடிவை எடுத்துள்ளார். ஆட்சியமைக்கப் போதிய பலமில்லாத நிலையில் ஈ.பி.டி.பியின் காலில் விழுந்துள்ளனர்.

ஒட்டுக்குழுக்களாகவும், போர்க் குற்றங்களில் ஈடு பட்டவர்களாகவும், கொலை, கொள்ளை களில் சமபந்தப்பட்டவர்களாகவும், தமி ழீழ விடுதலைப் போராட்டத்தைத் தோற் கடிப்பதற்குப் பல வழிகளில் பணியாற்றி யவர்களாகவும் தமிழ் மக்களால் நிராக ரிக்கப்பட்டுப் புற மொதுக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படும் ஈ.பி.டி.பியினரின் ஆதரவைப்பெற்றதன்மூலம்அவர்களை ஓர் அரசியல் சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கீகரித்துவிட்டது. இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதைக் கடுமையாக எதிர்த்தபோதும் அவர்களின் எதிர்ப்பைத் தலைமை பொருட்படுத்தவில்லை. ‘இப்போது அண் டாக் காக்காய்க்கும் குயில்களுக்கும் பேதம்புரியவில்லை’. எனும்நிலைதான் தமிழ்மக்களுக்குஏற்பட்டுள்ளது.

### மற்றொரு முரண் கருத்து

கரைச்சிப் பிரதேச சபையில் ஆட்சிய மைக்கப் போதிய பலம் இல்லாதபோ தும்ஈ.பி.டி.பியினரினதோ,சந்திரகுமா ரின்சுயேச்சைகளினதோஆதரவைப் பெறாமல் ஆட்சியமைக்க முடிந்து ள்ளது. ஆனால், ஏனைய உள்ளூ ராட்சி மன்றங்களில் ஈ.பி.டி.பியின் ஆதர வைப்பெற்றுஆட்சியமைந்தமையின் உள்நோக்கம்தான் என்ன?

அதேவேளையில் இன்னுமொரு கொம்பு விளையாட்டும், பெரும் சர்ச் சையையும்,வாதப்பிரதிவாதங்களை யும் ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே கூட்டமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பாக அதிருப்தி கொண்டிருந்த முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வ ரனை மேலும் தூரத்தள்ளும் முயற்சி யாகவே அது அமைந்துள்ளது. அதா வது அடுத்தமுறை வடமாகாண சபை யின் முதலமைச்சராக சி.வி. விக் னேஸ்வரன் நிறுத்தப்படார் எனவும் மாவை சேனாதிராசாவே நிறுத்தப்ப டுவார் எனவும் சுமந்திரன் சாடை மாடையாகத் தெரிவித்திருக்கிறார்.

அடுத்தநாளே‘வடக்கின்முதலமைச்சர் வேட்பாளர்யார்என்பதுமுடிவுசெய்யப்படவில்லை என்பதும்பொருத்தமானநேரத்தில்பொருத்தமான முடிவு எடுக்கப்படும்’ எனவும் தலைவர் இரா. சம் பந்தன் தெரிவித்துள்ளார். இதிலும் இவர்கள் இரு வரிமிருந்தும் இருவெறு கருத்துக்களே வெளிப்பட் டிருக்கிறது. இது ஆபத்தான போக்காயிருந்தபோ தும்இதுபற்றியதெளிவைக்கட்சிசார்பாகஎவருமே மக்களுக்குத் தெளிவுபடுத்த முன்வரவில்லை. இந்த நிலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மேலும் மக்கள் மத்தியிலிருந்து அந்நியப்படும் நிலையே உருவாகும்.

இப்படியாகஆளாளுக்குமுரண்நிலைக்கருத்துக்க ளைப் பரப்புவதால், எது சரி? எது பிழை? எது உண்மை? எது பொய்? என மக்கள் மத்தியிலும் குழப்ப நிலை நீடிக்கின்றது. எப்படியிருப்பினும் முந்தி வந்த செவியைப்பிந்தி வந்த கொம்பு மறைப் பதும், குத்துவதும்தான் இதன் மூலமான அவதா னிக்கப்பட்டிருக்கிறது. இதுவே தொடர்ந்து இடம் பெற்றுவருமாயின்ஏலவேஉள்ளகிருமித்தொற்று இன்னும் ஆபத்தான நிலையை ஏற்படுத்தும்.

# தண்ணீரைச் சேமிப்போம்

## தரணியை பாதுகாப்போம்

கட்டுரை

பா.குமுதன்

நீர் உயிரின் ஆதாரமாக இருக்கின்றது. மனிதனின் பிறப்பிலிருந்து இறப்பு வரைக்கும் வாழ்வின் அனைத்து விடயங்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்ற தனித்துவமான காரணியாக இருக்கின்றது. உலக வரலாற்றை எடுத்து நோக்கினால் புகழ்பெற்ற உலக நாகரிகங்கள் நீர் நிலைகளில் இருந்தே உருவாகியது புரியும். நைல் நதி, சிந்து நதி, போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம். பூமியின் 79 வீதமான பகுதி நீரால் சூழப்பட்டுள்ளது. இதில் 97வீதம் உப்பு நீராகவும் 3வீதம் நன்னீராகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் உலகின் மூன்று பேரில் ஒருவர் சுத்தமான குடிநீர் இன்றித் துன்பப்படுகின்றனர். உலகளாவிய ரீதியில் 85வீதமான நீர் விவசாயத்துக்காகவும் 10வீதமான நீர் கைத்தொழில்களுக்காகவும் 5வீதம் நீர் வீட்டுத் தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நீரால் தான் புவியின் அமைப்பு, இயற்கை சூழல் , நிலங்களின் பயன்படு தன்மை அதனால் உருவான உயிரினங்களின் வாழ்க்கைக் கட்டமைப்பு என்பன தோற்றம் பெற்றன என்று கூறலாம். அதனையே திருவள்ளுவர் 'நீர் இன்றி அமையாது உலகு' என்று ஒரு வரிகளிலேயே சொல்லி விடுகிறார். ஆனால் எம்மில் எத்தனை பேர் அதைப் புரிந்து கொண்டு வாழ்கிறோம் என்று பார்த்தால் பதில் பூச்சியமாகவே இருக்கிறது.

**உலகளவில் பாதுகாப்பான நீரைப் பெறுவதில் உள்ள சவால்கள்**


உலகளவில் சுத்தமான நீர் இன்றி ஒவ்வொரு 8செக்கன்களுக்கும் ஒரு குழந்தை உயிரிழப்பதாகப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இதனால் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் குழந்தைகள் இறக்கின்றன. இன்றைய 21ஆம் நூற்றாண்டில் குடிநீரைத் தேடி அல்லலுறும் மக்களின் தொகை பெருமளவாகிவிட்டது. அதிகரித்த சனத்தொகைப் பெருக்கம் அதனால் உண்டான நுகர்வுக் கலாசாரத்தின் மாற்றமும் அதிகரிப்பும் இன்றைய நிலையில் சுத்தமான நீரைப் பெறுவதில் பல்வேறு சிக்கல் நிலைகளைத் தோற்றுவித்திருக்கின்றன. பாதுகாப்பான நீரைப் பெற்றுக்கொள்வதில் இரண்டு பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஒன்று காலநிலை மாற்றத்தால் மழை வீழ்ச்சியில் ஏற்பட்ட மாற்றம், அடுத்து நீர் மாசடையும் செயற்பாடு என்பனவாகும். இவற்றில் மனிதச் செயற்பாடுகளே அதிகமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. நகரமயமாக்கல் திட்டங்களுக்காகக் காடுகளை அழிப்பதுடன் நீர் நிலைகளையும் ஏரிகளையும் நிரப்பி விட்டு அங்கு கட்டடங்களை அமைத்துக் கொள்கிறார்கள். இதனால் உலகின் இயற்கைச் சமநிலையில் மாற்றம் ஏற்படுவதுடன் அது கால நிலையையைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் உருவெடுத்து நிற்கிறது. அதுபோலவே விவசாய உற்பத்திகளில் பயன்படுத்தப்படுகின்ற இரசாயனங்கள் நிலத்தடி நீரைப் பாதித்து நிற்கின்றன. கைத்தொழில் வளர்ச்சியின் விளைவால் உருவான தொழிற்சாலைகளின் அதிகரிப்பு, அவை வெளியிடுகின்ற காபன் உள்ளிட்ட நச்சு வாயுக்கள், கழிவுகள் என்பன நீரைத் தீர்மானிக்கின்ற சக்தியாக உருவெடுத்து நிற்கின்றன. விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி என்ற போர்வையில் இயற்கைச் சூழலை மாற்றியமைப்பதால் எதிர்கால உலகம் பொரிய அழிவுகளைச் சந்திக்கும் நிலைக்குள்ளாகியிருக்கிறது.

தனி மனிதராகிய ஒவ்வொருவரும் நீர் சேமிப்பு, அதைப் பாதுகாக்கும் முறைகளைப் பற்றிய விழிப்புணர்வுகளைக் கொண்டிருக்கிறோமா? என்றால், பதில் "இல்லை" என்றே அமையும். நீருக்கு ஏற்பட்டுள்ள இன்றய நெருக்கடிச் சூழலைக் கருத்தில் கொண்டு உலக நாடுகள் கூட உருப்படியான திட்டங்களைச் செயற்படுத்துவது போல தெரியவில்லை. தங்களுக்குள்ளே போட்டி போட்டுக்கொண்டு ஆயுதங்களை உற்பத்தி செய்து, போர் நடாத்துகின்றனவே தவிர உலகின் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக்கு ஏற்றவாறான செயற்பாடுகளைச் செய்வதாகத் தெரியவில்லை. விளைவுகள் சிறிதாக இருக்கும்போது அவற்றைத் தீர்ப்பதற்குரிய செயல்களைச் செய்வதே சாலப்பொருத்தமாக இருக்கும். ஆனால் இங்கோ நிலைமை வேறு.

**இலங்கையில் நீர் முகாமைத்துவம்**

விவசாய நாடு என்ற வகையில் இலங்கையின் பொருளாதார, சமூக மேற்பாட்டிலே நீரின் பங்களிப்பு இன்றியமையாதாக உள்ளது. ஏனைய துறைகளான கைத்தொழில் மின் உற்பத்தி போன்றவற்றுக்கும் நீர், தனது பங்களிப்பை வழங்கி வருகிறது. எமது நாட்டில் 40வீத மின்சார உற்பத்திச் செயற்பாடுகள் நீரின் மூலமே நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. பண்டைய இலங்கையில் நீர் முகாமைத்துவம் பேணப்பட்டு வந்ததுடன் அந்தக் கால ஆட்சியாளர்களால் அது எவ்வளவு முன்னுரிமைப் படுத்தப்பட்டிருந்தது என்பதைப் பல சான்றுகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் ஆறுகளும் நீர் நிலைகளும் அதிகமே. இதனால் நீரைச் சேமிக்க வேண்டிய கடப்பாடு அதிகம் இருப்பதை நாம் மறுக்க முடியாது. இலங்கையைப் பொறுத்தவரை 103ஆறுகளும் 50க்கும் மேற்பட்ட நீர்தேங்கங்களும் 10ஆயிரத்துக்கும் அதிகமான குளங்களும் காணப்படுகின்றன. இவற்றில் 20ஆறுகள் வருடம் முழுவதும் வற்றாமல் ஓடிக்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் தென்மேல் பருவக்காற்று, வடகீழ் பருவக்காற்று, இடைப் பருவக்காற்றுக் காலம் என்பன மூலம் மழை வீழ்ச்சியையும் பெற்றுக்கொள்ள முடிகிறது. இவ்வாறு இருந்தாலும் இலங்கை மக்கள் தொகையினுள் 33வீதம் பேர் சுத்தமான குடி நீரைப் பெறுவதில் பலசிக்கல்களை எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

> உலகளவில் சுத்தமான நீர் இன்றி ஒவ்வொரு 8செக்கன்களுக்கும் ஒரு குழந்தை உயிரிழப்பதாகப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இதனால் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் குழந்தைகள் இறக்கின்றன. இன்றைய 21ஆம் நூறாண்டில் குடிநீரைத் தேடி அல்லலுறும் மக்களின் தொகை பெருமளவாகிவிட்டது.



காரணம், பெறப்படுகின்ற படிவு வீழ்ச்சியிலே அதிகமான நீர் சேமிக்கப்படாமல் கடலில் கலப்பதுடன் நீர் மாசடைதல் செயற்பாடுகளும் இடம்பெறுவதுதான்.

**வடக்குக் கிழக்கில் மழைவீழ்ச்சி குறைவு**

இலங்கையைப் பொறுத்தவரை வடக்குக் கிழக்குப் பகுதியே மழைவீழ்ச்சி குறைந்த பிரதேசமாகக் காணப்படுகிறது. இங்கு பெரியளவிலான நீர்தேக்கங்களோ, ஆறுகளோ இல்லாமை நீர்த்தேவையை அதிகரிக்கச் செய்கின்றன. தென்பகுதியில் இருந்து நீரைக் கொண்டு வரும் செயற்பாடுகள் வார்த்தையளவில் இருந்தாலும் அது நடைமுறையாவதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. இலங்கையை ஆட்சி செய்த மன்னர்கள் நீரின் முக்கியத்து வத்தை அறிந்து வைத்திருந்த அளவுக்குத் தற்கால அரசுகள் தமது பணிகளைச் செவ்வனே செய்யவில்லை என்று கூறலாம். இதன் புறத்தாக்கங்கள் வறட்சி, பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன் நாட்டின் பொருளாதாரத்தை ஆட்டம் காணச் செய்துவிடும் நிலையையும் உருவாக்கி விடுகிறது.

**இனியாவது நீரின் முக்கியத்துவம் உணர்வோம்**

இயற்கையின் கொடையான நீர் மனிதனுக்கு மட்டுமன்றி உலகின் ஒவ்வொரு உயிரினத்துக்கும் உயிர் நாடியாக விளங்குகிறது. உணவு இல்லை என்றால் உற்பத்தி செய்து விடலாம், உடையைக் கூட உருவாக்கி விடலாம் ஆனால் நீரை உற்பத்தி செய்ய முடியாது என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ளவேண்டும். மூன்றாம் உலகப் போர் நீரின் தேவைக் கானபுடுங்குப்பாட்டால் உருவாகும் என்ற எதிர்பார்ப்புகள் உறுதியாகும் நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. மக்களின் இடப்பெயர்வுகள், பட்டினிச் சாவுகள், உள்நாட்டு அரசியல் இஸ்திரமற்ற தன்மை போன்றவற்றைத் தீர்மானிக் கின்ற சக்தியாக நீர் மாறிக் கொண்டு வருகிறது. இது உலகின் ஆரோக்கியமான போக்காக அமையாது. குடங்களைச் சுமந்து கொண்டு நீருக்காக அலைந்து திரியும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே செல்கிறது. அரசுகள் தமது பணிகளைச் செய்வதிலிருந்து தவறியுள்ளன. அத்தியாவசியத் தேவையான நீரே முதன்மையானது என்ற எண்ணத்தை அரசுகள் செயற்படுத்த வேண்டும். மழை வீழ்ச்சியாகக் கிடைக்கும் நீரைக் கடலிலே கலக்க விடாமல் அவற்றை முடிந்தவரை நீண்ட காலத்துக்குச் சேமித்து வைக்கும் நடைமுறைகளை உருவாக்க வேண்டும். தண்ணீரை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பல்தேசிய நிறுவனங்களின் வியாபார நடவடிக்கைகளைத் தடை செய்வதுடன் குடிநீரைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மென்பானங்கள் எமக்குத் தேவையில்லை என்ற யதார்த்த உண்மையையும் நாம் அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். முற்று முழுதாக நீரால் சூழப்பட்டுள்ள உலகில் வறட்சி நிலை தோன்றுகிறது என்றால் அது இயல்பாக ஏற்படவில்லை மனிதருடைய செயற்பாடுகளே அதில் முதன்மை வகிக்கின்றன.

எனவே ஒவ்வொரு தனிமனிதரும் மனதளவில் மாறவேண்டும் தனி மனிதனின் மாற்றமே சமூகத்தின் மாற்றத்துக்கும் எதிர்காலத்தினரின் வாழ்வுக்கும் வித்திடும்.

வேப்பம் பூ சிறந்த கிருமி நாசினி. வயிற்றுப் பூச்சிக்களை ஒழிக்கும். அடிக்கடி வரும் ஏப்பத்தை நிறுத்தும். வயிறு சுத்தமாகவும் தொண்டைப் புண் ஆறவும் கைகண்ட மருந்து. மேலும் வாயுத்தொல்லை ஏப்பம் அதிகமாக வருதல் பசியின்மை போன்றவைகளுக்கு வேப்ப மரத்தின் பூக்களை மென்று தின்பார்கள். இன்றும் வேம்பம் பூவை உலர வைத்து வடகம் செய்து உணவுடன் உண்ணும் வழக்கம் உள்ளதைக் கண்டு கொள்ளலாம்.

# பூக்களும் அவற்றின் தனித்துவச் சிறப்பும்


இந்தப் பூவுலகம் இயற்கையால் நிறையப் பெற்றது. இவற்றில் மலர்கள் தனித்துவம் பெறுகின்றன. வெறுமனே அழகினைத் தருவதை விடவும் பல நன்மைகளையும் மலர்கள் கொடுக்கின்றன. மேலும் இறை வழிபாட்டிலும் முதன்மை பெறுவது மலர்களே. இறைவனை நாம் நாமங்கள் கூறி அர்ச்சிப்பதற்கும் இறைவனை அலங்காரம் செய்வதற்கும் மலர்களே துணை புரிகின்றன. ஏன், நாம் கொண்டாடும் பல சுப காரியங்களில் மலர்களே சிறப்புறுகின்றன. இது மட்டுமன்றி பல்வேறு மருத்துவத் தேவைகளுக்கும் மலர்கள் துணை புரிகின்றன. பெண்களின் கூந்தலில் அழகு சேர்க்கும் பல மலர்களையும் இணங்காண முடியும். பல வகையான மலர்கள் இருப்பதுடன் அவை எல்லோராலும் விரும்பப் படுவதாகவும் விளங்குகின்றன.

இரா.நிசாந்தன்



**அல்லி/ஆம்பல்**

தாமரை மலரைப்போல நீர்நிலையில் வளரும் ஒரு வகை மலர் இதுவாகும். சங்ககால இலக்கியங்கள் முதல் இன்று வரைக்கும் இந்த மலர் பற்றிய குறிப்புக்கள் குறிப்பிடப்படுகின்றன. தாமரை சூரியனைக் கண்டு மலரும் என்றால் அல்லி சந்திரனைக் கண்டு மலருகின்றது. இத்தகு அல்லியினது வேர், கிழங்கு, விதை, பூ போன்றவை மருத்துவக் குணம் கொண்டவை. இது நீரிழிவு நோயினைக் குணமாக்குகின்றது. அத்துடன் இருதயத்தை பலப்படுத்துகின்றது. உடலில் உள்ள சூட்டினை அல்லி மலரின் இதழ்கள் நீக்குகின்றது. கண் சிவத்தல். கண் எரிச்சல். நீர் வடிதல் போன்ற பிரச்னைகளுக்கு வெறும் அல்லி இதழ்களைக் கண்களின் மீது வைத்து வந்தாலே குணம் கிடைக்கும்.



**தாமரை**

மலர்களிலே தனிச் சிறப்பு வாய்ந்த மலர் தாமரையாகும். கமலம், பதுமம், அம்புஜம் எனும் பல பெயர்களால் இது குறி க்கப்படுகின்றது. சூரியனின் வருகையைக் கண்டு மலருவது இதன் இயல்பாகும். சிவப்பு நிறம் கொண்ட செந்தாமரை, மற்றும் வெள்ளை நிறம் கொண்ட வெண்தாமரை எனும் இரு வகையான தாமரை மலர்கள் குறிப்பிடப்படுகின்றன. மேலும் செந்தாமரையில் மகாலட்சுமி வீற்றி ருக்கின்றாள், எனவும் வெண்தாமரையில் சரஸ்வதி வீற்றிருக்கின்றாள் எனவும் சமய இலக்கியங்கள் தெளிவுறுத்துகின்றன. தாமரையை தம் பாடல்களில் உவமை காட்டாத புலவர்களே இல்லை எனலாம். இலக்கிய மாதர்களின் முகம் மற்றும் கைகளுக்கு தாமரையினையே உவமை காட்டப்படுகின்றது. இத்தகைய சிறப்புடைய தாமரை இதயத்துக்கு நலனைத் தருகின்றது. மேலும் உடல் சூட்டினைக் குறைக்கின்றது. குருதி நாளங்களை சீர் செய்கின்றது. அத்துடன் நினை வாற்றலை அதிகரிக்கச் செய்கின்றது தாமரை.



**வேப்பம் பூ**

மருத்துவ குணம் நிறைந்ததாக விளங்கும் மரங்களில் ஒன்று வேம்பு. அத்தகு வேம்பின் மலரானது பல நன்மைகளை தன்னகத்தே கொண்டு அமைவுறுகின்றது. வேப்பம் பூ சிறந்த கிருமி நாசினி. வயிற்றுப் பூச்சிக்களை ஒழிக்கும். அடிக்கடி வரும் ஏப்பத்தை நிறுத்தும். வயிறு சுத்தமாகவும் தொண்டைப் புண் ஆறவும் கைகண்ட மருந்து. மேலும் வாயுத்தொல்லை ஏப்பம் அதிகமாக வருதல் பசியின்மை போன்றவைகளுக்கு வேப்ப மரத்தின் பூக்களை மென்று தின்பார்கள். இன்றும் வேம்பம் பூவை உலர வைத்து வடகம் செய்து உணவுடன் உண்ணும் வழக்கம் உள்ளதை கண்டு கொள்ளலாம்.

இவ்வாறு அழகும் மென்மையும் கொண்டமைந்த மலர்கள் பற்பல நன்மைகளை தருகின்ற தன்மைகளை இத்தகு சில மலர்கள் வாயிலாக கண்ணுற முடிகின்றது. ஆக மலர்கள் என்பது வெறுமனே அழகினை மட்டும் கொடுப்பது என்பதை விடுத்து அவை பல நன்மைகளையும் தருகின்றன என்பதனை நாம் அறிந்து கொள்ள வேண்டும் அதன்படி அவற்றின் பயன்களையும் நாம் பெற்று பயன்பெற முயற்சிப்போம்.



**சூரிய காந்தி**

மலர்களிலே சூரிய காந்தியும் அழகுடைய மலராகும். சூரியனைப் பார்த்த வண்ணமே சூரியன் இருக்கும் திசை நோக்கியே இருப்பது இதன் இயல்பாகும். பசுமைக் கொள்கையின் அடையாளமாக விளங்குவது இந்த மலராகும். மேலும் பல மருத்துவ குணம் உடையதாக சூரியகாந்தி விளங்குகின்றது. சூரிய காந்தி மலரின் விதைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் உடலுக்கு பலம் அளிப்பதுடன் உடலில் ஏற்படும் பல்வேறு நோய்களையும் போக்கிக் கொள்கின்றது. இன்றும் உணவுகளை சமைப்பதற்கு சூரிய காந்தி எண்ணெய்யும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

48

# பூக்களும் அவற்றின் தனித்துவச் சிறப்பும்



**மல்லிகை**

வாசனைக்குப் பெயர் போன மலர் மல்லிகையாகும். இறைவழிபாட்டில் பூஜைக்கு பயன்படுவதுடன், பெண்களின் கூந்தலில் தவழ்ந்து அழகு சேர்ப்பதும் இந்த மலரேயாகும். மல்லிகையை அடிப்படையாகக் கொண்டு பல திரையிசைப் பாடல்களும் இடம்பெற்றுள்ளமையை கண்ணுறலாம். இது மட்டுமன்றி, மல்லிகைப் பூவானது பல மருத்துவ குணங்களை கொண்டு அமைகின்றது. மல்லிகைப் பூவை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து அந்த நீரை அருந்தி வர வயிற்றில் உள்ள கொக்கி புழு, நாடாப் புழு போன்றவை அழியும். மல்லிகைப் பூவிலிருந்து ஒரு வகை எண்ணெய் எடுக்கப்படுகிறது. இந்த எண்ணெய் பல்வேறு உடல் உபாதைகளுக்கு அருமருந்தாக உள்ளது. மன அழுத்தம், உடல் சூடு போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் மல்லிகைப் பூவை வாங்கி தலையில் வைத்தால் மன அழுத்தமும் குறையும் உடல் சூடும் குறைவடையும்.



**ரோஜா**

மலர்களில் அழகும், தனித்துவமும் பெறுவது ரோஜா மலராகும். இறை வழிபாட்டிற்கு மட்டுமன்றி, காதலின் சின்னமாகவும் இது விளங்குகின்றது. குறிப்பாக காதலர்கள் தமக்குள் பரிமாறிக் கொள்ளும் ஒரு மலர் என்றால் அது ரோஜா மலர்தான். காதலர் மட்டுமன்றி ஏனைய அனைவரின் விருப்பத்திற்கும் உரிய மலர் இதுவாகும். அதிலும் பெண்கள் ரோஜாவை தம் கூந்தலில் சூடி சுப நிகழ்வுகளுக்கு செல்லும் வழக்கம் இன்றும் உள்ளது. ரோஜா இதழ்களை தேனுடன் கலந்து உண்டுவர உடல் உற்சாகம் அடையும், மேலும் மனம் நல்ல புத்துணர்ச்சியைப் பெறும். பெண்களுக்கு ஏற்படும் கருப்பை தொடர்பான நோய்களுக்கு ரோஜா நல்ல மருந்தாகும். சரும எரிச்சல், சருமம் வறட்சி போன்ற சரும கோளாறுகளுக்கு ரோஜா நல்ல பயன் தருகிறது. ரோஜாவில் இருந்து எடுக்கப்படும் பன்னீர் கொண்டு முகம் கழுவி வந்தால் முகத்தில் பருக்களும், வடுக்களும் குறையும் என்பது குறிப்பி டத்தக்கது. அஜீரணம், வயிற்று வலி என்றாலும் ரோஜா மலரைத் துவையலாக்கி உண்டால் போதும். அவை யெல்லாம் பறந்தோடிவிடும்.




**செவ்வந்தி**

செவ்வந்திப்பூவை சாமந்திப்பூ, சிவந்திப்பூ என பலவாறு அழைக்கின்றனர். இது மஞ்சள், சிவப்பு, ஆரஞ்சு, வெள்ளை, நீலம் போன்ற நிறங்களில் பூக்கும். செவ்வந்தி மலரை மாலை தொடுப்பதற்கும் பயன் படுத்தும் மரபு இன்றும் காணப்படுகின்றது. செவ்வந்திப் பூவின் இதழ்களை நிழலில் உலர்த்தி பொடி செய்து தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் .உடலில் தலைவலி நீங்கும். செவ்வந்திப் பூவை கசாயம் செய்து அருந்தி வந்தால் உடல் சூடு நீங்கும். சிலருக்கு எவ்வளவுதான் உணவருந்தினாலும் உடல் எடை கூடாமல் மெலிந்தே இருப்பார்கள். எப்போதும் சோர்வாக தோன்றுவார்கள். இவர்கள் சாமந்திப் பூவின் இதழ்களை காயவைத்து பொடி செய்து தேன் கலந்துசாப்பிட்டு வந்தால் உடல் பலம் பெறும். அடிக்கடி சோர்வு ஏற்படாது. சாமந்திப் பூவின் இதழ்களை நீரில் கொதிக்க வைத்து அந்த நீரை சுளுக்கு வீக்கம் உள்ள பகுதிகளில் ஒற்றடம் கொடுத்து வந்தால் சுளுக்கு வீக்கம் விரைவில் குறையும்.



**முருங்கைப் பூ**

இன்றும் எம் சமையலில் முருங்கம் பூவானது ஓர் அங்கமாக அமையப் பெறுகின்றது. முருங்கை பூவை வறுவலாக வறுத்து சாப்பிடும் பழக்கம் இன்றும் இடம் பெற்று வருகின்றது. அத்துடன் ஆண்களின் ஆண்மையை அதிகரிக்கச் செய்கின்ற அருமருந்தாக இந்த முருங்கம் பூ திகழ்கின்றது. மேலும் கடுமையான வயிற்று வலியைப் போக்கும் குணம் கொண்டதாகவும் இது விளங்குகின்றது. உடல் சூட்டினை தணிப்பதற்கு முருங்கைப்பூ நல்ல முறையில் பயன்படும். முருங்கைப்பூவை பக்குவம் செய்து சாப்பிட்டால் உடல்சூடு உடனேயே சரிபடும். பெண்களுக்கு பெரும்பாடு என்னும் உதிரப்போக்கு ஏற்படுவதுண்டு. இதைத் தடுக்கும் அருமருந்தாக முருங்கைப்பூ பெரிதும் பயன்படுகிறது



**செம்பருத்தி**

நமது சூழலில் இயல்பாகவே காணக் கூடிய மலர் இதுவாகும். பூஜைக்குரியதான மலர்களில் இன்று எளிதில் பயன்படுத்தக் கூடியதான மலர் இதுவே. இவற்றுடன் செம்பருத்தி மலர் பல பயன்களையும் நல்குகின்றது. செம்பருத்தி மலர் வயிற்றுப் புண்மற்றும் வாய்ப்புண் என்பவற்றைக் குணப்படுத்துகின்றது. மேலும், கருப்பை பாதிப்பினால் கருவுறாமல் இருப்பவர்களுக்கும் வயது அதிகம் ஆகியும் கரு உருவாகாமல் இருக்கும் பெண்களுக்கும் செம்பருத்திப்பூ சிறந்த மருந்து. செம்பருத்திப் பூவின் இதழ்களை அரைத்து மோரில் கலந்து தினமும் சாப்பிட்டு வந்தால் வெகுவிரைவில் கருப்பையில் உள்ள நோய்கள் குணமாகும். இதுமட்டுமன்றி, செம்பருத்திப் பூவை உலர்த்தி பொடி செய்து காய்ச்சி அருந்தி வந்தால் மாதவிலக்குக் காலங்களில் ஏற்படும் அடிவயிற்று வலி, தலையிடி, மயக்கம் போன்றவை குறையும். மேலும், செம்பருத்தி மலர் மூலம் தலைமுடி கருமையாக வளருவதுடன் நரைமுடிப் பிரச்சனையும் விலகிச் செல்லும்.



விரிந்த தாராளப் பார்வையைக் கொண்டதாகவே கொமன்வெல்த் கட்டமைக்கப்பட்டது. 'கொமன்-வெல்த் நாடுகளைச் சேர்ந்த எந்த ஒரு குடிமக னும் பிரிட்டன் தலைமை அமைச்சராக முடியும்' என்ற சட்ட வழிவகையை ஓர் உதாரணமாக இங்கு குறிப்பிடலாம்.

# புத்துயிர் பெறும் கொமன்வெல்த்

கட்டுரை

சமஸ்

பிரிட்டன் தலைநகரம் லண்டன் இன்னொரு வரலாற்றுப் பாய்ச்சலுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது. நான் இங்கு வந்து சேர்ந்த காரணமும்கூட அதுதான்; கொமன் வெல்த்! ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவது என்று பிரிட்டன் முடிவெடுத்த பிறகு, 'பிரெக் ஸிட்'டுக்குப் பிந்தைய தொடர் விளைவு களில் முக்கிய மான நகர்வாகக் கொமன்வெல்த் மீட்டுருவாக்கம் மாறி வருகிறது.

### கொமன்வெல்த் கூட்டமைப்பு

சூரியன் அஸ்தமிக்காத பேரரசு என்ற பெயரோடு நூற் றாண்டுகளை வியாபித்திருந்த பிரிட்டிஷ் அரசு ஒரு கால கட்டத்தில் கிட்டத்தட்ட இந்த பூமியின் நான்கில் ஒரு பகு தியை (24வீதம்) தன்னுடைய கைகளில் வைத்திருந்தது. உலகின் 23 வீத மக்கள் அதன் வசம் இருந்தனர். நவீன வரலாற்றில் உலகின் முதல் பெரும் சக்தியாக இருந்த பிரிட்டனின் ஆதிக்கத்துக்கு உலகப் போர்களுக்குப் பிந் தைய ஜனநாயக யுகம் முடிவு கட்டியது.

காலனிய காலத்துக்குப் பின்னரும் தன்னுடைய காலனி நாடுகளுடன் நல்லுறவுகளைத் தொடரும் நோக்கிலும், பன்னாட்டு அளவில் தனக்கென ஒரு வலைப்பின்ன லோடு முன்னகரும் நோக்கிலும் பிரிட்டன் உருவாக்கி யதே கொமன்வெல்த் அமைப்பு. அரசியல், ஜனநாயகம், கலை, கலாசாரப் பரிவர்த்தனைகள் என்று இலக்குகள் விரிந்தாலும், அதன் மையம் வர்த்தக உறவு. தொடக்க நாள்களில் அது அழைக்கப்பட்டபடி 'பிரிட்டிஷ் கொமன் வெல்த்' என்பதே அதன் மைய நோக்கமாகவும் இருந்தது. இன்று 'கொமன்வெல்த் ஒவ் நேஷன்ஸ்' என்று அழைக் கப்படும் கொமன்வெல்த் அமைப்பில் 53 நாடுகள் உறுப்பு நாடுகளாக இடம்பெற்றிருக்கின்றன. உலகின் நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பங்கையும் உலக மக்கள்தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கையும் வகிக்கும் இந்த நாடுகள் வர்த்தகத்திலும் முக்கிய மான பங்கை வகிக்கின்றன. இந்த நாடு களின் மொத்த உற்பத்தி மதிப்பு14ஆயி ரத்து623 லட்சம் கோடி டொலர்கள். உலக வருமானத்தில் இது 14 சதவீதம். விரிந்த தாராளப் பார்வையைக் கொண் டதாகவே கொமன்வெல்த் கட்டமைக்கப் பட்டது. 'கொமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த எந்த ஒரு குடிமகனும் பிரிட் டனின் தலைமை அமைச்சராக முடியும்' என்ற சட்ட வழிவகையை ஓர் உதாரண மாக இங்கு குறிப்பிடலாம். வணிகத் தைத் தாண்டியும் பன்னாட்டு அளவில் பெரிய அரசியல் கலாச்சாரப் பரிவர்த் தனை சக்தியாக கொமன்வெல்த்தை வளர்த்தெடுத்திருக்க முடியும். ஆனால், பெரிய நோக்கங்களுடன் தொடங்கப்பட்ட கொமன்வெல்த் எல்லா வகைகளிலுமே தூங்கும் ராட்சதனாகவே முடங்கிக் கிடந்தது.



### பனிப்போர் மூடிய ராட்சதன்

உலகப் போருக்குப் பிந்தைய சூழல் பிரிட்டனைப் பன் னாட்டு அளவில் பின்னுக்குத் தள்ளியது. உலகப் போரில் ஏற்பட்ட பெரும் செலவு, கடன்கள் போன்ற இழப்புக ளோடு, அடுத்தடுத்து நிகழ்ந்த காலனிய நாடுகளின் விடுதலையும் சேர்ந்து அதன் வருமானத்துக்கு பேரடி கொடுத்தது. கூடவே அந்த நாடுகளிலிருந்து வெகு மலி வாகவும், தொடர்ந்தும் கிடைத்துவந்த கச்சாப்பொருட்க ளின் நீரோட்டமும் அடி வாங்கியது. பொருளாதாரரீதியாக பிரிட்டன் ஓரடி கீழே இறங்கிய இதே காலகட்டத்தில்தான், உலகம் அமெரிக்கா தலைமையில் ஓரணியாகவும் சோவியத் ஒன்றியத்தின் தலைமையில் ஓரணியாகவும் பிரிந்தது. இரண்டிலும் சேர விரும்பாத இந்தியா உள் ளிட்ட நாடுகள் 'அணி சாரா இயக்கம்' கண்டன. இந்த மூன்று பிரிவுகளில் மூன்றாவது அணியின் செயல்பாடு பிந்தியிருக்க முதலாவது அணியின் செயல்பாடு பாய்ச் சல் கண்டது. ஒரே சமயத்தில் மிகப் பெரிய வேளாண்மை நாடாகவும் தொழில்வள நாடாகவும் தொழில்நுட்பங்க ளைக் கையாளும் நாடாகவும் உருவெடுத்தது அமெ ரிக்கா. இணை சக்தியாக வளர்ந்தது சோவியத் ஒன்றி யம். இவை இரண்டும் சார்ந்து இடையில் பொருளாதார ரீதியாகவும் ராஜீயரீதியாகவும் 'நேட்டோ', 'வார்சா' போன்று பல்வேறு அமைப்புகள் உருவான நிலையில், அவற்றுக்கு இடையில் பிரிட்டனும் கூடவே அதன் கொமன்வெல்த் கனவும் மூடுண்டது.

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி ஆசியாவிலிருந்து ஒரு வலுவான சக்தியாக சீனா கிளர்ந்தெழ வழிவகுத்ததே தவிர, பிரிட்டன் தன்னுடைய மீட்சியை அடைய எந்த வகையிலும் உதவவில்லை. தெற்காசியாவில் ஜப்பான் தொடக்கிவைத்த புதிய தொழில் கலாசாரம் சீனா, கொரியா, இந்தியா என்று பரவ இதே காலகட்டத்தில் பிரிட் டன் தன்னுடைய பொருளாதாரத்தைப் படிப்படியாக உற் பத்தி மையத்திலிருந்து சேவை மையத்துக்கு மாற்றிக் கொண்டது. ஐரோப்பாவில் பிரிட்டனைவிட ஜேர்மனி பெரும் சக்தியாக உருவெடுத்தது.

### ஐரோப்பிய ஒன்றிய உத்வேகம்

அமெரிக்காவுக்கும் ஆசியாவில் ஜப்பான், சீனா, இந் தியா, கொரியாவுக்கும் இடையில் தங்களுடைய பொரு ளாதார முன்னிலையைத் தக்க வைத்துக்கொள்ள ஐரோப்பிய நாடுகள் முன்னெடுத்த ஐரோப்பிய ஒன்றிய அமைப்பானது, பிரிட்டனின் பொருளாதார முன்னிலைக் கும் வலு சேர்த்தது. உலக மக்கள்தொகையில் வெறும் 7.3 வீதம் என்றாலும், உலகின் உற்பத்தி மதிப்பில் 22.2 வீதம் பங்குடன் வலுவான நிலையில் உள்ளது ஐரோப் பிய ஒன்றியம். அதன் நான்கு முன்னிலை நாடுகளில் ஒன்றாக இருந்தது பிரிட்டன்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகுவது என்ற முடிவு இரு தரப்புக்குமே பல பாதிப்புகளையும் தரக் கூடியது என்றாலும், தன்னுடைய மக்களின் முடிவைச் செயல்படுத்த பிரிட்டன் முழு அளவில் ஆயத்தமாகிவரு கிறது. வெறுமனே ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளி யேறுவதன் வாயிலாக ஏற்படும் இழப்புகளை ஈடுகட்டுவ தோடு விட்டுவிடாமல், ராஜீயரீதியிலும் பொருளாதாரரீதியி லும் தனக்கென ஒரு அணி, பாதையை வகுத்துக்கொள் ளும் வியூகத்தையும் கையில் அது எடுத்திருக்கிறது. அதன் முக்கியமான ஒரு அம்சம் கொமன்வெல்த் மீட்டுருவாக்கம்.

### காத்திருக்கும் சவால்

ஐரோப்பிய ஒன்றியமும் கொமன்வெல்த் அமைப்பும் இணையானவை அல்ல. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்தும் ஐரோப்பியக் கண்டத்திலேயே இருப்பவை. பொதுவான சந்தையை அவை பகிர்ந்துகொள்கின்றன. பொதுச் செலாவணியை - யூரோ டொலர் பயன்படுத்து கின்றன. வர்த்தகச் சட்டங்களும் இவற்றுக்கிடையில் பொதுவானவை. ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் பரஸ்பரம் பிற நாடுகளில் சென்று வேலை செய்யவும் தொழில் செய்யவும் தடையில்லை.

இதோடு கொமன்வெல்த் நாடுகளை ஒப்பிட முடியாது. பல வகைகளில் அவை வேறுபட்டவை. இந்தியா, பாகிஸ் தானை ஓர் உதாரணமாகச் சொல்லலாம். ஐக்கிய நாடு கள் சபையிலோ, பிற பன்னாட்டு அமைப்புகளிலோ இந்த நாடுகள் ஒரு குழுவாக வாக்களித்ததே கிடையாது. ராஜீய நடவடிக்கைகளிலும் சேர்ந்து செயல்படுவது கிடை யாது. பொருளாதார அணிகளிலும் ராணுவ அணிகளி லும் இவை ஒன்றுபோல சேர்ந்தது கிடையாது.

ஆனால், உலகின் மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கைக் கொண்ட பெரிய சந்தை இது என்பது மிக முக் கியமான வாய்ப்பு. அமெரிக்கா, சீனா இரு வல்லரசுக ளுக்கும் வெளியே ஒரு மாற்று அமைப்பாக வளர்த்தெ டுக்க வாய்ப்புள்ள ஊடகம் என்பது வியூகரீதியாக முக்கி யத்துவம் பெறுகிறது. 1950களில் ஐரோப்பிய நாடுகளு டனான வர்த்தக உறவைப் போல நான்கு மடங்கு மதிப் புக்கு வர்த்தக உறவை கொமன்வெல்த் நாடுகளுடன் கொண்டிருந்தது பிரிட்டன். எல்லோர்க்கும் வாய்ப்பளிக் கும் கூட்டமைப்பாகப் புத்துயிர் கொடுப்பதன் வாயிலாக தன்னையும் பலப்படுத்திக்கொள்ள முடியும்; தன் கூட்டா ளிகளும் பலமடைய முடியும் என்று அது நம்புகிறது.

### இந்தியா நோக்கி நகரும் திசை

கொமன்வெல்த்தின் மையம் நோக்கி இந்தியா நகர்ந்தால் தான் இந்தப் புதிய வியூகம் எடுபடும் என்ற முடிவை நோக்கி பிரிட்டன் நகர்ந்திருப்பதுதான் இந்தச் சூழலின் வரலாற்று முக்கியத்துவம். கொமன்வெல்த் நாடுகளின் மக்கள்தொகையில் சரிபாதிக்கும் மேலதிக மக்கள் தொகையையும் கொமன்வெல்த் நாடுகளிடையேயான வர்த்தகத்தில் கால் பகுதியையும் கொண்ட இந்தியாவை அந்த அமைப்பின் மையத்துக்குக் கொண்டுவருவதன் வாயிலாகவே காமன்வெல்த்தை வளர்த்தெடுக்க முடியும் என்று பிரிட்டன் கருதுகிறது. இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் சந்திப்பானது இந்த ஆண்டு பத்தோடு ஒன்று பதினொன் றாக அமையப்போவதில்லை. லண்டனில் இந்த மாத இறுதியில் நடக்கும் கூட்டத்தில் மோடி பெரும் முக்கியத்து வம் பெறுவார். இந்தியாவுக்கும் இது ஒரு நல்ல வாய்ப்பு தான். வர்த்தகரீதியாக மட்டும் அல்லாமல் ராஜீய ரீதியா கவும் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள இது ஒரு புதிய வாகனம். மிக அனுகூலமான வாய்ப்பு. ஏனைய பன் னாட்டு அமைப்புகளைப் போலன்றி கொமன்வெல்த்தில் சீனா கிடையாது. "ஒரே சாலை ஒரே பிரதேசம்' கோஷத் துடன் பழைய பட்டுப் பாதையில் உள்ள நாடுகளை இணைத்துக்கொண்டு வலுவான பொருளாதாரராஜீய உறவுகளை ஆசியாவிலிருந்து ஐரோப்பா வரை வளைத் துச்செல்லும் சீனாவுக்குச் சின்ன அளவில் இந்தியாவா லும் இதன் மூலம் ஒரு பதிலைத் தர முடியும். ஆனால், கொமன்வெல்த் நாடுகளிடமிருந்து நாம் எதைப் பெறப் போகிறோம் அவர்களுக்கு எதை வழங்கப்போகிறோம் என்பதிலேயே இருக்கிறது!



# புதுவாழ்வுக்கு வழிபிறக்கும்



சித்திரையாள் பிறந்து விட்டாள்
சேர்வினைகள் தீர்ந்திடனும்
நித்தமினி நடப்ப தெல்லாம்
நேர்த்தியுடன் நிறைவுறனும்
மத்தியின் பார்வை இனிமேல்
வடகிழக்கை நோக்கிடனும்
புத்தியுள்ளோர் விழிப்பாய்ச் செயற்பட்டால்
புதுவாழ்வுக்கு வழிபிறக்கும்.

நேற்றுவரை எமைப் புறக்கணித்தோர்
எம்மாலே பிழைத்துக் கொண்டார்
ஏற்றுள்ளார் இனிச் செய்வோமென்று
ஏற்பாடு செய்துள்ளார்
கற்றுள்ளோம் பலகாலம் பாடங்கள்
நம்பியே ஏமாந்து
காற்றில் பறக்க விட்டால்
கர்வம் பதில் சொல்லும்.

அன்ரனி பீற்றர்

## சித்திரைப் பெண்ணே வருக...

சித்திரைப் பெண்ணே வருக
சீரெலாம் கொண்டு வருக
இற்றரை மீதினில் நாமெலாம்
ஈகத்தில் சிறநந்திட வருக
உள்ளவர் இல்லாதவர்
உயர்ந்தவர் தாழ்ந்தவர்
ஏழைகள் பணக்காரர்கள்
பேதங்கள் நீங்கிட வருக
உள்ளங்கள் தூய்மையாய்
ஊரெலாம் வாழ்ந்திட
அன்பெனும் அறம் போற்றி
அகிலத்தில் ஓங்கிட வருக
பல்லுயிரம் பக்குவமாய்
நல்லுலகில் நாம்வாழ
சித்திரைப் பெண்ணே வருக
சிறப்பினை அள்ளித் தருக


கிருஸ்ணவேணி

## விளம்பியே வாழ்விப்பாயே

ஏங்கிடு எம்மவரின்
ஏக்கத்தைப் போக்கிடவும்
ஏற்றமுற ஏற்றவழி காட்டிடவும்
தேங்கிய துன்பங்கள்
துரிதமாய் விடுபடவும்
தொடராது சோகங்கள் நீக்கிடவும்
தாங்கிய தம்மனையில் துயரின்றி
வாழ்ந்திடவும்
தாரணியி லின்றுதித்த
விளம்பியே
ஓங்கிய அறங்களோடு
அமைதி பெற்றிடவும்
உரியதுணை புரிந்தெம்மை
வாழ்விப்பாயே.

க.அருமைநாயகம்


## விளம்பி புத்தாண்டை முகம் மலர வரவேற்போம்



புத்தாண்டுகள் பற்பல கண்டோம்
ஏவிளம்பி வருடமும் வந்து சென்றது
எம்மக்களுக்கு நற்பயன்கள் ஏதும்
கிட்டவில்லை
மலருகின்ற விளம்பி புத்தாண்டே
மங்களங்கள் தருவாயா?
புதிய நம்பிக்கையுடன் உனை வரவேற்று
மகிழ்கிறோம்
புதிய விடிவொன்றை எம் மக்களுக்குத்
தந்துவிடு
மலர்ந்து வா மக்கள் மனங்களில்
நல் மாற்றத்தைக் கொண்டுவா!

புத்தாண்டு தமிழர் வாழ்வோடு ஒன்றிய
பண்டைய கலாசாரப் பண்பாட்டுக் கொண்டாட்டம்
மருத்து நீர் தலையில் தேய்த்து தோய்ந்து
புத்தாடை அணிந்து குடும்ப
உறவுகளுடன் ஆலயம் செல்லுதலும்
புத்தாண்டுதனில் தந்தை, தாய், குரு,
பெரியோரை மதித்தலும்
புதுப்புதுப் பலகாரம் உண்டு மகிழ்தலும்
புத்தாண்டுதனில் கைவிஷேடம்
பெறும் களிப்பும் ஒருபுறம்,
புத்தாண்டுதனில் மக்கள் எல்லோரும்
நிம்மதியாக வாழ்ந்திட
மனித நேயம் காப்போம்.
விளம்பி புத்தாண்டை
முகம் மலர வரவேற்று மகிழ்வோம்.

நயினை விசு இராசநாயகம்





## விளம்பியே விளம்புவாய்

களம்பல கண்ட தமிழர்தம் வாழ்வில்
வளம்தரப் பிறப்பாய் விளம்பி,
காலமறிந்து நீ விரைந்து வருகின்றாயே
காணாமல் போனோரின் நிலை விளம்பு!

உளம்போற போக்கில் உடையுமோ கட்சிகள்
ஒருபோதும் ஆகாதென விளம்பு,
உலகம் எங்களைக் கூத்துப் பார்க்கவே
ஒற்றுமையாகி நிற்கும் பார்! விளம்பி!

இளந் தலைமுறையினர்க்கு இல்லையே வேலை
இங்கு பல தொழிற்சாலை வேண்டும், அட
இடம் பெயர்ந்தவர் படும்பாட்டுக்கு விளம்பியே
இனியொரு புதுவிதி செய் நிரம்பவே!

விளங்காமல் நாமும் ஏமாறவே போகின்றோம்
விளம்பியே நீ என்ன செய்யப் போகிறாய்?
வீட்டுக்கும் நாட்டுக்கும் விமோசனம் தாராய்
விளம்பியே விளங்கி விளம்புவாய் எமக்கு!


கே.எஸ்.சிவஞானராஜா



# பாப்பரசர் பிரான்சிஸின் பயணம் தன்நிகரற்றது

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

பாப்பரசர் பிரான்சிஸ் பேதுருவின் 265ஆவது வழித்தோன்றலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் ஐந்தாம் ஆண்டு நிறைவு அண்மைக்காலமாகச் சிறப்பிக்கப் பட்டுவருகிறது. அவருடைய தனித்துவமான பாதை மற்றும் பயணத்தைப் பற்றிப் பேசுகிறது இந்தக் கட்டுரை.



### கைதிகளின் கால்களை கழுவியவர் பாப்பரசர்

புனித வியாழன் அன்று திருத்தந்தை பிரான்சிஸ் றெஜினா செல்லி என்றழைக்கப்படும் சிறைக் கூடத்தில் இயேசுவின் இறுதி இரவுணவுத் திருப்பலியை நிறைவேற்றினார். இந்தத் திருப்பலியில் திருத்தந்தை 12 கைதிகளின் கால்களைக் கழுவினார். இந்தப் பன்னிருவரில் எட்டு பேர் கத்தோலிக்கர்கள் இருவர் இஸ்லாமியர். ஒருவர் ஆர்த்தடக்ஸ் சபையைச் சேர்ந்தவர். மற்றொருவர் புத்த மதத்தவராவர். திருப்பலியின் இறுதியில் திருத்தந்தை பிரான்சிஸ் சிறைக்கூடத்தில் உள்ள அனைத்துக் கைதிகளையும் சந்தித்தார். திருப்பலி வழியே கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளில் நாம் நுழைவதால் சாவி இருந்து வாழ்வுக்கு அவருடன் அனுமதிக்கப்படுகிறோம் எனத் தெரிவித்தார்.

### ஊருக்கும் உலகுக்குமான வாழ்த்து

ஊர்பி எத் ஓர்பி என்று அழைக்கப்டும் ஊருக்கும் உலகுக்கும் என்ற சிறப்பு ஆசீரை தமிழ் உட்பட உலகின் பல மொழிகளில் வருடத்தில் கிறிஸ்மஸ்; மற்றும் ஈஸ்டர் ஆகிய இரண்டு தினங்களில் மட்டும் பாப்பரசர் வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்காவின் மேல் மாடத்திலிருந்து வழங்குவது வழமை. 2018ஆம் ஆண்டு அவர் வழங்கிய உரையின் சுருக்கம் இதுவாகும்.

அன்பு சகோதர சகோதரிகளே உங்கள் எல்லோருக்கும் கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள். இயேசு இறந்தோரிடம் இருந்து உயிர்த்தெழுந்தார் இந்தச் செய்தி இயேசுவே ஆண்டவர். இறைத்தந்தை அவரை உயர்த்தியுள்ளார் மற்றும் அவர் எம் மத்தியில் என்றென்றும் வாழ்கிறார் என்ற அல்லேலூயா வாழ்த்துப் பாடலுடன் திருஅவையெங்கும் எதிரொலிக்கின்றது.

கோதுமை மணியின் உருவகத்தைப் பயன்படுத்தி இயேசு தனது சாவையும் உயிர்ப்பையும் எமக்கு முன்னறிவித்தார். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியா விட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் (யோவான்12:24) என இயேசு சொன்னார். இதுவே நடைபெற்றுள்ளது. இறைவனால் இப்பூமியில் விதைக்கப்பட்ட கோதுமை மணியாகிய இயேசு இறந்தார் உலகின் பாவத்தால் கொல்லப்பட்டார். கல்லறையில் இரு நாள்கள் இருந்தார். ஆயினும், தம் அனைத்து வல்லமையிலும் இறைவனின் அன்பில் இருந்த அவரின் சாவு மூன்றாம் நாளில் வெளியானது. ஆண்டவராம் கிறிஸ்துவின் உயிர்ப்பாகிய அந்த நாளை இன்று நாம் கொண்டாடுகிறோம்.

### கிறிஸ்துவின் உயிர்ப்பு என்பது உலகின் உண்மையான நம்பிக்கை

கிறிஸ்துவின் உயிர்ப்பு ஏமாற்றாத உலகின் உண்மையான நம்பிக்கை என கிறிஸ்தவர்களாகிய நாம் நம்புகின்றோம். அது கோதுமை மணியின் வல்லமை அந்த அன்பின் வல்லமை தன்னையே தாழ்த்துகின்றது. உலகின் முடிவுவரை தன்னையே அளிக்கின்றது. இவ்வாறு அந்த வல்லமை உலகை உண்மையிலேயே புதுப்பி க்கின்றது. ஒதுக்கப்படுதலும் தனிமைப்படுத்தப்படுதலும் பசியும் வேலைவாய்ப்பின்மையும் புலம்பெயர்ந்தோரும் குடிபெயர்ந்தோரும் போதைப்பொருள் வர்த்தகம் மனித வர்த்தகம் மற்றும் அடிமைநிலையின் தற்போதைய வடிவங்கள் போன்றவை இருக்கின்ற இடங்களில் இந்த வல்லமை நம்பிக்கை மற்றும் மாண்பின் கனிகளை வழங்குகின்றது.

நீண்ட காலமாக துன்புறும் அன்புமிக்க சிரியா நாடு தொடங்கி உலகமனைத்திற்கும் அமைதியின் கனிகளுக்காக இன்று செபிக்கின்றோம். சிரியா நாட்டு மக்கள் முடிவில்லாத போரினால் சிதைந்து போயுள்ளனர். இந்த உயிர்ப்புப் பெருவிழா உயிர்த்த கிறிஸ்துவின் ஒளி அனைத்து அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்களின் மனச்சாட்சிகளை ஒளிரச் செய்வதாக. இதனால் தொடர்ந்து இடம்பெற்றுவரும் போர் விரைவில் முடிவுக்குவரும். மனிதாபிமானச் சட்டம் மதிக்கப்படும். உடனடியாக உதவி தேவைப்படும் எமது சகோதர சகோதரிகளுக்கு உதவிகள் கிடைப்பதற்கு வழி அமைக்கப்படும். அதேநேரம் புலம் பெயர்ந்தவர்கள் நாடு திரும்பு வதற்கு சரியான நிலைகள் உருவாக்கப்படும்.

### புனித பூமிக்காக

புனித பூமியின் ஒப்புரவின் கனிகளுக்காகவும் நாம் இறைஞ்சுகின்றோம். இந்த நாள்களில் தொடர்ந்து போர் இடம்பெற்றுவரும் ஏமன் நாட்டிற்கும் மத்திய கிழக்குப் பகுதி முழுவதுக்கும் ஒப்புரவின் கனிகளுக்காகச் செபிக்கின்றோம். இதனால் உரையாடலும் ஒருவரையொருவர் மதித்தலும் இடம் பெற்று பிரிவினையும் வன்முறையும் அகற்றப்படும். அநீதிகளுக்கும்சித்திரவதைகளுக்கும் அடிக்கடி உள்ளாக்கப்படும். கிறிஸ்துவில் நம் சகோதரர்கள் சகோதரிகள் உயிர்த்த ஆண்டவருக்கும் நன்மை தீமையை வெற்றிகொள்ளும் என்பதற்கும் சுடர்விடும் சான்றுகளாய் இருப்பார்களாக. எல்லாவற்றிக்கும் மேலாக மாண்புடைய வாழ்வுக்காக ஏங்குகின்ற ஆபிரிக்கக் கண்டத்தில் பசியாலும் ஆண்டு முழுவதும் இடம்பெறும் மோதல்களாலும் பயங்கரவாதத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளின் மக்களுக்கு நம்பிக்கையின் கனிகள் கிடைக்க வேண்டுமென்று இந்த நாளில் நாம் வேண்டுகிறோம்.



### தென்சூடான் மற்றும் காங்கோவுக்காக

உயிர்த்த ஆண்டவரின் அமைதி தென்சூடான் மற்றும் காங்கோ சனநாயக குடியரசின் காயங்களைக் குணமாக்கி உரையாடல் வழியே ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கு இதயங்களைத் திறப்பதாக. மோதல்களில் சாவடையும் சிறாரை மறவாதிருப்போம். தங்கள் வாழ்விடங்களை விட்டு கட்டாயமாக வெளியேற்றப்பட்டு, அத்தியாவசியத் தேவைகள் இன்றி இருப்போருக்கு ஒருமைப்பாட்டுணர்வு குறைவின்றி கிடைப்பதாக.

### கொரியத் தீபகற்பத்துக்காக

கொரியத் தீபகற்பத்தில் உரையாடலின் கனிகளுக்காகச் செபிக்கின்றோம். தற்போது இடம்பெற்றுவரும் கலந்துரையாடல்கள் அப்பகுதியில் நல்லிணக்கமும் அமைதியும் நிலவுவதற்கு உதவுவதாக. இதற்கு நேரிடையாகப் பொறுப்பானவர்கள் கொரிய மக்களின் நலனை ஊக்குவிப்பதற்கு ஞானத்தோடும் தேர்ந்து தெளிதலோடும் செயல்படுவார்களாக. உலகளாவிய சமுதாயத்தில் நம்பிக்கை உறவுகளைக் கட்டியெழுப்புவார்களாக.

### வெனிசுலாவுக்காக

உக்ரைன் நாட்டில் அமைதியின் கனிகளும், வெனிசுலா மக்களுக்கு ஆறுதலின் கனிகளும் கிடைப்பதற்காகவும் மன்றாடுகின்றோம். சொந்த நாட்டில் அந்நியர் போல் வாழ்வதாக வெனிசுலா ஆயர்கள் எழுதியிருக்கின்றனர். அந்த நாட்டைச் சூழ்ந்துள்ள அரசியல் மற்றும் மனிதாபிமான நெருக்கடிகள் விரைவில் களையப்பட்டு, நீதி, அமைதி மற்றும் மனிதம் நிறைந்த வழிகள் காணப்பட, உயிர்த்த இயேசுவின் வல்லமைக்காகச் செபிக்கின்றோம்.

### போரால் துன்பம் அனுபவிக்கும் அப்பாவிச் சிறுவர்களுக்காக

போர்கள் மற்றும் பசியால் வாடுகின்ற சிறாருக்கு நம்பிக்கையின்றி கல்வி வசதி மற்றும் நலவாழ்வு வசதியின்றி உள்ள சிறாருக்கு உயிர்த்த கிறிஸ்து, புதுவாழ்வை அளிப்பாராக. தன்னலக் கலாசாரத்தால் ஒதுக்கப்படும் வயது முதிர்ந்தவர்களுக்காகவும் செபிக்கின்றோம். நம் உலகில் அரசியலுக்குப் பொறுப்பானவர்கள் எப்போதும் மனித மாண்பை மதித்து, பொதுநலனுக்குத் தங்களை அர்ப்பணித்து, தங்கள் குடிமக்களுக்கு வளர்ச்சியும் பாதுகாப்பும் தருபவர்களாக வாழ, அவர்கள் ஞானத்தின் கனிகளைப் பெறுவதற்காகச் செபிப்போம்.

உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? (லூக்.24:56) என கல்லறையில் பெண்கள் கேட்ட வார்த்தைகள் எம்மிடமும் சொல்லப்படுகின்றன. சாவு தனிமை அச்சம் ஆகியவை கடைசி வார்த்தைகள் அல்ல. அவற்றையும் கடந்த கடவுள் மட்டுமே பேசக்கூடிய ஒருசொல் உள்ளது: அதுவே உயிர்ப்பு. கடவுளின் அன்பின் வல்லமையால், அது தீமைகளை அகற்றுகின்றது தவறுகளைக் கழுவுகின்றது. கண்ணீர் சிந்துவோருக்கு மகிழ்வைத் தருகின்றது. வெறுப்பை விரட்டு கின்றது. நல்லிணக்கத்தை வளர்க்கின்றது. வலியோரைத் தாழ்த்துகின்றது.




இவ்வாறு தன் 'ஊருக்கும் உலகுக்கும்' என்ற வாழ்த்துச் செய்தியை வழங்கிய பாப்பரசர், இறுதியில் இக்காலத்தின் குழந்தைகளும் வருங்காலக் குழந்தைகளும் நன்முறையில் வாழ உதவும் மனிதாபிமானம் மிக்க ஓர் உலகை கட்டியெழுப்ப எம்மை அர்ப்பணிப்போமாக என்ற வேண்டுகோளுடன் அச்செய்தியை நிறைவுச் செய்தார். புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்தோருக்கும் வானொலி தொலைக்காட்சி மற்றும் ஏனைய சமூகத் தொடர்பு சாதனங்கள் வழியாக தனக்குச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் அனைவருக்கும் சிறப்பான ஆசீரையும் வழங்கினார். பாப்பரசர் பிரான்சிஸ் கத்தோலிக்க அரங்கிலும் உலக அரங்கிலும் நிறையவே சாதித்து உலக மக்கள் அனைவரின் அன்பும் அமைதியும் நிறைந்த வாழ்விற்கு அடித்தளம் இட இறையாசீர் வேண்டுவோம்.

## சுதாகரனின்....

களுக்கு உணவூட்டிவிட்டார்.

எனினும், அரசியல் கைதி ஆனந்தசுதாகரனை விடுவிக்குமாறு, சுதாகரனின் பிள்ளைகளும் பலரும் கோரிவருகின்றபோதும் அவர் இன்னும் விடுவிக்கப்படவில்லை. புதுவருடத்தில் அவர் விடுவிக்கப்படுவார் என்று அவரது பிள்ளைகள் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஆனால் புதுவருடமும் அவர்களுக்கு ஏமாற்றமாகிவிட்டது.

சுதாகரனை விடுவிக்குமாறு பல மனுக்கள் அரச தலைவருக்குக் கையளிக்கப்பட்டுள்ளன. பல கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன. அரசியல்வாதிகள் பலரும் சுதாகரனை விடுவிக்குமாறு கோரிவருகின்றனர். ஆனால் அவர் விடுவிக்கப்படவில்லை. தாயைப் பிரிந்த பிள்ளைகள், தந்தை இருந்தும் அவரது அரவணைப்பைப் பெறமுடியாது ஏங்கித் தவிக்கின்றனர். சுதாகரன் பற்றிய வழக்கின் தீர்ப்பு உள்ளிட்ட ஆவணங்களுடன் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு அரச தலைவர் பணித்துள்ளார் என்று அரச தலைவரின் செயலாளர் வடக்கு மாகாண முதலமைச்சருக்குக் கடிதம் மூலமாக அறிவித்திருந்தார் என்று முதலமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்திருந்தது. எனினும் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் இதுவரை இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (4)

## முன்பள்ளி...

மாறு லீசிங் நிறுவனப் பிரதிநிதி கேட்டு, மறுநாள்மாலை வீட்டுக்கும் சென்று பணம் கேட்டுள்ள நிலையில், ஆசிரியர் இந்த முடிவை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. முன்பள்ளியில் வைத்து பணத்தைத் தருமாறு வற்புறுத்திக் கேட்டுள்ளதால் கௌரவக் குறைவாக அவர் உணர்ந்து வீட்டிலும்அது நீடித்ததால் இப்படித் தவறான முடிவை ஆசிரியர் எடுத்திருக்கலாம் என்று உறவினர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இயக்கச்சியைச் சேர்ந்த சதீஸ்தரன் யசோதா (வயது - 25) என்பவரே உயிரிழந்தார். அவர் இரண்டரை வயதுப் பெண்குழந்தையின் தாய்.

லீசிங் அடிப்படையில் 50 ஆயிரம் ரூபா பணம் எடுத்திருந்தார். இன்னும் 8 ஆயிரம் ரூபா மாத்திரமே செலுத்தவேண்டியிருந்தது. அவ்வாறிருக்கையில் பணத்தைச் செலுத்துமாறு குறித்த நிதி நிறுவனத்தின் பிரதிநிதி முன்பள்ளிக்குச் சென்று கேட்டுள்ளார்.

மறுநாள் அவரது வீட்டுக்கும் சென்று கேட்டுள்ளார். அதனைச் செலுத்த அவரிடம் பணம் இருக்கவில்லை. கணவனிடமும் அந்த நேரம் பணம் இருக்கவில்லை. அதனால் அவர் தவறான முடிவு எடுத்து தூக்கில் தொங்கியுள்ளார். அவரது வீட்டில் குறித்த நிதிநிறுவனப் பிரதிநிதி சென்றதனை அவதானித்த அயல்வீட்டார் அவரது வீட்டுக்குச் சென்றபோது அவர் தூக்கில் தொங்கியபடி துடித்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது. உடனடியாக அவரை மீட்டு மருத்துமனையில் சேர்த்தனர் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமைனைக்கு மாற்றப்பட்டார். சீராகக் கதைக்க முடியாது கதைத்து வந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவு அவர் உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தினார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (4)

## ஓ.எம்.பி...

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால், காணாமற்போனோர் பணியகத்துக்கான ஆணையாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு கடந்த மார்ச் மாதம் நியமனம் வழங்கப்பட்டது. பணியகம் உருவாக்குவதற்கான சட்டவரைவு நாடாளுமன்றில் சமர்பிக்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகளின் பின்னரே நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

மிகநீண்ட தாமதத்தின் பின்னர் நியமனம் வழங்கப்பட்டாலும், பணியகத்துக்கான நிரந்தரக் கட்டிடம் இன்னமும் வழங்கப்படவில்லை. கடந்த 2ஆம் திகதி தொடக்கம் நாவலப்பிட்டியவிலுள்ள தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் கட்டிடத்தில் தற்காலிகமாக பணியகம் இயங்க ஆரம்பித்துள்ளது.

ஆணையாளர் மற்றும் உறுப்பினர்கள் 7 பேருக்குமான பயிற்சிகள் வெளிநாட்டு நிபுணர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் தேடுதல், இது தொடர்பான பணிகளில் ஏற்கனவே ஈடுபட்ட வெளிநாட்டு சிறப்பு நிபுணர்களே பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

நேபாளம், ஆஸ்திரேலியா, சைப்பிரஸ் உள்ளிட்ட நாடுகளின் நிபுணர்கள் இந்தப் பயிற்சிகளை வழங்கியுள்ளனர். இந்த வாரம் இரண்டாம் கட்டப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (5)


ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ!

# மரண அறிவித்தல்கள்

பிறப்பு 15 . 06 . 1939



இறப்பு 14 . 04 . 2018

## திருமதி செல்லம்மா கணேசு

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலைத் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லம்மா கணேசு நேற்று (14.04.2018) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களானமுருகேசுசின்னாச்சிதம்பதிகளின்அன்புமருமகளும்கணேசின்(சிற்பாசாரியார்) அன்புமனைவியும்சௌந்தரராஜன்(சுவிஸ்), லோகநாதன்(புங்குடுதீவு), இலங்கநாதன்(கோண்டாவில்), லலிதா (தாவடி), நித்தியவாணி (செட்டிக்குளம்), கவிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவலட்சுமி, தர்மகுலராணி, லோகேஸ்வரி, காலஞ்சென்ற துரைராசா மற்றும் சிவராசா, கிரிதரன் ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்ற ஏகாம்பரம் மற்றும் தங்கரத்தினம், கனகலிங்கம், மஹாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, கண்ணம்மா, செல்லம்மா, ஐயம்பிள்ளை மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சாந்தினி (பிரான்ஸ்), தீபா (வவுனியா), நதியா (புங்குடுதீவு), தர்ஷினி (சமுர்த்தி உத்தியோகத்தர்), ஜனகன் (அம்பாள் பல்பொருள் வாணிபம்) கோகிலவாணி (பிரதேச செயலகம், வேலணை) தட்சாயினி (புங்குடுதீவு), ஜனார்த்தனன் (பிரான்ஸ்), கரிகரன் (பிரான்ஸ்), லோஜினி (கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்), மயூரன் (சுவிஸ்), பிருதுவிராஜ் (நெதர்லாந்து), இந்துஷா (நுண்கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்), நிறஞ்சன் (தாவடி), நிஷாந்தி (முகாமைத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்), வனஜா (தாவடி), தக் ஷிகா (ஜேர்மன்), அரவிந்தன் (ஜேர்மன்), காயத்திரி (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மதுசன், கம்சிகா, சன்சிகா, யதுசன், பிதுசன், திசாயினி, திஷ்விகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்நாளை(16.04.2018)திங்கட்கிழமைஇருபாலைவீதி, கோண்டாவில் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கட்டையடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**க. இலங்கநாதன், முதலாம் ஒழுங்கை, இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு.**

**தகவல்: குடும்பத்தினர். 077 482 9690**


## 7பேர்

தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன. உயிரிழப்புகளில் மட்டக்களப்பில் இடம்பெற்ற விபத்தில் ஒரு குழந்தை உயிரிழந்துள்ளது. புதுவருடப் பிறப்பான நேற்று அதிகளவில் விபத்து எண்ணிக்கை பதிவானதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (4)

## புலிகள்...

நேரத்தின்போது, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான கனடிய மத்திய அரசின் தடையை உடனடியாக நீக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள அவர், அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் கோரியுள்ளார்.

புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாக கனடா வாழ் புலம்பெயர் தமிழர்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அனைத்து உறுப்பினர்கள் முன்னிலையிலும் அவர் எடுத்து கூறியுள்ளார்.

இது குறித்த தீர்மானத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய அவர், "இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த நாள் தொடக்கம் தமிழ் மக்கள் அடக்குமுறையை அனுபவித்து வருகின்றனர். அந்த அடக்குமுறையை எதிர்கொள்ள 1976ஆம் ஆண்டு தமிழ் மக்களை பாதுகாக்கும் இராணுவ அமைப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பை உருவாக்கினார்கள். 1983இல் உள்நாட்டுப் போர் தொடங்கியது. விடுதலைப் புலிகள் அமைப்பு வலுவான போரிடும் படையாக மாறியது.

இந்தநிலையில், 2006ஆம் ஆண்டு கனடிய அரசு, இலங்கை அரசின் பொய்ப் பரப்புரைகள் மூலமாக ஈர்க்கப்பட்டு, விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாதப் பட்டியலில் இணைத்தது. இதன் விளைவு தமிழ் மக்கள் இரண்டாம் தர மக்களாக உலகின் பார்வையில் பார்க்க வைத்தது. விடுதலைப் புலிகளின் தோற்றத்துக்குத் தமிழர்கள் காரணம் அல்ல. அதனை இன்று வரையிலும் பன்னாடுகள் புரிந்துகொள்ளவில்லை. இலங்கை அரசே அதற்கு காரணம் என்பதையும் யாரும் புரிந்துகொள்ளாது. விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறுவது வேதனையாக உள்ளது.

உள்நாட்டுப் போர் 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. புலிகள் ஆயுதப் போரைக் கைவிட்டனர். புலிகள் மீண்டும் ஒரு போராடும் படையாக அணி திரளப் போவதில்லை. எனவே, விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் இனி வைத்திருக்கத் தேவையில்லை. எதற்காக விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாக சித்திரிக்க வேண்டும்? விடுதலைப் புலிகள் வேறு இனமோ அல்லது வேறு சமூகமோ கிடையாது. மாறாக அவர்கள் தமிழ் மக்களின் உடன் பிறப்புக்கள்.

இந்தநிலையில், விடுதலைப் புலிகள் அமைப்பைத் தொடர்ந்தும் பயங்கரவாதப் பட்டியலில் வைத்திருப்பது கனடாவில் தமிழர்கள் தலைக்கு மேல் தொங்கும் கருப்பு மேகம் போன்றது. இந்தத் தடை தமிழ் மக்களை இரண்டாம் தர குடிமக்களாகவே அவமதிக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் அவர்கள், தாயகத்தில் போரில் உயிர் நீத்த தங்களின் உறவினர்களையும், தியாகிகளையும் பகிரங்கமாக நினைவு கூருவது மற்றும் அவர்களின் நினைவு அஞ்சலி செலுத்துவதையும் அரசு தடுக்கின்றது. கனடா வாழ் தமிழர்கள் மீண்டும் மதிப்புடன் வாழவேண்டும் . ஆகவே, பயங்கரவாதப் பட்டியலில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை கனடா அரசு நீக்க வேண்டும்" என்றார். இதேவேளை, நாடாளுமன்ற கேள்வி நேரத்தின் போது , ஒன்றாரியோ குடிவரவு அமைச்சரிடம் விடுதலைப் புலிகள் மீதான தடை குறித்துப் பல கேள்விகளையும் எழுப்பினார். ஒன்றாரியோ நாடாளுமன்றத்தில் தான் சமர்ப்பித்த அறிக்கையை ஒட்டாவாவில் மைய அரசுக்கு நேரடியாகச் சமர்ப்பித்து இந்தத் தடையை நீக்க வேண்டுகோள் விடுக்க தன்னுடன் இணைந்து கனடிய நாடாளுமன்றத்துக்கு வருமாறு அழைப்பும் விடுத்தார். (4)

## பருத்தித்துறை....

செல்வச் சந்நிதி கோயிலுக்குச் சென்று திரும்பியவர்களை வீதியில் நின்ற குழு கோடரியால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளது.

தலை மற்றும் கைகளில் வெட்டுக்காயமடைந்த இருவரும் குருதி வழிந்த நிலையில் அங்கிருந்து சுமார் 20 கிலோமீற்றர் தூரத்துக்குச் சென்று சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்ந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பருத்தித்துறை மண்டான் சந்தியை அண்மித்து நேற்று இடம்பெற்றது. புதுவருடத்தையொட்டி மோட்டார் சைக்கிளில் தொண்டமானாறு செல்வச்சந்நிதிக்குச் சென்று திரும்பியபோது சம்பவம் இடம்பெற்றது. மீசாலை வடக்கைச் சேர்ந்த சிறிதரன் சிறிப்பிரபு (வயது 20), மந்துவில் கிழக்கைச் சேர்ந்த துரைமணி சயிந்தன் (வயது 27) ஆகியோரே மருத்துவமனையில் சேர்ந்தனர்.

**வவுனியா**

வவுனியாவில் இளைஞர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதால் வாள்வெட்டில் முடிந்தது. அதில் சிக்கி இரண்டு பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வவுனியா சிதம்பரபுரத்தில் புதுவருடப்பிறப்பான நேற்று இடம்பெற்றது. இரண்டு இளைஞர்களுக்கு இடையில் சண்டை ஏற்பட்டுள்ளது என்றும் அதில் காயமடைந்தவரின் தந்தையார் பின்னர் வாளால் வெட்டினார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அதனால் ஒருவர் தலைப்பகுதியில் படுகாயமடைந்தார். மற்றொருவர் சிறு காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார். இவ்வளவுக்கும் காரணம் மதுபோதை என்று கூறப்படுகிறது. ஆனால் விசாரணைகளின் பின்னரே மேலதிக விடயங்களைக் கூறமுடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 55 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணை இடம்பெறுகிறது என்று சிதம்பரபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (4,9,110)

## 8 பேர்....

அதிர்ச்சித் தகவலை அந்தநாட்டுப் பொலிஸார் அங்குள்ள உறவினரிடம் கூறி உறுதிப்படுத்தியுள்ளனர் என்று யாழ்ப்பாணத்திலுள்ள அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

நயினாதீவைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் கச்சேரியடியை வசிப்பிடமாக் கொண்டவருமான கனகரட்ணம் கிருஷ்ணகுமார் (வயது - 40) என்பவரே கொல்லப்பட்டார்.

அவர் தனக்குத் தெரிந்த முகவர் ஊடாக சன்சீ கப்பலில் வெளிநாட்டுக்குச் சென்றிருந்தார். கனடாவில் அவரது உறவினர் ஒருவர் அவரைப் பொறுப்பேற்றிருந்தார். 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவரது தொடர்பு அங்குள்ள உறவினருக்கோ யாழ்ப்பாணத்திலுள்ள பெற்றோருக்கோ கிடைக்கவில்லை. இந்த நிலையில் அங்கு இடம்பெற்ற ஒரு சம்பவம் ஒன்றில் அதே நாட்டைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்திய விசாரணையிலேயே திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன. இலங்கையர்கள் இருவர் உட்பட 8 பேர் அவ்வாறு வெட்டிக் கொல்லப்பட்டு அங்குள்ள பூந்தோட்டம் ஒன்றில் புதைக்கப்பட்டுள்ளமை தெரிய வந்தது. தற்போது அவர்களது எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்பதை அங்குள்ள உறவினரைக் கொண்டு பொலிஸார் நேற்றுமுன்தினம் விசாரணை செய்து உறுதிப்படுத்தியுள்ளனர் என்று யாழ்ப்பாணத்திலுள்ள குடும்பத்தினர் தெரிவித்தனர். ஏனைய விடயங்கள் நாளை அறிவிக்கப்படும் என்று அந்தநாட்டுப் பொலிஸார் கூறியுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

## அன்பினால்....

இழுபறிகளுடன் மேற்கொள்ளப்படுகின்றன. மக்களின் சொத்துக்கள் என்ற நியாயத்தினால் தாமாகவே ராணுவம் மேற்கொள்ளவில்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. வலி.வடக்கில் 683 ஏக்கர் எமது மக்களின் காணிகள் விடுவிக்கப்படுவதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம். இராணுவத் தளபதியால் அது தொடர்பாக வெளியிடப்பட்ட சில கருத்துக்கள் நகைப்புக்குரியதாகவும் உண்மைக்குப் புறம்பானதாகவும் எம்மை கோபமூட்டுவனவாகவும் இருப்பதை சுட்டிக்காட்டாது இருக்க முடியாது.

**வன்மையான கண்டனம்**

எமது காணிகளை 28 ஆண்டுகள் அபகரித்து ஆக்கிரமித்து வைத்திருந்து விட்டு மீளஎங்களிடம்கையளிப்பதைபுத்தாண்டுப் பரிசாக வழங்குவதாக சித்திரிப்பது நிச்சயமாக ஒரு மேலாதிக்க நிலையிலிருந்து எம்மை இழிவுபடுத்தும் வகையில் வெளிப்படுத்தப்பட்ட கூற்று என்ற காரணத்தால் அதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இந்தக் காணிகள் எமது மக்களின் பரம்பரைச் சொத்துக்கள். ஒவ்வொரு காணித் துண்டும் எமது மக்களின் சொத்து என்பதற்கும் வேறு எவரும் உரிமை கொண்டாட முடியாது என்பதற்கும் சட்ட பூர்வ ஆவணங்களாக காணி உறுதிகள் உண்டு.

விவசாய உற்பத்திகளுக்கு பொருத்தமான இந்த மண்ணில்தான் எமது மக்கள் விவசாயம் செய்து வளமான வாழ்வு வாழ்ந்தார்கள். ஒரு காலத்தில் மயிலிட்டியில் உற்பத்தியாகும் கடலுணவு கொழும்புச் சந்தையில் 60 சதவீதம் நிறைவு செய்தது. போர் காரணம் காட்டப்பட்டு எமது மக்கள் அந்த மண்ணிலிருந்து விரட்டப்பட்டனர். எமது பரம்பரைப் பூமியும் கடலும் படையினரால் அபகரிக்கப்பட்ட நிலையில் எமது மக்கள் தங்கள் குடியிருப்புக்களையும் வாழ்வாதாரங்களையும் இழந்து ஏதிலி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்தனர்.

**மாயை உருவாக்கம்**

காணிகள் விடுவிக்கப்பட வேண்டி எமது மக்கள் நடத்திய போராட்டங்களை, இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், ஒட்டுக் குழுக்களும் இணைந்து நடத்திய மக்கள் மீது மேற்கொண்ட வன்முறைகள் இலகுவில் மறந்து விடக்கூடியவை அல்ல. இப்படியான ஒரு சூழ்நிலையில்தான் இராணுவத் தளபதி தங்களது சொத்தை கருணை கூர்ந்து எங்களுக்கு வழங்குவது போன்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தும் முகமாக காணி விடுவிப்பானது எமது மக்களுக்கு வழங்கப்படும் புத்தாண்டுப் பரிசு என்று தெரிவித்துள்ளார்.

இந்தக் காணிகள் எமது மக்களின் பூர்வீக சொத்து. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து தொழில் செய்து வளமான வாழ்வு கண்ட எமது சொத்தை எமக்கு யாரும் பரிசாக வழங்கமுடியாது. இவர்கள் தாங்களாக வெளியேறவில்லை. தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் காரணமாகவே வெளியேறுகின்றனர் என்ற போதிலும் கருணை கொண்டு காணிகளை அன்பளிப்புச் செய்வதாக ஒரு மாயையை ஏற்படுத்த முனைகின்றனர்.

**காணாமற்போனோர் விடயத்தில் கருணை இல்லையா?**

அப்படியானதொரு கருணை உள்ளம் கொண்டவர்களாக இருந்தால் ஏன் காணாமற் போனோர் விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

காணாமற் போகச்செய்யப்பட்டோர், உறவுகள் முன்னிலையிலேயே படையினரிடம் அவர்களை ஒப்படைத்தனர். வீடுகளிலும், முகாம்களிலும் படைப் புலனாய்வுப் பிரிவினரும், ஒட்டுக் குழுவினரும் இணைந்தே அவர்களைப் பிடித்துச் சென்றனர். காணாமற் போனோருக்கு என்ன நடந்தது என்பது படையினருக்கு தெரியாமல் இருக்கமுடியாது. அவர்களின் உறவுகள் நல்லிணக்க ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழுவில் சாட்சி அளித்தனர். எதுவுமே பயனற்றுப் போன நிலையில் தற்சமயம் 400 நாள்களுக்கு மேலாக உறவினர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அரசோ காணாமற் போனோர் அலுவலகம் எனச் சொல்லி காலத்தை இழுத்தடித்து வருகிறது. நீதியான, நியாயமான இராணுவம் என்றால் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட, தங்களால் பிடித்து செல்லப்பட்ட காணாமற் போனோருக்கு என்ன நடந்தது என்பதை தெரிவித்திருக்க வேண்டும். புத்தாண்டுப் பரிசாக காணியை விடுவிப்பதாகக் கூறும் இவர்கள் வெசாக் பரிசாக காணாமற்போனோர் தொடர்பான உண்மைகளை வெளியிடுவார்களா? என்பதை இராணுவத் தளபதியிடம் கேட்டு வைக்க விரும்புகிறேன்.

**அரசியல் கைதிகள்**

பிடித்த காணிகளை மனம் இரங்கித்தான் விடுவிக்கிறார்கள் என்றால் பிடித்துப் பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளைக் கருணை கொண்டு விடுவிப்பார்களா?

அதேவேளையில் இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரிக்க பன்னாட்டு நீதிபதிகள் தேவையில்லை எனவும், இலங்கையிலேயே அதைச் செய்யும் ஆற்றல் உள்ளவர்கள் இருக்கிறார்கள் என்றும் இராணுவத் தளபதி கூறுகின்றார்.

காணிகளை 28 ஆண்டுகளாக அபகரித்து வைத்திருப்பவர்கள் காணாமற் போகச் செய்யப்பட்டோர் தொடர்பாக உண்மைகளை வெளிப்படுத்தாதவர்கள், பல ஆண்டுகளாக அரசியல் கைதிகளை தடுத்து வைத்திருப்பவர்கள், அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டு பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 100 ஆண்டுகள், 200 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிப்பவர்கள் போர்க்குற்றங்கள் தொடர்பாக நியாயமான விசாரணையை நடத்துவார்களா?

காணி விடுவிப்பு, காணாமற் போனோர் விவகாரம் அரசியல் கைதிகள் விடுதலை என்பன தொடர் போராட்டங்கள் மூலமாகவும், பன்னாட்டு அழுத்தங்கள் காரணமாகவும் சாத்தியமாகுமே ஒழிய நிச்சயமாக அரசோ, இராணுவமோ மனம் திருந்தி மேற்கொள்ளப் போவதில்லை என்பதை திட்டவட்டமாக தெரிவிக்கின்றேன் என்றுள்ளது. (5)

## இலங்கை - இந்தியா...

செய்தியா ளர்கள் உரையாடினர். அதன் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈழ ஏதிலிகள் இந்தியா உட்படப் பன்னாடுகளில் வசிக்கின்றனர். அவர்களை மீண்டும் ஈழத்துக்கு அழைத்துவர பேச்சுகள் இடம் பெறுகின்றன.

இலங்கையில் மாகாணங்களுக்கு இடையிலான அதிகார வரம்பு குறைவாகவுள்ளது. அதனால் இலங்கையில் தமிழர்களுக்கு முன்னேற்றம் ஏற்படவில்லை. வடக்கில் இந்த நிலை நீடிக்கிறது. என்று அவர் தெரிவித்தார். (4)

## பூர்வீக...

வில் நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் நேற்று ஆதங்கம் தெரிவித்தனர்.

தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டை நேற்று அனைவரும் ஆர்வத்தோடு கொண்டாடினர். பலர் புத்தாடை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்தனர். உறவினர் வீடுகளுக்கும் சென்று கொண்டாடி மகிழ்ந்தனர். ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமது உரிமைகளுக்காக வீதிகளில் போராடும் மக்கள் புத்தாண்டைப் புறக்கணித்துள்ளனர். அந்தக் குழுவினர் தமது இடங்களில் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். கேப்பாபிலவில் நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களிடம் இது தொடர்பில் கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

கேப்பாபிலவில் போராடும் மக்களுக்குத் தலைமை தாங்கும் ஆறுமுகம் வேலாயுத பிள்ளை மேலும் தெரிவித்ததாவது: "இன்று (நேற்று) தமிழ் சிங்களப் புத்தாண்டு. நாங்கள் 413 ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். நேற்று (நேற்றுமுன்தினம்) தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள மக்கள் இரண்டு பேருந்துகளில் போதகர் ஒருவர் ஊடாக வந்து எங்களைப் பார்வையிட்டுள்ளார்கள். இந்த நிலையில் பேருந்தில் இருந்து இறங்கிய சிங்கள மக்களை எங்கள் போராட்டக் கொட்டகைக்கு முன்னால் நிலைகொண்டுள்ள படையினர் மறித்து மிரட்டினர். இதனால் வந்தவர்களில் சிலர் பேருந்தை விட்டு இறங்காமல் பேருந்திலே இருந்தார்கள். இது சிங்கள மக்களை அச்சுறுத்தும் ஒரு செயல். அந்த மக்கள் எங்கள் போராட்டத்தின் நியாயத்தன்மையைப் புரிந்து கொண்டு எங்களைப் பார்க்கவந்துள்ளார்கள். ஆனால் அவர்களைப் படைச் சிப்பாய் மிரட்டியுள்ளார். எங்கள் போராட்டம் நீதியானது. அதன்பாலே போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கின்றோம். எமது நிலம் எப்போது விடுவிக்கப்படுகிறதோ அப்போதுதான் எமக்குப் புதுவருடம். அதுவரை நாங்கள் தொடர்ந்து போராடுவோம்" என்றார். (4,21)

## உயிரெடுத்தது....

தவர் போத்தல் மூடி கழன்றதும் தீ பற்றிச் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் கிளிநொச்சி பாரதிபுரத்தில் இடம் பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த இராசேந்திரம் றெனோல்ட் றீகன் (வயது - 34) என்ற குடும்பத் தலைவரே உயிரிழந்தார்.

அவர் வேலைதேடி மோட்டார் சைக்கிளில் கடந்த 16 ஆம் திகதி பயணித்துள்ளார். மூடி இல்லாத போத்தலில் பெற்றோல் கொள்வனவு செய்து சிகரெட் புகைத்தவாறு பயணித்தார். போத்தல் நழுவி விழ பெற்றோல் ஊற்றுண்டுள்ளது. அதனை எடுக்கக் குனிந்தபோது வாயிலிருந்த சிகரெட் நெருப்புப் பட்டு தீ பற்றியது. அவரைது நெஞ்சு உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் தீ பற்றியது. கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தினார். (4)

## சிரியா...

ரிக்கா. இந்தப் பின்னணியில் சிரியா மீது அமெரிக்காவும், பிரிட்டனும், பிரான்ஸும் இணைந்து நேற்றுத் தாக்குதல் நடத்தின. சிரியத் தலைநகர் டமஸ்கஸ் உள்ளிட்ட 8 நகரங்களில் கடும் வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

சிரியாவின் இரசாயனத் தாக்குதலுக்கு விரைவில் பதிலடி கொடுக்கப்படும் என்று கடந்த சில நாள்களாகவே தெரிவித்து வந்தார் ட்ரம்ப். கடந்த வருடம் அலெப்போவில் சிரிய அரசு இரசாயனத் தாக்குதலை நடத்தியதைப் போன்று கவுட்டாவில் நடத்தினால், பதிலடி கொடுப்போம் என்று பிரிட்டனும் பிரான்ஸும் ஏற்கனவே எச்சரித்திருந்தன. இந்தப் பின்னணியிலேயே இந்த



மூன்று நாடுகளும் கூட்டுச் சேர்ந்து தமது திட்டத்தை கச்சிதமாக அரங்கேற்றின.

வடக்கே அலெப்போவில் இருந்து தெற்கே டேரோ வரையும், கிழக்கே அல் ஸோரில் இருந்து மேற்கே லேடிகா வரையும் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தாக்குதல்கள் நடத்தப்பட்ட நகரங்களில் சிரியாவின் பழமைகளை உள்ளடக்கிய நகரம் என்று சொல்லப்படும் பல்மைரா நகரிலும், ஹமா, கோம்ஸ், டமஸ்கஸ், ரக்கா, இட்லிப் உள்ளிட்ட நகரங்களிலும் கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மேற்குறித்த நகரங்களில் இயங்கிவந்த 'இரசாயனத் தயாரிப்பு ஆயுதங்கள் தயாரிக்கும் நிலையங்களையே நீண்ட அவதானிப்பின் தாக்கினோம்' என்று பென்டகன் அறிவித்தது.

'நீண்ட பரிசீலனையின் பின்னர் எடுக்கப்பட்ட முடிவு இது. இதை விட வேறு தெரிவு இல்லை' என்று பிரிட்டன் தலைமை அமைச்சர் திரேசா மே தெரிவித்தார். 'சிரியாவை பிரான்ஸ் தொடர்ந்து இலக்கு வைக்காது. ஆனால் இரசாயன ஆயுதங்கள் மீண்டும் பயன்படுத்தப்பட்டால், பிரான்ஸ் மீண்டும் தாக்கும்' என்று அந்த நாட்டின் அதிபர் மக்ரோன் அறிவித்தார்.

**சிரியாவின் நட்பு நாடுகள் கொதிப்பு**

சிரியாவில் அமெரிக்கா தலைமையில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்கு சிரியாவின் நட்பு நாடுகள் தத்தமது கண்டனத்தைப் பதிவுசெய்தன. 'இது அரக்கத்தனமாக தாக்குதல். அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பிரிட்டன் தலைமை அமைச்சர் மே, பிரான்ஸ் அதிபர் மக்ரோன் மூவரும் பயங்கரவாதிகள்' என்று ஈரான் தலைவர் அயதுல்லா தெரிவித்தார்.

'இந்தத் தாக்குதலுக்குரிய விளைவுகளுக்கு அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகியன பொறுப்பேற்க வேண்டும்' என்று எச்சரித்த ரஷ்யா, ஐ.நா. பாதுகாப்புச் சபையைக் கூட்ட அழைப்பு விடுத்துள்ளது. இதன்படி ஐ.நா. பாதுகாப்புச் சபை இன்று கூடுவதற்கு வாய்ப்புள்ளது.

**ஐ.நா. அதிருப்தி**

சிரியாவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு தனது அதிருப்தியைத் தெரிவித்தார் ஐ.நா. பொதுச் செயலாளர் குத்தேரஸ். 'சிரியா விவகாரம் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ஒருமித்த கருத்து ஏற்படாதது கவலையளிக்கிறது. நிரந்தர உறுப்பு நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகள் சிரியப் பிரச்சினையில் சுமுக உடன்பாட்டை எட்ட வேண்டும். இந்தப் பிரச்சினை வரம்பைத் தாண்டிவிடக்கூடாது. அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட 5 நாடுகளும் பொறுமை காக்க வேண்டும். கடந்த கால சம்பவங்களை மறந்துவிட்டு சிரியாவில் அமைதி திரும்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றார் அவர். (ம)

## காணிகளை ....

பண்டங்களைத் தமக்கு வழங்கி அவர்கள் புதுவருடத்தைக் கொண்டாடினர் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

தமது சொந்த நிலத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை வெளியேற்றித் தம்மைக் குடியமர்த்துமாறு வலியுறுத்திக் கேப்பாபிலவில் காணிகளின் உரிமையாளர்களான பொதுமக்கள் போராடிவருகின்றனர். அவர்களது போராட்டம் இன்று 414ஆவது நாளாகவும் தொடர்கிறது.

அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இடத்துக்குச் சென்று படையினர் இனிப்புப் பண்டங்களை வழங்கினர். அதன்போது, "எங்களுடைய நிலங்களை விடுவித்தால்தான் நாங்கள் புத்தாண்டைக் கொண்டாட முடியும். மிகவிரைவில் நிலத்தை விடுவிக்க வேண்டும் என்று இராணுவத்தினரிடம் கோரினோம்."அதன்போது இராணுவத்தினர் மேற்கண்டவாறு கூறினர் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

கேப்பாபிலவில் மக்கள் காணிகளில் உள்ள படையினரை வெளியேறக் கோரி அந்த நிலங்களுக்குச் சொந்தமான மக்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். அந்தப் போராட்டம் அறவழிப் பேராட்டமாக மாறி தொடர்ந்துகொண்டிருக்கிறது. தமது கோரிக்கையைத் தெளிவாக முன்வைத்துள்ள அவர்கள் அதை எட்டும் வரை பண்டிகைகள் அனைத்தையும் கொண்டாடுவதில்லை என்று முடிவெடுத்துள்ளனர். அவ்வாறே நேற்றைய புதுவருடத்தையும் அவர்கள் புறக்கணித்திருந்தனர். (4,21,ரி3)

# ஆஸியை இந்தியா வீழ்த்தும்

## சப்பல் நம்பிக்கை

"ஆஸ்திரேலியா - இந்திய அணிகளுக்கு இடையில் இந்த வருடம் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரில், இந்திய அணி கிண்ணம் வெல்லும்" என்று நம்பிக்கை தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் இயன் சப்பல்.

இந்திய அணி எதிர்வரும் நவம்பர் மாதம் இறுதி வாரத்தில் ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. இதையடுத்தே இவ்வாறு தெரிவித்தார் சப்பல்.

"பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய விவகாரத்தில், ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் சிமித், முன்னாள் உபதலைவர் வோர்ணர், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பான்குரொப்ட் மூவருக்கும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது. பான்குரொப்ட் அனுபவம் அற்ற வீரர். ஆனால் வோர்ணர், சிமித் இருவருக்கும் விதிக்கப்பட்டுள்ள ஓர் ஆண்டுத் தடையால் ஆஸ்திரேலிய அணி மிகப் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இவர்கள் இருவரும் இல்லாத ஆஸ்திரேலிய அணி மிகப்பெரிய அளவில் இந்தியாவிடம் தடுமாறும். இந்திய அணி வரலாற்றில் முதன்முறையாக ஆஸ்திரேலியாவில் வைத்துக் கிண்ணம் வெல்லும். அதற்குரிய வாய்ப்புக்கள் மிகவும் அதிகம் உள்ளன" என்று சப்பல் மேலும் தெரிவித்தார்.

"ஊதிய ஒப்பந்த விவகாரத்தில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையுடன் தேவையற்ற முரண்பாடுகளைக் கொண்டிருந்தார் வோர்ணர். இதனால் அவர் மீண்டும் வருவதென்பதை சாத்தியமற்ற ஒன்றாகவே பார்க்க வேண்டியுள்ளது. ஆனால் சிமித் வருவார்" என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)





# இறுதிப் பந்தில் வென்ற டெல்லி

## மும்பைக்கு மூன்றாவது தோல்வி

ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில், இறுதிப் பந்தில் வைத்து மும்பையை வீழ்த்தி தொடரில் தனது முதலாவது வெற்றியைப் பதிவுசெய்தது டெல்லி. அதேவேளை தொடர்ச்சியாக தனது மூன்றாவது தோல்வியைச் சந்தித்தது மும்பை.

**மும்பையின் இன்னிங்ஸ்**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. மும்பை அணியின் ஆரம்ப வீரர்களாக சூரியக்குமார் யாதவ் மற்றும் லூயிஸ். கடந்த இரண்டு ஆட்டங்களில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தாததை அடுத்து, மும்பை அணியின் வழக்கமான ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான அணித் தலைவர் ரோகித் துடுப்பாட்ட வரிசையை மாற்றி தன்னை மத்திய வீரராகக் கொண்டு சென்றிருந்தார். திட்டம் பெரும் வெற்றியளித்தது. அதிரடியாக விளையாடினார்கள் ஆரம்ப வீரர்கள் இருவரும். 3.4 பந்துப்பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களையும், 8.3 பந்தப்பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களையும் இலக்குச் சரிவில்லாமல் பெற்றது மும்பை இந்தியன்ஸ். அணி 102 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லூயிஸ். அரைச்சதம் கடந்து 52 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் சூரியக்குமார் யாதவ். மூன்றாம் நிலை வீரரான இசான் கிசானும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 23 பந்துகளில் 44 ஓட்டங்களைக் குவித்தார். ரோகித் உள்ளிட்ட ஏனைய வீரர்கள் இறுதிப் பந்துப்பரிமாற்றங்களை சரிவரப் பயன்படுத்தவில்லை. முடிவில் 7 இலக்குகளை இழந்து 194 ஓட்டங்களைக் குவித்தது மும்பை.

பந்துவீச்சில் போல்ட், கிறிஸ்ரியன், டிவெட்டியா மூவரும் தலா இரு இலக்குகளையும், சமி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

**டெல்லியின் இன்னிங்ஸ்**

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி அணிக்கும் சிறந்த ஆரம்பத்தை வழங்கியது அந்த அணியின் ஆரம்ப இணை. றோய் அடித்தாட கம்பீர் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது டெல்லி. 50 ஓட்டங்களிலேயே தனது முதலாவது இலக்கையும் இழந்தது. 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கம்பீர். இதற்காக அவர் 16 பந்துகளை எதிர்கொண்டார். வந்தார் பன்ட். றோய், பன்ட் இருவரும் இணைந்து அபார ஆட்டத்தை வழங்கினர். 9.5 பந்துப்பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களை எட்டியது டெல்லி. அணி 119 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் பன்ட். மறுமுனையில் றோயின் அதிரடி தொடர்ந்தது. மகஸ்வெல் 13 ஓட்டங்களுடன் ஏமாற்றினாலும் ஸ்ரேயாஸ் சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கினார். இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 11 ஓட்டங்கள் டெல்லியின் வெற்றிக்குத் தேவைப்பட்டது. ரகுமான் பந்துவீச அழைக்கப்பட்டார். முதல் பந்தில் பவுண்டரியும், அடுத்த பந்தில் சிக்சரும் விளாசி ஓட்டத்தைச் சமநிலைப்படுத்தினார் றோய். அடுத்த மூன்று பந்துகள் ஓட்டமற்ற பந்துகளாக வீசப்பட்டன. இறுதிப் பந்தில் ஓர் ஓட்டத்தை எடுத்தால் டெல்லிக்கு வெற்றி.

## சென். மேரிஸின் தொடரில் காலிறுதிக்குச் சென்றவை

யாழ்ப்பாணம், ஏப். 15

கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் காலிறுதிக்குத் தகுதி பெற்ற அணிகளின் விவரங்கள்.

சென். மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த வியாழன், நேற்றுமுன்தினம் வெள்ளி என்று இரண்டு தினங்கள் இந்த ஆட்டங்கள் நடைபெற்றன.

வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியன் அணிக்கும் உடுத்துறை செந்தமிழ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 2:1 என்ற கோல் கணக்கில் உடுத்துறை செந்தமிழ் அணி வெற்றிபெற்றது.

உதயசூரியன் அணிக்கும் செல்சிற்றி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில், நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் பதிவுசெய்ய இயலவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:1 என்ற கோல் கணக்கில் செல்சிற்றி அணி வெற்றிபெற்றது.

புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் அணிக்கும் உடுத்துறை பாரதி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து, சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:0 என்ற கோல் கணக்கில் சுப்பர்றாங் அணி வெற்றிபெற்றது.

உழவர் ஒன்றிய அணிக்கும் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் உழவர் ஒன்றிய அணி வெற்றிபெற்றது.

அல்வாய் மனோகரா அணிக்கும் மருதங்கேணி கணேசானந்தா அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 4:1 என்ற கோல் கணக்கில் அல்வாய் மனோகரா அணி வெற்றிபெற்றது.

கலைமதி அணிக்கும் உதயதாரகை அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 3:0 என்ற கோல் கணக்கில் கலைமதி அணி வெற்றிபெற்றது. (ம - 23)

# மும்பை அணியில் மில்னேக்கு இடம்



ஐ.பி.எல். தொடரில் மும்பை அணிக்காக விளையாட அழைக்கப்பட்டார் மில்னே. மும்பை அணியில் இடம்பிடித்திருந்த ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் கம்மின்ஸ், காயம் காரணமாக விலகியதை அடுத்து, அவரின் இடத்துக்கே நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான மில்னே அழைக்கப்பட்டார். (ம)






## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 15
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதவுள்ளது.
தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது. (ம-23)

## யங்ஹென்றிஸ் அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 15
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றது.
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## லூசியா அணி இறுதியாட்டத்தில்

யாழ்ப்பாணம் ஏப்15
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில், மன்னார் பள்ளிமுனை சென். லூசியா அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இரவு 9 மணிக்கு இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில், மன்னார் பள்ளிமுனை சென். லூசியா அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் சென். லூசியா அணி வெற்றிபெற்றது. (ம-23)



# ஸ்ரான்லி அணி போராடி வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 15
கொக்குவில் சனசமூக நிலையம் நடத்தும் யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தொடரில் ஸ்ரான்லி அணி வெற்றிபெற்றது.
கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்ரான்லி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்றல் அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்றல் அணி 28.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ராஜீவ்குமார் 80 ஓட்டங்களையும், சலிஸ்ரன் 25 ஓட்டங்களையும், மதுசன் 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரான்லி அணி சார்பில் விதுசன் 4 இலக்குகளையும், விஸ்ணுகரன் 3 இலக்குகளையும், விதுர்சன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 28.3 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக சுஜிகரன் 67 ஓட்டங்களையும், பிரசாத் 45 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ் சென்றல் அணி சார்பில் லதுசன் 3 இலக்குகளையும், கிரிசாந் மற்றும் தீபன் ஆகியோர் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர். (ம-422)

## சென். ஜோசப் அணி இறுதிக்குச் சென்றது

யாழ்ப்பாணம் ஏப்15
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது மன்னார் சென். ஜோசப் அணி.
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில், பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது சென். ஜோசப் அணி. (ம-23)

## ஆட்டம் சமநிலை

யாழ்ப்பாணம், ஏப். 15
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மயிலங்காடு ஞானமுருகன் அணிக்கும் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணிக்கும் இடையிலான ஆட்டமொன்று சமநிலையில் முடிந்தது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்ததை அடுத்தே ஆட்டம் சமநிலை கண்டது. (ம-23)



# நண்பர்கள் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 15
புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூக நிலையத்தின் 58ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்திய தீவுப் பகுதி கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் புங்குடுதீவு நண்பர்கள் அணி சம்பியனானது.
அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் புங்குடுதீவு நண்பர்கள் அணியை எதிர்த்து சிறுப்பிட்டி ஐங்கரன் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்களல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடிக் கொண்டிருந்தன. இருப்பினும் ஆட்ட நேர முடிவில் புங்குடுதீவு நண்பர்கள் அணி 8:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-422,108)

## ஓல்ட்கோல்ட்ஸ் அணி அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 15
கொக்குவில் சனசமூக நிலையம் நடத்தும் யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் ஓல்ட்கோல்ட்ஸ் அணி வெற்றி பெற்றது.
கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் அணியை எதிர்த்து வை.எம்.ஏச்.ஏ. அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட் கோல்ட்ஸ் அணி நிர்ணயிக்க ப் பட்ட 30 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சீராளன் ஆட்டம் இழக்காமல் 50 ஓட்டங்களையும், சிறிகுகன் 45 ஓட்டங்களையும், குகன் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் வை.எம்.ஏச்.ஏ. அணியின் சார்பில் அருண்ராஜ் 3 இலக்குகளையும், டிசாந்தன் மற்றும் சுபாஸ்கரன் ஆகியோர் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வை.எம்.ஏச்.ஏ. அணி 14.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 70 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அதிகபட்சமாக சுதாஸ்கரன் 20 ஓட்டங்களையும், சுதர்சன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஓல்ட்கோல்ட்ஸ் அணி சார்பில் விதுர்சன் 4 இலக்குகளையும், சிறி குகன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம-422)



**வேலைவாய்ப்பு**

யாழ்.நகரில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றுக்கு கிளை உதவியாளர்கள் (Packing & Billing Assistance) தேவை.

தகைமைகள்
- A/L சித்தி
- கணினி அறிவு
- ஆங்கில அறிவு விரும்பத்தக்கது
- வயது எல்லை 18 - 30 வரை

Note:- யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (IN/6474)(11,17)

**076 376 0022, 076 690 8963**


# மற்றொரு தங்கம் வென்றார் கொம்

இந்திய குத்துச்சண்டை வீராங்கனை மேரி கொம், கொமன்வெல்த் குத்துச்சண்டைப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.

ஆஸ்திரேலியாவில் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. பெண்களுக்கான 45 கிலோ எடைப் பிரிவில் இந்திய வீராங்கனை மேரிகொம் தங்கப்பதக்கம் வென்றார். இறுதிப் போட்டியில் அயர்லாந்து வீராங்கனை கிறிஸ்ரினாவை அவர் வீழ்த்தினார். (ம)




**கடை வாடகைக்கு**

நெல்லியடி நகரில் " பழைய கண்ணாடி களஞ்சியம் " இருந்த இடத்தில் உள்ள சகல வசதிகளும் உள்ள இருமாடிகளைக் கொண்ட இருகடைகள் வாடகைக்கு உண்டு. (இரத்தினம் புடைவை அகம் முன்பாக) விவரம் நேரில்

**077 026 7711**

**Vacancy**

- **Receptionist (Female)**
- **Office Administrator (Female)**

கணினி மற்றும் ஆங்கில அறிவுள்ளவர்கள்.
7 நாள்களுக்குள் CV அனுப்பவும்.

info@arunthathee.com
076 822 8522
**Arunthathee (pvt)ltd**
20, K.K.S.Road, Kokkuvil,Jaffna. (CS/15683)(11,17)

**Nivithra இலவச அழகுக்கலை பயிற்சி நிபந்தனைக்குட்பட்டது**

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நிவித்திரா அழகுக் கலை மற்றும் பயிற்சி நிலையத்தின் புதிய இலவச அழகுக்கலை பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட வுள்ளன.

இப்பயிற்சியில் இணைந்து கொள்ளவிரும்புபவர்கள் எமது அறிமுக வகுப்பில் கலந்துகொண்டு பதிவுகளை மேற் கொள்ளலாம்

திகதி : 20.04.2018 வெள்ளிக்கிழமை
நேரம் : 3.00 மணி
இடம் : Nivithra Beauty Parlour & Training Academy

**NVQ LEVEL 3,4**
பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்

பல அழகுக்கலை நிபுணர்களின் நலன் கருதி யாழ் மண்ணில் NVQ (National Vocationel Qualification) Level 3, 4 வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எமது அறிமுக வகுப்பில் கலந்து கொண்டு மேலதிக தகவலை பெற்று பதிவுகளை மேற்கொள்ளலாம்.

திகதி : 22.04.2018 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : 2.30 மணி
இடம் : Nivithra Beauty Parlour & Training Academy
077 812 7726

**1 நாள் அழகுக்கலை பயிற்சி பட்டறை**

இன்றைய காலகட்டத்தில் எமது அன்றாட பழக்கவழக்கங்கள், வாழ்க்கைத்தரம், சுற்றுப்புறச் சூழல் போன்ற வற்றில் இருந்து எமது அழகை பராமரிப்பது ஒரு சவாலாகவே உள்ளது.

எமது சருமத்தை அழகாகவும், இளமையாகவும் பொலிவுடனும் எவ்வாறு பராமரிக்கலாம் என நாம் பயிற்று விக்கின்றோம்!



SKIN CARE (சருமம் சம்பந்தப்பட்டது)
FACE MAKEUP (முக ஒப்பனை)
HAIR STYLE (சிகை அலங்காரம்)

திகதி : 20.04.2018 வெள்ளிக்கிழமை
நேரம் : 9.30 - 3.30 மணி
இடம் : Nivithra Beauty Parlour & Training Academy
கட்டணம் 1500 /- மட்டும்
(ஆசனம் மட்டுப் படுத்தப்பட்டதால் உங்கள் விவரங்களை SMS மூலம் அனுப்பி முன்பதிவு செய்துகொள்ளவும்)

**இல.207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு: 077 771 2604**





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.